

சிவ மஞ்சரி

சிவமஞ்சரி 1 தொகுதி

பூசை. ச. அருணவசந்தன்

உ

சிவமயம்

சிவமஞ்சரி

- முதல் தொகுதி -

(பக்கம் 1 முதல் 160 வரை.)

ஆசிரியர் :

"சிவமஞ்சரி செம்மல்", "அருட்பணி அரசு"

பூசை. ச. அருணவசந்தன்



இரண்டாம் பதிப்பு

2003

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18.

நூலின் விவரம்

நூலின் பெயர்	-	**சிவமஞ்சரி (1)** - முதல் தொகுதி -
நூலின் ஆசிரியர்	-	**பூசை. ச. அருணவசந்தன்**
பதிப்பு ஆண்டு	-	**முதல்பதிப்பு - 1997** **இரண்டாம் பதிப்பு 2003**
உரிமை	-	ஆசிரியருக்கு
பதிப்பாளர் / ஆசிரியர்	-	பூசை. ச. அருணவசந்தன்
முகவரி	-	ப. # 29, / பு. # 40, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
பக்கங்கள்	-	8+160 ஆக 168 பக்கங்கள்
நூல் அளவு	-	கிரௌன் 1/4 - 24 c.m. x 18.2 c.m.
அச்சிட்டுள்ள பரப்பளவு	-	21.5 c.m. x 15.2 c.m.
பயன்படுத்தப்பட்ட அச்சுத்தாள்	-	பலாப்பூர் டபுள் கிரௌன் 11.6 Kg.
பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்	-	TMVL 10.5 Pt.
மின் அச்சுக் கோர்வை	-	தனம், லேசர் பிரிண்டர்ஸ், சென்னை - 41.
மறுதோன்றி அச்சகம்	-	ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆப்செட் பிரிண்டர்ஸ், தங்கசாலை, சென்னை - 1.
நூலின் பொருள்	-	சிவபெருமானைப்பற்றி - புராணங்கள் - வடமொழி - தமிழ் வேதங்கள் - தலவரலாறுகள் - ஆகியவற்றி லிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள் - தனித்தனி தலைப்புகளில்.
விலை	-	ரூபாய் **80/-**
நூலகக் குறியீட்டு எண்	-	

உ
சிவமயம் திருச்சிற்றம்பலம்

5/4



முதல் பதிப்பின் முகவுரை

உலகம் யாவற்றையும் தனது இன்னருளால் படைத்து, அளித்து, காத்து, வழிநடத்துபவன் சிவ பெருமான். அவனுடைய பெருமைகளை எண்ணிலா நூல்கள் விரித்தியம்புகின்றன. அவற்றிலுள்ள கருத்துக்களை இயன்றவரை தொகுத்து அன்பர்கள் அறிந்து மகிழச் "சிவமஞ்சரி" என்ற நூலாகத் தொகுத்து அளிக்க முயன்றுள்ளேன்.

நான், எனது சிறுவயதில் அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் ஆலயத்தில் நடைபெறும் அப்பர், திருஞானசம்பந்தர் குருபூஜை விழாக்களில் கலந்து கொள்வேன். அந்நாளில் எனது தந்தையார் அமரர் திரு. பூசை. வீ. சரவணப்பெருமாள் அவர்கள், அந்த விழாவில் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடுவதுடன் விழாவிற்கான ஐதீகங்களையும் விளக்கிக் கூறுவார்கள். தொடர்ந்து அங்கு ஐதீகக் காட்சிகள் நடத்தப்பெறும். திருஞானசம்பந்தர் விழாவில் அவர் திருமுலைப்பாலருந்துதல், பொற்றாளம் பெறுதல், படிக்காசு பெறுதல், பொற்கிழி பெறுதல், ஆண்பனையைப் பெண்பனையாக்கல், ஓடம் விடுதல், புத்தன் தலை இடறச் செய்தல்,எலும்பைப் பெண்ணாக்குதல், சிற்சோதியில் கலத்தல் என்று பல்வேறு ஐதீகவிழாக்களைச் செய்வார்கள். அவற்றைக் கண்ட எனக்கு அவரைப் போலவே திருத்தலங்களைச் சென்று காணவேண்டும் என்ற ஆவல் எழும். ஆனால் காலச் சூழ்நிலைகளால் அப்போதைக்கு அது இயலாததாக இருந்தது.

பின்னாளில் நான் கல்லூரிப்படிப்பை முடித்துவிட்டுச்சொந்தமாக மின்ஒப்பந்தக்காரராகப் பணிகளைச் செய்து கொண்டிருந்தபோது, எமது வணக்கத்திற்குரிய அமரர் வித்துவான் . திரு. கோ.மு. முத்துசாமிப்பிள்ளை ஐ.ஏ.எஸ் (ஓய்வு) அவர்கள் தாம் பணியாற்றி வந்த தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தின் கோயிற்களஞ்சியத் துறையில் என்னை உதவியாளராக ஏற்றுக்கொண்டு கோயில்களைத் தரிசித்து மகிழும் வாய்ப்பை வழங்கினார்கள், அவர்களை இப்பொழுது நினைவுகூர்ந்து எனது மனம் மொழிகளால் வணங்குகின்றேன்.

அத்துறையினின்று நான் விலகிவிட்ட பிறகும் எமது பல்வேறு நண்பர்கள் பல திருத்தலங்களுக்குச் சென்று, செய்திகளைத் திரட்டி நூலாக்கி வெளியிடத் தூண்டியதுடன் சிலசமயம் பயணச் செலவுகளையும் ஏற்றுக்கொண்டார்கள். இவ்வகையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோயில்களைத் தரிசித்து மகிழும் வாய்ப்பை மீண்டும் பெற்றேன். இவ்வாறு நான் திருத்தலங்கள் தோறும் சென்று வழிபட்ட காலங்களில் அங்குள்ள மூர்த்திகள், தீர்த்தங்கள், தலவரலாறுகள் ஆகியவற்றைக் கண்டு கேட்டு மகிழ்ந்தேன். தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள ஆலயங்களில் அந்தந்த வட்டாரத்திற்கேற்ப தனிச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. சில தலங்களில் சிறப்புடன் எழுந்தருளியுள்ள சிவமூர்த்திகளுக்குப் பலவிதமான வழிபாடுகளும், விழாக்களும் நடைபெற்றன.

எண்ணிலாத கல்வெட்டுகள், ஓவியங்கள். சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. இவையாவற்றையும் நான் அறிந்து மகிழ்ந்தது போலவே பிறரும் அறிந்து மகிழ வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. எனவே "சிவமே செம்பொருள்" என்ற தலைப்பில் முப்பத்திரண்டு பக்கங்கள் கொண்ட முதல் மலரை வெளியிட்டேன்.

அதனை ஆனைமலையில் நடைபெற்ற சைவசித்தாந்த மாநாட்டிற்கு எடுத்துச் சென்று அன்பர்களுக்கு அளித்து கருத்துக்களைக் கேட்டறிந்தேன்.

அம்மாநாட்டிற்குத் திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் வந்து கலந்து கொண்ட திரு. வேத கண்ணன் அவர்கள் என்னிடம் நூலைப் பெற்று

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திடம் பணிவுடன் அளித்தார். அதைக்கண்டு மகாசந்நிதானம் மகிழ்ந் தார்கள்.

திரு. வேதக்கண்ணன் எனக்குக் கடிதம் எழுதி மகாசந்நிதானத்தை வந்து பணிந்து ஆசி பெறும்படி கூறினார்கள். அதன்படியே நான் திரு வாவடுதுறை சென்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைக் கண்டு வணங்கி ஆசிபெற்றேன். ஆதீனகர்த்தர் ஆசி வழங்கியதோடு உருத்தி ராக்கம், புத்தாடைகள் ஆகியவற்றுடன் ரூபாய் ஓராயிரத்தையும் வழங்கினார்.

முதல் மலரைத் தொடர்ந்து இரண்டாம் மலரை வெளியிட்டேன். மூன்றாம் மலர் குரு அருள் விழைவாக திருவாவடுதுறையாதீ னத்தைப் பற்றியதாக மலர்ந்தது. தொடர்ந்து இதுவரை பதி னைந்து மலர்கள் வெளியாகியுள்ளன. இன்னும் நாற்பத்தைந்து மலர்களுக்குச் செய்திகள் சேகரிக் கப்பட்டு நூலாக்கி வெளியிடும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நூலினை ஆரம்பித்த காலத்திலிருந்து எனக்குத் துணையாக நின்று ஊக்குவிப்பர் குருஜி ஜி.எம். வீரமணி (எ) வீரேசுவரானந்தா அவர்களாவார். அவர் ஆயிரம் காயத்திரி ஹோம ஜெபம் செய்து சிறப்புப் பெற்றவர்கள். அவருடைய நண்பர் திரு. கல்யாணசுந்தரம் ஐயர், அவர்கள் என்மீது பற்றுக் கொண்டு என்னைப் பல நண்பர்களிடம் அறிமுகப் படுத்தினார்கள்.

அவர்களில் முக்கியமானவர் நுங்கம்பாக் கம் குருஜி சிவஸ்ரீ ஆர். துரைராஜன் (பத்மநாபன்)" அவர் களாவார். அவர் சிறந்த சிவபக்தர், நுங்கம்பாக்கம் ஸ்ரீ அகத்தீசுவரர் ஆலயத்தில் பல்வேறு திருப் பணிகளைச் செய்துவருகிறார். நெடுங்காலமாக அக்கோயிலில் மூன்று சந்நிதிகளிலும் விளக்கீடு செய்து வருகின்றார். மேலும் பல ஆண்டுகளாக அந்த ஆலயத்தில் பிரதோஷ விழாவைத் தம் அன்பர்களுடன் முன்னிருந்து சிறப்பாக நடத்தி வருகிறார்கள். அவர்களை நான் சந்தித்த அன்று முதல், தொடர்ந்து சிவமஞ்சரிக்கு உதவி வருகின் றார். அவரைக் குருவாக ஏற்று அவருடைய ஆசி மொழிகளின் வழியே சிவமஞ்சரி வெளிவரு கின்றது.

அவருடைய அன்பர்களில் ஒருவரான சப்த கிரி டிராவல்ஸ் உரிமையாளர் திரு. ஜி. சீனிவாசன் அவர்கள் சிவமஞ்சரியின் ஐந்தாம் மலரான "பிர தோஷம்" நூலினை இதுவரை இரண்டாயிரம் பிரதிகள் வெளியிட்டு அன்பர்களுக்கு ஞானக் கொடையாக வழங்கி சிவசேவை புரிந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றோர் அன்பரான நுங்கம்பாக்கம் LVJ பில்டர்ஸ் திரு. வி. ஜெய்சங்கர் அவர்கள் பிரதோஷ வரலாற்றை ஓராயிரம் பிரதிகள் அச்சிட்டு ஞானக் கொடையாக அன்பர்களுக்கு அளித்தார்கள். அத்துடன் நில்லாது நமது வெளியீடுகளுக்குத் தொடர்ந்து பலவகையாலும் உதவி வருகின்றார்.

தமது இல்லத்தில் எனது எழுத்துப் பணி களுக்கு இடம் அளித்து, ஆழ்வார் பேட்டை திரு. வ.வீரராகவன் அவர்களும் அவருடைய துணை வியாரும் எனது சகோதரியுமான திருமதி அனந்த லட்சுமியும் தொடர்ந்து ஆதரவளித்து வருகின் றார்கள். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருத்தொண்ட ரும் "அப்பாவு" மாத இதழ் ஆசிரியருமான குகஸ்ரீ வே.ந.சௌந்தரராஜன் அவர்களும், அவருடைய துணைவியார் திருமதி. பிரகதா அவர்களும் நமது கலைக்கூடம் வெளியிடும் முருகப்பெருமானைப் பற்றிய "குமாரமஞ்சரி" எனும் நூலை வெளியிட உதவுவதுடன் சிவமஞ்சரிக்கும் மேலான உதவி களைச் செய்து வருகின்றனர்.

தமிழ்நாடு மின்வாரிய மேனாள் செயற் பொறி யாளரான கோவூர் கே.பி. துரை அவர்கள் நமது சிவமஞ்சரிக்கு மட்டுமல்லாமல் மற்ற வெளியீ டுகளான சக்திமஞ்சரி, குமாரமஞ்சரி, பக்த மஞ்சரி, விநாயக மஞ்சரி ஆகிய யாவற்றுக்கும் தோள் கொடுத்துத் தனது பேராதரவினை நல்கி வருகின் றனர். எனது நோக்கங்களில் ஒன்றான தமிழகச் சிவாலயத் திருத்தலவரலாற்றினைத் தொகுக்கும் பணியில் மிக்க ஆர்வம் காட்டிவருகின்றார். இவற் றில் முதல்கட்டப் பணியாக கோவூர் தலவரலாறான "கோவூர் திருமேனீச்சரம்" திருமழிசைத் தல வர லாறான "திருமழிசை ஒத்தாண்டேச்சரம்" ஆகிய இரு நூல்களைத் தமது சொந்த செலவில் வெளியிட்டு இலவசமாக அளித்து வருகிறார்.

அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் சிவமஞ்சரிக்கு எப்போது சென்று கேட்டாலும் தட்டாமல் உதவி வழங்கி வருகின்றார்.

கடந்த சிவராத்திரி விழாவிற்குக் கோயம் பேடு ஆலயத்திற்கு நானும் குருஜி. வீரமணி அவர் களும் சென்று வழிபட்டோம். அங்கு வீரமணி ஸ்ரீஜோதிராமலிங்கசுவாமிகளை அறிமுகம் செய்து வைத்தார்கள். அவர்கள் மூலம் செங்குன்றத்தை அடுத்துள்ள நல்லூர் ஆலயத்தில் திருப்பணிகளைச் செய்து வரும் திரு.தங்கம், திரு.முத்து ஆகியோரின் அறி முகம் ஏற்பட்டது. இவர்களும் எனக்குப் பலவாறு உதவி வருகின்றனர்.

5/4

எனது பக்கத்து ஊரான எலப்பாக்கத்தில் வசித்து வரும் திரு. மணிவாசகம் அவர்கள் சிவமஞ் சரியின் இதழைத் தமது நண்பரிடம் பார்த்துவிட்டு என்னைத் தேடிவந்தார். அவர் வந்தபின்பே அவர் எனக்கு உறவினர் என்பது தெரியவந்தது. அவர் தாம்பரத்தை அடுத்த சேலையூரில் வசிக்கும் ராம் ராம் சகோதரர்கள் என்று அன்புடன் அழைக்கப் பெறும் திரு.சாய்ராமன், திரு.கல்யாணராமன் ஆகியோ ரிடம் அறிமுகம் செய்து வைத்தார். அவர்கள் மூலம் திரு.என்.ஆர். வெங்கடேசன் அவர்களின் தொடர்பு கிடைத்தது. இவர்கள் பலவகையிலும் தொடர்ந்து எனக்கு உதவி செய்து வருகின்றார்கள்.

யாவற்றிற்கும் மேலாக எனது தாயார் திருமதி.ஜெயலட்சுமி அவர்கள் இளமையில் எனக்கு ஊட்டிய சிவபக்தியே எனக்கும் இந்நூலுக்கும் ஆதார மாகும். அவர்களுடைய திருவடிகளை இவ்வேளை யில் பணிந்து வணங்குகிறேன். எனது சகோதரர் திரு.பூசை.ச.சோமாஸ்கந்தன் அவர்கள் இளமைக் காலத்தில் என்னைப் பல்வேறு கோயில்களுக்கு அழைத்துச்சென்று சிற்ப ஓவியங்களை விளக்குவார். அதுவே எனது ஆர்வத்தை வளர்த்ததாகும். இவர் கள் யாவருக்கும் எனது நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

இப்பணியில் எனக்கு ஆதாரமாக நிற்பவள் எனது வாழ்க்கைத்துணைவி திருமதி.கே. வசந்தா ஆவாள். அவள் என்னை எனது வழியில் செல்ல விடுத்துக் குடும்பப்பணிகள் அனைத்தையும் தானே பொறுப்பேற்றுக் கொண்டு நல்லறம் ஆற்றிவருகின் றாள். அவளுடைய அன்பும் அரவணைப்பும் என் னை எனது வழியில் தடையின்றிச் செல்லத் துணை நிற்கின்றது.

இந்நூலை வெளியிடும் பணியில் உதவி செய்தவர்கள் பலராவர். மின்அச்சுக் கோர்ப்புப் பணியில் எனது தம்பி திரு.வெங்கடேசன் நல்ல பக்தி யுடன் பணி செய்தான். அதுபோலவே தனம் லேசர் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு.எஸ்.சிகாமணி யும், மின்அச்சுக் கோர்ப்பாளர் திரு. சேகரும் நன்கு உதவியாக இருந்தனர்.

மேலும் திருப்புகழ் தொண்டர் வலையப் பேட்டை திரு.கிருஷ்ணன் அவர்கள், பெசன்ட்நகர் திரு.எம்.ராஜகோபாலன் (இந்தியன் வங்கி) அவர்கள், உளுந்தூர்பேட்டை திரு.ஷண்முகம் அவர்கள் ஆகியோர் வேண்டிய புகைப்படங்களைத் தந்து உதவினார்கள்.

ஓவியர்களான திரு.கல்பனா (திருநாவுக்கரசு), திரு.ஜெகன், திரு.கணேசன், திரு.சசி, முதலானவர்கள் நாம் எப்போது சென்று கேட்டாலும் உடனுக்குடன் படம் வரைந்து கொடுத்து உதவினார்கள். சென்னை அடையாறு ஸ்பீகின் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு.குமார் (பாலசுப்பிரமணியம்) அவர்கள் அச்சுப் பணிகளுக்கு ஆலோசனைகளை வழங்கிப் புத்த கம் நன்கு வெளிவர உதவினார்கள். பலசமயம் அவர் அச்சுப் பிழைகளைத் திருத்தியதுடன் தனது தந்தையார் ப்ரும்மஸ்ரீ ஜி.நடராஜன் அவர்கள் மூலமாகவும் திருத்தியளித்து உதவினார்கள். மேலும் அச்சுப்பிழைத் திருத்தப்பணியில் திரு. த. பூமி நாகநாதன் அவர்கள் சிறப்புடன் உதவினார்.

நமது "சிவசுந்தரி கலைக்கூடத்தின்" அனைத்து பணிகளுக்கு ஆதரவு தந்து வரும் டாக்டர். உ.வே. சாமிநாதஐயர் நூலகத்துக்கும், அங்குப் பணியாற்றி வரும் ஆராய்ச்சியாளர் திரு.பாலசாரநாதன் அவர் களுக்கும், நூலகர் பாஸ்கரன் எழுத்தர் நடராஜன் உடனாளர் திரு. சாயிராம்,மற்றும் மணி, பொன்னுவேல் ஆகியவர்களுக்கும் எனது நன்றி.

இந்நூலுக்கு அவ்வப்போது உதவி செய்த வர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூர் கின்றேன். இந்நூலின் முகப்பில் ஆசிரியர் என்று எனது பெயர் இடப்பட்டிருந்தாலும் இதற்குச் செய்திகளை வழங்கிப் பலவேறு திருத்தலச்செய்தி களைக் கூறி, புகைப்படம் பெற ஆற்றுப்படுத்தி வழிகாட்டிய அனைவரும் ஆசிரியர்களே. அவர் கள் அனைவரையும் நான் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

இவர்கள் யாவருக்கும் எனது நன்றியை மீண்டும் மீண்டும் பணிந்து தெரிவித்துக் கொள்கின் றேன். இவர்கள் யாவருக்கும் அருள்மிகு உண்ணா மலை அம்பிகை உடனாய அண்ணாமலையெம் அண்ணல் சகலசெல்வ யோகமிக்கப் பெருவாழ் வை அளிக்கவேண்டுமென்று அவனுடைய செம் பொற்சேவடிகளைப் பணிந்து போற்றி வணங்கு கின்றேன்.

இங்ஙனம்
சிவப்பணியில் மீளா அடிமை

பூசை. ச. ஆட்சிலிங்கம்

(பூசை. ச. ஆட்சிலிங்கம்)

ஈஸ்வர ஆண்டு - கார்த்திகை தீபம்
12.12.97 வெள்ளிக்கிழமை

நன்றிமலர்கள்

இறைவன் திருவருளாலும் அன்பர்களின் நல்லாதரவினாலும் **சிவமஞ்சரி** (முதல் தொகுதி)யின் இரண்டாவது பதிப்பு (2003) வெளிவந்து, தங்கள் திருக்கரங்களில் தவழ்கிறது. இந்நூல் விரைவாக வெளிவர வேண்டும் என்பதற்காகக் கீழ்க்காணும் அன்பர்கள் *முன்வெளியீட்டுத் தொகை அளித்து உதவி செய்துள்ளார்கள். இவர்களுக்கு எனது பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து அன்பர்களுக்கும் எல்லாம் வல்ல உண்ணாமுலை அம்பிகை உடனாய அண்ணாமலையெம் அண்ணல் சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வுதனை அருள வேண்டும் என்று அவர் திருவடிகளில் பிரார்த்திக்கிறேன்.

வாழி நலம் சூழ்! — அன்பன் **பூசை. ச. அருணவசந்தன்**

சிவஸ்ரீ K.P.P.**பன்னீர்செல்வம்,**
M.A(Eco) M.A. (P.Admn) M.L., MBA, HDC
இணைப்பதிவாளர் கூட்டுறவு சங்கங்கள்
சென்னை - 41.

"கயிலைப் புனிதர்"
சிவஸ்ரீ G.S. **ஆனந்தன்**
20/ வைஷ்ணவி நகர், சந்திரன் கார்டன்ஸ்
சின்ன திருப்பதி, சேலம் - 8.

"சித்தாந்தரத்தினம்"
சிவஸ்ரீ. G. **கந்தசாமி-ஜோதி**
36, முதலியார் தெரு (மாடி),
திலாசுபேட்டை, புதுவை - 600 009.

"சித்தாந்தரத்தினம்"
சிவஸ்ரீ. Dr. E. **ரவிசங்கர்** B.D.S
ஜெய்சற்குரு பல்மருத்துவமனை, வில்லியனூர் சாலை,
நடராசன் காம்ப்ளக்ஸ், ரெட்டிபாளையம், புதுவை-10.

"சித்தாந்தரத்தினம்"
சிவஸ்ரீ. M. **சேகர் - பத்மாவதி**
66, மாரியம்மன் கோயில் தெரு, II மாடி
உருளையன்பேட்டை, புதுவை - 600 005.

"அழகன் திருப்பணிமணி"
S. **குமார்** CAIIB மேனாள் பாரத வங்கி அதிகாரி
3, துரைசாமிபுரம், 2வது தெரு, திருப்பூர் - 641 602.

"கயிலைப்புனிதர்"
சிவஸ்ரீ. Dr. **சோ. முருகன்** M.B.B.S.
தெற்குரதவீதி, சிதம்பரம்.

"திருப்பணிச் செல்வர்"
Dr. **தேவராஜன்,** M.B.B.S.
திருமழிசை, சென்னை.

சிவஸ்ரீ P. **வைத்யநாதன்,**
M.G.R. ரோடு, பெசன்ட் நகர், சென்னை-600 090.

சிவஸ்ரீ S. **நாராயணசாமி,**
கஸ்தூரிபாய் நகர், சென்னை-20.

குருசாமி Dr. **கோ. சம்பத்குமார்,**
ஓம் ஸ்ரீ சாஸ்தா சேவாசமாஜ், சாஸ்தா இல்லம்,
எழும்பூர், சென்னை.

பிரம்மஸ்ரீ K. **ராமு,** வழக்கறிஞர்,
சாலைத்தெரு, மயிலை,
சென்னை - 4.

சிவஸ்ரீ C.T. **ராமலிங்கம் - ஜீவா,**
சாமி பண்டாரம் தெரு,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை - 600 002.

சிவஸ்ரீ. N. **வேதகிரி,**
சாந்தி புக்ஹவுஸ், அண்ணாசாலை,
சென்னை-600 002.

சிவஸ்ரீ திரு. **சுந்தரம்,**
திருமதி. **கௌசல்யா சிவக்குமார்,**
லஸ், மயிலாப்பூர், சென்னை - 600 004.

சிவஸ்ரீ. N. **கார்த்திகேயன்,**
பெரிய தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

சிவஸ்ரீ V. **வெங்கடரமணி,**
துணைத்தலைவர் **"பக்தமண்டலி"**
சென்னை - 600 090.

சிவஸ்ரீ G.T. **நாடியன் செல்வன்,**
(Cisco System (India) Pvt. Ltd., Bangalore.
விழுப்புரம், தென்னாற்காடு மாவட்டம்.

*இத்தொகைக்கு ஈடாக இப்பதிப்பின் புத்தகங்கள் அன்பர்களுக்குச் சலுகைவிலையில் வழங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆ-ர்

உ

ஸ்ரீ பச்சையம்மன் துணை



நூலின் உள்ளே . . .

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.

பேரன்புடைய சிவநேயச் செல்வப் பெருந்தகையீர்,

சிவபெருமானின் எல்லையில்லாத பெருமைகளை இயன்றவரை விளக்கும் வகையில் சிவமஞ்சரி என்ற தொடர் நூலை எமது கலைக்கூடம் வெளியிட்டு வருகின்றது. இதனை 60 தலைப்புகளில் சிறந்த புகைப்படங்கள் வரைபடங்களுடன் நேர்த்தியாக அச்சிட்டு வெளியிட முனைந்து, செயல்பட்டு வருகிறோம். (தடித்த எழுத்தில் உள்ள 5 நூல்கள் இந்த முதல் தொகுதியில் இடம் பெற்றுள்ளன).

1. **சிவமே செம்பொருள்**
2. **மச்சேந்திரர்**
3. **திருவாவடுதுறை ஆதீனம்**
4. **முகலிங்கம்**
5. **பிரதோஷம்**
6. பசுபதி
7. உமாமகேஸ்வரர்
8. ஐந்தும் சிவபெருமானும்
9. திருக்கயிலாயம்
10. மகாசிவராத்திரி
11. ஸ்ரீருத்திரர்
12. ஆதித்யேசுவரர்
13. சோமாஸ்கந்தர்
14. சைவ சமய சாத்திரங்கள்
15. ஸ்ரீதியாகராஜர்
16. சந்திரசேகரர்
17. அக்னீஸ்வரர்
18. சித்தீசுவரர்
19. அகத்தீசுவரர்
20. அதி(க) தியாகராஜர்
21. கேதார கௌரீசுவரர்
22. அம்பிகாபதீஸ்வரர்
23. அரம்பேசுவரர்
24. ஸ்ரீகாளீசுவரர்
25. திருமணக்கோலநாதர்
26. பிரம்மபுரீசுவரர்
27. பன்னிருதிருமுறை அறிமுகம்
28. வேதஆகம புராணீசுவரர்
29. திருமாலீசுவரர்
30. மூவராய்நின்ற முதல்வன்
31. ஸ்ரீவீரட்டகாசர்
32. ஸ்ரீகாலசம்ஹாரர்
33. ஸ்ரீமன்மதேசுவரர்
34. ஸ்ரீதிரிபுராந்தகர்
35. ஸ்ரீவீரபத்திரர்
36. தீபமங்களேசுவரர்
37. தலவிருட்சங்கள்
38. ராஜகோபுரங்கள்
39. விமானேசுவரர்
40. தீர்த்தீசுவரர்
41. பூதலிங்கேசுவரர்
42. இராட்சதலிங்கம்
43. சப்தரிஷீசுவரர்
44. தட்சணாமூர்த்தி
45. சிவாசாரியர்கள்
46. புஷ்பரதீசுவரர்
47. கங்காதீசுவரர்
48. எட்டும் சிவபெருமானும்
49. விருந்திட்டீசுவரர்
50. சிவாலய திருவிழாக்கள்
51. சபாநாயகர்
52. ஆனந்ததாண்டவம்
53. ஊர்த்துவ தாண்டவர்
54. நாகநாதர்
55. இராஜலிங்கேசுவரர்
56. பறவைகளும் பரமனும்
57. ஐராவதீசுவரர்
58. சிவாயுதங்கள்
59. சிவாலயப் பரிவாரங்கள்
60. பைரவர் என்பனவாகும்

மொத்தம் 2000 பக்கங்களுக்கும் அதிகமான அளவில் வெளிவரும் இந்நூல்

சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயிலாகும்.

இந்நூல் ஆசிரியர் பூசை ச. அருணவசந்தன், ஓதுவார் மரபில் வந்த சைவநெறியாளர். சென்னை பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். தமிழகமெங்கும் பயணம் செய்து ஏறத்தாழ 20,000 கோயில்களைத் தரிசித்தவர். தான் கண்டும் கேட்டும் உணர்ந்த செய்திகளைப் பதினெண்புராணங்கள், தெய்வத்திருமுறை நூல்கள், தலவரலாறுகள், கல்வெட்டுகள், செவிவழிச் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்புநோக்கித் தொகுத்து நூலாக அளிக்கின்றார். மேன்மைகொள் சைவ நெறி உலகெங்கும் விளங்க, குறைந்த விலையில் நிறைந்த செய்திகளைத் தாங்கி, சிவமஞ்சரி வலம் வருகிறது. இவருடைய பணியைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதீனம் குருமகா சந்நிதானம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் "சிவமஞ்சரிச் செம்மல்" என்ற பட்டத்தையும் அகில உலக பக்தி இலக்கிய பேரவையினர் "அருட்பணி அரசு" என்ற பட்டத்தையும் அளித்து கௌரவித்துள்ளனர்.

உ
ஆரூரா! தியாகேசா!!
திருச்சிற்றம்பலம்



சிவமே செம்பொருள்

உலகின் தொன்மைச் சமயமான சைவசமயத்தின் மேலான கருத்துக்களையும், சிற்ப, ஓவிய, நுண்கலைச் செல்வங்களையும், ஆகமம் முதலான வழிபாட்டு நூல்களின் சாரங்களையும் தொகுத்து அன்பர்கள் அறிந்து மகிழ **சிவமஞ்சரி** எனும் இந்நூல் மலர்கின்றது.

இந்நூலில் சைவத்திருத்தலங்கள், சைவ சமயம் சார்ந்த கலைச் செல்வங்கள், உலோகத் திருமேனிகள், சமய வரலாற்றின் அதிசயமான நிகழ்ச்சிகள், சைவம் தழைக்கப்பாடுபட்ட ஆசாரியர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், புராணச் செய்திகள் வரலாற்று உண்மைகள், அரிய விழாக்கள், மறைந்துபோன கலை, இலக்கியம், சிற்பங்கள் முதலான ஆயிரத்துக்கும் மேற்பட்ட செய்திகளைத் தொகுத்துச் சிறப்புடன் காணலாம்.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பக்கங் களைக் கொண்ட இந்நூலை ஒரு சேர அச்சிட்டாமல் குறைந்த விலையில் பலவேறு தலைப்புகளில் பகுதி பகுதியாக வெளியிடப் படுகிறது.

இவ்வகையில் "சிவமே செம்பொருள்" என்ற முதல் மலர் சிவமூலமந்திரமான ஐந்தெழுத்தில் தொடங்குகின்றது. தொடர்ந்து சிவனடியார்களை வழிநடத்தும் மாபெரும் சேனாதிபதியான அதிகார நந்தியைப் பற்றிய செய்தியும் அதைத்தொடர்ந்து சைவ சமயம் சார்ந்த பல்வேறு செய்திகளும் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. அன்பர்கள் அனைவரும் இந்தச் செய்திகளை அறிந்து சிவமெனும் செம் பொருளை உணர்ந்து அவருடைய திருவருள் பெற விழைகின்றோம்.

சிவமஞ்சரி - இது சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்.

சிவனின் திருஅருளாம் "உமாதேவியார்"



திருமயிலை - கற்பகாம்பிகை

சிவபெருமானிடமிருந்து அவரின் அருள் ஆற்றலாக வெளிப்பட்டு விளங்குபவள் உமாதேவியார். அவள் அவரைப் போலவே இடபவாகனத்தில் மான், மழு ஏந்தி அபயவரத முத்திரை தாங்கி அருள்பாலிக்கின்றாள். இத்திருக்கோலம் **"மகேசுவரி"** என்று அழைக்கப்படும். சென்னை மயிலை கற்பகாம்பிகை மகேஸ்வரியாக நவராத்திரி விழாவில் கோலம் தாங்கி அருள்பாலித்தலைப் இப்படத்தில் கண்டு வணங்குகின்றோம்.

இந்த கற்பகத்தைக் கண்ணாராக்கண்டு வணங்கி சிவமஞ்சரியைத் தொடர்ந்து காணலாம்.

ஐந்தெழுத்து (பஞ்சாட்சரம்)

சிவபெருமானுக்குரிய மந்திரங்களில் மூலமும் முடிவுமானது "ஐந்தெழுத்து" எனும் பஞ்சாட்சரமாகும். இந்த ஐந்தெழுத்தின் வடிவமே நடராசத் திருமேனியாகும்.

வேதத்தின் இடையில் அதன் இருதயமாக விளங்குவது ஐந்தெழுத்தே.

இந்த ஐந்தெழுத்து மந்திரமே உலகினைக் காத்தும், படைத்தும், கரந்தும், அழித்தும், அருளியும் விளையாடக் காரணமாக உள்ளது.

இதனைத் திருமூலர்

அஞ்செ முத்தால் ஐந்து பூதம் படைத்தனன்
அஞ்செ முத்தால் பல யோனி படைத்தனன்
அஞ்செ முத்தால் அவ் அகலிடந் தாங்கினன்
அஞ்செ முத்தாலே அமர்ந்து நின்றானே.

என்கிறார்.

இதனைச் சிவமூல மந்திரம், சிவ வாசகம், மந்திர நாயகம் எனப் பலவாறு அழைப்பர்.

வேத புருஷனாகிய சிவபெருமானுக்கு யஜுர்வேதமே சிரசாகவும் அதன் மத்தியிலுள்ள ஸ்ரீருத்ராத்யாயம் முகமாகவும் அதன் நடுவிலேயுள்ள பஞ்சாட்சரம் கண்களாகவும் அதன் நடுவிலேயுள்ள **"சிவ"** எனும் சொல்லே விழிகளின் கருமணிகளாகவும் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளன.


இவ்வைந்தெழுத்து

"நமசிவாய"

என்பதாகும்.

திருஞானசம்பந்தப் பெருமானும், அப்பரடிகளும், சுந்தர மூர்த்தி சுவாமிகளும் நமசிவாயத்தின் சிறப்பை விளக்கி பதிகங்களை அருளிச்செய்துள்ளனர். அவை "நமசிவாயப் பதிகங்கள்" என்றே அழைக்கப்படுகின்றன.

நந்திதேவர்



வெள்ளி அதிகார நந்திதேவர் - திருமயிலை கபாலீச்சரம்

சிவபெருமானுடைய திருக்கோயிலின் தலைமை யதிகாரி யாகவும், தலைமைக் காவலராகவும் வீற்றிருப்பவர் திருநந்திதேவர். இவருடைய அனுமதி பெற்றே இந்திரன் உள்ளிட்ட தேவர்கள்யா வரும் சிவபெருமானின் சந்நிதியுள் சென்று அவரைத் தரிசித்து அருளைப்பெற வேண்டும்.

இவர் சிவபெருமானின் யோகத்தீயினின்று அவருடைய அம்சமாகவே தோன்றியவர். நந்துதல் என்பதற்கு வளர்தல், நிலையாக இருத்தல் என்பது பொருள். எப்போதும் ஞானத் தீயாக ஒளிரும் பெருமானுடன் இணைந்திருப்பதால் இவர் "நந்தீ" என்றழைக்கப் படுகின்றார். தலைவனான சிவபெருமானின் பால் இவர் கொண்டுள்ள அன்பு என்றும் மங்காது வளர்வதால் இவருக்கு "நந்தீ" என்பது பெயராயிற்று என்பாரும் உண்டு.

இவர் நந்தி கணங்களின் தலைவர். செல்வத்தின் அடையாளமான மாட்டின் திருஉருவ முடையவர். சதாகாலமும் சிவனைச் சிந்தனையில் நிறுத்தித் தவம் செய்து கொண்டிருப்பவர். அந்நிலையில் இவர்

குட்டையான கொம்புகளும் நீண்டவாலும், பருத்த திமிலும், வலிய கால்களையும் கொண்டவர்.

மேலும் சிவாலயங்களில் மகாமண்டபத்தில் இறைவனை நோக்கியவாறு அமர்ந்து தியானத்தில் மூழ்கியிருப்பவர். தருமத்தின் வடிவமாகவும், யோகத்தின் வடிவமாகவும் விளங்குபவர்.

சிவபெருமானிடம் அன்பு பூண்டவர்கள் இவரைத் தலைமையாகக் கொண்ட நந்தி கணத்தில் வாழ்கின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன.


நந்தியம்பெருமான் சிவலிங்கத்திற்கு முன்பு காளை மாட்டின் வடிவில் படுத்தவாறு இருப்பினும் கயிலையில் சிவலோக மண்டபத்தின் வாயிலில் தேவவடிவினராக நாற்கரங்களில் மான், மழு, தண்டம், பொற்பிரம்பு ஏந்தி அழகிய திருமுகத் துடன் மகுடம் துலங்க எழுந்தருள்கின்றார். சிவபெருமானைப் போலவே இவருடைய ஜடாமகுடத்திலும் பாம்பும் வெண்பிறையும் அமைந்துள்ளன. குண்டலின் என்பது இவருடைய தேவியின் பெயராகும்.

இவர் பூவுலகில் பிறந்து சிவபூஜை செய்ய விரும்பினார். அதன்படியே மழபாடியில்

அவதரித்துச் சிவபூஜை செய்து மகிழ்ந்தார். இவர் மனைவியான குண்டலின் என்பவள் சுயம்பிரபையாக மண்ணில் தோன்றி இவரை மணந்தாள். இவருடைய திருவடிவின் அருமையை உணர்ந்த திருமால், பிரமன், வேதங்கள் முதலியபலரும் இவருடைய வடிவான ரிஷப (மாட்டின்) உருவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கிப் பேறு பெற்றனர்.

நந்தியம்பெருமானே சிவபிரான் அருளை அடியவர்கள் பெற்று வளம்பெற்று வாழ வழிகாட்டி நிற்கின்றார். சிவாலயங்களில் அமைந்துள்ள கோபுரங்களில் (குடகறை என்ற) உள்ளறையில் வடக்கு நோக்கியவாறு இவர் தனது தேவியுடன் எழுந்தருளியிருக்கக் காணலாம்.

உடையவர்



அண்டசராசரங்கள் யாவற்றையும் சிவபெருமான் தனது உடைமைப் பொருளாகக் கொண்டிருப்பதால் அவனுக்கு "உடையவர்" என்பது ஒரு பெயர். கல்வெட்டுகளில் இறைவன் உடையவர் என்றே குறிப்பிடப்படுகின்றார். தஞ்சைப் பெருஉடையார், ஆவுடையார், திருச்சிற்றம்பலமுடையார் என்று பலவாறு சிவபெருமான் அழைக்கப்படுதல் இங்கு எண்ணத்தக்கதாகும். சிவபூசைச் செல்வர்கள் தங்களின் பூசைக்குரிய ஆன்மார்த்த மூர்த்தியான சிவலிங்கத்தை உடையவர் அல்லது உடையார் என்றே அழைப்பர்.

பெரிய திருத்தலங்களில் வீற்றிருக்கும் சபாமூர்த்திகளான உற்சவத் திருமேனிகளுக்கு ஆண்டின் சில நாட்களில் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுதல் மரபு. அம்மூர்த்திகளுடைய அலங்காரத்தைத் தினமும் பிரித்து அபிஷேகித்து மீண்டும் அலங்காரம் செய்வது எளிதல்ல. எனவே அந்த மூர்த்திகளுக்குரிய எல்லா அபிஷேக ஆராதனைகளையும் அச்சபையுள் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிறு சிவலிங்க மூர்த்திக்கே செய்வர். இந்தச்சிவலிங்கமே "உடையவர்" என்று அழைக்கப்படுகிறது.

பெரும்பாலும் உடையவர் எனும் இந்த மூர்த்தி ஸ்படிகத்தாலாகிய சிவலிங்கமாகவே இருப்பார். தில்லைச் சிற்றம்பலத்தில் உள்ள உடையவர் (திருச்சிற்றம்பல முடையார்) முதலிய மூர்த்திகள் ஸ்படிக லிங்கங்களேயாகும்.

திருநள்ளாற்று விடங்கர், திருவண்ணா மலையில் முன்பு இருந்த அண்ணாமலையுடையார் போன்றவை மரகத லிங்கங்களாகும். சப்தவிடங்கத் தலங்களிலும் உள்ள தியாகராச மூர்த்திக்கு நித்திய ஆராதனையின் பொருட்டு விடங்கர் எனப்படும் ஸ்படிக, மரகதலிங்கங்கள் உள்ளன.

இந்த உடையவர் எனும் லிங்கங்கள் கவசம் அணிவிக்கப் பெற்று ஒரு பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பெற்றுள்ளன. பூசையின் போது மட்டும் இவை பெட்டியிலிருந்து வெளியில் எடுக்கப்பட்டு கவசம் களைந்து அபிஷேகம் அலங்காரம், ஆராதனம் செய்யப்பெற்று மீண்டும் பெட்டியில் வைத்து உரிய இடத்தில் வைக்கப்பெறுகின்றன.

(பொதுக்குறிப்பு. வைணவ மரபில் உடையவர் என்ற சொல் சிம்மாசனாதிபதிகளைத் தோற்றுவித்து வைணவம் பரப்பிய ஸ்ரீராமானுஜரைக் குறிக்கின்றது. இச்சொல் தமிழக இனப்பெயர்களில் அகமுடையார்க் கும் குலாலர்களுக்கும் பட்டப் பெயராகவும் இருந்து வருகின்றது.)

உருத்திராக்கம்

உருத்திராக்கம் புனைந்தவர் எவராயினும் அவர்தமைத் தீவினை அடையாது. எத்தகைய ஞானமும் எத்தகைய விரதமும் உருத்திராக்கம் புனைவதற்கு ஈடாகாது. ஆயிரம் உருத்திராக் கங்களை அணிந்தவர் தமைத் தேவர்கள் சிவபிரானென்றே தொழுவர் - உபதேசகாண்டம்.

சிவநெறி நிற்போர் அணியும் திருவா பரணங்களில் முதன்மையானது உருத்திராக்க மாகும். இதனைத் தனித்தும் மாலையாகக் கோர்த்து வடமாகவும் அணிவர்.

உருத்திராக்கம் என்பது ஒருவகை மரத்தின் விதையாகும். நன்கு பழுத்த உருத்திராக்கப் பழத்திலிருந்து இக்கொட்டைகள் சேகரிக்கப் படுகின்றன. இமயமலைச்சாரலிலும் நேபாளத் திலும் இத்தகு மரங்கள் நிறைய வளர்கின்றன.

இம்மரத்தின் விதைகள் மிளகின் அளவு முதல் எலுமிச்சம் பழத்தின் அளவு வரை பல அளவுகளில் கிடைக்கின்றன. அபூர்வமாக தேங்காய் அளவுகூட விளைகின்றன.

இவை அக்கமணி, தெய்வமாமணி, புனிதமாமணி, நாயகன் விழிமணி, கண்மணி, கடவுள் நன்மணி என்று பலவாறு அழைக்கப் படுகின்றன.

உருத்திராட்சங்களைக் கோர்த்தமாலைகள் தாழ்வடம், அக்கவடம், அட்சமாலை, கண்டிகை என்று பலவாறு கூறப்படும்.

இந்த மணிகள் தோன்றியதற்கான பல புராணக்கதைகள் பல நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அக்கதையாவது:-

ஒரு சமயம் மயன் (எ) கமலாட்சன், தாரகன் வித்யுன்மாலி என்ற மூன்று அசுரர்கள் தங்கம், வெள்ளி, இரும்பு ஆகியவற்றாலான பறக்கும் கோட்டைகளில் இருந்து கொண்டு தேவருக்கும் யாவருக்கும் துன்பம் விளைவித்தனர். அவர்கள் கடுந்தவம் செய்து சிவனிடத்தும், பிரமனிடத்தும் அரியவரங்களைப் பெற்றிருந்ததால் அவர்களை யாராலும் வெல்ல இயலவில்லை. எனவே இவர்கள் ஆங்காரம் கொண்டு அனைவருக்கும் அனேக தொல்லைகளைத் தந்தனர். அவர்களுடைய அளவுகடந்த இன்னலைப் பொறுக்கமாட்டாது தேவர்கள் முதலான யாவரும் சிவபெருமானைச் சரணடைந்து தம்மைக் காத்தருள வேண்டினர். சிவபெருமானும் அவர்களுக்கு இரங்கி மூன்று கோட்டைகளான அம்மூன்று புரங்களையும் வெல்ல இசைந்தார். அவர் சகல தேவர்கள் சூழச் சென்று முப்புரங்களை எரிக்கச் சினந்து சிரித்த அளவிலே அம்மூன்று புரங்களும் வெந்து நீறாய் வீழ்ந்தன. அப்பொழுது சிவபெருமானின் மூன்று கண்களும் கோபத்தில் விழித்துச் சிவந்தன. அந்த நேரத்திலே அவருடைய கண்களைச் சுற்றி வியர்வைத் துளிகள் அரும்பியன. அவ்வியர் வைத் துளிகள் மண்ணில் விழ்ந்து மரங்களாயின. அம்மரங்கள் உருத்திரனின் கண்வியர்வையிலே தோன்றியதால் உருத்திராட்ச விருட்சம் என அழைக்கப்பட்டன. அம்மரத்தின் கொட்டைகளே உருத்திராட்சங்கள் என்று வழங்கப்படுகின்றன. உருத்திராட்சம் என்பதற்குச் **"சிவனுடைய கண்கள்"** என்பது பொருளாகும்.

சிவனுடைய மூன்று கண்களிலும் இருந்து வீழ்ந்த வியர்வைத் துளிகளுக்கேற்ப இந்த மூன்று வகையான மரங்களும் முளைத்தன. வலது கண்ணான சூரிய விழியில் இருந்து பன்னிரண்டு துளிகளும், இடக்கண்ணான சந்திர விழியில் இருந்து பதினாறு துளிகளும், நெற்றிக்கண்ணான அக்கினி விழியில் இருந்து பத்து துளிகளும் ஆக முப்பத்தியெட்டு துளிகள் மண்ணில் வீழ்ந்து முளைத்து மரங்களாயின. சூரிய விழியில் இருந்து தோன்றியவை செந்நிறமாயும், சந்திர விழியில் இருந்து உண்டானவை வெண்ணிறமாயும் அக்கினி விழியில் இருந்து தோன்றியவை கருநிறமாயும் விளங்குகின்றன. இவற்றால் இன்று உத்திராட்சம் 38 வகையாக விளங்குகின்றது என்பர்.

உருத்திராட்சத்தில் இயற்கையாகவே அமைந்த துளையான நாளமும், முகங்கள் என்கிற அழுத்தமான நெடுக்குக் கோடுகளும், மேடும் பள்ளமுமான கேசரங்கள் என்னும் பகுதியும் அமைந்துள்ளன. இதில் கீழ்ப்பகுதி, பிரம்மனையும், கோடுகள் (முகங்கள் சிவனையும், துளை விஷ்ணுவையும் குறிக்கும் என்பர். மேற்பகுதியில் உள்ள கேசரங்கள் என்னும் முள் முள்ளாக அமைந்த பகுதி அனைத்து தேவர்களையும் குறிப்பதாகும்.

இவற்றில் உள்ள முகங்களுக்கேற்ப இவற்றிற்கு அதிதேவதைகள் அமைகின்றனர். இத்தேவதைகளுக்குரிய மணிகளை அணிவதால் அவர்கள் மகிழ்ச்சியை அடைகிறார்கள். அவற்றை அணிந்தவர்க்கு அவர்கள் தானாகவே முன்வந்து அருள்பாலிக்கின்றனர்.

உருத்திராக்கத்தில் ஒரு முகம் கொண்டவைச் சிவபெருமானையும், இரண்டு முகம் கொண்டவை சிவசக்தியையும், மூன்று முகம் கொண்டவை அக்கினியையும், நான்கு முகம் கொண்டவை பிரமனையும், ஐந்து முகம் கொண்டவை காலாக்னி ருத்திரரையையும், சதாசிவனையும், ஆறுமுகம் கொண்டவை முருகப் பெருமானையும், ஏழு முகம் கொண்டவை சப்தமாதர், ஆதிசேடனையும், எண்முகம் கொண்டவை விநாயகரையும், வித்யேசுவரர் களையும், ஒன்பது முகம் கொண்டவை வைரவர், கங்கை முதலான நவதீர்த்தங்களையும், பத்து முகம் கொண்டவை தசதிக்பாலகர்கள், (விஷ்ணு) ஆகியோரையும், பதினோரு முகம் கொண்டவை ஏகாதச ருத்திரர்களையும், பன்னிரண்டு முகம் கொண்டவை பன்னிரு ஆதித்தியர்கள், பன்னிரு வடிவான திருமாலின் மந்திர மூர்த்திகளையும், பதிமூன்று முகம் கொண்டவை நூறு உருத்திரர்களையும், பதினான்கு முகம் கொண்டவை அசுவினித் தேவர்கள் அஷ்ட வசுக்கள் ஆகியோரையும், பதினைந்து முகம் கொண்டவை சந்திரனையும், பதினாறு முகம் கொண்டவை முப்பத்து முக்கோடி தேவர்கள், மும்மூர்த்திகள் ஆகியோரையும் அதிதேவதை யாகக் கொண்டவை. இவற்றை அணிவதால் அவையவைக்குரிய தேவர்கள் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்து அருள்புரிகின்றார்கள்.

முப்பத்தாறு, ஐம்பத்திநான்கு, நூற்றெட்டு ஆகிய எண்ணிக்கையில் இம்மணிகளைக் கோர்த்து மாலையாக்கித் தலையிலும், கழுத்திலும் அணிவர். சிறு அளவிலான ஆறு மணிகளைக் கோர்த்து காதில் வளையமாகவும் அணிவர்.

பொதுவாக ஐந்து முகமுள்ள உருத்திராக் கங்களே அதிக அளவில் கிடைக்கின்றன. சிவபூசையாளர்கள் ஐந்து அல்லது பதினோரு முகங்கொண்ட மணிவடத்தையே அணிகின்றனர். ஒருமுகம் உள்ள உருத்திராக்கம் அரிதாகவே கிடைக்கின்றது. இதனால் இதன் விலை அதிகமாக இருக்கிறது.

இரட்டை வாழைப்பழம் போல ஒன்றோடு ஒன்று ஒட்டி விளைந்த இரட்டை உத்திராட்சங் களும் கிடைக்கின்றன. இவற்றைக் 'கௌரி சங்கரம்' என அழைப்பர். இதனைப் பொன் தகட்டால் செய்த கவசத்தால் மூடி கழுத்தில் அணியும் மாலையில் நடுநாயகமாக இணைத்து அணிவர்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள கொட்டையூர் எனும் தலத்தில் மூலவரான சிவலிங்கமூர்த்தி உருத்திராக்கம் போன்ற மேனியை உடையவராக விளங்குகின்றார் என்பர்.

பொதுவாக தென்னகத்தில் உருத்திராக்க மரங்கள் பயிராவதில்லை. மிகவும் அபூர்வமாக கூவம் என்றழைக்கப்படும் திருவிற்கோலம் எனும் திருத்தலத்தில் (கோயிலுக்கு எதிரில் உள்ள சத்திரத்தின் பின்புறம்) உருத்திராக்க மரம் வளர்ந்துள்ளது. இம்மரம் சித்திரையில் காய் காய்கின்றது என்று கூறுகின்றனர்.

- மதுரை மீனாட்சி சுந்தரேசுவர சுவாமிக்கு முத்தும், உருத்திராக்கமும் இணைத்துக் கட்டி செய்யப்பெற்ற அழகிய கிரீடம் உள்ளது.
- உருத்திராக்கங்களை சிவலிங்கம்போலச் செப்புக்கம்பியில் கட்டித் தலையில் கிரீடம் போன்று அணிந்து கொள்ளும் வழக்கம் இருந்தது. சிவபூசை செய்யும் போது இதனை அணிந்து கொள்வர்.

சிவ மூர்த்தங்கள்

சிவபெருமான் 1. உருவம், 2. அருவம், 3. உருவருவம், 4. ஆன்மாக்களோடு ஒன்றியநிலை. 5. பரந்து தனித்து நின்று உலகினை இயக்கும் சர்வபூதராக விளங்கும் நிலை என்று ஐந்த வடிவினராக விளங்குகின்றார்.

இவற்றுள் உருவம் என்பது ஜடாமகுடம், முக்கண், மான், மழு முதலியன தரித்து சர்வாலங் காரங்களுடன் எழுந்தருளியுள்ள நிலையாகும். திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள நடராசர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், உமாசகிதர் முதலான இவரது திருமேனிகள் "உருவ" நிலையைக் குறிக்கின்றன. "அருவம்" என்பது "சுத்தப் பிரணவமாகும்". இந்நிலையில் எல்லாவற்றிற்கும் மூலமாக பெருமான் இருக்கின்றார்.

"அருவுருவம்" என்பது சிவலிங்கத் திருமேனியாகும். இந்நிலையில் நாம் கண்களால் காணத்தக்க வகையில் அழகிய உருவமுடைய வராக விளங்குகின்றார். அதே சமயம் திருமுகம், திருக்கரங்கள், திருவடிகள் போன்ற உறுப்புக்கள் இல்லாத காரணத்தால் இதனைத் திருமேனி என்றும் சொல்ல முடியாது. எனவே உருவமாயும், அருவமாயும் விளங்குகின்ற காரணத் தால் சிவலிங்கம் அருவுருவத் திருமேனி எனப்பட்டது.

(மற்ற இரண்டு வடிவங்களும் விரிக்கில் பெருகும் இவை பின்னர் வெளியிடப்படும்).

இதுவன்றி சிவபெருமான் அன்பர்களுக்கு அருள்பாலிக்க அந்தந்தச் சமயங்களுக்கேற்பத் திருவடிவம் கொள்கின்றார்.

இவ்வகையில் ரிஷிகளும் தேவர்களும் அவருடைய மணக்கோலம் காணவேண்டி நின்றபோது கல்யாண சுந்தரராகவும், திருமால், நந்தி முதலியோர்களுக்குச் சோமாஸ்கந்தராகவும், அருச்சுனனுக்கு வேடனாகவும், சுந்தரருக்கு வயது முதிர்ந்த அந்தணனாகவும் சோமாசி மாற நாயனார்க்குப் பெரிய காளையாகவும், நரசிம்மரை அடக்கப் பேரண்டப் பட்சியாகவும் இன்னும் கணக்கற்ற உருவங்கள் கொண்டு காட்சியளித் துள்ளார். இவ்வாறு காட்சியளித்த அனைத்துத் திருவுருவங்களையும் எழுந்தருளி வைத்து நம்மால் வழிபட முடியாது என்பதால் ஆன்றோர்கள் அவருடைய குறிப்பிடத்தக்க 1008 மூர்த்தங்களை மட்டும் அமைத்து வழிபட வகை செய்தனர். அவைகளின் எண்ணிக்கையளவு மிகவும் அதிகமாக இருக்கவே அதனைச் சுருக்கி 108 வடிவங்களை வைத்து வழிபட அருளிச் செய்தனர்.

பின்னர் வந்த சமயச் சான்றோர்கள் அதனையும் சுருக்கி, அவற்றுள் குறிப்பிடத்தக்க 64 வடிவங்களை அமைத்து வழிபட ஏற்பாடு செய்தனர். தவத்திரு பாம்பன் சுவாமிகள் இந்த 64 வடிவங்களின் பெயரும் ஒரு பாடலில் வரும்படி நூல் ஒன்றைப் பாடியுள்ளார். அந்நூல் **அட்டாட்ட விக்கிரக லீலை விருத்தம்** என்று அழைக்கப் படுகிறது. மேலும் அவரே சிவஞான தீபம் என்ற நூலிலும் 64 விக்கிரகங்களின் பெயரையும் கூறுகின்றார்.

சமயச்சான்றோர்களில் சிலர் 64 விக்கிரகங் களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 25 மூர்த்தங்களை மகேசுவர மூர்த்தங்கள் என்று பெயரிட்டு அவற்றை வணங்கும் விதிகளை ஏற்படுத்தினர். எனினும் 64 மூர்த்தங்களை வணங்குவதே இன்னும் சிறப்புடன் போற்றப்பட்டு வருகின்றது.

பின்னாளில் இவ்வளவு திருமேனிகளையும் ஒவ்வொரு கோயிலிலும் வைக்க முடியாது என்பதால் இவற்றில் ஐந்து மூர்த்திகளை மட்டுமாவது எழுந்தருளச் செய்ய வேண்டும் என்ற வரையறையை உண்டாக்கினர். அந்த ஐந்து மூர்த்திகள் சோமாஸ்கந்தர், நடராசர், சந்திரசேகர், பிட்சாடனர், தட்சணாமூர்த்தி ஆகியோராவர்.

சிவபெருமானுக்கு இப்படி எத்தனை வகையான மூர்த்திகள் இருப்பினும் சிவாலயங் களில் மூலத்தானத்தில் இருந்து அருள்புரியும் மூர்த்தம் சிவலிங்க வடிவமேயாகும்.

சிவபெருமானது அறுபத்து நான்கு லீலாவிக்கிரகங்கள்



1. இலிங்கம்
2. இலிகோற்பவர்
3. முகலிங்கம்
4. சதாசிவர்
5. மகாசதாசிவர்
6. உமாமகேசுவரர்
7. உமேசர்
8. சோமாஸ்கந்தர்
9. சந்திரசேகர்
10. வ்ருஷபாந்திகர்
11. வ்ருஷபாரூடர்
12. புஜங்கல்லிதா
13. புஜங்கத்திராசர்
14. சந்தியா நிருத்தர்
15. சதாநிருத்தர்
16. காளிகாதாண்டவர்
17. கங்காவிசர்ஜனர்
18. திரிபுராந்தகர்
19. கல்யாணசுந்தரர்
20. அர்த்தநாரீசுவரர்
21. கஜாந்தகர்
22. ஜ்வராபக்நர்
23. சார்த்தூலஹரர்
24. பாசுபதர்
25. கங்காளர்
26. பிட்சாடனர்
27. சிங்கஹரர்
28. சண்டேசஅனுக்கிரகர்
29. தட்சணாமூர்த்தி
30. யோக தட்சணாமூர்த்தி
31. வீணாதரதட்சணாமூர்த்தி
32. காலாந்தகர்
33. காமாரி
34. இலகுளீசுவரர்
35. பைரவர்
36. ஆபதோத்தாரணர்
37. வடுகர்
38. க்ஷேத்திராபாலகர்
39. வீரபத்திரர்
40. அகோரர்
41. தட்ச யஞ்ஞபங்கர்
42. கிராதகர்
43. சற்குரு
44. அசுவாரூடர்
45. கஜாந்திகர்
46. ஜலந்தரவதர்
47. ஏகபாதர்
48. திரிமூர்த்தி திரிபாதர்
49. ஏகபாததிரிமூர்த்தி
50. கௌரீ வரப்பிரதானர்
51. சக்ரதானர்
52. கௌரிலீலாதரர்
53. விஷாபரணர்
54. கருடாந்திகர்
55. பிரம்ம சிரகண்டீசர்
56. கூர்ம சங்காரர்
57. மச்சாரி
58. வராஹாரி
59. பிரதானர்
60. ரக்த பிக்ஷாப்ரதானர்
61. சிஷ்யபாவர்
62. சுகாசனர்
63. கங்காதரர்
64. கேசவார்தர் (அரிஹரர்)

சிவபராக்கிரமம்

சிவபெருமானின் 64 திருவுருவங்களையும் அவை உண்டாவதற்குக் காரணமான வரலாற்று நிலைகளையும் விவரித்துக் கூறுவதே சிவபராக்கிரமம் என்ற நூலாகும். இதில் வேதம், ஆகமம், புராணம், திருமுறைகள் ஆகியவற்றிலிருந்து உரிய சான்றுகளுடன் 64 திருமேனிகள் உண்டானதற்கான காரணம் விளக்கப்பட்டுள்ளது.

★❑ மதுரை கம்பத்தடி (நந்தி மண்பத்தில் அமைந்த பெரிய கருங்கல் தூண்களில் மிகப்பெரிய அளவில் 25 மகேசுவர வடிவங்களும் கலைநுணுக்கம் மிக்க சிற்பங்களாகச் செய்யப்பட்டுள்ளன. இந்த அளவிற்குப் பெரிய அளவில் செய்யப்பெற்றுள்ள மகேசுவர வடிவங்கள் தமிழகத்தில் வேறெங்கும் இல்லை.

❑★ சிதம்பரம் சபாநாயகர் ஆலயத்திலும் திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்திலும் திருவாரூர் தியாகராஜர் ஆலயத்திலும் மகேஸ்வரமூர்த்தங்களின் அழகான வண்ண ஓவியங்களைக் கண்டு மகிழலாம்.

உலாத்திருமேனிகள்
(சம்புபட்ச அனுபட்சத் திருமேனிகள்)



தென்னிந்தியக் கோயில்களில் இறைவனின் திருமேனியை அலங்கரித்துத் திருவீதி உலாச் செய்து மகிழ்கின்றனர். உலாவரும் திருமேனிக்கு உற்சவர் என்று பெயர். இவை சம்புபட்சத் திருமேனிகள், அனுபட்சத் திருமேனிகள் என்று இரண்டு வகைப்படும்.

இறைவன் ஒருவருக்குக் காட்சியளித்து அவர் வணங்கும்பொருட்டு தானே உலோகத் திருமேனிகளாய் ஆகிவிடுதல் சம்புபட்சத்திரு மேனி எனப்படும். உதாரணமாகத் திருஒற்றியூரில் நந்தியெம்பெருமானுக்கு இருந்தாடும் கூத்தினை நிகழ்த்தியருளிய தியாகேசப்பெருமான் அப்படியே உலோகத் திருமேனியாக மாறினார். இப்போது திருஉலா மூர்த்தியாக உள்ள பெருமான் இவரேயாவார். இதுபோலவே பூவணம் எனும் திருத்தலத்தில் பொன்னனையாள் எனும் பெண்ணின் அன்பிற்கு மகிழ்ந்து எல்லாம் வல்ல சித்தனாக எழுந்தருளி இரசவாதம் செய்து சோமாஸ்கந்த வடிவத்தை தம் ஆற்றலால் செய்தளித்தார்.

திருச்செங்காட்டாங்குடியிலே சிறுத் தொண்டருக்கு அருள் செய்ய வந்த சிவபெரு மானின் வடிவைச் செய்ய சிற்பிகள் எவ்வளவோ முயன்றார்கள். அது அவர்களால் முடியவில்லை. இறுதியில் சிவபெருமானை நினைத்து பணிந்து உருகி வேண்டினார்கள். சிவபெருமான் அவர்கள் எதிரில் தோன்றி அங்கு உலைக்களத்தில் காய்ந்து உருகி கொதித்துக் கொண்டிருக்கும் செம்பினை வாங்கி அருந்தி தானே ஒருசிலையாக மாறி விட்டார். அச்சிலையே இன்றும் அக்கோயிலில் (உத்திராபதியார்) உலாத்திருமேனி யாக இருந்து வருகின்றது என்பர். இதுபோன்று இறைவன் தானே வந்து சிலையாய் அமர்ந்த மூர்த்திகளையே சம்புபட்சத் திருமேனிகள் என்று அழைக் கின்றோம். (சம்பு=சிவபெருமான்)

இதுபோல இல்லாமல் நாம் வணங்கும் பொருட்டு ஸ்தபதியைக் கொண்டு செய்து நிலைப்படுத்தி குடமுழுக்கு செய்து வணங்கும் மூர்த்திகள் அனுபட்சத் திருமேனிகள் என்று வழங்கப்படுகின்றன.

தேவிலிங்கம் (அல்லது) சக்திலிங்கம்



காமாட்சி தழுவி மகிழும் கச்சியேகம்பர்

அன்னை பார்வதி தேவியாரால் அமைத்து வழிபடப்பட்ட சிவலிங்கங்கள் பார்வதிலிங்கம் அல்லது தேவிலிங்கம் என்றழைக்கப்படுகின்றன.

பார்வதி தேவியார் காஞ்சிபுரத்தில் மண்ணாலும், திருவானைக்காவில் தண்ணீராலும் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்து மகிழ்ந்துள்ளார். காஞ்சிபுரத்தில் தேவியால் அமைக்கப்பட்டு வழிபடப்பட்ட லிங்கமான ஏகாம்பரநாதர் மேனியில் அவள் தழுவிக் கொண்டதால் ஏற்பட்ட வளைத்தழும்பும் முலைத்தழும்பும் உள்ளதாகக் கூறுவர்.

இதனைச் சேக்கிழார் பெருமான்.

"செம்பொன் மலைவல்லி தழுவக்குழைந்த மேனிப் பெருவாழ்வு" என்று கூறுகின்றார்.

திருவானைக்காவில் ஜம்பு கேசுவரர் ஆலயத்தில் உச்சிகாலத்தில் இப்போதும் அம்பிகை இறைவனைப் பூஜிப்பதாக ஐதீகம். எனவே அங்குள்ள அம்பிகையின் கோயில் சிவாச்சாரியார் புடவை உடுத்தி அம்பிகையின் சார்பாக யானை ஆலவட்டம் முதலிய பரிவாரங் களுடன் சென்று உச்சிக்காலத்தில் ஜம்புகேசுவரப் பெருமானை பூசை செய்கின்றார்.

திருவண்ணாமலையில் அம்பிகை அண்ணாமலையாரைப் பூசித்து அவருடைய உடலில் இடப்பாகம் பெற்றதைப் பல புராணங்கள் கூறுகின்றன.

கௌரி தேவியாகிய பார்வதி மயில் வடிவாக பூஜித்த தலங்களில் இரண்டு குறிப்பிடத்தக்கதாகும். அவற்றில் முதலாவது சென்னையில் உள்ள மயிலாப்பூராகும். மயில் வடிவில் தேவி இறைவனை இங்கு பூஜை செய்ததால் இவ்வூர் மயிலாப்பூர் என்றழைக்கப் படுகின்றது. இங்குள்ள இறைவனின் பெயர் கபாலீசுவரர் என்பதாகும். இவ்வூர் கோயிலின் தலமரமான மகிழமரத்தின் அடியில் அம்பிகை மயிலுருவாகச் சிவனைப் பூசிக்கும் ஐதக்சிற்பம் உள்ளது. மேலும் தஞ்சை மாவட்டத் திலுள்ள மயிலாடுதுறையிலும் அம்பிகை மயில் வடிவம் கொண்டு பூஜை செய்தார். இதனால் இவ்வூருக்குக் கௌரி மாயூரம் என்பது பெயராயிற்று.

திருச்சி மாவட்டத்தில் சக்தி முற்றம் என்ற ஊர் உள்ளது. இங்கு சக்தியான பார்வதிதேவி சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்டதுடன் அதற்கு முத்தமும் கொடுத்து மகிழ்ந்தார்களாம். அதனால் இவ்வூருக்குச் சக்திமுத்தம் என்பது பெயராயிற்று


என்பர். இதனை விளக்கும் சிறு சிற்பமொன்று இவ்வூர்க் கோயிலில் உள்ளது.

கோமுத்தி எனப்படும் திருவாவடுதுறையில் அம்பிகை பசு வடிவில் இருந்த பூசித்ததாக அவ்வூர்த்தலபுராணம் கூறுகின்றது.

கேதாரத்தில் பார்வதிதேவியார் கேதார நாதரைப் பூசித்து உலகினைப் படைக்கும் ஆற்றல் பெற்றாள். கேதாரத்தில் சிவனை பூசித்துத் தனது கருநிறம் நீங்கிய பார்வதி தேவியார் பொன்னிறமாக ஒளிவீசியதால் அவருக்குக் கௌரி என்பது பெயராயிற்று (கௌரம் என்பதற்குப் பொன்னிறம் என்பது பொருள்) கேதாரத்தில் உள்ள அம்பிகை தனது கரத்தில் சிவலிங்கத்தை ஏந்தியிருப்பதாகக் கூறுவர்.

மேலும் தேவியால் பூசிக்கப்பட்ட லிங்கங்கள் பார்வதீசுவரர், கௌரீசுவரர், ஆவுடைாசர், ஏகாம்பரர் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

அம்பிகை தோன்றும் அதிசயலிங்கம்



தென்னாற்காடு மாவட்டம் கள்ளக் குறிச்சியில் இருந்து திருக்கோவிலூருக்குச் செல்லும் வழியில் "ரிஷிவந்தியம்" என்னும் ஊர் உள்ளது. இவ்வூரின் நடுவில் அர்த்தநாரீசுவரர் ஆலயம் இருக்கிறது. இங்கு மூலத்தானத்தில் உள்ள லிங்கமானது அதிசயமானதாகும். இது சாதாரண நிலையில் மற்ற லிங்கங்களைப் போலவே வழவழப்பான தோற்றம் கொண்டுள்ளது. இந்த லிங்கத்திற்குத் தேன் அபிஷேகம் செய்யும்பொழுது மட்டும் இதன் பாணப்பகுதியில் அம்பிகையின் நிழலுருவம் தோன்றுகின்றது. தேன் முழுவதுமாக வழிந்துவிட்டபிறகு இந்த நிழலு ருவமும் மறைந்து விடுகின்றது.

சிறந்த கலைச் செல்வங்களைக் கொண்ட இக்கோயிலின் லிங்கம் இந்திரனால் அமைத்து வழிபடப்பட்டதென்றும், சிவபெருமான் அவனுக்கு இச்சிவலிங்கத்தில் அர்த்த நாரீசுவராரகக் காட்சியளித்தார் என்றும் தலபுராணம் கூறுகின்றது. இக்கதையை விளக்கும் சுதைச்சிற்பம் இக்கோயிலின் அம்பிகைக்கு எதிரில் உள்ள நந்திமண்டப விமானத்தில் அமைந்திருப்பதைக் காணலாம்.

ஒவ்வொரு நாளும் அர்த்த ஜாம பூஜையில் இங்கு தேன் அபிஷேகம் செய்யப்படுகின்றது.

சூரியன் பூசிக்கும் திருத்தலங்கள்



சிவபெருமானுக்கு இயற்கையாக அமைந்த எட்டு வடிவங்களில் (அஷ்ட மூர்த்தம்) சூரியனும் ஒருவராவர். சூரியன் சிவனின் அம்சமாவார். எனவே சூரியனுக்குச் சிவசூரியன் என்பது ஒரு பெயர். சிவாலயங்களிலும், ஆன்மார்த்த சிவபூஜைகளிலும் சூரியனுக்கே முதலில் பூஜை நடைபெறுகின்றது.

சூரியனுக்குச் சிவபூஜை செய்வதில் மிகுந்த விருப்பம். அவர் பல தலங்களில் சிவலிங்கங்களை நிறுவி பூஜை செய்துள்ளார் என்று புராணங்கள் கூறுகின்றன.

சில தலங்களில் ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட சில நாட்களில் சூரியனுடைய கதிர்கள் பலிபீடம் கொடிமரம், நந்தி உள் மண்டபம் ஆகியவற்றைத் தாண்டி வந்து கருவறையில் உள்ள சிவலிங்க மூர்த்தியின் மீது விழுகின்றன. இவ்வாறு சூரியனின் கதிர்கள் சிவலிங்கத்தின் மீது விழுதலைச் சூரியன் பூஜிப்பதாகக் கூறுவர். பாஸ்கரன் ஆன சூரியனால் பூஜிக்கப்படுவதால் இத்தலங்கள் பாஸ்கரபுரம், பாஸ்கரபுரி, சூரியபுரம், பாஸ்கர க்ஷேத்திரம் எனவும் இச் சிவலிங்கங்கள் பாஸ்கரலிங்கம சூர்ய லிங்கம் எனவும் அழைக்கப்படுகின்றன.

பாடல் பெற்ற தலங்களான திருக்கண்டியூரில் மாசி 14, 15 தேதிகளிலும் திருவேதிகுடியில் பங்குனி 13,14,15 தேதிகளிலும் கும்பகோணம் நாகேசுவரர் கோயிலில் சித்திரை 11,12,13 தேதிகளிலும் புறவார்பனங்காட்டூரில் சித்திரை 1முதல் 7தேதிகள் வரையிலும் சூரியனின் கதிர்கள் மூலத்தானத்தில் படிந்து சிவலிங்க மூர்த்தியை ஜோதி மயமாக்குவதைக் காணலாம்.

இவ்வாறு சிவலிங்கத்தை ஒளிமயமாக்கும் நிகழ்ச்சி இத்திருத்தலங்களில் காலை நேரங்களில் மட்டுமே நடைபெறுகின்றது. அபூர்வமாகச் சில மேற்கு நோக்கிய திருத்தலங்களில் மாலை நேரத்திலும் சூரியன் பூஜிக்கின்ற காட்சியைக் காண்கிறோம்.

இதன் விரிவை சிவமஞ்சரி 12-ஆம் மரலான "ஆதித்யேசுவரர்" என்பதில் காண்க.

சிவாசனம்

நாம் நமது வீட்டிற்கு வருகின்றவர்களை வரவேற்று அவர்கள் அமர இடம் கொடுத்து அவர்கள் அமர்ந்த பிறகு வந்த செய்தியைப் பற்றி பேசுகிறோம். மேலும் வருபவர்களின் தகுதிக் கேற்ப அவர்களுக்கு ஆசனம் அளிக்கின்றோம். நண்பர்கள் வந்தால் பக்கத்திலே, அமர்த்திக் கொண்டு பேசுகிறோம். ஆனால் பெரியோர்களும், நமது அதிகாரிகளும் வந்துவிட்டால் அவ்வாறு அருகில் அமர்த்திக் கொண்டு பேசமுடியுமா? அவர்களுக்கென தனியாக தூய்மையான ஒரு சிறந்த ஆசனத்தை ஏற்பாடு செய்கிறோம் அல்லவா?

வருபவர்களுக்கு உரிய ஆசனம் தருதல் என்பது நாகரீகமும், பண்பாடும் ஆகும். சாதாரண மனிதர்களுக்கே இப்படிப்பட்ட நிலையெனில் இந்த அண்ட சராசரங்களைப் படைத்துக் காத்து வரும் சர்வேசுவரனான சிவபெருமானுக்கு எத்தகைய சிறப்பான ஆசனத்தை அளிக்க வேண்டும் என்பது அறிந்துகொள்ள வேண்டிய தொன்றல்லவா? அத்தகைய ஆசனத்தைப் பற்றிய செய்திகளை சிவபூஜா விதி நூல்களும், ஆகமங் களும் விரிவாகக் கூறுகின்றன. அந்நூல்களின் அடிப்படையில் சிவபெருமான் வீற்றிருந்து அரு ளும் சிவாசனத்தை இக்கட்டுரை விளக்குகிறது.

சிவபூஜையின் அங்கங்களில் ஒன்று சிவபெருமான் எழுந்தருளும் ஆசனத்திற்குச் செய்யும் பூசையாகும். சிவாசனத்தில் மந்திர பூர்வமாகப் பல தேவதைகள் எழுந்தருளிவைத்து பூசிக்கப்படுகின்றனர். மேலும் இந்த அமைப்பில் பல ஜீவராசிகளையும், சக்திகளையும் சிவனுடைய ஆசனமாகக் கருதி பூஜை செய்கின்றோம்.

இனி சிவாசனத்தின் அமைப்பையும் அதன் சிறப்பையும் அதனைப் பூசிக்க வேண்டிய முறை களையும் ஆகமங்கள் சிவபூஜாவிதி முதலான நூல்களில் உள்ளபடி விளக்கமாகக் காணலாம்.



சிவாசனம் பல அடுக்குகளைக் கொண்டது. இந்த அடுக்குகள் கீழிருந்து முறையே (ஆதார சக்தி) கூர்மாசனம், அனந்தாசனம், சிம்மாசனம், கமலாசனம், விமலாசனம் என்று அழைக்கப் படுகின்றன. சில நூல்களில் மேற்சொன்ன ஆசனங் களோடு யோகாசனம் பத்மாசனம் முதலியனவும்

குறிக்கப்பட்டுள்ளன. இனி இந்த ஆசனங்களின் வடிவழகைக் காணலாம்.

இந்த ஆசனத் தொகுப்பில் எல்லாவற்றிற்கும் கீழே இருப்பது ஆதார சக்தியாகும். இங்கு இவள் ஆமை வாகனத்தில் வீற்றிருப்பவளாய் வெள்ளை நிறமுடையவளாய் நான்கு கரங்களில் பாசம், அங்குசம், அபய, வரத முத்திரை ஆகியவற்றைத் தரித்தவளாய் வீற்றிருக்கின்றாள். இவளுடைய தலையில் ஜடா மகுடம் விளங்குகின்றது. அதில் உலகிலுள்ள அனைத்து விதைகளும் முளைவிட்ட நிலையில் உள்ளன. இந்த ஆதார சக்தியால் தாங்கப்படும் ஆசனம் ஆமை வடிவில் அமைந்துள்ளது.

இதற்கும் மேலே இரண்டாவதாக அமைவது அனந்தாசனமாகும். இது அனந்தன் என்னும் வெண்மையான பாம்பு மூன்று சுற்று (மேகலை)யுடன் அமைந்ததாகும். காலப்போக்கில் அனந்தன் எனும் ஒரு பாம்பை அமைப்பதற்குப் பதிலாக அஷ்டமா நாகங்களாகிய அனந்தன், வாசுகி, தட்சன், கார்க்கோடகன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபத்மன் ஆகிய எட்டு நாகங்களையும் இந்த அடுக்கில் அமைத்தனர். இந்த அடுக்கில் கிழக்கில் அமைபவர் அனந்தனாவார். அவர் பெயரால் இது அனந்தாசனம் என்று அழைக்கப்படுகிறது.

இதற்கும் மேலே மூன்றாவதாக அமைவது சிம்மாசனமாகும். இதில் எட்டு சிங்கங்கள் எட்டு திசையிலும் தாங்குவதாக அமைகிறது. இச்சிங்கங்கள் தர்மம், ஞானம், வைராக்கியம், ஐஸ்வர்யம், அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைஸ்வர்யம் என்பனவாகும்.

இதற்கும் மேலே தென்கிழக்கு, தென் மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு ஆகிய இடைக்கோண திசைகளில் நான்கு யுகங்கள் பூதவடிவில் உள்ளன.

இதற்கு மேலே நான்காவதாக அமைவது கமலாசனமாகும். இந்தக் கமலாசனம் என்பது கிழங்கு அதிலிருந்து முளைக்கும் முளை, அதன் மேல் விளங்கும் தண்டு. தண்டில் உள்ள முட்கள் மேலே தளிரும் எட்டு இதழ்களைக் கொண்ட தாமரை, தாமரைப்பூவின் தாதுக்கள், நடுவில் உள்ள பொகுட்டு (கர்ணிகை) அதில் உள்ள விதைகள் ஆகியவற்றைக் கொண்டு அமைந்ததாகும்.

இந்தத் தாமரையின் 'எட்டிதழ்களின் இதழ்களில் (கிழக்கிலிருந்து வலமாக) வாமை, சேட்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரதமணி, சர்வபூதமணி ஆகிய எட்டு சக்திகள் விளங்குகின்றனர். இவர்கள் சூரியனைப் போன்ற ஒளிவுடையவர்களாய் மூன்று கண்கள் நான்கு கரங்களில் சாமரம் அபயம் வரதம் கொண்டவர்களாய் வீற்றிருக்கின்றனர்.

இந்தத் தாமரையின் நடுவில் உள்ள கர்ணிகையின் வடகிழக்கில் மனோன்மணி அமர்ந்துள்ளாள்.

இத்தாமரை இதழ்களின் நுனி வட்டங்களில் கோடி சூர்யப் பிரகாசத்துடன் இருக்கும் சூரிய மண்டலம் உள்ளது. இம்மண்டலத்தில் ஐந்து முகங்களும், பத்துக் கரங்களும் கொண்டு படைப்பு கடவுளான பிரம்ம தேவன் வீற்றிருக்கின்றார்.

பொகுட்டின் நுனிவட்டத்தில் பேரொளியுடன் இருப்பது அக்னி மண்டலமாகும். இதில் இரத்தினம் போன்ற சிவந்த நிறத்துடன், சூலம் அக்கினி அஞ்சலி முத்திரை ஆகியவற்றைத் தாங்கியவராய் அக்னி மண்டலாதிபதியாக விளங்குபவர் உருத்திரராவார்.

கர்ணிகையின் (பொகுடு) நடுவில் இருப்பது வெண்மை நிறமான சக்தி மண்டலமாகும். இதன் அதிபதியாக விளங்குபவர் சிவசக்தி, இவர் தன் மண்டலமேயன்றி சூரிய, சந்திர, அக்னி மண்டலங்களிலும் வியாபித்து நிற்பார். ஸ்படிக நிறத்துடன், இவர் நான்கு முகங்களுடன் எட்டு கரங்களில், கத்தி, சூலம், அம்பு, அட்சமாலை, கமண்டலம், அபயம், வரதம், தாமரை ஆகியவற்றைத் தாங்கி இச்சா சக்தி ரூபமாக இருப்பார்.

இச்சக்தி மண்டலத்துக்கு மேலே இருப்பதான ஆசனத்தில் சிவபெருமான் ஞான சக்தி வடிவாக விளங்குகின்றார்.

இவர் ஸ்படிகம் போன்ற வெண்ணிறமும் பத்துக் கரங்களும் கொண்டவராய், அவற்றில் வலக்கரங்களில் சக்தி, வாள், சூலம், மழு, வரதம் ஆகியவற்றையும் இடக்கரங்களில் உடுக்கை, மாதுளம்பழம், நாகம், அட்சமாலை, நீலோற்பலம்

ஆகியவற்றைக் கொண்டவராய் பதுமாசனத்தில் வீற்றிருக்கின்றார். இவ்வாறு பூசனை நூல்கள் சிவாசனத்தை வர்ணிக்கின்றன.

கமலாசனத்தில் பிருத்வி தத்வம் முதல் நாதம் வரையிலான 36 தத்துவங்களும் கர்ணிகையில் அவற்றைத் தன்னுள் ஒடுக்கியிருக்கும் சுத்தமாயையான குண்டலினி சக்தியும் இருக்கும். எனவே 36 தத்துவங்களாகவும் குண்டலினி சக்தியாகவும் விளங்குவது கமலாசனம். இதற்கு மேல் சிவசக்தி எழுந்தருளியுள்ளாள். அங்கு என்றும் பிரியாது விளங்குபவர் சிவபெருமான். இந்த 36 தத்துவங்களுக்கு அதி தெய்வமாக விளங்குபவர்கள் பல்வேறு சிவசக்திகள், எனவே சிவசக்தியே இங்கு ஒரு ஆசனமாகத் திகழ்கிறது. இதுவே சிவலிங்கத்தில் பீடமாக விளங்குவது. இதுவே ஆவுடையாராகும். அதன் மேலே அமையும் பாணமே சிவபெருமான்.

எனவே சிவாசனத்தைக் காண்பதும் பூசிப்பதும் அண்டசராசரங்களையும் அதிலுள்ள சகல தேவர்களையும் பூசிப்பதற்கு ஒப்பாகும்.

கலைஞர்கள் கண்ட சிவாசனம்



தமிழகக் கலைஞர்கள் இந்தச் சிவாசனத்தைச் சிறப்பாக அமைத்துள்ளனர். மேற்குறித்த வர்ணனைகள் முழுவதையும் சிலையில் காட்ட முடியாது என்பதால் கீழே ஆமை, அதன் மீது எட்டு நாகங்கள் தாங்கும் அனந்தாசனம், அதன் மீது எட்டு சிங்கங்கள் தாங்கும் சிம்மாசனம் அதற்கு மேலே தாமரைப் பூவாலான கமலாசனம் அதன்மேலே மூன்று மேகலையுடன் கூடிய விமலாசனம் ஆகியவற்றை அமைத்துள்ளனர்.

சிவபூஜாதுரந்தரர்கள், தினசரிபூஜையில் பஞ்சாசனங்களுக் குரிய மந்திரங்களைக் கூறி வழிபடுவர். கும்பாபிஷேகம் போன்ற நேரங்களில் யாகசாலையின் வேதிகையை அழகிய பஞ்சான வடிவில் அமைத்து அதன்மீது பூரணகும்பங்களை வைத்து வழிபடுகின்றனர்.

பொதுவாக சிவாலயங்களில் ஆவுடை யாரையே பஞ்சாசனமாகப் பாவித்து வணங்குவர். அபூர்வமாகச் சென்னை அரண்மனைக்காரன் தெருவில் உள்ள கச்சாலீசுவரர் கோயிலின் மூலஸ்தானத்தில் அமைந்துள்ள சிவலிங்கத்தின் பீடத்தினை பஞ்சாசனமாக அழகிய உருவுடன் செய்துள்ளார். கருவறைக்குள் சென்ற இதனைத் தரிசிக்க முடியாதென்பதால் முக மண்டப முகப்பின் மீது சுதையால் இந்த வடிவை அமைத்துள்ளனர். இது போன்ற அமைப்பு வேறெங்கும் இல்லை என்கின்றனர்.

▶ இந்தப் படத்திலுள்ள பஞ்சாசன நாகலிங்கேசுவரர். திருவுருவம். திருவண்ணாமலை மாவட்டம் (செய்யாறு) திருஒத்தூர் வேதபுரீசுவரர் ஆலயத்தில் உள்ளதாகும். இதில் கீழே இரண்டு மீன்களுக்கு இடையே ஆதாரசக்தியும் அதன் மீது ஆமைவடிவ ஆசனமும் அதன்மீது எட்டு யானைகளும் அதன்மீது அட்டநாகங்களும் கொண்ட ஆசனம் அமைந்துள்ளது. அதன்மீது நாகம் குடைபிடிக்க சிவலிங்கம் அமைந்துள்ளது. இது சிறந்த கலைப்படைப்பாகும்.

எட்டும் சிவபெருமானும்!

எட்டு சிவபெருமானுக்குரிய எண்ணாகும். சிவனுடைய திருமேனிகள் குணங்கள், திருவிளையாடல் யாவும் எட்டின் மடங்காகவே அமைந்திருக்கக் காணலாம். அவற்றுள் சிலவற்றை இங்கு காணலாம்.

❑ சிவபெருமானின் இயற்கைத் திருமேனிகள் எட்டாகும். இவை அஷ்ட மூர்த்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை நிலம், நீர், தீ, காற்று, வானம், சூரியன், சந்திரன், ஆன்மா (எஜமானன்) ஆகிய எட்டாகும்.

மேற்குறித்த எட்டு வடிவங்களின் பெயர் களால் எட்டு சிவலிங்கங்கள் எட்டு தலங்களில் அமைந்துள்ளன. அவை அஷ்ட மூர்த்தத்தலங்கள் எனப்படும்.

1. மண்லிங்கம் - திருவாரூர்
2. நீர்லிங்கம் - திருவானைக்காவல்
3. அக்னிலிங்கம் - திருவண்ணாமலை
4. ஆகாய லிங்கம் - சிதம்பரம்
5. சந்திர லிங்கம் - மதுரை
6. காற்றுலிங்கம் - திருகாளத்தி
7. சூரியலிங்கம் - திருச்சிராப்பள்ளி
8. ஆன்மலிங்கம் - திருப்பெருந்துறை (கருவூர் என்பர் சிலர்)

❑ சிவனுக்கு ஆயிரம் நாமங்கள் இருப்பினும் சிறப்பான திருப்பெயர்கள் எட்டு. இவை அஷ்டமந்திரம் எனப்படும். இவை,

1. ஓம் உமா மகேசுவராய நம:
2. ஓம் பரதேவாய நம:
3. ஓம் திரியம்பகாய நம:
4. ஓம் சோமசுந்தரேசாய நம:
5. ஓம் சர்வாய சம:
6. ஓம் பீமாய நம:
7. ஓம் மஹாபலாய நம:
8. ஓம் நீலகண்டாய நம:

இந்த எட்டு மந்திரங்களைக் கூறி மந்திர சிம்மாசனம் அமைத்து அதன் பேரில் சிவபெருமானை வழிபடுவர். இதனை அஷ்ட சிவசிம்மாசன மந்திரம் என்பர்.

❑ சிவபெருமான் எட்டு குணங்களைக் கொண்டவர். இறைவனை திருவள்ளுவரும் என்குணத்தான் என்று குறிப்பது நோக்கத்தக்கது. இந்த எட்டுக் குணங்களாவது.

1. தன் வயத்தனாதல் (சுதந்தரன்)
2. தூய உடம்பை உடையவனாதல் (விசுத்த தேகன்)
3. இயற்கை உணர்வினன் ஆதல்
4. முற்றும் உணர்தல்
5. பாசங்களில் இருந்து நீங்கி நிற்றல்
6. பேரருள் உடையவனாக இருத்தல்
7. முடிவில்லாத ஆற்றலுடைமை
8. வரம்பிலா இன்பம் உடைமை.

ஆகியனவாகும்.

❑ சிவபெருமான் உலக உயிர்கள் உய்யும் பொருட்டு எட்டு வீரச் செயல்களைப் புரிந்தான். இவை அட்ட வீரட்டங்கள் எனப்படும். (இவை முடிந்த கதையல்ல இன்னும் நடந்து கொண்டிருப் பதேயாகும்) நாம் நம்மை உணர அந்தந்த தலத்தின் அந்தந்த செயலே மூலக் கருத்தை உணர வேண்டும்.

1. திருக்கண்டியூர் - பிரமன் தலையரிந்தது
2. திருக்கோவலூர்-அந்தகனை அழித்தது
3. திருஅதிகை - முப்புரம் எரித்தது
4. திருப்பறியலூர்-தக்கன் யாகம் அழித்தது
5. திருவிற்குடி - ஜலந்தரவதம்
6. திருக்கடவூர் - யமனை வீழ்த்தியது
7. திருவழுவூர் - கஜசம்ஹாரம்
8. கொருக்கை - மன்மதனை எரித்தது.

- **அஷ்டபாகு** சிவபெருமான் எட்டு தோள்களை உடையவர். சிவபிரானைத் திருமங்கையாழ்வார் நறையூர்த் திருப்பாசுரத்தில், **இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசன்** என்று குறிப்பிடுவர். அவர் எட்டுக் கரங்களிலும் எட்டு ஆயுதங்களைத் தாங்கி ஆடுகின்றார். அவை.

  1. டமருகம் 2. மணி 3. கேடயம் 4. கத்தி 5. சூலம் 6. தழல்வடிவங்கள் 7. வேதாளம் 8. கபாலபாத்திரம் என்பனவாகும்.

- **அஷ்டபுஷ்பங்கள்** சிவனுக்கு விருப்பமான மலர்கள் எட்டாகும் இவற்றை அஷ்ட புஷ்பம் என அழைப்பர். அப்பரடிகள் குறுந்தொகையுள், "உரை செய் நூல்வழி ஒண்மலர் எட்டிட் என்று குறிப்பிடுகின்றார்.

- **அஷ்டபரிவாரம்** சிவபெருமானைச் சுற்றி நீங்காது இருப்பவர் எண்மராவர். அவர்களைச் சிவபூஜையில் சிவனுடன் சேர்ந்தே பூசிக்கின்றோம் அவர்கள்.

1. நந்தி	3. கணபதி	5. மகாகாளன்	7. விருஷபர்
2. பிருங்கி	4. ஸ்கந்தர்	6. உமா	8. சண்டீச்சுவரர்.

என்பவர்களாவர்.

சிவபூசனைக்குரிய எட்டு மலர்கள்

பூவினால் செய்யப்படுதலின் நாம் செய்யும் வழிபாடு பூசை என்று பெயர் பெற்றது. எல்லா மலர்களும் இறைவனுடைய பூசைக்கு ஏற்றது என்றாலும் சில மலர்களால் செய்யப்படும் பூசனைகள் மிகப் பெரிய பலனைத் தருகின்றன. பூவின்றி பூசை செய்வதால் உண்டாகும் பயன் குறைவேயாகும். அப்பரடிகள், "கைகாள் கூப்பித் தொழீர் கடி மாமலர் தூவி" என்று அங்க மாலையில் குறிப்பிடுவார் "புண்ணியம் செய்தார்க்குப் பூவுண்டு நீருண்டு அண்ணல் அது கண்டு அருள் புரியா நிற்கும்" என்பார் திருமூலநாயனார்.

சிவபூசனைக்கு உரிய மலர்களை இப்பகுதியில் காணலாம். ஆன்றோர் அதிகாலை, காலை, நண்பகல், மாலை ஆகிய நான்கு வேளைகளிலும் இறைவனை வணங்க ஏற்ற மலர்களை வகுத்துள்ளனர். அவற்றை அஷ்டபுஷ்ப மந்திரம் சொல்லி உரிய வேளையில் வணங்கினால் வாழ்வில் இன்பம் பெருகும்.

அதிகாலையில் பூசிக்கத்தகுந்த மலர்கள்

1. புன்னை	5. நீலோற்பலம்
2. வெள்ளெருக்கு	6. பாதிரி
3. சண்பகம்	7. அலரி
4. நந்தியாவர்த்தம்	8. செந்தாமரை

காலையில் அணிவிக்கப்பட வேண்டியவை

1. அலரி	5. வில்வம்
2. நாயுருவி	6. நந்தியாவர்த்தம்
3. மல்லிகை	7. தாமரை
4. எருக்கு	8. பவழமல்லி

உச்சிப் பூசைக்குரியன

1. பொன் ஊமத்தை	5. கத்தரி
2. புலிநகக் கொன்றை	6. மந்தாரை
3. பாதிரி	7. சரக்கொன்றை
4. வன்னி	8. தும்பை

மாலையிலும் அர்த்த யாமத்திலும் சூட்டத் தகுந்தவை.

1. மல்லிகை	5. கொன்றை
2. காட்டு மல்லிகை	6. சண்பகம்
3. மரமல்லிகை	7. சிறுசண்பகம்
4. மகிழ்	8. மருக்கொழுந்து.

விபூதி

சிவனடியார்களுக்கு உரிய மங்கலச் சின்னங்களுள் முதன்மையானது விபூதியாகும் "பூத "என்ற சொல்லுக்குச் செல்வம். மகிழ்ச்சி எல்லையில் பெருமை, வரம்பிலா ஆற்றல் என்பன போன்ற பல பொருள்கள் உண்டு. பூத என்பதில் இருந்து அத்தகைய ஆற்றல் உடைய திருநீற்றிற்கும் பூதி என்பது பெயராயிற்று. மேலும் தனிச்சிறப்புடையது என்று பொருள்தர "வி" என்ற சிறப்பு முன்னொட்டையும் சேர்த்து விபூதி என்று அழைக்கின்றனர்.

விபூதியைப் பசுஞ்சாணத்தில் இருந்து தயாரிக்கின்றனர். பசுவிடமிருந்து வீழும் சாணம், தரையில் விழுவதன் முன்பாக இருகைகளிலும் ஏந்தி அதற்குரிய மந்திரத்தைச் சொல்லி தூய இடத்தில் வைத்துப் பின்னர் பிசைந்து, உருட்டி அந்த உருண்டைகளைக் காயவைத்து, அடுக்கி, நெல் உமியைக் கொண்டு முழுவதும் மூடித் தீமூட்டிச் சலித்து சேகரிப்பது வரையில் சிவசிந்தனையோடும் மந்திரப் பூர்வமாகவும் செய்யவேண்டும். அவ்வாறு செய்யப்படும் முறையில் கிடைக்கின்ற விபூதியே பல அரிய சக்திகளைக் கொண்டதாக விளங்குகின்றது.

திருநீற்றின் பெருமைகளைச் சிவாகமங்களும், உபநிஷதங்களும், உபதேச காண்டம் முதலிய நூல்களும் சிறப்புடன் பேசுகின்றன. மேற்குறித்த பல நூல்கள் திருநீற்றைத் தயாரிக்கும் முறைகளை விரிவாகப் பேசுகின்றன. திருநீற்றினை, விபூதி, பசிதம், பஸ்மம், க்ஷாரம், ரட்சை என்ற ஐந்து பெயர்களால் உபநிஷதங்கள் குறிப்பிடுகின்றன. தமிழில் காப்பு, மருந்து எனவும் வழங்கும்.

சில நூல்கள் விபூதியை "அக்கினி வீர்யம்" என்றும் அழைக்கின்றன தீயின் ஆற்றலான சிவமும், அமுத மயமான சக்தியின் அருளும் கலந்ததே விபூதி என்று பல நூல்கள் கூறுகின்றன. எனவே தான் "சி" என்கின்ற சிவனையும் "வ" என்பதை உணர்த்தும் சக்தியையும் ஒருசேர நினைந்து சிவசிவ என்று சொல்லி அண்ணாந்து திருநீறு இடவேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன. திருநீறு இரண்டு வகைப்படும் அவை மகாபஸ்மம், சொற்ப பஸ்பம் என்பனவாகும்.

சுத்த மாயை ஒளிவிடச் செய்பவரும் பாவங்களைப் போக்குபவரும், இயற்கையான அறிவால் விளங்குபவரும், ஆகிய மகா தேவரே மகாபஸ்மமாக விளங்குகிறார் என்று சமய நூல்கள் கூறுகின்றன. அந்த மகாபஸ்மத்தை அணியும் தகுதி யோகிகளுக்கே உண்டு. அவர்களே சிவயோகத்திலிருந்து தன் உடலின் ஒவ்வொரு உறுப்பிலும் சிவாக்கினி பரவுதலையும் அதனால் தன் உடல் அமுதமயமாக ஆவதையும் அறிகின்றனர், அவர்களுக்கே பேரின்பம் கிட்டுகிறது. சாமானியரான நாம் அதை அடைதல் அரிதாகும்.

சொற்ப பஸ்மென்பது நாம் பசுவின் சாணத்தில் இருந்து தயாரிப்பது என்று உபநிதடம் கூறும். திருநீற்றில் மந்திரங்களைச் செபித்து உருவேற்றி மருந்தாகவும், பேய் பிசாசுக்களை ஓட்டவும் பயன்படுத்துவர். திருநீற்றின் பல்வேறு சிறப்பைத் திருஞானசம்பந்தப் பெருமான் மதுரையில் அருளிச் செய்த திருநீற்றுப் பதிகத்தில் குறித்துள்ளார்.

விபூதியின் சிறப்புகளை "பஸ்மஜாபாலம்" என்ற வடமொழி நூல் விரிவாகக் கூறுகின்றது.

- சில சிவாலயங்களில் நந்தியின் வடிவாகச் செய்யப்பட்ட பெட்டகத்தில் விபூதியை வைத்து அளிக்கின்றனர்.
- சில ஆலயங்களில் சந்திரபிறை வடிவமாகச் செய்யப்பட்ட பாத்திரத்திலும் விபூதியை வைத்துள்ளனர். இவை விபூதி மடல்கள் என்றழைக்கப் படுகின்றன.
- பராசக்தியின் வடிவமே திருநீறாகும். இதனை ஞானசம்பந்தப்பெருமான் "பராவணமாவது நீறு" என்று திருநீற்றுப்பதிகத்தில் அருளிச் செய்துள்ளார்.

கொன்றை

சிவபெருமானுக்கு உரிய மலர்களில் தலையானது கொன்றை மலராகும். இது மஞ்சள் நிறத்துடன் நீண்டு வளைந்த மகரந்தக்கேசரங்களைக் கொண்டதாகும்.

கொன்றை மரம் பல திருத்தலங்களில் தலமரமாக உள்ளது. அதனடியில் சிவபெருமான் வீற்றிருப்பதாகக் கருதுகின்றனர். அச்சிறுபாக்கம், ஆக்கூர், திருவைகாவூர் முதலான தலங்களில் கொன்றை மரங்கள் தலவிருட்சங்களாக உள்ளன.

இரண்டு நாயன்மார்களின் வாழ்வில் கொன்றைமரம் தனிச்சிறப்பிடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். கொன்றைமலரை, கடுக்கை, பொன்மலர், பிரணவபுஷ்பம் என்று பலவாறு அழைப்பர்.

சித்திரை அஷ்டமியில் கொன்றை மலர்களால் இறைவனை அர்ச்சித்தல் மிகுந்த நலம் பயக்கும் என்பர் ஆன்றோர். கொன்றையில் மயிற்கொன்றை, புலிநகக் கொன்றை, சரக்கொன்றை என்று பலவகையுள்ளன. இவற்றில் சிவனுக்குரியது சரக்கொன்றையேயாகும்.

புலிநகக் கொன்றை மலராத மலர்கள் வகையைச் சார்ந்தது. இது மொட்டாகவே இருக்கும். இதன் உருவம் புலிநகம் போன்றது. இளம் பசுமை கலந்த மஞ்சள் நிறம் கொண்து. இதனை அடுக்கடுக்காகக் கட்டி இறைவனுக்கு அணிவிப்பர். இது பார்க்கக் காசுமாலையைப் போல இருக்கும். பல நாட்கள் வரை வாடாது இன்னொரு வகையான மயிற்கொன்றை மஞ்சள், சிவப்பு, நீலம் ஆகிய வண்ணங்களில் நீண்ட காம்பையும் நீண்ட மகரந்தக் கேசரங்களையும் கொண்டதாக இருக்கும்.

சரக்கொன்றை நீண்ட காம்பில் சரஞ்சரமாகப் பூக்கும், பொன் போன்ற மஞ்சள் நிறம் கொண்டது, ஐந்து இதழ்களும் அதன் நடுவில் "ஓம்" போல வளைந்த ஐந்து மகரந்தக் கேசரங்களையும் உடையது. இக்கேசரங்கள் ஓம் போன்ற அமைந்திருப்பதால் இந்த மலரை (பிரணவாகாரப் புஷ்பம்) ஓங்கார மலர் எனவும் அழைப்பர்.

இம்மரங்கள் வேனிற்காலமான சித்திரை, வைகாசி மாதங்களில் பூக்கும். அப்போது மரம் முழுவதும் பூக்களால் நிறைந்திருக்கும், இக்காட்சி பார்ப்பதற்கு மஞ்சள் மலர் குவித்து வைத்த மலைபோலவே தோன்றும் இதன் காய்கள் நீண்டு குரங்குவாலைப் போல இருக்கும்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஆனாய நாயனார், சண்டேசுவர நாயனார் ஆகிய இவ்விரண்டு நாயன்மார்களின் வாழ்வில் கொன்றை மலர்கள் தனி யிடத்தைப் பெறுகின்றன.



கங்கை கொண்ட சோழபுரம்
சண்டேச அனுக்கிரக மூர்த்தி.

இதில் பெருமான் கொன்றை மாலையை தன் இருகரங்களால் சண்டீசப்பெருமானுக்கு தலையில் சூட்டும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

ஒருசமயம் ஆனாய நாயனார் கால்நடைகளை மேய்க்க வனத்திற்குச் சென்றார். அங்கு கொன்றை மரங்கள் பூத்துக் குலுங்கி எழிலுடன் திகழ்ந்தன. அக்காட்சியைக் கண்ட நாயனார் அவை யாவற்றையும் சிவபெருமானாகவே கண்டு மகிழ்ந்தார். அம்மகிழ்ச்சியால் தனது புல்லாங்குழலை எடுத்து இனிமையாக வாசித்தர். அவ்வினிய



ஆனாய நாயனார்

இசையால் அவ்வனத்திலிருந்த பறவை யினங்களும் விலங்குகளும் மரங்களும் அசை வற்றுநின்றன. சிவபெருமானும் அவருடைய இசைக்குருகி அவருக்குப் பெரும்பதம் அளித்தார். இந்த நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான்,

சென்றணைந்த ஆனாயர்
செய்தவிரைத் தாமமென
மன்றன் மலர்ந்து துணர் தூக்கி
மருங்குதாழ் சடையார்போல்
நின்றதொரு கொன்றையினை
நேர்நோக்கி நின்றுருகி
யொன்றிய சிந்தையில் அன்பை
யுடையவர்பால் மடைதிறந்தார்.

(உரை- சென்றுசேர்ந்த ஆனாயநாயனார், எடுத்துக்காட்டிய மாலைபோல மணம் பொருந்திய மலர்களாகிய கொத்துக்களை பக்கங்களிலே தொங்கவிட்டுக் கொண்டு தாழ்ந்து விளங்கும் சடைகளையுடைய சிவபெருமானைப் போலவே நின்ற மணமுடைய கொன்றை மரத்தினை நேராக நோக்கித் தம்மையாட்கொண்ட சிவபெருமானைப் பார்ப்பதுபோலவே நோக்கி நெக்குருகி ஒன்றுபட்ட மனத்தினராய், அன்பின் மடையைத் திறந்தார்) என்று குறிப்பிடுகின்றார்.

மற்றோர் அடியவரான சண்டீசுவர நாயனார் சேய்ஞலூர் எனும் தலத்தில் மணலால் லிங்கம் அமைத்து பாலால் திருமுழுக்காட்டி வழிபட்டார். அவருடைய தெய்வீக நிலையை உணராத அவர் தந்தையான எச்சத்தன் என்பான் அவர் அபிஷேகம் செய்ய வைத்திருந்த பாற்குடங் களைக் காலால் இடரினான். அதையறிந்த சண்டீச நாயனார் அருகில் இருந்த கோலை எடுக்க அவர் கோப வேகத்தால் அது மழுவாயிற்று. அதனால் சிவபூஜைக்கு இடர் செய்த தன் தந்தையின் கால்களை வெட்டினார். அப்போது இறைவன் இடபவாகனத்தில் தேவியோடு தோன்றி அவருக்கு அருள்புரிந்தார். இறைவன் சண்டீசரை அருகில் அழைத்து தன் சடைமுடியில் இருந்த கொன்றை மாலையை எடுத்து அவருடைய தலையில் சூட்டினார்.

இந்நிகழ்ச்சியைத் திருநாவுக்கரசர், தேவராத்தில்

அங்கரவத் திருவடிக் காட் பிழைப்பத் தந்தை
அந்தணனை அறவெறிந்தார்க்(கு) அருளப்போதே
கொங்கரவச் சடைக் கொன்றை
கொடுத்தார் போலும்
குடந்தைக் கீழ் கோட்டத்தெம் கூத்தனாரே

என்று குளிர்சடைக் கொன்றை மாலையை சிவபெருமான் சண்டீசருக்குச் சூட்டியதைக் குறிக்கின்றார்.

சேக்கிழார் சுவாமிகள் இதனைச் சண்டே சுவர நாயனார் புராணத்துள்

சண்டீசனுமாம் பதந்தந்தோம்
என்றங் கவர் பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக் கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.

என்கிறார்.


இவ்வாறு இரண்டு நாயன்மார்கள் வாழ்வில் கொன்றைமலர் சிறப்பிடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

அபிராமி பட்டரும், "தார்அமர் கொன்றை யும்" சணபமாலையும் சாத்தும் தில்லை ஊரர் என்று நடராசப்பெருமான் கொன்றை அணிந்துள்ளதைக் குறித்து அபிராமி அந்தாதியைத் தொடங்கு வது எண்ணத்தக்கதாகும்.

கொன்றையடி சேவை

அச்சிறுபாக்கம் எனும் திருத்தலத்தில் கொன்றைமரம் தலவிருட்சமாகத் திகழ்கின்றது. கோயிலின் வடக்குப் பிரகாரத்தில் பெரிய மேடையின் மீது, செழித்து வளர்ந்த மரமாக இது உள்ளது. இதன்கீழ் சிவலிங்கம் அம்பிகை திரிநேத்திரதாரி எனும் முக்கண் முனிவர், நந்திதேவர் ஆகிய மூர்த்திகளின் கற்திருமேனிகள் உள்ளன.

பெருந்திருவிழாவின் ஏழாவது நாளில் சோமாஸ்கந்த மூர்த்தி காலையில் தேரில் வலம் வந்து மாலையில் இம்மரத்தின் கீழ் திரிநேத்திரதாரி எனும் முனிவருக்கு காட்சி கொடுக்கும் ஐதிகம் நடைபெறுகிறது. இதனைக் கொன்றையடி சேவை என்று அழைக்கின்றனர். அந்நாளில் இந்த கொன்றைமரம் பூக்கத்தொடங்கும் என்று நம்புகின்றனர். அதனை அடுத்த மாதங்களில் இம்மரம் முழுவதும் பூக்களால் நிரம்பி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.



வாலி பூசித்த லிங்கங்கள்



வாலி என்பவன் கிஷ்கிந்தையை தலை நகராகக் கொண்டு ஆண்ட குரங்கு அரசனாவான், மிகுந்த பலசாலி. சிறந்த சிவபக்தன். காலை நேரத்தில் கீழைக்கடலிலும் நண்பகலில் குமரித் துறையிலும் மாலையில் மேற்குக் கடலிலும் சென்று கடல் நீராடிச் சிவனை வழிபடும் வழக்கம் கொண்டவன்.

இலங்கை அரசனான இராவணேசுவரன் இவனை நேரடியாக வெல்லமுடியால் பலமுறை தோற்றான், அவன் அதன் காரணத்தை அறிய முற்பட்டபோது வாலியின் முன்பு யார் போருக்கு வந்தாலும் எதிரியின் பலத்தில் பாதி வாலிக்கு வந்து விடும் என்று சிவபெருமான் அவனுக்கு வரமளித்திருப்பதால் வாலியை போரில் வெல்லமுடியாது என்பது தெரிந்தது. எனவே வாலியை பின்னால் இருந்து சிறைபிடிக்க முயற்சி செய்தான். அதன்படி ஒருநாள் வாலி சிவபூஜை செய்து கொண்டிருக்கையில் பின்புறமாக வந்து கட்டிப்போட முனைந்தான். வாலிபூஜையில் மூழ்கியிருந்தாலும் அவனுடைய வால் சும்மா யிருக்கவில்லை. இராவணனை ஒரே சுருட்டாகச் சுருட்டிக் கொண்டது. சிவபூசையை முடித்துக் கொண்ட பின்னர் வாலி தன் வாலில் இருந்து அவனைப் விடுவித்து தன் மகனான அங்கதனுக்கு விளையாட்டுப் பொருளாகக் கொடுத்துவிட்டான். பிறகு கெஞ்சியழுத இராவணனை இலங்கைக்கு போகவிடுத்தான். இத்தகைய பெருவலி படைத்த வாலி தென்னகத்தில் பல சிவலிங்கங்களை அமைத்து வழிபட்டுள்ளான் அவை இப்போது வாலீசர் என்னும் பெயரால் விளங்கி வருகின்றன.

திருச்சி மாவட்டத்தில் உள்ள கருவூருக்கு அருகில் வாலீசுவரம் எனும் பெயரில் ஒரு ஊரும் கோயிலும் உள்ளன. செங்கை மாவட்டத்தில் கூவத்தூரில் வாலி பூசித்த லிங்கம் வாலீசுவரர் பெயரிலேயே அமைந்துள்ளது.

தொண்டை நாட்டிலும் நடுநாட்டிலும் உள்ள பல ஊர்களில் வாலீசுவரம் எனும் பெயரில் அமைந்த சிவாலயங்களைக் காணலாம். மேலும் பெரிய கோயில்களில் வாலீசுவரர் எனும் பெயரில் தனிச்சந்நிதிகளில் சிவலிங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளதையும் காணலாம்.

காஞ்சீபுரத்தில் வாலீசுவரர் கோயில் இருக்கின்றது காஞ்சீபுரத்தையடுத்துள்ள குரங்கணி முட்டத்து இறைவர் வாலியால் பூஜிக்கப்பட்டதால் வாலீசுவரர் என்றழைக்கப்படுகின்றார். இங்கு வாலி சிவலிங்கத்தை வழிபடும் காட்சியையும் விழுந்து வணங்குகின்ற காட்சியும் புடைப்புச்சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

சோழநாட்டு திருத்தலமான குரங்காடு துறையில் வாலி சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்து போற்றினார் என்று தலப்புராணம் கூறும். இதனைத் திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில்,

கோலமா மலரோடு தூபம் சாந்தமும்
கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினர்

என்றும்,

நீலமாமணி நிறத்தரக்கனை
இருபது கரத்தோடொல்க
வாலினாற் கட்டிய வாலியார்
வழிபட மன்னுகோயில்

என்றும், குறிப்பிடுகின்றார்.

சிவாகமங்கள்

ஆகமம் என்பவை இறைவனால் அருளப்பெற்ற நூல்களாகும். இவை ஆன்மாவின் நிலைபேற்றுக்கு உரிய வழிமுறைகளைப் போதிக்கின்றன.

"ஆகமம்" என்பது இறைநூல் என்பதன் பொதுப் பெயராதலின் அனைத்து சமயங்களும் இச்சொல்லை ஆளுகின்றன. வைஷ்ணவர்கள் திருமாலால் அருளப் பெற்றதை வைஷ்ணவ ஆகமங்கள் என்றும் ஜைனர்கள் தீர்த்தங்கரர் களால் அருளப்பெற்றவற்றை ஜினாகமம் அல்லது பரம ஆகமம் என்றும் அழைக்கின்றனர். சைவர்கள் தங்கள் நூலைச் சிவாகமங்கள் என்று சிறப்புடன் குறிக்கின்றனர்.

சிவபெருமான் உலகைப் படைத்தபின் உலக உயிர்கள் வாழும் நெறிகளை முறைப்படுத்த சிவாகமங்களை அருளினார் என்பர்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் சிவ பெருமான் மகேந்திரமலையில் வீற்றிருந்து ஆகமங்களை அருளினார் என்பதை

மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்

என்று கீர்த்தித்திருகவலில் குறிப்பிடுகின்றார்.

இதில் வானவியல் கட்டிடக்கலை, வாழ்வியல் ஆன்மிகம் முதலியனயாவும் விளக்கப் பட்டுள்ளன என்பர்.

சிவபெருமான் தம் ஐந்து முகங்களினாலும் இருபத்தெட்டு ஆகமங்களை அருளினார்.

இவை சிவபேதம், ருத்திரபேதம் என்று இருவகைப்படும். சிவபேதத்தில் 10 ஆகமங்களும் ருத்திரபேதத்தில் 18 ஆகமங்களுமாக இவை மொத்தம் 28 ஆக விளங்குகின்றன.

இந்த ஆகமங்களைச் சிவபெருமானிடம் இருந்து முதலில் கேட்டவரின் பெயர்கள் இதன் உட்பிரிவுகள் ஆகியவற்றைப் பல நூல்கள் பட்டியலிட்டு காட்டுகின்றன.

இனி ஆகமங்களின் பெயர்களைக் காணலாம். அவை,

1. காமிகம், 2. யோகஜம், 3. சிந்தியம், 4. காரணம், 5. அஜிதம், 6. தீப்தம், 7. ஸூக்ஷ்மம், 8. ஸகஸ்ரம், 9. அம்சுமான், 10. சுப்ரபேதம், 11. விஜயம், 12. நிச்வாசம், 13. ஸ்வாயம்பு, 14. அநலம் (ஆக்னேயம்), 15. வீரம், 16. ரௌரவம், 17. மகுடம், 18. விமலம், 19. சந்திரஞானம், 20. முகபிம்பம், 21, புரோக்கீதம், 22. லளிதம், 23. ஸித்தம். 24. ஸந்தானம், 25, ஸர்வோக்தம், 26. பாரமேச்வரம், 27. கிரணம், 28. வாதுளம் என்பனவாம்.

ஆகமங்களைச் சிவபெருமானாகவே பாவித்து வணங்குவர். மணிவாசகப்பெருமான் "ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்று குறிப்பிடுகின்றார்.

நெடுந்தூரம் பயணம் செய்வோர் வழியில் சிவலிங்கத்தைத் தரிசிக்க முடியாதபோது சிவாகம நூல்களையே சிவலிங்கமாகப் பாவித்து பூசனை செய்வர்.

திருமுதுகுன்றம் எனும் விருத்தாசலத்தில் உள்ள விருத்தகிரீசுவரர் கோயிலில் ஆகமக் கோயில் என்று ஒரு சந்நிதி உள்ளது இதில் இருபத்தெட்டு லிங்கங்கள் எழுந்தருளியுள்ளன. இது இருபத்தெட்டு ஆகமங்களையும் 28 சிவலிங்கமாக அமைக்கப்பட்டுள்ள சந்நிதி என்பர்.

திருநெல்வாயில் அரத்துறை எனும் திருத்தலத்தில் இருபத்தெட்டு சிறுலிங்கங்களை அடக்கிய ஒருலிங்கம் மேற்குப் பிராகாரத்தில் உள்ளது. இதனைச் சிவாகமலிங்கம் என அழைக்கின்றனர்.

பிற்காலத்தில் ஆகமங்களின் இடத்தை வேதங்களும் அதன் ஆறு அங்கநூல்களும் பெற்றன. சைவ சமயாச்சாரியார்களும் "நான்மறை ஆறங்கமாயினான் காண்" என்று போற்றியதால் வேதங்கள் முதன்மை பெறலாயின. வேதங்களுடன் தொடர்புடைய தலங்களும் மேன்மைபெற்றன.

ஜைனர்கள் ஜினஐச்வர்யம் என்று கூறி ஆகம நூல் சுவடிகளைச் சிவப்புத் துணியில் கட்டிவைத்து அதற்கு மலர்சூட்டி வழிபடுவர். கிருத்துவர்கள் தங்கள் ஆகமமான பைபிளை, போற்றுகின்றனர். சைவ வைணவ சமங்களில்

மட்டும் ஆகம வழிபாடு இன்று வழக்கத்தில் இல்லை என்பது நோக்கத்தக்கதாகும்.

இப்போது பெரும்பான்மையான கோயில்களின் பூசைகள் காமிகம் அல்லது காரணாகம முறையிலேயே செய்யப்படுகின்றன. சில கோயில்களில் மகுடாகமம் வழக்கில் உள்ளது. தில்லைச் சிதம்பரத்தில் நிகழும் பூஜை முறையான பதஞ்சலி பூஜாவிதானம் பெரும்பான்மை மகுடாகமத்தையே ஒத்திருக்கின்றது என்கின்றனர். சிலகோயில்களில் வாதுளாகமும், பாரமேச் சுவரமும் பின்பற்றப் படுகின்றன.

பரமனை விரும்பிய பாவையார்-1

திருக்கழுக்குன்றத்து நாச்சிமுத்து நாச்சியார்



திருக்கழுக்குன்றத்தில் நெடுங்காலத்திற்கு முன்னர் நாச்சிமுத்து என்ற பெண் வாழ்ந்து வந்தவள். அவள் உருத்திர கணிகையர் வகுப்பைச் சேர்ந்தவள். இறைவன் மீது எல்லையில்லா அன்பு கொண்டவள். திருக்கழுகுன்றத்துக் கோயிலில் இறைவனின் முன்பு நாட்டியமாடுதல் இவளுடைய பணியாக இருந்தது.

இவளிடம் ஒரு வைணவர் பேரன்பு பூண்டவராக விளங்கினார். இவளுடைய அன்பினால் அவருக்கும் சிவபக்தியுண்டாயிற்று. நல்ல தமிழ்ப் புலவரான அவர் திருக்கழுக்குன்றத்து இறைவன் மீது **''திருக்கழுக்குன்றமாலை''** எனும் நூலைப் பாடினார். அது பொருட்சுவையும் சொற்சுவையும் நிரம்பியது. உருத்திர கணிகையான நாச்சிமுத்துவும், அம்மாலையின் பாடல் ஒன்றைத் தினமும் கோயிலில் இறைவன் முன்பு பாடி அபிநயம் செய்வது வழக்கம்.

ஒருநாள் மாலையில் கடுங்காற்று வீசிக் கனத்த மழையும் பொழிந்தது. அதனால் அவளால் கோயிலுக்குச் சென்று இறைவன் முன்பு தனது நாட்டிய சேவையைச் செய்ய முடியவில்லை. இதற்காக அவள் மிகவும் வருந்தினாள்.

'இந்த முற்றத்தில் இறைவன் எழுந்தருளியிருந்தால் எனது நாட்டிய சேவையை நன்கு செய்ய இயலுமே', என்று எண்ணினாள். பின்பு சிவபெருமான் அங்கிருப்பதாகப் பாவனை செய்து கொண்டு அன்று பாடவேண்டிய பாடலைப்பாடி அபிநயம் செய்யத் தொடங்கினாள்.

அவள் அன்பில் மகிழ்ந்த பரமசிவன் அம்முற்றத்திலே இடபவாகனத்தில் தேவியுடன் தோன்றினார். அவளுடைய ஆடலையும் பாடலையும் கண்டு மகிழ்ந்தார். அவளுக்கு காட்சியளித்து முத்தியருளினார்.

நாச்சிமுத்து நாச்சியார் சிவபெருமானின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு கயிலைக்குச் செல்லத்தொடங்கினாள். அவள் இறைவனுடன் செல்வதைக் கண்ட அவளுடைய அன்பனான வைணவரும் ஒடி அவளுடைய பாதங்களைப் பற்றிக் கொண்டே விண்ணுலகம் சென்றார்.

இக்கதையை க்ஷேத்திரக் கோவை பிள்ளைத்தமிழ், கழுகாசல சதகம் ஆகியநூல்கள் விரிவாகக் கூறுகின்றன. "லிங்கப்பதிகம்" என்ற நூல் இந்த நிகழ்ச்சியை **"முற்றத்திலே வந்து தாதி தமிழைக் கேட்டு மோட்சம் கொடுத்தலிங்கம்,"** என்று குறிக்கின்றது.

இன்னுயிர்தந்து தியாகம் புரிந்த வீர சிவனடியார்கள்

பொதுவாகத் தன் தலையைத் தானே அரிந்து காணிக்கையாக அளிக்கும் வீரவழிபாட்டு நிகழ்ச்சிகளைக் காளி, கொற்றவை முதலான அம்பிகை வழிபாட்டிலேயே காணமுடியும். சிவநெறியோ அன்பு தழைக்கும் நெறி. இந்நெறியில் இத்தகைய இன்னுயிர் நீக்கும் கொலை வழிபாடுகள் இல்லை என்றே கூறலாம்.

இடைக்காலத்தில் தோன்றிய காபாலிகம் முதலிய வாமதந்திர சமயங்களில் இத்தகைய தன்னைத் தானே பலியாக்கிக் கொள்ளும் செயல்கள் இருந்தன என்பர் ஆராய்ச்சியாளர். தமிழகச் சைவ திருத்தல வரலாற்றில் சிவாலயங்களில் ஓரிரு இடங்களில் இத்தகைய வீரபலி நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டுள்ளன. அபூர்வமாக புராணவரலாற்றிலும் இத்தகைய பலி நிகழ்ச்சிகளைக் காணலாம். புராணவரலாறுகளில் குறிப்பிடத்தக்க இத்தகைய வரலாறு திருவலஞ்சுழி ஹேரண்டமுனிவர் கதையாகும். செவிவழிச் செய்திகளில் குறிப்பிடத்தக்கது வாட்போக்கி என்னும் ஐயர் மலையில் உள்ள வைரவப் பெருமாள் வரலாறாகும்.

இன்னும் பல தலங்களில் நடைபெற்ற இத்தகைய வீரபலி நிகழ்ச்சிகளை இனிவரும்தொடர்களில் காணலாம்.

1. ஹேரண்ட முனிவரின் தியாகம்.

தமிழகத்தின் உயிர்நாடி விவசாயமாகும். விவசாயத்தின் அடிப்படைத் தேவை நீராகும். இதனால்தான் திருவள்ளுவரும் நீரின்றி அமையாது உலகம் என்றார். நீரின் தேவை மழையினால் தான் பூர்த்தியாகிறது. மழை எப்போதும் பெய்வதில்லையாதலால் மழைக்காலத்தில் மிகுதியான நீரைத் தேக்கி வைக்க உதவும் ஆறு, குளம், ஏரி, தாங்கல், ஏந்தல் முதலியனவும் போற்றப்பட்டன. இவைகளுக்குத் தேவையானபோது பூஜைகளும் செய்யப்பட்டன. அபூர்வமாக இப்பூசைகளில் உயிர்பலியும் தரப்பட்டன. அத்தகைய உயிர்பலி தந்த ஒரு நிகழ்ச்சியை இப்புராணம் விளக்குகின்றது.

தஞ்சை மாவட்டத்தில் காவிரியாற்றின் கரையில் இருப்பது திருவலஞ்சுழி என்னும் திருத்தலமாகும். இதன் அருகில் இருப்பது கொட்டையூராகும். அந்நாளில் இப்பகுதி ஆமணக்குச் செடிகளால் நிறையப் பெற்றிருந்ததால் இது ஆமணக்கு வனம் என்ற பொருள்பட ஹேரண்டவனம் என்றழைக்கப் பட்டது. இந்தவனத்தில் நெடுநாள் தவமியற்றிய முனிவர் ஒருவர் இருந்தார். காலப்போக்கில் அவருடைய இயற்பெயர் மறைந்து இந்த வனத்தின் பெயரால் அவர் ஹேரண்டமகரிஷி என்றே அழைக்கப்பட்டார்.

ஒருமுறை காவிரியாறு இத்தலம் வரை ஓடி வந்து இங்கிருந்த ஒரு பெரும் பள்ளத்துள் வீழ்ந்து பாதாளம் சென்று விட்டது. இதனால் பயிர்த்தொழில் முழுவதும் பாதிக்கப்பட்டு விளைச்சல் இல்லாது போயிற்று. உயிர்கள் பசியாலும் பஞ்சத்தாலும் வாடிவருந்தின. மக்கள் செய்வதறியாது திகைத்தனர்.

அப்போது இந்த பெரும்பள்ளத்தில் யாராவது ஒருவர் வீழ்ந்து தன் உயிரைத் தந்தால் இந்தப் பள்ளம் நிறைந்து காவிரி பழையபடியே ஓடும் என்பதை அறிந்தனர்.

அதை அறிந்த ஹேரண்ட முனிவர் மக்களின் துயரம் தீரத் தன் உயிரைத் தர முன்வந்தார். யாவரும் அறிய இறைவனை வழிபட்டு (பிலத்துள்) அந்தப் பள்ளத்தில் வீழ்ந்தார். அவருடைய இந்தத் தியாகத்தால் பிலம் மூடி காவிரி பழையபடியே பூமியில் ஓடத்தொடங்கியது. அதனால் பயிர் வளம்பெருகி மக்கள் மகிழ்ந்தனர்.

அம்முனிவரின் ஆன்மா இறைவனுடன் கலந்தது. திருவலஞ்சுழியில் உள்ள சிவாலயத்தில் ஈசான மூலையில் ஹேரண்ட முனிவரின் (சிவநிலை அடைந்ததால் அவர்) வடிவைச் சிவலிங்கமாக அமைத்து வழிபாடு செய்கின்றனர். அச்சிவலிங்க மூர்த்தி இந்நாளில் திருவலஞ்சுழி நாதர் என்றழைக்கப்படுகின்றார்.

நாட்டுப் புறப்பாடல்களில் ஏரி, குளம் ஆகியவற்றில் தன்னுயிரை அளித்த பெண்களைப் பற்றிய தகவல் நிறையவே உள்ளன. ஆனால் பெருந்தெய்வ வழிபாட்டில் இத்தகைய நிகழ்வுகள் குறைவேயாகும். அதனால் இப்புராணவரலாறு

தனிச்சிறப்புடையதாகிறது. அதுமன்றி இவ்வாறு தியாகம் புரிந்தவர்களுக்கு அவர்களைப் போலவே கல்லில் சிலை செய்வது மரபு. ஆனால் இந்த நிகழ்ச்சியில் முனிவரின் திருவுருவத்திற்குப் பதிலாக சிவலிங்கத்தை அமைத்திருப்பது மேலும் இவ்வரலாற்றைத் தனிச் சிறப்புடையதாக்குகிறது.

2. சிவாயமலை வைரப் பெருமாள் வரலாறு.

வாட்போக்கி என்று திருமுறைகளில் வழங்கப்படும் திருத்தலம் இந்நாளில் இரத்தினகிரி என்றழைக்கப்படுகின்றது. இங்குள்ள மலைக்கு ஐயர்மலை என்பது பெயர்.

இம்மலையின் அடிவாரத்தில் வைரப் பெருமாள் என்னும் காவல் தெய்வத்தின் கோயில் உள்ளது. இவரே இம்மலையினைக் காத்துவரும் தெய்வமாகவும் போற்றப்படுகின்றார்.

இவர் ஆயர் குலத்தைச் சேர்ந்தவர் என்றும் இக்கோயிலுக்கு, "வராததோர் குற்றம் வந்த போது அதை நீக்க தம் தலையை தானே அரிந்து பலியாகக் கொடுத்தார் என்றும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. மேலும் தன் தமைக்கைக்கு பிள்ளைப்பேறு இல்லை என்றும் இப்படி பலி கொடுத்தால் அவருக்கு அப்பேறு உண்டாகும் என்று கருதி தன்னை பலியிட்டுக் கொண்டார் என்றும் கூறுவர்.

இவருடைய தியாகத்தைப் பாராட்டி மலையின்மீது சுவாமி சந்நிதியிலும் மலையடி வாரத்திலும் இவருக்குச் சிலைகள் அமைக்கப் பட்டுள்ளன. இறைவனின் பூசையின்போது இவருக்கும் தீபாராதனை செய்யப்படுகின்றது.

மலையடிவாரத்தில் உள்ள இவருடைய சந்நிதியில் பலர் வேண்டுதலைகளை நேர்ந்து கொண்டு நிறைவேற்றுகின்றனர். இவர் சிவாலயத்தில் வீற்றிருக்கும் வைராவிப் பெருமாள் என்னும் தனிச்சிறப்பு பெற்றவராவர்.

இப்போது வைரப் பெருமாள் என்று இவர் அழைக்கப்பட்டாலும் இவருடைய மூலப் பெயர் வைராவிப் பெருமாள் என்றே இருந்திருக்க வேண்டும். வைராவிச் சேவை செய்வோர் என்போர் அந்நாளில் தமிழகக் கோயில்களில் இருந்தனர். சுவாமிக்கும் கோயிலுக்கும் தீங்கு நேர்ந்தால் இவர்கள் தங்கள் உயிரைக் கொடுத்தாவது கோயிலைக் காப்பதாகச் சபதம் செய்து இப்பணியை ஏற்கின்றனர். பல சமயங்களில் இத்தகைய தீங்கு நேர்ந்த போது தங்கள் உயிரைத் தந்து கோயிலைக் காத்த நிகழ்வுகளும் நடந்துள்ளன. திருப்பரங்குன்றில் குட்டியாப்பிள்ளை என்பவர் வைராவிச்சேவை செய்து வந்தபோது ஆங்கிலேயர் அக்கோயிலைக் கொள்ளையிட வந்தனர். அச்செய்தியைக் கேட்ட குட்டியாப்பிள்ளை கோபுரத்திலேறி கீழே விழுந்து உயிரைப் போக்கிக் கொண்டு வைராவிச் சேவை செய்ததை அக்கோயில் கல்வெட்டால் அறிய முடிகின்றது. இத்தகைய தியாகம் செய்தவர்களின் பெயரைச் சொல்லுதல் மரபு இல்லை. எனவே அவர்கள் அவர்களுடைய பதவியின் பெயரால் வைராவிப் பெருமாள் என்றே அழைக்கப் படுகின்றனர்.

ஆகமம் என்றால் என்ன?



ஆகமம் எனும் வடமொழிச் சொல்லுக்குத் தென்மொழியில் 'வந்தது' என்ற பொருளாம். எங்கிருந்து வந்தது எனில் பரம ஆப்தரது திருநாவில் இருந்து என்றதாம். அதனால், ஆப்தவாக்யம் ஆகமம் என்ப ஆன்றோர். அந்த ஆப்தர் சர்வபுவன கர்த்தாவாகிய பரமசிவனாவார்.

ஆகமம் என்பது மற்றொருவழியில் ஆ, பாசம், க-பசு, ம-பதி எனவும் அருத்தமாம். பசு பதி பாச இலக்கணங்களைச் சால விளக்குதலின் இப்பொருள் கொள்ளும் என்பதன்றி ஆ-ஞானம், க-மோடசம், ம-மலநாசம் எனவும் அர்த்தமாகும்.

- வேதத்தைக் குறித்தவியாசம் நூலில்

பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள்.

வாழைவன நாதர்



பண்டைநாளில் மரங்களின் அடியிலேயே சிவலிங்கங்களை அமைத்து வழிபட்டு வந்தனர். பின்னாளில் சிவலிங்கங்களுக்குப் பெரிய கோயில்கள் அமைக்கப்பட்ட பின்னரும் சிவலிங்கத்திற்கு நிழல் பரப்பிய மரங்கள் ஸ்தல விருட்சங்கள் என்ற பெயரில் வழிபடப்பட்டு வருகின்றன. பொதுவாக மரங்கள் நெடுநாள் சிறப்புடன் விளங்குபவை. காஞ்சீபுரத்தில் உள்ள மாமரம் ஐந்தாயிரம் ஆண்டுகளைக் கடந்த தென்பர். பல தலங்களில் வயது நிறைந்த சிறந்த மரங்கள் நெடுநாட்களாக இருந்து வருகின்றன. இதற்கு மாறாக ஓராண்டே இருக்கக்கூடிய வாழைமரங்களும் பலதலங்களில் தலவிருட்சங் களாகக் காண்கிறோம். பண்டைக் காலத்து வாழைமரத்தின் வழிவழியாக வந்த வாழைமரங்கள் இன்றும் இத்தலங்களில் உள்ளன. அத்தகைய தலங்களை இப்பகுதியில் காணலாம்.

வாழை பலவகைப்படும், கல் வாழை, ரசவாழை, பேயன், மொந்தன், ரஸ்தாளி, மலை வாழை என்று அதன் வகைகள் ஏராளம், வாழையில் கல் வாழைக்கு ஞீலி என்பது ஒரு பெயர். பசுமையான ஞீலி தலமரமாக இருப்பதால் தஞ்சை மாவட்டத் தலமொன்று திருப்பைஞ்ஞீலி என்றே அழைக்கப் படுகின்றது. இத்தலம் பாடல் பெற்ற தலமாகும்.

திருக்கழுகுன்றத்திற்கும் வாழைவனம் என்பது ஒரு பெயர். அவ்வூரின் தலவிருட்சமும் வாழை மரமாகும். இத்தலத்தைச் கதலிவனம் எனவும் அழைப்பர். அருணகிரி நாதசுவாமிகள் திருப்புகழில் இத்தலத்தைச் கதலி வனமென்று குறிக்கின்றார்.

இத்தலத்தில் ஐந்தாம் நாள் காலையில் கதலிவாகனக் காட்சியென்ற ஸ்தலவரலாற்று ஐதீக விழா நடைபெறுகிறது. அப்போது சோமாஸ்கந்த மூர்த்தியை வாழை மரங்களின் கீழ் எழுந்தருளவைத்து உலா நடத்துகின்றனர்.

திருப்பழனம் (பூவாழை), திருப்பைஞ்ஞீலி (ஞீலிவாழை), தேவூர் (வெள்வாழை) ஆகிய தலங்களிலும் வாழை தலமரமாக இருக்கக் காணலாம். திருப்பைஞ்ஞீலியின் அம்பிகை தவம் செய்தபோது அரம்பையர்கள் வாழை மரங்களாக நின்று அந்த பூசைக்கு நிழல் தந்தார்கள் என்று தலபுராணங்கள் கூறுகின்றன. எனவே திருப்பைஞ்ஞீலிக்கு அரம்பைவனம் என்பதும் பெயராயிற்று. வாழைக்கும் அரம்பை என்பது பெயராகும்.

வடாற்காடு மாவட்டத்தில் வாழைப்பந்தல் என்ற ஊர் உள்ளது. அங்கு பச்சையம்மனாகிய உமாதேவியார் வாழைமரங்களைப் பந்தலாக இட்டு அதனடியில் சிவபெருமானை எழுந்தருள்வித்து சிவபூஜை செய்தார் என்பது செவிவரலாற்றுச் செய்தியாகும். இவ்வாறு பலத்தலங்களில் வாழை தலமரமாக இருப்பதைக் காணலாம். திருச்சியில் உள்ள தாயுமானவ சுவாமி கோவிலுக்கு வாழைத்தார்களை காணிக்கையாக அளிப்பது வழக்கம். இப்படிச் செய்வதால் தன்னுடைய குலம் செழித்து வளரும் என்று நம்புகின்றனர்.

தொண்டை நாட்டில் விடங்கத் தலங்கள்



சைவ உலகில் "விடங்கர்" என்ற சொல் திருவாரூர்ப் பெருமானானத் தியாகேசரையே குறிக்கும். அப்பெருமான் முசுகுந்தச் சக்கரவர்த்தியால் தேவலோகத்திலிருந்து கொண்டுவந்து நிலைப்படுத்தப்பட்டவர். மேலும் முசுகுந்தச் சக்ரவர்த்தி ஆறு தியாகேசர்களை இந்திரனிடமிருந்து பெற்று சோழநாட்டில் உள்ள ஆறுதலங்களில் நிலைப்படுத்தினார். இந்த ஏழு விடங்கர்களே சப்த விடங்கர்கள் என்றழைக்கப் படுகின்றனர். இம்மூர்த்திகளை யல்லாது இன்னும் பலவிடங்கர் எழுந்தருளியுள்ள தலங்களும் உள்ளன. அவற்றில் மூன்று தொண்டை நாட்டில் உள்ளன. அத்தலத்தில் எழுந்தருளியுள்ள விடங்கரான தியாகராஜ மூர்த்திகளைப் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் காணலாம்.

தொண்டை நாடென்பது சென்னை செங்கை மாவட்டத்தின் முழுப்பகுதியையும் அண்டை மாவட்டங்களான தென்னாற்காடு வடாற்காடு ஆகியவற்றின் சிலபகுதிகளையும் ஆந்திர மாநிலத்தின் தெற்கு மாவட்டங்களின் சில பகுதிகளையும் கொண்டதாகும்.

இத்தொண்டை வளநாடு சான்றோருடைத்து எனும் தனிச்சிறப்புடையது. தேவார முதலிகளும் மாணிக்கவாசகரும் இம்மண்டலத்தில் தங்கி இறைவழிபாடு நடத்தியுள்ளனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஒற்றியூரில் ஞாயிறுகிழாரின் மகளான சங்கிலி நாச்சியாரை மணந்து இல்லறம் நடத்தியுள்ளார்.


இம்மண்டலத்தில் செங்கை மாவட்டத்தில் உள்ள திருக்கச்சூரும், சென்னையின் வடபகுதியில் உள்ள திருஒற்றியூரும், சென்னையின் தென்பகுதி யான திருவான்மியூரும் விடங்கர் எழுந்தருளி யுள்ள திருத்தலங்களாகும்.

திருவான்மியூர்த் தியாகராசர் வால்மீகி முனிவருக்கும் காமதேனுவுக்கும் அகத்தியருக்கும் மறைகளுக்கும் அருள் புரிந்தவர். வால்மீகி முனிவருக்கு நடனக்காட்சி அருளியவர். ஒவ்வொருமுறை சுவாமி புறப்பாட்டின் போதும் மேற்குக் கோபுரவாயிலில் நடனம் புரிந்து (அங்கு நேர் எதிரே தனிக் கோயிலில் தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ள) வால்மீகிக்குத் தரிசனம் அளிக்கும் ஐதீகக்காட்சி நடைபெறுகின்றது. இந்தத்தியாகராஜர் அம்பிகைக்கும் நடனக்காட்சி யளித்து எழுந்தருளிய திருமேனியாகும்.

இவருக்கு கமலத் தியாகர் என்பது பெயர்.. பங்குனி உத்திரத்தையொட்டி இங்கு விழா நடைபெறுகின்றது.

திருஒற்றியூர்த் தியாகேசர் வடிவம் நந்தியும் பெருமானுக்கு தனது இருந்தாடும் கூத்தான தியாகவிநோதக் கூத்தினை நிகழ்த்திக் காட்டிய சம்புபட்சத் திருமேனியாகும். இவரும் வீதி வலம் வரும்போது மேற்கு மாடவீதியில் நடனம் நிகழ்த்தி (அங்கு நேர் எதிரே தனிக்கோயில் கொண்டுள்ள) நந்தியெம்பெருமானுக்கு காட்சி நல்குகின்றனர்.

இவருக்கு மாணிக்கத் தியாகர் என்பது பெயர். இங்கு மாசி மகத்தையொட்டி பெருந் திருவிழா நடைபெறுகிறது.



திருக்கச்சூர் என்பது செங்கல்பட்டில் இருந்து 10 கி.மீட்டரிலும் சிங்கபெருமாள் கோயில் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 1 கி.மீ. தொலைவிலும் உள்ளது. பாற்கடல் கடைந்தபோது விரைந்து அமிர்தம் வெளிப்படாததாலும், கடையும்போது மந்திரமலையைத் தாங்கும் வலிமையைப் பெறவும் திருமால் கூர்ம அவதாரம் எடுத்து பூசித்த தலம் இதுவாகும். இங்கு திருமாலுக்கு நடனக்காட்சியளித்த கோலத்துடன் சம்புபட்சத் திருமேனியாகப் பெருமான் எழுந்தருளியுள்ளார். இம்மூன்று தியாகேசர்களும் தேவாரப் பாடல் பெற்ற மூர்த்திகளே ஆவர்.

இம்மூர்த்திகளுக்கு "நிலவு உகந்த திருமேனிகள்" என்பது ஒருபெயர் இவர்கள் நள்ளிரவில் (பஞ்சமி திதி தொடங்கி பௌர்ணமி வரையிலான) நிலவு வரும் காலத்தில் மட்டுமே திருவீதி உலாக்காண்கின்றனர். இவர்களின் நடனக்காட்சி பவனி என்றழைக்கப்படுகின்றது. கொடியேற்றம் இம்மூர்த்திகளுக்கே நடை பெறுகிறது. மற்ற வாகன உற்சவங்கள் சந்திரசேகர மூர்த்திக்கு நடைபெறுகின்றன.

திருஆரூர் பெருமானாவது ஆழித்தேரில் பவனி வர பகலில் வெளிவருகின்றார். ஆனால் இம்மூன்று மூர்த்திகளும் எக்காரணம் கொண்டும் பகலில் புறப்பாடு காண்பதில்லை. இவர்களுக் கென்று தனியாக மணித்தண்டும், சுழலும் பூச்சக்கரக் குடையும் பஞ்சமுக தீவட்டியும், ஆலவட்டமும், பெரிய விசிறிகளும், பிரம்ம தாளமும், எக்காளமும் உள்ளன.

மூவரும் விழாமுடிவில் பந்தலில் அம்பிகைக்கு பதினெட்டு நடனமும் ஊஞ்சல் மண்டபக்காட்சியும் அருள்கின்றனர்.



சிவ விரதங்கள்

உமாமகேசுவரவிரதம்

கார்த்திகை மாதப் பௌர்ணமி நாளில் காலையில் எழுந்து நீராடிப் பொன் அல்லது வெள்ளியினால் சமைக்கப்பெற்ற உமாமகேசு வரருடைய திருஉருவங்களை அர்ச்சித்து அறுசுவை அமுதை நிவேதித்து வணங்கி சிவனடியார்களுக்குத் தானம் ஈந்து அன்று ஒரு வேளை மட்டும் உணவாக அப்பம், பழம் முதலியவற்றை அடியவர்களுடன் உண்டு, சிறந்த சிவனடியார் ஒருவருக்கு பூஜித்த உலோகத் திருஉருவங்களை தானமாக அளிக்கவேண்டும். இவ்வாறு இந்த விரதத்தை ஒன்றுபட்ட மனத்துடன் விதிப்படி நோற்பவர், நல்ல அழகும், நீண்ட ஆயுளும், புகழும், அறிவும், செல்வமும், பெற்று மறுமையில் பேரின்ப வீட்டை அடைவர். -உபதேசகாண்டம்.

சிவபிரானின் குருவடிவங்கள்-1

கௌலீசுவரர்



கௌலீசுவரர் - திருவொற்றியூர்.
நன்றி - தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை

சிவபெருமானின் தட்சணாமூர்த்தி வடிவங்களில் ஒன்று "கௌலீசுவரர்" வடிவம் ஆகும். இவரை லகுளீசுவரர் எனவும் அழைப்பர். கௌலம் என்பதன் மூலச் சொல் குலம் என்பதாகும். கௌல என்பதற்கு இரகசியம் என்று பொருளாகும். பக்தனின் இருதயத்துள் இரகசியமாக எழுந்தருளியிருந்து உபதேசம் செய்யும் காரணத்தால் சிவபெருமான் கௌலீசன் எனப்படுகின்றார். லகுளீசபாசுபதர்கள் எனும் சைவசமயப் பிரிவினர் கௌலீவரரைக் குரு வடிவமாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர்.

ஒரு சமயம் வடநாட்டில் மராட்டிய மாநிலத்தில் உள்ள காரோண் எனுமிடத்தில சிவபெருமான் (இறந்துபோன ஒருவன் உடலில் புகுந்து எழுந்து) வந்து லகுளீசன் எனும் பெயரைத் தாங்கி ஒரு புதிய சித்தாந்தத்தை உபதேசித்தார் என்பர். அதுவே "லகுளீசபாசுபதம்" என்று வழங்குகின்றது. அந்த வழியைப் பின்பற்றுவோர் லகுளீசபாசுபதர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இச்சமயம் உலகியல் கருத்துக்களான யோகம், போகம், கட்டுப்பாடற்ற உணவு முதலானவற்றையே போதித்ததால் எளிதில் இந்தியா வெங்கும் பரவியது.

இவர்கள் தென்னகத்தில் காஞ்சீபுரம், நாகப்பட்டினம், குடந்தை முதலிய இடங்களில் பெரிய சமய நிறுவனங்களையும் கோயில்களையும் அமைத்தனர். இக்கோயில்களில் சில தேவாரப் பாடல் பெற்றத் தலங்களாகத் திகழ்கின்றன.

சென்னை திருஒற்றியூரில் ஒரு பாசுபதமடம் இருந்தது. இதன் சார்பில் அமைக்கப்பட்ட கோயிலும் இருந்தது. இவர்கள் கோயிலை மயானம் என்றும், மதத்தலைவரின் இருப்பிடத்தை மடம் என்றும் அழைத்தனர். திருஒற்றியூரில் உள்ள ராஜேந்திர சோழனின் கல்வெட்டு ஒன்று மயானமும் மடமும் உடைய சதுரானன பண்டிதர் எனும் மடத்துத் தலைவர் இங்கு வாழ்ந்ததைக் குறிக்கின்றது.

திருக்கடவூர் மயானம், கச்சி மயானம், நாலூர் மயானம், வீழியானம் முதலியன தேவாரத் தலங்கள் யாவும் இவர்களுடைய கோயில்களேயாகும். இவர்கள் சோழ அரசர்களிடம் மிகவும் செல்வாக்குப் படைத்திருந்தனர். சோழ அரசர்களும் இவர்களைத் தமது

தொடர்ச்சி 32-ம் பக்கம்

சிவமூர்த்தங்களில்முதலாவதான "சதாசிவமூர்த்தி"


மகாசதாசிவமூர்த்தி

சிவாகமத்தை உபதேசிக்கும் பொருட்டு பரமசிவன் ஐந்து முகங்களுடன் சதாசிவனாகக் காட்சியளித்தார். இவர் தமது ஐந்து முகங்களில் நான்குதிசைகளை நோக்கிய நான்கு முகங்களிலிருந்தும் (ஒரு முகத்திற்கு ஐந்து ஆகமங்கள் எனும்படி) இருபது ஆகமங்களையும் மேலே அமைந்த ஐந்தாவது முகத்தால் எட்டு ஆகமங்களையும் ஆக 28 ஆகமங்களை உபதேசித்தார்.

இவரால் உபதேசிக்கப் பெற்ற ஆகமங்கள் இவருடைய 1. திருவடிகள், 2. கணைக்கால், 3. அங்குலி, 4. தொண்டைக்கால், 5. முழந்தாள்கள், 6. தொடைகள், 7. குய்யம், 8. கடித்தானம், 9. முதுகு, 10. கொப்பூழ், 11. வயிறு, 12. இதயம், 13. மார்பகங்கள், 14. கண்கள், 15. கழுத்து, 16. காதுகள், 17. கிரீடங்கள், 18. கைகள், 19. நெஞ்சு, 20. முகம், 21. நாக்கு, 22. கன்னம், 23. நெற்றி, 24. குண்டலங்கள், 25. பூணூல், 26. மாலை, 27. அணிகள், 28 இடையாடை எனும் இவருடைய வடிவமாக விளங்குகிறதென்பர்.

இவருடைய திருமேனி அமைப்பைப் பற்றி ஆகமம் கூறுவதாவது, ஸ்படிகம் போன்ற நிறமுடையவர், எடுத்துக்கட்டிய சடைமுடியில் இளம் பிறை அணிந்தவர் ஐந்து முகங்கள் கொண்டவர். இரண்டு திருவடிகள் கொண்டு பத்மாசனத்தில் வீற்றிருப்பவர். பத்துகரங்கள் கொண்டு அவற்றில் ஆயுதங்களை ஏந்தியவர், வலக் கரங்களில் 1. இச்சை கிரியை ஞானம் என்பனவற்றைக் குறிக்கும் மூவிலை சூலமும், 2. பராசக்தி வடிவான சக்தி, 3. நெளிந்து வளைந்த குறுவாளும், 4. நீண்டகத்தியையும், 5. வரம் தரும் அபய கரத்தையும் கொண்டுள்ளார். இடக் கரங்களில் 1. உலக உற்பத்தியைக் குறிக்கும் டமருகமும், 2. உலக மூலத்தைக் குறிக்கும் விதை நிரம்பிய பழத்தையும், 3. தூல சூட்சும பூதங்களை நடத்தும் நாகபாசத்தையும், 4. அட்சமாலையும், 5. குணங்களைக் குறிப்பதான நீலோற்பலமலரையும் ஏந்தியுள்ளார்.

இவர் முதன் முதலாக 66 பேருக்கு சிவாகமங்களை உபதேசித்தார் என்பர் அதன் பின்னர் உபாகமமங்களாகிய 208ஐயும் உபதேசித்தார் என்பர். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ராஜராஜ மன்னர் சதாசிவமூர்த்தியின் பால் எல்லையற்ற பற்று கொண்டவர். அவர் தான் கட்டிய தஞ்சைப்பெரிய கோயிலின் விமானத்தில் பலவேறு அளவுகளில் சதாசிவமூர்த்தியின் திருவுருவத்தை அமைத்துள்ளதைக் காண்கிறோம்.

30ஆம் பக்க தொடர்ச்சி.....

ஆசாரியர்களாகக் கொண்டு இவர்களுக்கென பல கோயில்களையும் மடங்களையும் அமைத்துத் தந்தனர்.

இவர்கள் தங்கள் செல்வாக்கு ஓங்கியிருந்த கோயில்களில் தெற்குக் கோட்டத்தில் (தென்முகக் கடவுளுக்குப் பதிலாக) தாங்கள் வணங்கி வந்த சிவபெருமானின் குருவடிவமான கௌலீசுவரரையே அமைத்தனர். எடுத்துக்காட்டாக இவர்கள் தங்கள் செல்வாக்கில் முதலாம் ராஜேந்திர சோழனைக் கொண்டு முழுவதும் கற்றளியாகத் திருத்திக்கட்டிய திருஒற்றியூர் படம் பக்கநாத சுவாமியின் விமானத்தில் (கிரீவத்தின் தென்பகுதியில்) தட்சணாமூர்த்திக்குப் பதிலாகக் கௌலீசுவரை அமைத்திருப்பதைக் காணலாம்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருஐயாற்றுக் கோயிலும் இவர்கள் செல்வாக்கால் சிறந்திருந்தது. அதனால் அங்கும் தட்சணாமூர்த்தியின் இடத்தில் கௌலீசுர மூர்த்தியின் திருவுருவம் அமைக்கப் பட்டது. திருஒற்றியூர் கோயிலில் கௌலீசுவருக்கு என்று ஒரு தனிச்சந்நிதி அமைந்துள்ளது. (இந்நாளில் இது தியாகராசர் சந்நிதிக்குப் பின்புறம் தனித்து இருப்பினும் முற்காலத்தில் தியாகர் சந்நிதியோடு இணைந்து தியாகேசர் மூலத்தானத்தின் பின்புறம் அமைந்த வாயிலின் வழியாகச் சென்று இரகசியமாக வழிபடும் நிலையில் இருந்ததை உணர முடிகின்றது. பின்னாளில் இக்கோயிலில்திருப்பணி செய்தவர்கள் கௌலீசர் சந்நிதியின் அர்த்தமண்டபத்தை இடித்து இந்தச் சந்நிதியைத் தியாகர் சந்நிதியில் இருந்து தனிமைப்படுத்தினர் என்ற கருத்து நிலவுகிறது)

எண்ணற்ற இடங்களில் பாசுபதர்கள் கோயில் அமைந்திருப்பினும் இன்றைக்கும் ஒரு சில இடங்களில் மட்டுமே கௌலீசர் திருஉருவத்தைக் காணமுடிகிறது.

பஞ்சலிங்கங்கள்

சிவபெருமான் ஐம்பூதங்களுக்கு நாயகன் எனவே அவனுக்குப் பூதநாயகன் என்பது பெயர். அவருக்கு ஐந்து முகங்கள். அந்த ஐந்து முகங்களில் இருந்தும் அவர் உலகினைப் படைத்து, காத்து, அருளி, மறைத்து, அழித்து ஐந்தொழிலை நடத்துகின்றார். ஐம்பொறிகளான கண், காது மூக்கு, வாய், மெய் என்கின்ற ஐந்தினாலும் நாம் இனிது வாழ அருள்பவரும் அவரே.

சிவபெருமானின் ஐந்து தொழில்களையும், நடத்தும் ஐந்து திருஉருவங்களாக ஐந்து லிங்கங் களை வைத்து வழிபாடு செய்கின்றோம். இந்த ஐந்து லிங்கங்களையும் பஞ்ச பூதத்தலங்களில் உள்ள மண்லிங்கம், காற்று லிங்கம் நெருப்புலிங்கம், ஆகாச லிங்கம், தண்ணீர்லிங்கம் ஆகியவையாகப் பாவித்து வணங்குகின்றோம். நடைமுறையில் அத்தலங்களுக் குரிய மூர்த்தியின் பெயராலேயே இச் சிவலிங்கங்கள் அழைக்கப்பட வேண்டுமென்பது மரபாகும். ஆதலால் இவற்றை ஏகாம்பரேசுவரர், காளத்தியப்பர், அண்ணாமலையார், சிதம்பரேசுவரர், ஜம்புகேசுவரர் ஆகிய பெயர்களால் அழைக்கின்றோம். அனைத்துச் சிவாலயங்களிலும் இந்தப் பஞ்ச லிங்கங்கள் இருக்க வேண்டும் என்பது பொது விதியாகும். திருவண்ணா மலை முதலிய பெரிய ஆலயங்களில் இச்சிவ லிங்கங்களுக்குத் தனித் தனியே பெரிய சந்நிதிகள் அமைந்திருக்க காணலாம்.

இந்த ஐந்து லிங்கங்களையும் இப்போது நாம் ஒரே வகையான கல்லில் அமைக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளோம். ஆனால் சில பூஜா விதி நூல்களில் ஐந்து லிங்கங்களையும் ஐந்து வண்ணக் கற்களில் செய்து நிலைப்படுத்த வேண்டுமென்று கூறுகின்றன. உலோகத்தால் செய்யும்போது ஐந்து உலோகங்களாகிய பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம் ஆகியவற்றில் ஒன்றால் கலப்பில்லாமல் செய்ய வேண்டும். பஞ்சரத்தினங்களாலும் சிவலிங்கம் செய்து வணங்கப்பட்டு வருகின்றன.

கொங்கு நாடும் பஞ்சலிங்கங்களும்

கொங்கு நாட்டுச் சிவாலயங்கள், முருகன் ஆலயங்கள் ஆகிய பெரும்பாலான வற்றில் பஞ்சலிங்கங்களைத் தனித்தனிச் சந்நிதிகளில் வைத்து வழிபடும் வழக்கம் உள்ளது.

திரிமூர்த்தி மலையில் அருவியில் உள்ள பெரிய பாறையின் அடியில் ஐந்து சுயம்பு லிங்கங்கள் உள்ளன. இவற்றைக் கோடை காலங்களில் நீர் மிகக் குறைவாக இருக்கும் போது காணலாம் என்பர். இந்தக் காட்டாற்றில் எப்போதும் நீர் இருப்பதால் இநத லிங்கங்களைக் காண இயலாது என்பதால் அருகில் ஒரு மேடை அமைத்து அதன் மீது ஐந்து லிங்கங்களை அமைத்துள்ளனர்.



மீனும் சிவபெருமானும்

சிவமஞ்சரியின் இரண்டாவது மலராக "மீனும் சிவபெருமானும்" என்ற இந்நூல் மலர்கின்றது. அன்பர்கள் சிவபெருமானை நினைத்தவுடனேயே அவருடைய அருளாற்றலாக வெளிப்பட்ட அன்னை பராசக்தி அவர்களுடைய எண்ணத்தில் வந்து விடுகின்றாள். அவளுடைய அருட்கண் பார்வையினால் இறைநேயரின் இதயத்தாமரை மலர்கின்றது. அவளுடைய கண்களுக்கு ஆயிரம் உவமைகள் இருந்தாலும் அவை மீனொடு உவமித்துக் கூறும் பொழுது தான் சிறப்படைகிறது. அதனால் அவளுக்கு "அங்கையற்கண்ணி" என்பது பெயராயிற்று. அது வடமொழியில் மீனலோச்சனி என்றும் வழங்கப்படும்.

அவளுடைய அருட்கண்ணை நினைவூட்டும் வகையில் அமைந்த மீனை நினைந்து, அது தொடர்பான சமயச்செய்திகளையும், சிவபெருமான் மீனவனாய்த்தோன்றி நிகழ்த்திய திருவிளையாடலையும் இம்மலரில் சிந்திக்கலாம். மேலும் பல்வேறு கடவுளர்கள் மீனவதாரம் செய்ததையும் புராணங்கள் விரிவாகக் குறிப்பிடுகின்றன.

வேதத்தை மீட்டுக்கொடுக்கத் திருமால் மீனவதாரம் செய்ததையும், அசுரர்களுக்குப் பயந்த தேவர்கள் கடலில் மீனாக உருமாறித் திரிந்ததையும் புராணங்கள் கூறுகின்றன. மீன், காதலின் சின்னமாகவும் காதல் சாம்ராஜ்யத்தில் ஏற்றப்படும் கொடியாகவும் விளங்குகின்றது. மன்மதன் மீன் கொடியை உடையவனாக விளங்குகின்றான். பார்வதிதேவியார் திருஅவதாரம் செய்த பாண்டிய குலத்தின் இலச்சினையும் மீனாகும்.

இந்தியச் சமய மரபில் மீன் செல்வத்தின் அடையாளமாகக் குறிக்கப்படுகின்றது. இவ்வாறு பல வகையிலும் சிறப்புப் பெற்ற மீனோடு தொடர்புடைய செய்திகளை இம்மலரில் காணலாம்.

மேலும் இம்மலரில் மகாசிவபக்தச் சிரோன் மணியான இராவணேசுவரன், அவன் மனைவி, தம்பியர் ஆகியோருக்குச் சிவபெருமான் அருள் செய்த செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

அதனைத் தொடர்ந்து சிவநெறியில் வீரம் விளைத்த சிவனடியார்களைப் பற்றியும், அந்தாதி தந்த திருப்புகலூர்ப்பாவை சிந்தாமணியைப் பற்றிய செய்திகளையும் சிவதீக்ஷை ஆகிய கட்டுரைகளையும் காணலாம்.

மீன் வடிவம் கொண்ட செல்வநந்தி



மச்சயோக்கவரர்

இந்தியமரபில் செல்வத்தின் தன்மையைக் குறிக்கப் பலவகை அடையாளங்கள் அமைகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை மாடு, பன்றி, யானை, சிங்கம், மீன் என்ற ஐந்தாகும்.

இவற்றில் பூர்வீகச் சொத்தாக அமைந்த (முன்னோர்கள் சேர்த்துவைத்த) செல்வத்தின் அடையாளமாகப் பன்றி குறிக்கப்படுகின்றது. இது ஒருவன் தான் முயன்று உழைத்துப் பொருள் சேர்க்காமல், தனது முன்னோர்கள் சேர்த்து வைத்த செல்வத்தைச் சுகமாக இருந்து அனுபவிக்கும் நிலையை உணர்த்துவதாகும்.

ஒருவன் தன்னுடைய பெரும்முயற்சியால் பொருளைச் சேர்த்து, அதனை அரச போகத்துடன் அனுபவித்து வாழும் நிலையிலான செல்வத்தின் அடையாளமாகச் சிங்கம் திகழ்கிறது.

ஒருவன் தன் வல்லமையாலும், முன்னோர் களின் வழியாலும் பெற்ற செல்வத்தை, அறிவுடன் அடங்கியிருந்து அனுபவிக்கும் செல்வத்தின் குறியீடாக யானை விளங்குகிறது.

இவை மூன்றும் ஞானத்தின்பாற்பட்ட வையல்ல. ஒருவன் வழிவழி வந்த ஞானச் செல்வத்துடன் தான் பெற்ற அனுபவஞானத்தை யும், பொருட்செல்வத்தையும் சேர்த்து அதனைத் தன்னடகத்துடன் அனுபவிப்பதைக் குறிப்பது நந்தி அடையாளமாகும்.

மகாபலிபுரத்தில் மேற்குறித்த நான்கு செல்வக்குறியீடுகளையும், பெரிய சிற்பங்களாகச் செய்திருக்கக் காணலாம். பாண்டவரதங்கள் உள்ள இடத்தில் சிங்கம், யானை, இடபம் ஆகிய மூன்றையும் முறையே வடக்கு, தெற்கு, மேற்கு ஆகிய மூன்று திசைகளை நோக்கியவாறும் கடற்கரையில் தனியே பன்றியைக் கிழக்கு நோக்கியவாறும் அமைத்திருக்கக் காண்கிறோம்.

வேண்டுதல் வேண்டாமை இல்லாத சிவபெருமானிடத்தில் அணுக்கத் தொண்டராக இருக்கும் நந்தியம்பெருமான் ஞானவழிச் செல்வத்தின் அடையாளமான (காளையின்) மாட்டின் வடிவத்தைத் தாங்கியிருக்கின்றார்.

தமிழில் மாடு என்பதற்குச் செல்வம் என்பது பொருள். "வள்ளுவன் கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றயவை" என்று சொல்வது இங்கு எண்ணத்தக்கது. செல்வத்தின் சிறப்புக் குறியீடுகளான இந்த நான்கைத்தவிர செல்வத்தைக் குறிப்பிடும் பொது அடையாளமாகத் திகழ்வது மீனாகும்.

மீன், செல்வம் ஆகிய இரண்டுக்குமே பகட்டு, பளபளப்பு, ஓரிடத்தில் நிலைத்திராமை, தூக்கமற்றிருத்தல் முதலான பொதுப்பண்புகள் உள்ளன.

நந்தியம்பெருமான் சில சமயங்களில் செல்வத்தின் குறியீடான மீன் வடிவத்தைக் கொண்டவராகவும் விளங்குகின்றார்.

தென்னாட்டில் உள்ள அனேக சிவாலயங் களில் "மச்சயோகீசுவரர்" என்னும் பெயரில் புடைப்புச்சிற்பங்கள் அமைந்துள்ளன. இத்தகைய சிற்பங்களில் பெரியமீனையும், அதன்மீது யோக பட்டயம் தரித்தவராகவோ அல்லது சுகாசனத்தில் வீற்றிருப்பவராவோ, விரிந்த ஜடாமண்டலத்துடன் கூடியவரான சிவபெருமானைக் காணலாம். இங்குப் பெரிய மீன் வடிவில் சிவபெருமானைத் தாங்கி நிற்பவர் நந்தியம்பெருமானே ஆவார். இந்த மூர்த்தியை வணங்கி வந்தால் திருஷ்டி, தோஷம் விலகும் என்பர். இம்மூர்த்தியைத் தேரிலும்,, சுவர்களிலும், தூண்களிலும் புடைப்புச் சிற்பங்களாக மட்டுமே காணமுடிகிறது.

மீனவனாய் வந்த சிவபெருமான்

சிவபெருமான் மீனவனாய்த் தோன்றி வலைவீசி மீன்பிடித்துத் திருவிளையாடல் புரிந்ததைப் புராணங்களும், இலக்கியங்களும் சிறப்புடன் குறிப்பிடுகின்றன.

மணிவாசகப்பெருமான் திருவாசகத்தில் இத்திருவிளையாடலைப் பல இடங்களில் குறிப்பிடுகின்றார். அவர் தமது, திருப்படையாட்சியில் "மீன் வலை வீசிய கானவன் வந்து வெளிப் படுமாயிடிலே" என்றும், போற்றித் திருவகவலில், "அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி", என்றும் "கேக வேடராகிக் கெளிறது படுத்தும்" என்றும் பலவாறு குறிப்பிடுதலைக் காணலாம்.



மீனவதாரம் செய்த திருமாலை அடக்கி அருள் செய்த மச்சாரி எனும் சிவபெருமானின் திருக்கோலம்

சிவபெருமான் மீன் பிடித்தாடிய திருவிளையாடலைச் சிவபராக்கிரமம், திருவிளையாடற்புராணம் முதலிய நூல்கள் இரண்டு வகையில் குறிப்பிடுகின்றன. சிவபராக்கிரமம் கூறும் கதையையே உபதேசகாண்டமும், கந்தபுராணமும் சற்று விரிவாக எடுத்துரைக்கின்றன. முதலில் சிவபராக்கிரமம் கூறும் மீன் பிடித்தாடிய வரலாற்றையும், தொடர்ந்து திருவிளையாடற்புராணத்தில் உள்ள வலைவீசிய படலத்தையும் இங்குச் சுருக்கமாகக் காணலாம்.

திருமால் கொண்ட மீனவதாரமும் சிவபெருமானும்

ஒரு சமயம் சோமுகாசூரன் என்பவன் பிரம்மனை நோக்கி அரியதவங்களைச் செய்து அவரிடம் எண்ணற்ற வரங்களைப் பெற்றான். அவன் முதலில் மிகவும் சாதுவாக விளங்கினாலும் நாட்செல்லச் செல்ல அவனிடம் அசுரகுணம் தலைதூக்கியது.

அவன் ஒருநாள் சத்யலோகம் சென்று பிரம்மதேவனைக் கண்டான். அப்போது பிரமன் படைப்பிற்கு மூலகாரணமான நான்கு வேதங்களையும், ஆராய்ந்து கொண்டிருந்ததால் அவன் வந்ததைக் கவனிக்கவில்லை. இதனால் கோபம் கொண்ட சோமுகாசூரன் அவரிடம் இருந்து வேதங்களைப் பறித்துக் கொண்டு ஓடிக் கடலுக்குள் ஒளிந்து கொண்டான். வேதங்கள் இல்லாததால், பிரம்மதேவனால் படைப்புத்தொழிலைத் தொடர்ந்து, செய்ய முடியவில்லை. எனவே தன் தந்தையான திருமாலிடம் சென்று, தனது இயலாமையை முறையிட்டான். திருமால் உடனே மீனவதாரம் எடுத்துக் கடலுக்கடியில் சென்று பல இடங்களில் தேடிச் சோமுகாசூரனைக் கண்டு பிடித்துக் கொன்று வேதங்களை மீட்டார். கடற்கரையில் காத்திருந்த பிரமன் அவரிடமிருந்து வேதங்களைக் வாங்கிக் கொண்டார்.

மீனவதாரத்தில் இருந்த திருமால் அசுரனைக் கொன்ற மகிழ்ச்சியால் மீண்டும் கடலுக்குள் சென்று கடலைக் கலக்கி விளையாடத் தொடங்கினார்.



மச்சாரி என்னும் சிவபெருமான் (சிவபராக்கிரமம்)

அசுரனைக் கடித்து அழித்ததால், அவனுடைய அசுரகுணங்கள் கொஞ்சம் இவரிடமும் சேர்ந்து கொண்டன. அதனால் ஓயாது கடலைக் கலக்கி, நீந்தி விளையாடத்தொடங்கினார். கடல் கலங்கிய தால் நிலம் நடுங்கியது. இந்தத் துன்பத்தைத் தாளமாட்டாத உயிர்கள் வருந்திச் சிவபிரானிடம் சென்று முறையிட்டன.

சிவபெருமான் ஒரு வேடனின் வடிவம் தாங்கிக் கடலின் மீது நடந்து சென்று திருமால் விளையாடி மகிழும் இடத்தை அடைந்தார். தனது கைமணியை ஒலித்து இனிய ஓசையை எழுப்பினார். அதனால் கவரப்பெற்ற கடல் மீன்கள் அந்த இடத்திற்கு ஓடி வந்தன. அவற்றுடன் மீன்வடிவம் கொண்ட திருமாலும் அங்கு வந்தார். அதைக் கண்ட சிவபெருமான் தனது தோளில் இருந்த வலையை வீசி அந்த (மச்சாவதாரமாகக் கடலைக் கலக்கி விளையாடும் திருமாலாகிய) பெரிய மீனைப்பிடித்தார். அதன் இரண்டு கண்களையும் பறித்துத் தனது மோதிரத்தில் கற்களாக அணிந்து கொண்டார். தமது கண்களை இழந்த பின்பே திருமாலுக்கு, வளைவீசுபவனாக வந்தது சிவபெரு மான் என்பதும், தமது விளையாட்டால் உலக உயிர்கள் வருந்திப்பட்ட துன்பமும் தெரிந்தன. உடனே அவருடைய அசுரசம்பந்தமான குணங்கள் ஒழிந்தன. தன்னுடைய தவற்றிற்கு வருந்திய அவர், சிவபிரானைப் போற்றித் துதிசெய்து வணங்கினார். தேவர்கள் யாவரும் கூடிப் படைப்புக்கடவுளான பிரமன், திருமாலுடன் சிவபிரானை வேண்டி நின்றனர். சிவபெருமான் அவர்கள் முன்பு காட்சி தந்தார். பின்பு திருமாலுக்கு முன்பைவிட அழகிய பிரகாசமான கண்களை அளித்தார். அங்கிருந்த மற்றவர்களுக்கும் வேண்டிய வரங்களைத் தந்தருளினார். திருமால் மச்சபுராணத்தைப் பாராயணம் செய்து, சிவனருளும், செல்வமும் பெற்றார் என்பர்.

இதனை உபதேகாண்டம்,

"எடுத்து வீசிய வலை கடலேழையும் நிரப்பி
படுத்திழுத்தலும் வலையகப் பட்ட துசுரா
நடுக்கடற் புகுந்து திருவிழி பறித்தனன்அடந்தான்
கடுத்தவெஞ் செருக்கழிந்தது மீனமாக் கடவுள்"

என்று குறிப்பிடுகின்றது.

இதன் பொருள்: சிவபெருமான் கடல்மீது சென்று பெரிய வலையை வீசினான். அதில் ஏழு கடலும் அடங்கின. சிவபெருமான் அந்த வலையைப்பற்றி இழுத்தபோது அதில் அந்த மீனாகிய திருமால் சிக்குண்டார். அந்த நடுக்கடலுள் சிவபெருமான் அவனுடைய திருவிழிகளைப் பறித்தான். அதனால் மீன்வடிவம் கொண்ட திருமாலின் கொடிய வெஞ்செருக்கு அழிந்தது என்பதாகும்.

இதே கருத்துள்ள பாடலைக் காஞ்சிபுராணத்திலும் காணலாம்.

மச்சேசப் பெருமான்

மச்சாவதாரம் செய்த திருமால் சோமுகாசுரனைக் கொன்ற பாவம் நீங்குவதற்காகக் காஞ்சீபுரத்தில் தம் பெயரால் ஒரு சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தார். அச்சிவலிங்கமே "மச்சேசப்பெருமாள்" என்று இப்போது அழைக்கப்படுகிறது. காஞ்சீபுரத்தில் கிழக்கு ராஜவீதியின் வடக்குமுனையில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ள ஸ்ரீமச்சேசப் பெருமாள் கோயில் மிகுந்த சிறப்புடன் விளங்குகின்றது.

கொக்கு வடிவம் கொண்ட சிவபெருமான்

சிலபுராணங்களில் சிவபெருமான் பெரிய கொக்கு வடிவம் கொண்டு கடலைக் கலக்கி விளையாடும் திருமாலாகிய மீனைப் பிடித்து அவருடையச் செருக்கை அடக்கினான் என்று கூறுகின்றன. அதர்வண வேதத்தில் முக்கண்ணை உடைய உருத்திரன் கொக்கு வடிவம் தாங்கி நாராயணனைப் பற்றினான் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனை விளக்கும் வகையில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தின் தூண் ஒன்றில் பெரிய புடைப்புச்சிற்பம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் நீண்ட கழுத்துடன் கூடிய கொக்கு முகம் கொண்ட சிவபெருமானையும், அந்த முகத்தில் அமைந்த நீண்ட அலகுகளுக்கிடையில் பாதி மீன் உடல் கொண்ட திருமால் வணங்கியவாறு சிக்கிக் கொண்டிருப்பதையும் காண்கிறோம். இத்தகைய சிற்பத்தை வேறெங்கும் காணமுடியவில்லை.

திருவிளையாடற்புராணம் காட்டும்

வலைவீசி விளையாடும் வார்சடை செல்வன்

(இது 57வது திருவிளையாடலாக இப் புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளது).

ஒரு முறை ஆலவாயில் வீற்றிருக்கும் சிவபெருமான் அங்கயற்கண்ணி அம்மையாராகிய பார்வதிதேவிக்கு, வேத, சிவாகமங்களின் இரகசியப் பொருளை, உபதேசித்துக் கொண்டிருந்தார். தேவி ஏது காரணத்தாலோ அவர் சொல்லும் பொருளில் கவனம் செலுத்தாமல், அங்கிருந்த குளத்தில் துள்ளிக்குதித்துக் கொண்டிருக்கும் மீன்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இதனால் கோபம் கொண்ட "சிவன், தேவி நீ! உலகிலுள்ள சாதாரண பெண்களைப் போல் விளையாட்டில் மகிழ்ந்து, வேதப்பொருளை உணராது அவமதிக்கின்றாய். ஆதலின் நீ மீன்களைப் பிடித்துண்டு வாழும் மீனவர்குலத்திலே சென்று பிறப்பாய்" என்றார்.

அப்போது தேவி அவரை வணங்கி "நான் தங்களைப்பிரிந்து எங்ஙனம் வாழ்வேன்?" என்றாள். அதற்குச் சிவபெருமான் "நீ தென்பாண்டி நாட்டின் கடற்கரையிலே உள்ள மீனவமன்னனுக்கு மகளாகப் பிறந்து சில காலம் வாழ்வாய், உரிய பருவத்தில் நான் வந்து உன்னை மணம் புரிவேன்" என்றார்.

அப்போது, அதனைக் கேட்டுக்கொண்டு முருகனும், விநாயகரும் அங்கு வந்தனர். தமது தாயாருக்கு ஏற்பட்ட நிலையைக் கேட்டுக் கோபம் கொண்டனர். விநாயகர் எல்லாம் இந்த புத்தகங்களால் வந்த வினை என்று சொல்லித் தன் துதிக் கையால் அவற்றையெல்லாம் வாரிக்கடலில் வீசினார். முருகனும் தன் பங்கிற்குச் சிவபிரானுடைய கையில் இருந்தச் "சிவஞானபோதச்" சுவடியைப் பிடுங்கிக் கடலில் வீசினார்.



சிவபெருமான் ஆகமநூலை அம்பிகைக்கு அருளல் - வடநாட்டுச் சிற்பம்

இச்செய்கையால் சிவபெருமானுக்குச் சினம் உண்டாயிற்று. அவர் முருகனை நோக்கி, "ஞான நூற்களை இகழ்ந்த நீ வணிகக் குடும்பத்தில் சென்று ஊமையாகப் பிறப்பாய்," என்று பணித்தார்.

பிறகு, விநாயகரை நோக்கினார், அவர் புன்சிரிப்புக் காட்டினார். விநாயகரைச் சபிப்பது, தன்னையே சபித்துக் கொள்வது போலாகும் என்று சிவபெருமான் அமைதியானார்.

அப்போது நந்திதேவர் அங்குவரச் "சமயம் அறியாது இவர்களை ஏன் இங்கு விடுத்தாய்" என்று கேட்டு அதன் பயனாக "நீ பெரிய சுறாமீனாகிக் கடலில் திரிவாய்" என்றார்.

அதன் படியே ஒவ்வொருவரும் தோன்றி வளர்ந்தனர். பார்வதிதேவியார் மங்கைப் பருவம் அடைந்தாள்.

நந்தியம்பெருமான் கிழக்குக் கடலில் பெரியசுறாமீனாக வளர்ந்து முன்பு விநாயகராலும், முருகனாலும் வீசி எறியப்பட்ட வேதாகமச் சுவடிகளைத் தலையில் சுமந்தும், சிவபெருமான் திருவடிகளை நெஞ்சில் சுமந்தும் இன்புற்றிருந்தார், என்றாலும் பிறப்பினால் உண்டான சுறா மீனின் குணம் அவ்வப்போது தலைதூக்கிய காரணத்தால் கடலினைக் கலக்கியும் தோணிகளையும், மரக்கலங்களையும் உராசியும், உடைத்தும், மகிழ்ந்தார். இப்படி அவர் ஆடிய ஆட்டத்தால் மீன் பிடித்தொழிலே நின்றது. மீனவ அரசன் பலரை அனுப்பியும் அவர்கள் யாராலும் அச்சுறாவினைப் பிடிக்க இயலவில்லை. இறுதியில் இச்சுறாமீனைப் பிடிப்பவனுக்குத் தன் மகளைத் தருவதாகப் பறையறைந்தான்.

அந்நாளில் சோமசுந்தரக் கடவுள் பெரிய வலையைத் தோளில் தாங்கியபடி அவனிடம் வந்து "மன்னனே அந்தச் சுறாவினை நான் பிடித்துத் தருகிறேன்" என்றார். அவன் அனுமதியளிக்க, ஒரு படகேறிச் சென்று வலையை வீசி அந்தச் சுறாமீனைப் பற்றிக் கொண்டுக் கரைசேர்ந்தார்.

மீனவர் தலைவன் முன்பு தான்சொன்ன படியே தன் மகளை அவருக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அப்போது அனைவரும் சுயவடிவம் பெற்றனர். சிவபெருமான் அங்குள்ள யாவருக்கும் வீடுபேற்றை அருளினார்.

பின்பு, பார்வதிதேவி வேதநூல்களை முழுவதாகக் கேட்க வேண்டும் என்ற ஆவலில் சிவபெருமானிடம் முன்பு சொன்னதைத் தொடர்ந்து தமக்குக் கூறியருளுமாறு வேண்டினாள். அதன்படியே சிவபெருமான், திருப்பெருந்துறையில் அம்பிகைக்கு எஞ்சிய வேதத்தை உபதேசித்தார்.

அவருடன் நந்தி முதலான அறுபதினாயிரம் சிவனடியார்களும், சிவயோகிகளும் அருள் ஞான உபதேசம் பெற்றனர். அன்று முதல் அவ்விடம் எஞ்சிய (உத்தர) வேதத்தை (கோசத்தை) அம்பிகைக்கு (மங்கைக்கு) அருளிய சிறப்புடையதால்) உத்தரகோசமங்கை எனப் பெயர் பெறுவதாயிற்று. இது தென்பாண்டிநாட்டுத் திருவாசகத் திருத்தலமாகும்

❁ இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள உத்தரகோசமங்கை மங்களேச்சுவரர் ஆலயத்தில் நடராசர் சந்நிதியையொட்டிக் கட்டுமலை போன்ற அமைப்பும், அதன்மீது உமாமகேசுவரர் ஆலயமும் உள்ளன. இதில் சிவபெருமான் அம்பிகையைத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டு ஆகமங்களை அருளும் கோலத்தில் மூலவராக எழுந்தருளியுள்ளார். அழகிய சுற்றுப்பிராகாரத்துடன் கூடிய இந்தக் கட்டுமலையின் மீது அமர்ந்துள்ள பெருமானைத் தரிசித்துக் கொண்டிருக்கும் வண்ணம் மாணிக்கவாசகர் ஆலயம் எதிரிலுள்ள குளக்கரையில் அமைந்துள்ளது. இந்தக் கட்டுமலைக்கு மகேந்திரமலை என்று பெயர்.

❁ உத்திரகோச மங்கைக்கு 6 கி.மீ. தொலைவில் வலைவீசிய பட்டினம் என்ற பெயரில் மீனவர் குடியிருப்பு அமைந்துள்ளது. அங்குள்ளவர்கள் திருப்பெருந்துறை மங்களநாதர் மங்களாம்பிகைக்கு நடைபெறும் திருமணவிழாவிற்கு வீடுதோறும் சிறுதொகை ஒன்றை வசூலித்துக் கொடுக்கும் வழக்கம் கொண்டிருந்தனர். அவர்கள் மங்களாம்பிகையைத் தமது குடும்பப் பெண்ணாகவே கருதிச் சிறப்புகளைச் செய்வது வழக்கம் என்பர்.

தென்மாவட்டங்களில் வழங்கிவந்த கதைப்பாடலான

சிவன் பார்வதியைச் செம்படவனாக வந்து மணந்த கதை

தென்மாவட்டங்களில் வாழும் மீனவர்களிடையே "சிவன் பார்வதியைச் செம்படவனாக வந்து மணந்த கதை" என்ற நாட்டுப்புறக் கதைப்பாடல் வழங்கி வந்தது. இதன் ஓலைச்சுவடி ஒன்று சென்னை உலகத்தமிழ் ஆராய்ச்சி மையத்தில் உள்ளது. இதனை திரு சோ.கு. குருசாமி என்ற மாணவர் ஆய்ந்து தமது சுவடியியல் பட்டப்படிப்புச் சான்றிதழ் ஆய்வேடாகத் தயாரித்துள்ளார். இது அச்சில் வராத நூலாகும். இதில் மீனவக்குலத்தில் தோன்றிய பார்வதிக்குத் "திரைசேர்வல்லி" என்ற பெயர் கூறப்பட்டுள்ளது. பெரும்பான்மையாகத் திருவிளையாடல் புராணத்தை ஒட்டியே எழுதப்பட்ட இந்நூலின் பிற்பகுதியில் அவ்வூர்ப்புராணத்தையும் நாட்டுப்புறக் கதைகளையும் இணைத்துப் புனையப்பட்டுள்ளது.

சுவடியின் கதைச்சுருக்கம் :

ஒரு சமயம் மங்கைத்துறை என்ற கடலோரப்பட்டினத்தில் அதியரசன் என்ற அரசன். அவன் தன்வலையில் அகப்படும் முதல் மீனை இறைவன் பூசைக்காக அளித்துச் சிவபூசைசெய்து வந்தான். ஒரு சமயம் நெடுநாள் அவனுக்கு மீன் கிடைக்காமல் போகவே மிகுந்த துன்பம் உண்டாயிற்று அவனும் அவனுடைய சுற்றத்து அனைத்து மீனவர்களும் கடலில் மூழ்கி இறந்து போக முடிவு செய்கின்றனர். அதற்கு முன்பு இறுதியாக ஒருமுறை வலையை வீசிப்பார்க்கலாம் என்று வலையைக் கடலில் வீசுகின்றனர். அதில் ஒரு பொன் மீன் அகப்படுகின்றது. அனைவரும் மகிழ்ந்து கொண்டாடுகின்றனர். அதனைச் சிவபூசைக்கு அளிக்கின்றனர். அதன்பிறகு அவர்களுக்கு செல்வம் நிறைகிறது.

அதியரசனுக்குக் குழந்தைப் பேறு இல்லாததால் அவனும் அவனுடைய மனைவியும் சிவபெருமானை நோக்கித் தவம் செய்கின்றனர்.

இவர்கள் இப்படித் தவம் செய்கையில் கயிலாயத்தில் உமையவள் சிவனைநோக்கி, "நீங்கள் பட்டுத்துணி அணியாமல் யானை, புலி ஆகியவற்றின் தோலை அணிந்திருப்பதேன்? மாணிக்க, வைர, மாலைகளை அணியாது பாம்பு களை ஏன் அணிந்துள்ளீர்? உங்களுக்குப் பகைவர் யாருமில்லை என்றாலும், கொடிய சூலத்தை ஏந்தியுள்ளீர்களே. ஏன்?" என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டு இவற்றிற்கான உண்மையான காரணத்தை எனக்குக் கூறுமென்றாள்.

அப்போது சிவன், "அது மிகரகசியம். நாம் வடவாமுகம் என்ற இடம் செல்லுவோம். அங்கே இதன் ரகசியத்தை உனக்குச் சொல்லுவேன்" என்று கூறினார். இருவரும் அந்த வனத்திற்சென்று வீற்றிருந்தனர். இறைவன் பார்வதிக்கு ரகசிய உபதேச மெய்பொருளைக் கூறினார். அதனைக்கூறி முடித்தபின் இது யாரும் அறியாத ரகசியம் என்றார். அப்போது முருகன் பார்வதியின் கூந்தலுக்குள் ஒரு வண்டாக உருமாறி ஒளிந்திருந்துக் கேட்டுக் கொண்டார். அவர் வெளிப்பட்டு அந்த உபதேசப் பொருளை நானும் கேட்டேன் என்று கூறிப் பறந்தார்.

இதைக் கண்ட, சிவபெருமானுக்குக் கோபம் பொங்கியது. "யாரும் அறியாத ரகசியப் பொருளை உனக்குச் சொல்லும்போது, உன் மகனை எனக்குத் தெரியாமல் அழைத்துவந்தாயா?" என்று பார்வதி யிடம் கோபித்தார். அவளைத் 'தவம் செய்யும் அதியரசன் மகளாகப் பிறக்கக் கடவது' என்றுக் கூறினார். முருகன் ஒட்டுக்கேட்டதால் அவனைக் 'கடலில் பெரிய மீனாகித் திரிக' என்று சாபமிட்டார்.

பார்வதி மானுடதேகத்தில் பிறக்க அஞ்சி, சிவனிடம் அதனைக் கூறினாள். சிவன் நந்திதேவரிடம் ஒரு வெள்ளித் தொட்டிலைக் கொண்டு வரச்செய்து அதில் உமாதேவியைக் குழந்தையாக்கி அமரச்செய்தார். பின்பு மீனாகி நின்ற முருகன் உடல் மீது வைத்து தென்கடலைச் சேர்க என்றார். அவர்கள் அப்படியே கடலில் சேர்ந்தனர். அலையில் மிதக்கும் வெள்ளித் தொட் டிலையும் அதில் குழந்தையையும் கண்ட மன்னன் மகிழ்ந்தான். அந்தக் குழந்தையை வீட்டிற்கு எடுத்துச் சென்று தன் மனைவி அருணவல்லியிடம் கொடுத்தான். அவர்கள் குழந்தைக்குத் "திரைசேர் மடந்தை" என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்து வரலானார்கள். அக்குழந்தைக்குப் பன்னிரண்டு வயதாயிற்று.

கடலில் முருகன், சுறாமீனாக வளர்ந்தான். அவன், படகுகளை உடைத்தும் மரக்கலங்களை மூழ்கடித்தும் பெரிய விளையாட்டுகளை விளையாடினான். இதனால் கடல் தொழிலே நின்று போனது. ''கடலிலிருந்து குழந்தையைக் கொண்டுவந்த நாள்முதலாக மீன்பிடி தொழில் சரியாக நடக்கவில்லை" என்று அனைவரும் பேசிக் கொண்டனர்.

குமாரன் தேவலோகத்தில் சேனாதிபதியாக இல்லாததால் அங்கு அசுரர்கள் வளர்ந்து விட்டனர். அவர்கள் அமரர்களைப் பலவாறு கொடுமைப் படுத்தினர். இதனால் தேவர்கள் சிவனைநோக்கி அபயம் கேட்டனர்.

சிவன் நந்தியிடம், "நாம் பார்வதியைப் பிரிந்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. நாம் கடலுக்குச் சென்று வலைவீசி மீனாக இருக்கும் முருகனைப் பிடித்து அவனுடைய சாபத்தையும் போக்குவோம். மேலும் அம்பிகையை மணமுடித்து மீண்டும் இங்கே அழைத்து வரவேண்டும்" என்றார்.

தான் ஒரு பரதேசியாய் வடிவம் தாங்கி அதியரசனிடம் சென்று "உங்களுக்குத் துன்ப மளித்து தொழிலைக் கெடுக்கும் மகரமீனை நான் பிடித்துக் கொடுத்தால் உமது மகளை எமக்குத் திருமணம் செய்து கொடுப்பாயா?" என்று கேட்டார். மன்னனும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

சிவனும் ஒரு படகேறி வலையைத் தோளில் தாங்கிக் கடல்மீது சென்றார். நந்தி, படகோட்டியாக மாறி சுக்கானைப் பிடித்தார். தேவர்கள் துடுப்புப் போட்டுப் படகைச் செலுத்தினர். பரமசிவன் மகரமீனிருக்கும் இடம் சென்று வலையை வீசினார். அதில் குமரன் சிக்கினான். சிவன் கரையேறி வந்து வலைக்கயிற்றை அரசனிடம் கொடுத்து இழு என்றார். மீனும் கரை சேர்ந்தது.

மன்னன் சொன்னபடியே அவருக்குத் தன்மகளைத் திருமணம் செய்துக் கொடுக்க முடிவுசெய்தான். ஆனால் உறவினர்கள், "முன்பின் தெரியாத ஒரு ஆண்டிக்கா பெண் கொடுப்பது. ஏதோ காசுபணம் கொடுத்து அவனைத் துரத்தி விடலாம்" என்கின்றனர். மன்னனோ அதைக் கேளாது திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும்படிக் கூறினான். இதை அறிந்து அரசி அருணவல்லி, "ஒரு ஆண்டிக்கா என் மகளைக் கொடுப்பேன்" என்று புலம்புகின்றாள். மகளான திரைசேர்வல்லி யுடன் விஷத்தை அருந்தி மாண்டு போகின்றாள்.

அரசன் நடந்தவைகளைக் கூறி சிவனிடம் தன்னை மன்னிக்கவேண்டுகிறான். சிவனோ, "அரசனே, உன் மகளை மணம் செய்யவே வந்தேன். அவள் உயிரோடு இல்லாவிட்டாலும் அவள் உடலையாவது எனக்குத் திருமணம் செய்துவை" என்றார். அவனும் அதற்கு உடன்பட்டுத் திருமண ஏற்பாடுகளைச் செய்தான். மகளைசீராட்டி மாலைகள் அணிவித்து அவள் கரத்தைப் பற்றிச் சிவனிடம் கொடுத்தான். அப்போது சிவன் அவள்மீது விபூதியைப் பூச அவள் உயிர்பெற் றெழுந் தாள். அனைவரும் மகிழ்ந்து கொண்டாடி னர். பின்னர் சிவபார்வதியர் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இக்கதையில் துணைக்கதைகளாக கபால பூதம் உண்டான கதை, கயிலாசமாரி, தோட்டுக்காரி, தேர்மேலழகி, சொரிமுத்தையன் முதலான நாட்டுப்புற தெய்வங்களின் கதைகளும் கூறப்பட்டுள்ளன.

குறிப்பு : இந்தக் கதைப்பாடல் பலவேறு புராணங்களைத் தழுவியதாக அமைந்துள்ளது. முதல்பகுதி அதிபத்தநாயனாரின் கதையைப்போல் உள்ளது. தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகளான தவம் செய்தல் மகளைச் சீராட்டுதல், மகளைத் திருமணம் செய்து கொடுப்பேன் என்று பறையறைதல் ஆகியன நாட்டுப்புறக் கதைக்கூறுகளை உள்ளடக்கியுள்ளது. இதில் பலவகையான மீன்களின் பெயர்கள், வலைகள், அணிமணிகள் ஆகியவற்றைக் குறிக்கும் வட்டார வழக்குச் சொற்கள் மிகுதியாகப் பயின்றுவந்துள்ளன. பெரும்புலவர்கள் இயற்றிய புராணங்களில் நந்திதேவரே கடலில் சுறாமீனாக இருந்தார் என்று கூற, இக்கதை முருகன் சுறாமீனாக இருந்தார் என்று குறிக்கின்றது. இதுபோன்றே பார்வதிக்குத் திரைசேர்வல்லி என்றும் அவளுடைய அன்னைக்கு அருணவல்லி என்றும் பெயர் வழங்குவதும் குறிப்பிடத்தக்கது. நெடுநாளாக வழங்கிவந்த இந்த நாட்டுப்புறப்பாடலை ஒரு கிறித்துவர் வகைப்படுத்திப் பாடியுள்ளார். இதில் கர்த்தர், குருசேடி முதலான கிறித்துவச் சொற்கள் கலந்து வருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் இந்தக் கதைப்பாடல் பரவலாக வழக்கில் இருந்து வந்துள்ளது.

தேவிகாலோத்திரம்

சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள மோட்ச நெறிகளின் சாரத்தைத் தொகுத்து ஓர் உபஆகமமாக பரமசிவன், பார்வதிதேவிக்கு உபதேசித்தார். அந்நூல் தேவியின் பெயரால் தேவிகாலோத்திரம் என்று அழைக்கப்படுகின்றது. இதில் மோட்சத்திற்குச் செல்லும் ஆன்மாக்களின் தன்மை, படிப்படியாக அதனை அடைவதற்கான வழி, அதன் சிறப்பு, ஆகியன கூறப்பட்டுள்ளன. இதன் மூலம் வடமொழியில் உள்ளது. இதனைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதியுள்ளனர்.

மச்சேந்திரர்

ஒரு சமயம் சிவபெருமான் கடற்கரையில் அமர்ந்து பார்வதிதேவியாருக்குத் தாரக மந்திரத்தை உபதேசித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவள் அதில் லயிக்காமல் தூங்கிவிட்டாள். சிவபெருமானுடைய வார்த்தைகளை அங்கு நீந்திக் கொண்டிருந்த ஒரு மீனின் வயிற்றிலிருந்த கரு கேட்டு ஒரு பிள்ளையின் வடிவம் தாங்கி வெளிப்பட்டது. அதைக்கண்ட சிவபெருமான் அதற்கு மச்சேந்திரர் என்று பெயர் அளித்து அருள்செய்தார். அவன் சிவகுமாரனாக வளர்ந்து பெரிய சித்தரானான்.

அவன் ஒரு சமயம் மலையாள நாட்டை அடைந்தான். அங்குப் பலஅற்புதங்களை நிகழ்த்திக் கொண்டு சுகமாக இருந்தான். அந்நிலையில் அங்கிருந்த ஒரு நாட்டின் இளவரசி பிரேமளா என்பவள் இவனைக் கண்டு மோகித்தாள். இவனுடைய அழகில் மயங்கி இவனைத் தன் வசப்படுத்தி இவன் மூலம் எல்லையற்ற சுகங்களை அனுபவித்துக் கொண்டிருந்தாள். அவளிடத்தில் இவனுக்கு மீனநாதன் என்ற ஒரு மகன் பிறந்தான். இவருடைய சீடர் கோரக்கராவார். (இவருடைய வரலாற்றை 18வது மலரில் காண்க)

பர்வதராஜர்களும் சிவன்படையாளர்களும்

பார்வதிதேவியார் மீனவர் குலத்தில் தோன்றியதால் அக்குலத்தினர் அவள் பெயரால் பர்வதராஜ குலத்தினர் என்று அழைக்கப்படுகின்றனர். சிவபெருமான் அந்தக்குலத்தின் மாப்பிள்ளையாகக் கொண்டாடப்படுகின்றார். இக்குலத்தினரில் பலர் சிவலிங்கதாரணம் செய்து கொண்டு லிங்காயத்தர்களாக விளங்குகின்றனர். மேல்மலையனூரில் உள்ள அங்காளம்மன் ஆலயத்தில் பணிபுரியும் பெரும்பான்மையான மீனவர்கள் சிவலிங்கதாரணம் செய்து கொண்டிருந்ததைச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. இப்பொழுது ஒரு சிலர் மட்டுமே லிங்கமணிந்துள்ளனர்.

மேலும் மீனவர்கள் சிவன்படையாளர் என்றும் அழைக்கப்பெற்றனர். அதுவே மருவி இந்நாளில் செம்படவர்கள் என வழங்குகின்றது. இவர்கள் சிவாலயங்களில் நடைபெறும் விழாக்களில் சுவாமியை வாகனங்களில் தூக்கிச் சுமந்து உலாவரச் செய்கின்றனர். திருவண்ணாமலையில் சிவன்படையாளர் வீதி என்ற பெயரில் ஒரு வீதி இருப்பதும் எண்ணத்தக்கதாகும்.

சேலூர் கயிலாயநாதர்

மீனின் பெயர்களில் ஒன்றான "சேல்" என்பதன் பெயரில் அமைந்த ஊர் சேலூர் எனப்படும். அசுரர்களின் தொல்லைக்கு அஞ்சிய தேவர்கள் மீன்வடிவம் கொண்டு கடலிலும், ஆறுகளிலும் மறைந்து திரிந்தனர். அவர்கள் மீன்வடிவத்துடன் வணங்கிய தலங்களில் ஒன்று சேலூர் ஆகும்.

இந்நாளில் இப்பெயர் மாறி மட்டியான் திடல் என்று வழங்கப்படுகின்றது. திருஞானசம்பந்தர் சேலூர் வந்து இறைவனை வழிபட்டார் என்று பெரியபுராணம் கூறுகின்றது. இறைவனின் பெயர் கயிலாயநாதர் என்றும் அம்பிகையின் பெயர் பரமகல்யாணி என்றும் இப்பொழுது வழங்குகின்றன. திருக்கருகாவூரிலிருந்து 2 மைல் தொலைவில் உள்ளது. நன்கு திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

விரிதிரை சூழ் கடல் நாகை

அதிபத்த நாயனார்

நாகை மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டினத்தின் கடற்கரையோரத்தில் அமைந்திருந்த மீனவர் பட்டினத்தில் வாழ்ந்தவர் அதிபத்தநாயனார். இவர் அப்பகுதி மீனவர்களின் தலைவராக விளங்கியவர். தினமும் கடலிற்சென்று வலைவீசி நிறைய மீன்களைப் பிடித்து வாணிபம் செய்து பொருளீட்டியவர். சிவசிந்தனை நிரம்பியவர்.

அவர் மீன்பிடிக்கச் செல்லும் போது வலையில் முதலில் அகப்படும் மீன்களில் சிறந்ததொன்றை எடுத்து, "இது சிவபெருமானுக்கு ஆகுக" என்று சொல்லிக் கடலிலே விட்டுவிடுவார். இப்படிப் பலநாள் செல்கையில் ஒரு முறை ஒரே ஒரு மீனே வலையிற் பட்டது. அதனை வழக்கம் போல் "சிவபெருமானுக்கு ஆகுக" என்று சொல்லி நீரிலே விட்டுவிட்டார். அன்று முழுவதும் வேறு மீன் எதுவும் அகப்படவேயில்லை. மறுநாளும் அதே கதை. மறுபடியும் அதே கதை. எனவே பல நாட்களுக்கு ஒரே ஒரு மீன் அகப்படுவதும் அதனை அவர் நீரில் விட்டுவிடுவதும் தொடர்ந்தது. அவருக்கு மீன் கிடைக்காமையால் வாணிபம் நசிந்து பெருத்த துன்பம் வந்து சேர்ந்தது.

பல நாள் சென்றபின் வறுமையால் அவர் உடல் தளர்ச்சியுற்றது. எனினும் அவர் தன் வழியே நின்று சிவபிரானைத் துதித்து வந்தார்.

ஒரு நாள் வழக்கம்போல் அவர் வலையை வீசியபோது இரத்தினங்களை அங்கங்களிற் கொண்ட பொன்மயமான உடலுடன் விலை மதிக்கமுடியாத மீனொன்று அகப்பட்டது. அதைக்கண்டு மனம் பேதுறாமல் வழக்கப்படியே அதனைக் கடலில் விடுத்து இது "சிவனுக்கு ஆகுக" என்றார்.



மறுபடியும் வலை வீசினார். அந்த மீனே வலையில் பட்டது. உடன் வந்தோர் அதனை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறினார். ஆனால் சிறப்புமிக்க தொண்டராகிய அதிபத்தர் அந்த மீனை மீண்டும் கடலிலேயே விடுத்து கரை திரும்பினார்.

பல நாட்கள் வருந்தியும், பட்டினி கிடந்தும் கூட விலைமதிப்பற்ற மீனைக் கண்டு மனம் மயங்காது சிவத்தொண்டு புரிந்ததால் சிவபெருமான் அவருக்கு விடை வாகனத்தில் காட்சி கொடுத்தார். அவரும் அவருடைய சுற்றத்தாரும் திருக்கயிலையில் சிவபெருமான் அடியை நண்ணினார்.

சிவாலயங்களில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரிசையில் 59 ஆவதாக அதிபத்த நாயனாரின் திருஉருவம் இடம் பெறுகின்றது. இவர் எடுத்துக்கட்டிய கொண்டை, முழங்கால் வரையிலான ஆடை, இடையில் மீன் சேகரிக்கும் ஓலைப்பெட்டி ஆகியவற்றுடன் அமைக்கப் பட்டுள்ளார். இரண்டு கைகளாலும் முதலில் கிடைத்த மீனை ஏந்திச் சிவபெருமானைச் சிந்தித்துக் கொண்டு அதனைக் கடலில் விடும் தோற்றத்தி லுள்ளார்.

கடற்கரை ஓரம் அமைந்த பல திருத்தலங்களில் மீனவர் சமுதாய மக்கள் இவருடைய திருநட்சத்திரமான ஆவணித்திங்கள் ஆயில்ய நாளை திருவிழாவாகக் கொண்டாடிவருகின்றனர்.

நாகைப் பட்டினத்தில் இவருடைய வம்சாவளியில் வந்த மீனவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்குக் கோயிலில் பல தனிச்சிறப்புகள் அளிக்கப் பெற்றுள்ளன. அவர்கள் இறந்தால் அவர்கள் உடலைக் கோயிலுக்கு முன்பு கொண்டுவந்து

வைத்து மரியாதைகள் செய்து அதன் பிறகே இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லும் வழக்கம் இன்றும் பின்பற்றப்படுகின்றது. (அவர்கள் சிவநிலை பெறுவதை இது உணர்த்துகின்றது என்பர்)

இவ்வூர்ப் பெருந்திருவிழாவில் அதிபத்தர் வாழ்க்கையை ஐதீக விழாவாக நடத்தும் வழக்கம் சிறப்புடன் இருந்ததாகவும் அது இப்போது தடைபட்டு நின்று விட்டது எனவும் கூறுகின்றனர்.

இந்த ஐதீகப்படி முன்நாளில் மீனவர் இனத்தைச் சேர்ந்த நம்பியார் ஒருவர் அதிபத்த நாயனாரின் வேடம்பூண்டு படகேறி கடலில் சென்று வலைவீசி மீன்பிடிப்பார். அதிபத்தநாயனார் உலாத்திருமேனியை கட்டுமரத்தில் ஏற்றி கடலில் செலுத்துவதும் நடைபெற்றுவந்துள்ளது. அப்போது வலையில் பொன்மீன் அகப்படும் (பொன் வண்ணம் பூசியமீன் பதுமையை உடன் செல்வோர் வலையில் வைப்பர்) அதனையும் அவர் கடலில் விடுவார். பின்னர் கோயிலில் இருந்து ரிஷப வாகனத்தில் சந்திரசேகரர் சென்று அங்கு எழுந்தருளி வைக்கப்பெற்றுள்ள அதிபத்த நாயனார்க்கு முன் நிற்பார். அப்போது நாயனார்க்குப் பரிவட்டம் கட்டி தீபாராதனை செய்துச் சிவபெருமானுடன் வீதி வலமாகக் கோயிலுக்கு அழைத்துவருவர். இவ்வாறாக அதிபத்தநாயனார் முத்திபெற்ற ஐதீகக்காட்சி அந்நாளில் சிறப்புடன் நடந்து வந்ததென்று பெரியவர்கள் கூறுகின்றனர்.


பெரிய புராணத்துள் அதிபத்தநாயனார்

திருத்தொண்டர் புராணமான பெரிய புராணத்துள் அதிபத்தநாயனாரின் வரலாறு பொய்யடிமையில்லாத புலவர் சருக்கத்தில் 20 பாடல்களில் சொல்லப்பட்டுள்ளது. அதில் அதிபத்தர் தனக்குக் கிடைத்த அரிய மீனைச் "சிவபெருமானுக்கு ஆகுக" என்று கூறி அதனைக் கடலில் விடுவதைக் கூறும் செய்யுளை இங்குக் காணலாம்.


என்று மற்றுளோர் இயம்பவும்
ஏறுசீர்த் தொண்டர்
பொன்திரள் சுடர் நவமணி
பொலிந்த மீன் உறுப்பால்
ஒன்று மற்றிது என்னையாள்
உடையவர்க்கு ஆகும்
சென்று பொற்கழல் சேர் என்
கடலினில் விடுத்தார்.

-பெரியபுராணம்.

பொருள் : சுற்றியுள்ளவர்கள் இந்த மீனை நாம் எடுத்துக் கொள்ளலாம் என்று கூறினாலும் மிகுந்த பெருமையுள்ள சீர்பெருந் தொண்டரான அதிபத்த நாயனார் பொன்னால் ஆகித் திரண்டு ஒளி வீசுகின்றதும் நவமணிகள் உடலில் பதிந்துள்ளதுமாகிய அந்த மீனை நோக்கி "என்னை ஆள்பவனாகிய சிவபெருமானுக்கு நீ உடையவனாவாய்" ஆதலின் அவனுடைய பொன்னடிகளைச் சென்று சேர்வாயாக," என்று சொல்லி அந்த மீனைப் பெரிய கடலிடையே விடுத்தார்.



சிவாலயங்களில் மீன் சின்னம்



தொண்டை மண்டலத்திலும் நடு நாட்டிலுமுள்ள அனைத்துச் சிவாலயங்களிலும் கோயிலின் மேல்தள உட்புறக் கூறையில் தனியாகவோ, இணைந்தோ எதிர்எதிர் நோக்கியோ மீன் வடிவங்கள் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மக்கள் இவற்றைப் பாண்டிய அரசர்களின் சின்னம் என்று கூறுவர். ஆனால் இவற்றிற்கும், பாண்டியனுக்கும் எந்தத் தொடர்பு மில்லை. மீன் செல்வத்தின் சின்னமாகும். திருஷ்டி தோஷங்களைப் போக்கக்கூடியது. மீனுக்கும் செல்வத்திற்கும் பல ஒற்றுமைகள் உண்டு. இரண்டு ஒரிடத்தில் நிலையாக இருப்பதில்லை. பளபளப் பானவை. இரண்டும் தூக்கம் அற்றவை. பொன்னின் தகுதியை (மாற்று) உரசிப் பார்ப்பதை "மச்சம் வெட்டிப் பார்ப்பது" என்று கூறுவது நாட்டுப்புறவழக்கமாகும். ஆதலின் கோயிலில் அமைந்துள்ள உள்ள மீன் வடிவங்கள் திருஷ்டி தோஷத்தை போக்குவதற்காகவும் செல்வத்தின் நிலையைக் குறிப்பதற்காகவும் அமைக்கப்பட்டவைகளாகும். இவ்வகையில் முதலில் சாதாரண மீன்களை அமைத்தவர்கள் பின்னாளில் மகரமீன்களை அமைக்கத் தொடங்கினர். எதிர்எதிராக அமைந்த இரண்டு மகரமீன்களின் துதிக்கைகளை ஒன்றோடொன்று பின்னிக் கொள்ளும் வகையில் செதுக்கப்பட்ட உருவங்களையும் பல ஆலயங்களில் காண்கிறோம்.

சமைத்த மீன் துள்ளியோடும் அறப்பளீச்சரம்

சேலம் மாவட்டத்தில் உள்ளது கொல்லி மலையாகும். இது பல வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்டதாகும். இங்கு கோயில் கொண்டிருப்பவர் அறப்பள்ளீச்சுரமுடையார் எனும் சிவபெருமானாவார். இவர் பேரில் பாடப் பெற்ற நூலே புகழ்பெற்ற அறப்பளீசுவர சதகமாகும்.



இக்கோயிலின் வடக்கே ஐயாறு எனும் சிற்றாறு ஓடுகின்றது. இந்த ஆற்றில் பலவகையான வண்ண வண்ண மீன்கள் உள்ளன. அறப்பள்ளி நாதரே மீன் வடிவாக இந்த ஆற்றில் உறைவதாக ஐதீகம். அம்மீன்கள் உண்பதற்காக மக்கள் சோறு, பழம், தேங்காய், அரிசி ஆகியவற்றை அந்த ஆற்றிலிடுவர். கோயில் சார்பில் மேற்கண்டவற்றை மீன்களுக்கு அளித்தபின்னரே அறப்பளீசுவரருக்கு பூசைகள் நடத்துவது வழக்கமாகும்.

ஒரு சமயம் முகமதியர் சிலர் கூடி அறப்பளீசுவரர் கோயிலைத் தாக்கிக் கொள்ளையிட்டனர். பின்பு இந்த ஆற்றில் உள்ள மீன்களைப் பிடித்துச் சமைத்தனர். அப்போது அத்தலத்து அம்பிகையான அறச்சாலையம்மன் தனது கடைக் கண்ணால் நோக்க உலையில் கொதித்துக் கொண்டிருந்த மீன்கள் உயிர்பெற்றுத் துள்ளிக் குதித்து மீண்டும் ஆற்றிற்குள் ஓடிவிட்டன என்று பல நூல்கள் குறிப்பிடுகின்றன. இதனைக் கொங்கு மண்டல சதகம் "சமைத்த மீன் துள்ளியோடும் அறப்பளீச்சரம்" என்று குறிக்கின்றது.

❑ எகிப்தியர்கள் நைல் நதியில் வாழும் ஒருவகை மீனைத் தெய்வமாகப் போற்றினார்கள். அவைகளை மம்மிகளாகப் பாடம் செய்து வழிபட்டனர். அது அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும் என நம்பினார்.

மதுரைச் சொக்கன்



வலைவீச வந்த வார்சடை செல்வன்
(மதுரைச் சொக்கர்)

கிழக்குக் கடற்கரையோரங்களிலும் பெரிய ஆற்றங்கரையோரங்களிலும் அமைந்த பல சிவாலயங்களில் மதுரைச் சொக்கர் எனும் பெயரில் ஒரு உலாத்திருமேனி அமைந்துள்ளது. இது இரண்டு கைகளையும் ஓடம் செலுத்துவோன் கழியைப் பற்றியுள்ள பாவனையில் கொண்டு உள்ளது. சில தலங்களில் அமைந்த இத்திரு உருவங்களின் இடுப்பில் சிறுகுத்துவாள் இருக்கக் காண்கிறோம். இச்சிலையின் தலையில் கொண்டையிட்டு தூக்கிக் கட்டியுள்ள முடியமைப்பு மீனவர்களுக்கே உரியதாக அமைகின்றது. பெருவிழாவில் எட்டாம் திருவிழாவில் ஐத்கக் காட்சிகளைக் காட்ட வேண்டுமென்பது ஆகமமரபு. எனவே எட்டாம் நாளில் கடற்கரை அல்லது ஆற்றங்கரைக்கு இத்திருமேனியை எடுத்துச்சென்றுத் திருவிளை யாடற்புராணத்துள் குறிக்கப்பட்டுள்ள வலைவீசிய படலத்தைப் படிக்கும் மரபு முன்பு இருந்து வந்தது என்பர் இந்நாளில் இவ்வழக்கம் இல்லை.

சில தலங்களில் இம்மூர்த்தியைக் கட்டு மரத்தில் வைத்துக் கடலில் சிறிது தூரம் செலுத்தி மீனவர்கள் விழாக்காண்பர், எனவும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

சென்னை திருவான்மியூர், திருவொற்றியூர், நுங்கம்பாக்கம், பொன்னேரி, சோமங்கலம், சின்னக்கடலூர் போன்ற கடலோரத்தலங்களிலும், செங்கை மாவட்டத்தில் பாயும் குசத்தலையாற்றின் கரையிலுள்ள அனேக தலங்களிலும் இத்தகைய திருவுருவச் சிலைகளைக் கண்டு மகிழலாம்.

பின்னாளில் இதே அமைப்புடன் காலில் பாதுகை தரித்த சிலைகளும் செய்யப்பட்டன. இவை குதிரைச் சொக்கர் என்றும் அழைக்கப்பெற்றன. பெருந்திருவிழாவின் எட்டாம்நாளில் குதிரை வாகனத்தில் சந்திரசேகரர் முன்னே செல்ல இந்த மூர்த்தியும் உடன் கொண்டு செல்லப்படுகின்றார். எனவே மக்கள் இவரைக் குதிரைச்சொக்கர் எனவும் வழங்குகின்றனர்.

திருவிடைமருதூர் ஆலயத்தில் அழகிய குதிரைச் சொக்கரின் உருவம் கம்பீரமாகவும் அளவில் பெரியதாகவும் அமைந்துள்ளது.

மீனரேகை

நமது கைகளில் அமைந்துள்ள கோடுகளான ரேகைகளைக் கொண்டு நமது வாழ்வின் அதிர்ஷ்டங்களை ஜோதிடர்கள் கூறுகின்றனர். இந்த ரேகைகளில் செல்வச் செழிப்பை உணர்த்துவது மச்சரேகை என்றும், உணவு தான்யச் செழிப்பை உணர்த்துவது தான்யரேகை என்றும் கூறப்படுகிறது. இதை உணர்த்தும் வகையில் காஞ்சீபுரம் திருநெறிக்காரைக்காடு (திருக்காலிமேடு) சுந்தராம்பிகை (மூலவரின் அருகில் உள்ள உலாத்திருமேனி) யின் திருக்கரத்தில் ரேகைகளுக்கு இடையே ஒரு மீனும், நெற்கதிரும் அமைக்கப்பட்டுள்ளன.

மீன்கொடுத்த லிங்கம்



அவிநாசியில் முன்பு குருநாத பண்டாரம் என்ற வீரசைவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சமயம் குளக்கரையில் அமர்ந்து சிவபூஜை செய்து கொண்டிருந்தார். அப்போது அருகில் ஓடும் ஆற்றில் உடைப்பு எடுத்துக்கொண்டு வெள்ளம் பெருகியது. அந்த உடைப்பை அடைக்கும் பொருட்டு ஆள் தேடித் திரட்டிக் கொண்டுவந்த அரசாங்க சேவகர்கள் குருநாதன் சிவபூஜையில் அமர்ந்திருப்பதைக் கண்டனர். அவரிடம் வந்து வேலைக்கு வரவேண்டுமென்ற அரசாணையைக் கூறினர். அவர் சிவபூஜையில் இருந்ததால் சேவர்களுக்கு மறுமொழி கூறவில்லை. இதனால் கோபம் கொண்ட சேவகர்கள் அவர் கையில் இருந்த லிங்கத்தைப் பறித்துக் குளத்தில் எறிந்து விட்டு வலுக்கட்டாயமாக அவரை வேலைக்கு இழுத்துச் சென்றுவிட்டனர்.

இறைவன் திருவருள் இது என்று எண்ணிய பண்டாரம் உடைப்படைக்கும் பணியில் ஈடுபட்டார். அன்று மாலை அவர் திரும்பி வந்து குளத்தில் அங்குமிங்கும் தேடினார். அவருடைய லிங்கம் அகப்படவில்லை. லிங்காயத்தர்களான வீரசைவர் களுக்கு இஷ்டலிங்கமானது ஆவியைப் போன்றது. அதனை இழந்தவன் சவம் போன்றவன் என்பது அம்மதத்தவர் கருத்து. எனவே பண்டாரம் எனக்குரிய லிங்கம் கிடைக்கவில்லையாதலால் நான் வாழ்வதால் பயனில்லை. நான் என் உயிரை இக்குளத்தில் மூழ்கி விடுவேன் என்று சொல்லி சிவபெருமானைத் துதித்து நின்றான். அப்போது அக்குளத்தில் வாழும் மீனொன்று அவனுடைய லிங்கத்தைக் கவ்விக் கொண்டு கரையருகே வந்தது. அவர் அதனைப் பெற்று மகிழ்ந்தார்.

இதனைக் கொங்கு மண்டல சதகம் முதலான பல இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதனைப் புக்கொளியூர் கருணாகரவல்லி மாலையின் 54-வது பாடல்

சங்கது சூழம் தாமரை வாவி
தான முறி ஈழுவ மடத்துச்
சங்கம லிங்கதாரனை யவனைத்
தண்டித்து தாள்களும் தள்ள
லிங்கம் அதனைத் தெப்ப நற்குளத்தில்
நெறியவன் எறிந்து போயினன்
வங்கது மீன் கொண்டருள் செய் புக்கொளியூர்
வளர் பெருங்கருணை நாயகியே.

என்று குறிப்பிடுகின்றது.

இதனை விளக்கும் புடைப்புச் சிற்பங்கள் அவிநாசிக்கோயிலில் உள்ளன. மீன் லிங்கம் கொண்டு வந்து கொடுப்பதைத் தீபத்தம்பக் குறட்டிலும், பண்டாரம் சிவலிங்கம் பெற்றுப் பூசை செய்வது கோபுரவாயிலின் வடக்கிலும் செதுக்கப் பட்டுள்ளன.

மீனவன்

சிவபெருமானுக்கு மீனவன் என்பது பெயர். பாண்டியர் மீன் கொடியை உடையவர்களாதலின் (ஆகு பெயராக) அவர்கள் மீனவர் எனப்பட்டனர். சிவபெருமான் பாண்டிய குல அரசியான மீனாட்சியை மணந்து பாண்டிய மன்னனாக அரசு செலுத்தியதால் அவருக்கும் மீனவன் என்னும் பெயர் உரியதாயிற்று. இதனை அருணகிரிநாதர் வேலைக்காரன் வகுப்பில்

"மீனவனும் மிக்கபுலவோரும் உறை பொற்பலகை மீதமர்ந்து" என்று சிவபெருமான் பாண்டியனாய் இருந்து புலவர்களுடன் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்ததைக் குறிப்பிடுகின்றார்.

பக்த இராவணன்

சிவபக்தர்களில் மிகஉயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்படுபவன் இராவணன். இவன் பிரமனின் வழிவந்த வேதநெறியாளன். தன்னுடைய எண்ணரிய தவத்தால் சிவனை மகிழ்வித்து அவரிடம் அனேக வரங்களைப் பெற்றவன். சிவபெருமான் அவனுடைய ஆற்றலை மதித்து, அருள் செய்து, சந்திரகாசம் என்னும் வாளையும், முப்பத்து முக்கோடி நாளளவு ஆயுளையும், இராவணன் என்ற பட்டப்பெயரையும் அளித்தார்.

மேலும், அவனுடைய சாமகானத்தோத் திரத்தால் மகிழ்ந்து தனக்கு இணையாக அவனுக்கு ஈச்சுவரன் என்ற பட்டத்தையும் அளித்தார்.

இராவணன் சிவனருள் பெற்று எண்திசைகளையும் வென்று இலங்கையைத் தலைநகராகக் கொண்டு தனிச்சிறப்புடன் ஆண்டவன். அவனுடைய வாழ்வில் நடந்த முக்கியமான நிகழ்ச்சி அவன் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்ததாகும். இந்த நிகழ்ச்சி அவனுடைய தோள் வலிமைக்குச் சான்றாக அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தர் அவர் அருளிச்செய்த தேவாரத்தில் ஒவ்வொரு பதிகத்தின் எட்டாவது பாடலிலும், திருநாவுக்கரசுப்பிரான் தனது பதிகங்களில் பத்தாவது பாடலிலும் சுந்தரர் அங்கொன்றும் இங்கொன்றுமாகவும், இந்த நிகழ்சியைப் பாடியுள்ளனர்.

இவற்றின் மூலம் சிவபெருமான் இலங்கையர் கோனான இராவணனுக்கு, "இராவணன்" என்ற பெயரையும் நெடிய வாழ்நாளையும், வலிய வாளையும், ஆனந்த அருளையும் அளித்து அருள்பாலித்ததை உணரமுடிகின்றது.

அப்பர்சுவாமிகள் தாம் அருளிய இரண்டு பதிகம் முழுவதும் உள்ள பத்து பாடல்களிலும் சிவபெருமான் இராவணனின் வலியைத் தொலைத்து அவனுக்கு அருள்செய்த வரலாற்றைப்பாடுவதும் எண்ணத்தக்கதாகும். அவருடைய அவளிவணல்லூர் திருப்பதிகப்பாடல் ஒவ்வொன்றிலும் இராவணனின் கதை விரிவாகவே பேசப்பட்டுள்ளது. இதுபோன்றே "தேரையும் மேல் கடாவி" எனத்தொடங்கும் திருமறைக்காட்டுப் பதிகம் முழுவதிலுமுள்ள பாடல்களில் தேர்மீது சென்ற இராவணன் வீணாகக் கர்வம் கொண்டு கயிலை மலையைத் தூக்கி அதன்கீழ் அகப்பட்டுக் கொண்டு, அழுது கதற பூதங்கள் அதைப்பார்த்து நகைக்க, இறுதியில் அவன் தன் கையை வெட்டி நரம்புகளைக் கோர்த்து இன்னிசைபாட இறைவன் அவனுக்கு அங்கைவாளும் வாழ்நாளும் கொடுத்த கதை பேசப்பட்டுள்ளது.

இராவணன் மலையைத் தூக்கியபோது நடந்த நிகழ்ச்சிகளில் மிக முக்கியமானது உமையவள் அஞ்சியதாகும். அவள் அச்சத்தால் சிவபெருமானைத் தாவி அணைத்துக் கொண்டாள். இதனை



இராவணன் கயிலையைப் பெயர்த்தெடுத்தலும் உமையவள் அஞ்சி இறைவனை அணைத்துக் கொள்ளுதலும்

உணர்ந்த சிவபெருமான் தனது வலதுகால் கட்டை விரலை ஊன்றினார். அதன் பாரத்தினைத் தாங்காது இராவணன் அழுது அலறினான். இதை உணர்த்தும் வகையில் இறைவன் இராவணேசுவர வாகனத்தில் உலாவரும்போது உமையன்னை இறைவனை தழுவிக் கொள்வது போன்று அலங்கரிப்பர்.

இரண்டாவது நிகழ்ச்சி அவன் இறைவனை மகிழ்விக்க, சாமகானம் பாடியதாகும். அச்சத்தாலும், வலியாலும் நைந்த அவன் சிவபெருமானின் உள்ளம் கனியுமாறு பாடினான். அப்படி அவன் பாடியது சாமகானமென்று தேவாரம் கூறுகின்றது. அவன் பாடிய சாமகானத்தைக் கேட்டு இறைவனும் உருத்திர வீணை என்ற தனது வீணையை ஏந்தி இசை பாடினான் என்று நாட்டுப்புறக் கதைகள் கூறும். இதை உணர்த்தும் வகையில் பெருமான் இராவணேசுவர வாகனத்தில் வலம்வரும்போது வீணை வாசிப்பது போன்று அலங்கரிக்கின்றனர்.

இராவணன் மட்டுமின்றி அவனுடைய மனைவியாகிய மண்டோதரி, தாயான கைகசி, தம்பி விபீஷணன் ஆகிய எல்லோருமே மாபெரும் சிவபக்தர்களாக விளங்கக் காண்கின்றோம்.

இனி, இராவணன் கர்வம் கொண்டு கயிலை மலையைத் தூக்கியதையும், சிவனருள் பெற்றதையும் காணலாம்.

இலங்கை வேந்தனும் கயிலை நாதனும்

இராவணன் இலங்கையின் அரசனாக ஆண்டு வரும் நாளில் ஒருமுறை வடதிசையிலுள்ள குபேரன் ஆளும் அழகாபுரியின் மீது படையெடுத்துச் சென்றான். அங்குக் குபேரனை வென்று அவனுடைய நவநிதிகளையும், புஷ்பக விமானத்தையும் கைப்பற்றிக் கொண்டான்.

பின்பு அந்தப் புஷ்பகவிமானத்தில் ஏறித் தன்னாட்டிற்குத் திரும்புகையில் சிவபிரான் எழுந்தருளியுள்ள இமயமலையைக் கடக்க வேண்டியதாயிற்று. அப்போது அங்கு காவல்காத்து நின்ற நந்தியம் பெருமான், அவனிடம், "இராவணா, இது பரமசிவன் கொலுவிருக்கும் இடம் இதன் மீது பறந்து செல்வது நல்லதல்ல, எனவே விலகிச் செல்" என்றார்.

இது கேட்ட இராவணனுக்குக் கோபம் பொங்கியது, "ஏ குரங்கு முகமுடையவனே என்னை யாரென்று உணராது பேசுகின்றாய்? நான் ஏன் விலகிச் செல்லவேண்டும்? என் வழியைத் தடுத்து நிற்கும் இந்த மலையை வேண்டுமானால் வேரொடு பறித்து விலக்கி வைத்துவிட்டு, என் வழியில் பயணத்தை தொடர்வேன்," என்று கர்ச்சித்தான்.

இதைக் கேட்ட நந்திதேவர், "ஏ மூடனே, உனக்குச் சொல்லிப் புரியவைக்க முடியாது? நீ எது நினைக்கிறாயோ, அதைச் செய். ஆனாலும் என்னைக் குரங்கு முகனென்று இகழ்ந்தாய், உன் அரசும், நாடும் குரங்குகளாலேயே அழியட்டும்" என்று கூறி மறைந்தார்.

இராவணன் தனக்குள், "இச்சிவன் எனக்குப் பலவரங்களை அளித்தவன், அவனுக்குரிய இந்த மலையின் மீது செல்வது நல்லதல்ல. ஆயினும் சக்ரவர்த்தியாகிய நான் என் வழியை மாற்றிக் கொள்வதா? வேண்டுமானால் எனது வழியில் குறுக்கிட்ட இந்த மலையை வேரோடுப் பிடுங்கி அப்பால் வைத்துவிட்டு செல்லுவேன். அதுவே என் தகுதிக்கும் அரசாண்மைக்கும் அழகு" என்று எண்ணினான். உடனே புஷ்பக விமானத்தை விட்டுக் கீழே இறங்கித் தன் இருபது கரத்தினாலும் கயிலைமலையைப் பறித்தெடுக்க முயற்சி செய்தான்.

அவனுடைய அடாத செய்கையால் கயிலாயம் குலுங்கியது. தேவர்களும், பூதகணங்களும் நிலைதடுமாறி ஒருவர்மேல் ஒருவர் விழுந்தனர். பார்வதிதேவியும் நடுங்கினாள். தன் நடுக்கந்தீர இறைவனைத் தாவி அணைத்துக் கொண்டாள்.

இறைவன் இராவணனின் செருக்கை அடக்க எண்ணினார். தனது வலதுகால் கட்டை விரலையூன்றினார். அந்த அழுத்தம் அளவற்ற யானைகளின் பலத்தையொத்திருந்தது. மலையின் கீழ் அகப்பட்டுக்கொண்ட இராவணனால் இந்த பளுவைத் தாங்க முடியவில்லை. அவனது இருபது கண்களும் பிதுங்கின. தோள்கள் நெறிந்தன அழுது அலறினான். அப்போது அவன் முன்பு வாகீசர் என்ற முனிவர் தோன்றினார். இராவணனே, "இனி,

அழுது பயனென்ன. சிவபெருமானின் கோபம் தணியச் சாமக்தம் பாடுவாய்," என்று கூறினார்.

இராவணன் தனது தவற்றை உணர்ந்தான். தன்னுடைய பத்துத் தலைகளில் ஒன்றைப் பறித்து அதனைக் குடமாகவும் கையொன்றைத் தண்டாகவும் நரம்புகளைத் தந்தியாகவும் அமைத்து அவசரத்திற்கு ஒரு வீணையைத் தயாரித்தான். அதனைமீட்டிச் சாமகானம் பாடினான்.

அந்த இனிய இசை எங்கும் பரவியது.

தேவர்களும், மூவர்களும், யாவரும் அதில் தன் வசமிழந்தனர். சிவபெருமானும் அந்த இசையில் நெகிழ்ந்தார். தான் விரல் ஊன்றுவதை விடுத்தார். அந்த நிலையைப் பயன்படுத்தி இராவணன் மெதுவாக மலையைக் கீழே வைத்துவிட்டு தனது இசையை முடித்தான்.

அவனுடைய இசைக்கு உருகிய பரமசிவன் மகிழ்ந்து அவனுக்கு ''சந்திரகாசம்'' எனும் வாளையும் "முப்பத்து முக்கோடி வாழ்நாள்" அளவு ஆயுளையும் கொடுத்து மகிழ்ந்தார்.

இராவணன் சிவனருள்பெற்று எல்லையற்ற மகிழ்ச்சியுடன் இலங்கைக்குத் திரும்பினான்.

சிவபுராணம் காட்டும் இராவணன் கயிலையைப் பெயர்த்த கதை

மேலே சொன்ன கதையே தென்னகமெங்கும் வழங்கப்பட்டு வரும் கதையாகும். தமிழ்மறையான தேவாரத்திலும் இராவணன் தேர் செலுத்திச் சென்றதும் அதன் வழியைத் தடுத்த கயிலை மலையைத் தூக்கி அதன் கீழ் அகப்பட்டுக் கொண்ட இறைவனின் நகத்தால் ஊன்றப்பட்டு அழுது அலறி இறைவனைப்பாடி அருள்பெற்ற வரலாறே கூறப்பட்டுள்ளது.

ஆனால், சிவமகாபுராணத்தில் இராவணன் கயிலைமலையைத் தூக்கியதற்கானக் காரணம் வேறுவிதமாகக் கூறப்பட்டுள்ளது. அது வருமாறு :-

ஒருமுறை இராவணன் ஹிமயகிரிச் சாரலில் அகோர தவம்செய்து சிவபெருமானின் அருளைப் பெற்றான். அந்தச் செய்தி உலகெங்கும் பரவியது. அசுரர்கள் தங்கள் மன்னன் பெற்ற வெற்றியை மிகவும் மகிழ்ந்து கொண்டாடினர். தேவர்களோ பயமடைந்தனர். இயல்பாகவே தமக்குத் துன்பம் செய்யும் இராட்சதர்கள் அரிய வலிமையும் சிவனருளையும், பெற்ற தலைவனை அடைந்ததால் இன்னும் எவ்வாறு துன்பம் செய்வார்களோ என்று அஞ்சினர். அதனை நாரதரிடம் கூறினார்.

அவர் உடனே இராவணனுடைய அரண் மனைக்குச் சென்று அவனை வாழ்த்தினார். பின்னர் அவனிடம் "அசுரர் கோமானே ! நீ எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைத்திருக்கக் காரணம் என்ன? அதைநான் அறிந்து கொள்ளலாமா? என்று கேட்டார்.

இராவணன் அவரிடம் மகாமுனியே, "நான் கடுமையான விரதங்களை நோற்று ஆயிரம் வருடங்கள் தவம் செய்தேன். சிவபெருமான் என் முன்பு தோன்றவில்லை. நான் பெரிய வேள்வி குண்டத்தினை அமைத்து என்தலைகளை ஒவ்வொன்றாக அரிந்து ஹோமம் செய்தேன். இப்படி ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒருதலை வீதம் வெட்டி வேள்வி செய்து ஒன்பதாயிரம் ஆண்டுகள் கடும் தவம் செய்தேன். பத்தாவது தலையை வெட்டிக் கொள்ள முயலும் போது பரமசிவன் எனக்குக் காட்சியளித்தார். எனது தவத்தினை மெச்சி அனேக வரங்களையும் வலிமையையும் தந்தார். எனது ஒன்பது தலைகளும் முன்போலவே எனக்கு மீண்டும் உண்டாகவும் அருள்புரிந்தார். இதனால் நான் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்தேன்" என்றான்.

இதைக்கேட்ட நாரதர், "அரக்கர் கோமானே! நீ அனேக வாழ்நாளும் வலிமையும் பெற்றது கண்டு நான் மகிழ்ந்தேன். என்றாலும் சிவபெருமான் நஞ்சுண்டு மயக்கமடைந்தவரல்லவா? அவர் தனது மயக்கத்திற் கூறிய சொற்களை நம்பலாமா? அவர் கொடுத்தவரம் கை கூடுமா? என்பதைச் சோதித்து அறிய வேண்டாமா? அவர் உனக்கு வரங்கள் அளித்தது உண்மையானால் நீ அவர் எழுந்தருளி யுள்ள கயிலைமலையை எளிதாகத் தூக்கிவிடலாம். ஆதலால் நீ சென்று கயிலைமலையை உனது தோள்களால் தூக்கிப்பார். அதுமுடிந்தால் அவர்தந்த வரங்கள் உனக்கு சித்தியாகி விட்டன என்று பொருள். நீ எடுத்ததைப் போலவே அந்த மலையை அங்கேயே திரும்ப வைத்துவிடு" என்றார்.

இராவணனுக்கும் இது சரியென்றேபட்டது. உடனே இமயமலையின் அடிவாரத்திற்குச் சென்று கயிலை மலையை அப்படியே பெயர்த்தெடுத்துத் தூக்கினான். இதனால் அம்மலை குலுங்கியது. பிரமன், விஷ்ணு முதலியோர் தலைகுப்புற விழுந்தனர். தேவர்களும், முனிவர்களும், பிரதம கணங்களும் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து வருந்தினர். பரமேசுவரனும் ஒருகணம் ஆடினார். அவர் அருகில் இருந்த பார்வதி, சுவாமி இது தங்கள் பக்தனான இராவணன் செய்யும் அடாத செயல். உமது வரத்தைச் சோதிக்கவே இவ்வாறு செய்தான் என்றாள். இதனால் சிவபெருமானுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. "இராவணனே கயிலையைக் குலுக்கிய உனது கரங்களை வெட்டி வீழ்த்த ஒருவன் விரைவில் பிறந்து உன்னை அழிப்பான்" என்று சாபமிட்டார். அதனைக்கேட்டு நாரதர் மகிழ்ந்தார். தேவர்களும் மகிழ்ந்து பூமாரி பொழிந்தனர். இராவணன் இவை எதையும் அறியாமல் சிவன் தனக்கு அளித்த வரம் சித்தியாகி விட்டது. என்று, அடங்காத கர்வம் கொண்டான். அந்த மலையை மீண்டும் அதன் இடத்திலேயே வைத்து விட்டு இலங்கைக்குச் சென்றான். இக்கதையின் மூலம் இராவணன் தன் வலியை சோதிக்கவே கயிலை மலையை எடுத்தான் என்பதை அறிய முடிகிறது.

இராவணனின் சிரமாலையை ஏற்ற சிவன்

இராவணனுடைய பக்தி அளவிடமுடியாது. புலத்தியனின் பேரனும் விசுவாவசுவின் மகனுமான இராவணன் ஒரு முறை தனது தந்தையின் விருப்பப்படி இமயமலைச்சாரலுக்குச் சென்று சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்துக் கடுந்தவம் மேற்கொண்டான். நெடுங்காலமாயிற்று சிவன் அவன் முன் தோன்றவில்லை. அதனால் அவன் தன்னையே அழித்துக் கொள்ள முடிவெடுத்தான். ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒன்று வீதம் தன் ஒன்பது தலைகளையும் அரிந்து மாலையாக்கி சிவலிங்கத் திற்கு அணிவித்து இன்னும் கடுமையான தவத்தை மேற்கொண்டான். அப்போதும் இறைவன் அவன் முன்பு தோன்றவில்லை. இறுதியில் தன் ஒரே தலையையும் வெட்டிக்கொள்ள முயன்றான். இனியும் அவனுடைய பக்தியைச் சோதிக்க விரும்பாத சிவன் அவன் முன்பு தோன்றினார். அவன் என்னவரங்கேட்டாலும் தருவதாக உறுதி கூறினார்.

அவன் அவர் திருவடிகளைத் தொழுது பலவரங்களைக் கேட்டான் அவற்றில் முக்கிய மானவை முப்பத்து முக்கோடி வாழ்நாள், யாவரையும் நொடியில் வெட்டிவீழ்த்தும் சந்திரகாசம் எனும் வாள். இராவணேச்சுவரன் என்னும் பட்டம் முதலியனவாகும். சிவபுராணத்தில் விவரிக்கப்பட்டுள்ள இக்காட்சியைக் கலைஞர்கள் சிற்பங்களாகச் செய்து மகிழ்ந்துள்ளதை வட இந்தியாவில் பல இடங்களில் காணலாம்.



(வால்மீகி ராமாயணம், ஒட்டக்கூத்தரின் உத்திரகாண்டம் ஆகியனவற்றில் இராவணன் பிரம்மனை நோக்கித் தவம் செய்து தன் சிரங்களை அரிந்து வேள்வி செய்ததாகவே குறிப்பிடப் பட்டுள்ளன. ஆனால் சிவமகாபுராணம் அவன் சிவபெருமானுக்குத் தன் தலைகளை அரிந்து மாலை யாக்கி அணிவித்ததாகக் குறிப்பிடுகின்றது. அக்கால கலைஞர்கள் இந்தக் கதையைக் குறிக்கும் வகையில் பல சிற்பங்களை வடித்துள்ளனர். அவற்றி லொன்றையே முன்பக்கத்தில் காண்கிறோம்).

இராவணன் உண்டாக்கிய ராட்சதல் ஏரி

❑ இராவணன் தன் தலைகளையே வெட்டி அகோரமான அஞ்சத்தக்க தவத்தையும் வேள்வியையும் செய்த இடம் ஹிமோதகிரியின் சாரல் என்று சிவபுராணம் கூறுகின்றது. இது, இந்நாளில் கயிலைமலைக்கு அருகில் அமைந்துள்ள இடமென்பர். இங்கு அவன் தனது தலைகளை அறுத்துக் கொண்டபோது பெருகிய இரத்தம் ஒரு பெரிய ஏரியாக உறைந்துள்ளது என்பர். இதுவே இந்நாளில் "ராட்சதல் ஏரி" என்றழைக்கின்றனர். பேய்களும், பிசாசுகளும், பூதராட்சதர்களும் இங்கு வசிப்பதாகக் கூறப்படுகின்றது.

பரந்து விரிந்து கிடக்கும் இந்த ஏரியின் நீரைப் பருகினால் கடும் வயிற்றுப்போக்கும், ஜ்வர நோயும் உண்டாகின்றது என்று கூறுகின்றனர். இதனையாரும் பருகுவதோ, இதில் நீராடுவதோ இல்லை. கயிலைமலை யாத்திரையை மேற்கொள்பவர்கள் மானசரோவர் ஏரியையும் அதனருகில் அமைந்துள்ள ராட்சதல் ஏரியையும் காணலாம்.

❑ தன்னையே அழித்துக் கொள்ளும் யாகத்தில் சிவபெருமான் தோன்றிக் காட்சியளித்த பிறகு இராவணன் லிங்கமமைத்துப் பெரிய சிவபூசையைச் செய்தான் என்றும் அந்த லிங்கத்திலிருந்து சிவபெருமான் தோன்றி அனேக வரங்களைத் தந்தார் என்றும் சிவபுராணம் கூறுகின்றது. அந்த லிங்கமே பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களில் ஒன்றான வைத்தியநாதமாகும்.

இராவணலிங்கம்

(கோகர்ணநாதர்)

இராவணன் உலகெங்கிலுமுள்ள அனைத்து சிவாலயங்களிலும் சிவபூஜை செய்து மகிழ்ந் தவன். இவன் ஒரு முறை கயிலையங்கிரிக்குச் சென்று சிவபிரானைத் தனது வேதகானங்களால் துதித்தான். அதற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவனிடம் வேண்டிய வரங்களைக் கேட்கும்படிக் கூறினார்.


அப்போது இராவணன் தன் தாயார் பூசிப் பதற்காக ஒரு சிவலிங்கத்தை அவர் திருமேனி யிலிருந்து உண்டாக்கித்தருமாறு வேண்டினான்.

சிவபெருமானும் அவனுடைய வேண்டு கோளையேற்றுத் தன்னிடமிருந்து ஒரு சிவலிங் கத்தை உண்டாக்கி அவனிடம் அளித்து இதை வழியில் எங்கும் வைக்காமல் இலங்கைக்கு எடுத்துச்செல்ல வேண்டும் என்றும் கூறினார்.

அவனும் மகிழ்ச்சியுடன் அதனைப் பெற்றுக்கொண்டு இலங்கைக்குப் பயணமானான்.

இதனைக்கேட்ட தேவர்கள் பயந்தனர். சிவபெருமான் அளித்த சிவலிங்கம் இலங்கையில் நிலைபெற்று விட்டால் அவ்விடம் இன்னொரு கயிலாயமாகி விடும். அதன் எல்லைக்குள் இருக்கும் இராவணனைப் பின்னர் வெல்ல முடியாமல் போய்விடும். எனவே இந்த லிங்கத்தை இலங் கைக்குக் எடுத்துச் செல்லாமல் தடுக்க வேண்டும் என்று விநாயகரிடம் சென்று வேண்டினர்.

விநாயகப்பெருமான் அவர்களுக்கு அபய மளித்தார். அவர் வருணனை அழைத்து, "நீ சென்று இராவணன் வயிற்றில் நீரைச் சுரக்கச் செய்வாய்," என்றார். அதன்படியே அவன் இராவணனின் வயிற்றில் புகுந்து நீரைச்சுரக்கச் செய்தான். இதனால் இராவணனுக்கு நீர்கழிக்க வேண்டிய அவசரம் உண்டாயிற்று. சுற்று முற்றும் பார்த்தான் யாரும் காணப்படவில்லை. கையில் சிவலிங்கத்தை வைத்துக் கொண்டு நீர் கழிக்கவும் கூடாது



மகாபலேசுவரர் - கோகர்ணம் (ஆந்திரமாநிலம்)

சிவலிங்கத்தைக் கீழே வைக்கவும் முடியாது என்பதால் அவன் மிகவும் திண்டாடினான்.

அப்போது விநாயகர் அவன் முன்னே ஒரு சிறுவனாகத் தோன்றினார். அவன் அவரை அழைத்து, "அப்பனே இந்த லிங்கத்தைச் சிறிது நேரத்திற்கு வைத்துக் கொள். நான் ஆற்றிற்குச் சென்றுவிட்டு உடனே திரும்பி வருகிறேன்," என்றான்.

அவர், "மன்னா ! இந்த சிவலிங்கம் மிகவும் பலமுள்ளதாக உள்ளது. இதனைக் கீழேவேறு வைக்கக்கூடாது என்கிறாய். என்னால் இந்த பளுவை வெகுநேரம் தாங்கமுடியாது. என்னால் முடியாதபோது மூன்று முறை உன்னை அழைப்பேன். அதற்குள் நீ வரவில்லையென்றால் இதனைக் கீழே வைத்துவிடுவேன். பிறகு என்னைக் கோபிப்பதால் பயனில்லை" என்றார்.

இராவணனுக்கு அப்போது மிகவும் அவசரமாக இருந்ததால் அவர் சொன்னதற்கு உடன்பட்டு, சிவலிங்கத்தை அவரிடம் கொடுத்து விட்டு ஆற்றை நோக்கி நடந்தான்.

சிறிது நேரம் கழிந்த பின் விநாயகர் மூன்றுமுறை அவனை அழைத்தார். அவருடைய குரல்கேட்டு அவன்வேகமாக ஓடிவந்தான். என்றாலும் மூன்றாவது முறை அழைத்த அழைப்புக்குள் அவன் வராததால் (சிறுவனாக வந்த விநாயகர்) சிவலிங்கத்தைக் கீழே வைத்துவிட்டார். வேகமாக ஓடிவந்த இராவணன் இதைக் கண்டு வருந்தினான்.

எப்படியாவது அந்த லிங்கத்தைப் பெயர்த்தெடுக்கவேண்டுமென்று தன்பலங்கொண்ட மட்டும் அதனைப்பற்றி இழுத்தான்.

அவன் அன்பிற்கு உட்பட்ட சிவலிங்கம் குழைந்து பசுவின் காது போல ஆனதேயன்றி அந்த இடத்தை விட்டுப் பெயர்ந்து வரவில்லை.

பலவாறு முயன்ற இராவணன் இறுதியில் சோர்ந்து போய் இவர் "மகாபலேசுவரர்" என்று கூறி அங்கேயே பூசையைச் செய்துவிட்டு தன்னாட்டிற்குச் சென்றான்.

இப்பெருமான் பசுவின் காது போல் குழைந்து நீண்டு விளங்குவதால் கோகர்ணநாதர் (கோ-பசு, கா்ணம்-காது, கோகர்ணம்-பசுவின்காது) எனவும் இந்த இடம் கோகர்ணம் எனவும் பெயர் பெற்றது. கோகர்ணம் எனும் இத்தலம் கர்னாடக மாநிலத்தில் உள்ள ஹுப்ளி எனும் ஊரில் இருந்து 95வது மைலில் உள்ளது.

இதனைத் துளுவ நாட்டுப்பாடல் பெற்ற தலமாகக் கூறுவர். இத்தலத்திற்கு மங்களூரிலிருந்தும் உடுப்பியிலிருந்தும் செல்லலாம்.

இதே போன்று கதை திரிகோண மலையிலும் வழங்குகின்றது. அதனைத் தொடர்ந்து காணலாம்.

இவை இரண்டும் தன் தாயின் மீதும் அவளுடைய சிவபக்தியின் மீதும் இராவணன் கொண்டிருந்த பெரும் பற்றினையும் அன்பையும் காட்டுகின்றன.

* கோகர்ணத்தில் சிவலிங்கம் ஒரு கொட்டைப் பாக்கை விடச் சற்று பெரியதாக உள்ளது.
* தனது சிவலிங்கத்தை கீழே வைத்துவிட்டதால் கோபமுற்ற இராவணன் சிறுவனாக வந்த விநாயகரை ஓங்கிக் குட்டினான். அந்தக் குட்டுப்பட்ட அடையாளத்துடன் கோகர்ணத்தில் விநாயகர் வீற்றிருக்கின்றார்.

இராவணனின் அன்னை வழிபட்ட திரிகோணமலை

இலங்கையில் உள்ள முக்கியமான சிவத்தலம் திரிகோணமலையாகும். இது இலங்கையின் வடகிழக்குக் கடற்கரை ஓரத்தில் உள்ள தலமாகும். கயிலைமலையின் கொடுமுடிகளில் ஒன்று விழுந்த இடம். இங்குச் சுயம்புவடிவமாகப் பெருமான் எழுந்தருளியிருந்தார். ஒருசமயம் இந்த மூர்த்தியைக் கண்டு பேரானந்தமடைந்த இராவணனின் தாயான கைகசி தினமும் இங்கு வந்து பூசை செய்யும் வழக்கத்தை மேற்கொண்டாள். இதனால் அவளுடைய பூசைக்கு அதிகநேரம் ஆனது. இதை உணர்ந்த இராவணன் இந்த லிங்கத்தைப் பெயர்த்தெடுத்துச் சென்று தனது தாயின் மாளிகையில் வைத்துவிட எண்ணினான். அதன்படியே இங்கு வந்து லிங்கத்தைப் பெயர்த்தெடுக்க முயன்றான். எவ்வளவு முயன்றும் அவனால் அந்த லிங்கத்தைப் பெயர்த்தெடுக்க முடியவில்லை. எனவே கடுங்கோபம் கொண்டு தனது வாளை ஓங்கி அருகிலுள்ள பாறையில் அடித்தான். அப்பொழுது அங்கிருந்த பாறை வெட்டுப்பட்டு பிளந்தது. அந்த பிளவு பலநூறு அடி ஆழங்கொண்டது. அதில் கடலலைகள் வந்து மோதி பெருஞ்சத்தம் உண்டாக்குவதை இன்றும் காணலாம்.

தனது ஆற்றலால் சிவபெருமானை அடையமுடியாது என்பதனை உணர்ந்த அவன் அன்பு கொண்டு கரைந்துருகி வேண்டினான். பெருமான் அவனுடைய தாயின் அரண்மனை உள்ள திக்கில் தன் தலையை வளைத்து இங்கிருந்தே தினமும் அவளுடைய பூசையை ஏற்றுக்கொள்ளுகின்றேன் என்று கூறி அவனை அனுப்பிவைத்தார். சற்றுத் தலைவளைந்து கோணலாக இருப்பதால் அன்று முதல் இவர் "கோணப்பிரான்" என்று அழைக்கப்பெற்றார். இங்குள்ள அம்பிகையின் பெயர் மாதுமையாள் என்பதாகும்.

முதலில் இராமபிரானால் இராவணன் வெல்லப்பட்ட பிறகு அவனால் அங்கு வழிபடப்பட்ட லிங்கங்கள் யாவும் கடலில் மூழ்கிவிட்டன. அதன்படியே ஆதிகோணப்பிரானும் கடலில் மூழ்கிவிட்டார். பின்னர் ராவணனைக் கொன்ற பாவம் நீங்கப் பஞ்சமி. திதியில் இராமபிரான், இந்த இடத்தில் லிங்கம் அமைத்தார். விபீஷணனின் ஆட்சிக்குப் பிறகு அதுவும் மூழ்கிவிட்டது. பின்னர் அன்பர்கள் புதியதாக இவ்விடத்தில் கோணப்பிரானை அமைத்து வழிபாடுகள் செய்து வந்தனர்.


பின்னாளில் போர்த்துக்கீசியர் படையெடுத்து வந்தனர். அன்பர்கள் கோணப்பிரானையும் உலாத்திரு மேனிகளையும் பாதுகாப்பிற்காகப் பூமிக்கடியில் புதைத்து மறைத்து விட்டனர். போர்ச்சுக்கீசியர் ஆத்திரம் கொண்டு கோயிலைத் தரைமட்டமாக்கி விட்டனர். நெடுநாள் அங்கு ஆலயம் இல்லாமலிருந்தது. அங்கிருந்த பாறையின்மீது வெள்ளிக்கிழமைதோறும் அன்பர்கள் கூட்டாக வழிபாடு செய்து வந்தனர். பின்னர் அண்மையில் ஒரு திருப்பணிக்குழு அமைக்கப் பெற்று புதியதாகக் கோணப்பிரானுக்கு ஆலயம் அமைத்து 1980 ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 28ம் நாளில் குடமுழுக்கு செய்யப்பெற்றது.

ஈச்சுவரர்கள் (ஈஸ்வரர்கள்)



சிவபெருமானுக்கு உரிய பெயர்களில் தலையானது ஈச்சுவரன் என்பதாகும். சிவபெருமானின் அடியவர்களில் இருவருக்கு ஈச்சுவரபட்டம் உண்டு. அவர்களில் முதலாமவர் தண்டீசுவரர் எனும் சண்டிகேச்சுவரர். இரண்டாமவர் இராவணேச்சுவரர் ஆவார். சிலர் நவக்கிரகங்களில் ஒருவனான சனியை சனீஸ்வரன் என வழங்குகின்றனர். அவனும் ஈசுவரபட்டம் உடையவன் என்று கூறுவர். சனி என்பதற்கு மந்தமான அல்லது மெதுவாக என்றும் "ச்சரன்" என்பதற்கு சஞ்சரிப்பவன் என்றும் பொருள். மிகவும் மெதுவாகச் சுற்றிவரும் கிரகமாதலின் சனியை சனிச்சரன் என்று அழைத்தனர். அதுவே பேச்சுவழக்கில் சனீஸ்வரன் என்றாகிவிட்டது. எனவே சனிக்கு ஈசுவரபட்டம் இல்லை என்பது தெளிவாகும்.

இராவணேசுவர வாகனம்
(கைலாச பர்வத வாகனம்)



இராவணேசுவர வாகனம் - சென்னை ஏகாம்பரேசுவரர் ஆலயம்

இந்தியமரபில் இறைவனை மலையின்மீது அமர்த்தி வழிபடுவது மரபு. சிவபிரானைக் கயிலாய மலையிலும், திருமாலை வேங்கட மலையின் மீதும், முருகனைக் குன்றுதோறும் எழுந்தருளியிருப்பதாகக் கொண்டு வழிபடுகின்றனர்.

ஜைனர்கள் தீர்த்தங்கரர்களுடைய பஞ்ச கல்யாண விழாவில் இரண்டாவது கல்யாண நிகழ்ச்சியாக அவரை மேருமலையின்மீது அமர்த்தி ஜென்மாபிஷேகம் செய்ததன் நினைவாக உயர்ந்த மேடையின் மீது அமர்த்தி அபிஷேகம் செய்வர். பௌத்தர்கள் கிருத்திரகூடம் எனும் மலையின்மீது புத்தபிரான் அமர்ந்து அறம் பகர்ந்ததை நினைவு கூறுவர். ஏசுபிரான் மலையின்மீது அமர்ந்து உபதேசித்த மலைப்பிரசங்கத்தைக் கிருத்துவமறை கூறுகின்றது.

இந்த அடிப்படையில் பெருந்திருவிழாவில் மலைபோன்ற ஒரு வாகனத்தில் வைத்து இறைவனைத் திருவீதி உலா காண்பது ஒரு வழக்கமாகியது. சிவாலயங்களில் கயிலாயமலை வாகனமும், முருகன் ஆலயங்களில் அஸ்தமானகிரியும் திருமால் கோவில்களில் மங்களகிரியும் வாகனங்களாக அமைகின்றன. சிவாலயங்களில் அமைந்த கயிலாயவாகனம் ஒரு மலையைப் போல மட்டும் அமையாது, இராவணனின் கதையோடு தொடர்புபடுத்தி அமைக்கப்பட்டுள்ளது.

சுற்றிலும் மலையைப்போன்ற அமைப்பு அதில் பாம்புகள், ரிஷிகள், கொடிகள் இவற்றுடன் புலி, சிங்கம் போன்ற விலங்குகளும் செதுக்கப்பட்டுள்ளன. நடுவில் இராவணன் முழந்தாளிட்ட நிலையில் உள்ளான். இவனுக்கு ஒன்பது தலைகள் அமைந்துள்ளன. பத்தாவது தலையைப் பறித்து வீணையைப் போல அமைத்து அதனை இரு கைகளில் ஏந்தி மீட்டும் கோலத்தில் உள்ளான். மற்ற பதினெட்டு கைகளிலும் பலவகையான ஆயுதங்கள் உள்ளன.

பெருந்திருவிழாவின் ஒன்பதாம் நாள் இரவில், கயிலாசபர்வதம் என்றழைக்கப்படும் இந்த இராவணேசுவர வாகனத்தில் இறைவன் அலங்காரத்துடன் பவனி வருகின்றார்.

இந்தவிழாவில் ★ இறைவனை வீணை மீட்டும் கோலத்தில் அலங்காரம் செய்வது சிலதலங்களிலுள்ள வழக்கமாகும். மேலும் அருகில் உள்ள தேவியை அச்சம் கொண்டு இறைவனை அணைத்துக்கொள்ளும் பாவனையில் அலங்கரிப்பார்.

இந்தக் காட்சியைக் காண்பவர் எத்தகைய பெருவலிமை படைத்தவனும் இறைவனுக்கு அடங்கியவனே என்பதையும், இறைவனை மனமுருகி வழிபடுவதால் எல்லா நலங்களையும்

★ திருப்பாசூர் தேவாரத்தில் அப்பர்பெருமான் கைகிளரும் வீணை வலவன் கண்டாய் என்று சிவபெருமான் வீணை வாசித்து மகிழ்வதைக் கூறுகின்றார்.

பெறலாம் என்பதையும் உணரவேண் டும். இதுவே இவ்விழாவின் குறிக்கோ ளாகும். இராமேசுவரத்தில் தங்கத்தாலும், காஞ்சிபுரத்தில் வெள்ளியாலும் செய்யப்பட்ட இராவணேசுவர வாகனங்கள் உள்ளன. பொதுவாக, இந்த வாகனங்கள் மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டுப் பொலிவுடன் அழகாக விளங்குகின்றன.

❑ சென்னை அரண்மனைக்காரன் தெருவிலுள்ள ஸ்ரீகச்சாலீசுவரர் ஆலயத்தில் வாயிலுக்கு நேராக, உள்ளே சென்றதும் தரிசிக்கத்தக்க வகையில் சுதைச்சிற்பமாக இராவணேச்சுவர-கயிலாய

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

கயிலாயநாதர் சிற்பங்கள்

இந்தியச் சமயச் சிற்ப வரலாற்றில் தனியிடம் பெற்றது இராவணன் கயிலையைத் தூக்கிச் சிவனருள் பெற்றதைக்குறிக்க அமைந்த சிற்பமாகும். இதனைச் சிற்ப வல்லுனர்கள் தங்கள் கற்பனையில்கண்டு அனுபவித்துப் பெரிய அளவில் கலைநயம் மிக்கதாக அமைத்துள்ளனர்.

காஞ்சீபுரம், திருவண்ணாமலை, மயிலாப்பூர் முதலிய அனேக ஆலயங்களின் ராஜ கோபுரத்தில் பெரிய அளவில் சுதைச்சிற்பமாக இந்நிகழ்ச்சி அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மதுரை ஆலயத்தில் பெரியதூண் சிற்பமாகவும் இந்தக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

வடநாட்டிலுள்ள சிற்பக் கலைக் கூடமான எல்லோராவில் அமைந்துள்ள இத்தகைய சிற்பம் உலகப்புகழ் பெற்றதாகும். இதில் இராவணன் நமக்கு முதுகுப் புறத்தைக் காட்டிக் கொண்டு பூமியை அகழ்ந்து கயிலை மலையினை வேறொடு பரித்தெடுத்துத் தூக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளான். அவன் மண்டியிட்டு உடலை முறுக்கிக் கொண்டு முழுபலத்தையும் திரட்டி மலையைத் தூக்கமுற்படுவதையும் மலையின் மீது பார்வதியும் பரமசிவனும மகிழ்ச்சியுடன் வீற்றிருப்பதையும் அவர்களைச் சுற்றி கணங்கள் நின்றிருப்பதையும் இந்தச் சிற்பத்தில் காணலாம். மலையிடுக்குகளில் பூதகணங்களும் காட்டப்பட்டுள்ளனர். (கூடுதல் செய்திகளுக்கு பக்கம் 275-ஐப் பார்க்க)




இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்தல் - எல்லோரா

பர்வதக்காட்சிப் பெரிய அளவில் செய்யப் பட்டுள்ளது. இங்கு இக்காட்சியை அப்பர் காணும் கயிலைக்காட்சியோடு இணைத்து இணை இணையாக வரும் பசுக்கள், யானைகள், குயில்கள், மயில்கள் ஆகியவற்றோடு செய்துள்ளனர். அப்பரடிகள் திருஉருவமும் இந்த தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

❑ திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் பிராகாரத்தில் இராவணன் கயிலையை எடுப்பது போன்ற மலை அமைப்பையும் அதன்மீது சோமாஸ்கந்தர் சந்நிதியும் அமைந்துள்ள மண்ட பத்தையும் காணலாம். இது நெல்லைக் கயிலாயம் என்று போற்றப்படுகின்றது.

❑ திருஇடைமருதூர் மகாலிங்கசுவாமி ஆலயத்தின் பிரகாரத்தில் கட்டுமலை ஒன்று அமைக்கப்பெற்று அதன்மீது சோமாஸ்கந்தரின் திருமேனி அமைக்கப் பெற்றுள்ளது. இந்த மலையை இராவணன் தாங்குவதுபோல அமைந்துள்ளது. இதன் மீது ஏறிச்செல்ல குறுகலான படிகள் உள்ளன. இதனை மத்திய கயிலாயம் என்பர்.



சித்திரைப்பெருந்திருவிழாவில் ஒன்பதாம் நாள் இரவு
"அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர் இராவணேசுவர வாகனத்தில் திருவுலாக்காணுதல்"
புகைப்படம் உதவி. திரு P. சரவணநாயக்கர் - தலைவர் ஒன்பதாம் நாள் விழாக்குழு.

இராவணனுக்கு அருள்செய்த இராவணன்

சிவபெருமானுக்கும் இராவணன் என்பது பெயராகும். இராவணம் என்பதற்குப் பொன் என்பது பொருள். சிவபெருமான் பொன்வண்ணம் கொண்டவராதலால் இராவணன் என்று பெயர் பெற்றார். இராவணன் என்பதற்கு (இரா+வண்ணம்) இரவுபோன்ற கருத்த வண்ணம் கொண்டவன் என்ற பொருள் கூறி இலங்கை வேந்தனுக்கு அப்பெயர் வந்ததற்கான காரணத்தைக் கூறுவர். இராவணன் என்பதற்கு அழுபவன் என்ற பொருளையும் கூறுவர்.

கயிலைமலையின் கீழ் அகப்பட்டு பெருமான் கால் விரலால் ஊன்றிய பாரம் தாங்காது மலங்கி வாய்கிழிய அழுதான். அதனால் அழுபவன் என்ற பொருள்பட அவனுக்கு இராவணன் என்ற பெயர் வழங்கப் பெற்றது. இறைவன், இலங்கை மன்னனுக்கு இராவணன் என்ற பெயர் வழங்கியதை கொற்ற வாளொடு நாமமும் கொடுத்தார் என்றும், எண்ணும் பெயரும் ராவணனே எய்தும் பெயரும் ராவணனே என்றும் தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

சிவபெருமானுக்கு இராவணன் என்ற பெயர் உள்ளதைக்குறிக்கும் தேவாரம் வருமாறு.

இராவ ணஞ்செய மாமதி பற்றவை
இராவ ணம்முடை யான்தனை யுள்குமின்
இராவ ணன்தனை யூன்றி அருள்செய்த
இராவ ணன்திரு வெண்கா டடைமினே.

பொருள்:

அறிவைப் பற்று இல்லாதபடி செய்வதற்கு ஐராவணம் என்னும் யானையின்மீது ஏறி வரும் சிவபெருமானை உள்ளத்தே நினைமின். இலங்கை அதிபனாகிய இராவணனைக் கட்டைவிரலால் ஊன்றி அவன் தொழுத பின் அவனுக்கு அருள் செய்த பொன் போன்ற சிவபெருமானின் திருவெண் காடு அடையுங்கள் (திருவெண்காட்டில் கரியமேனி உடையவராக சிவமூர்த்தி அகோரர் என்ற பெயரில் எழுந்தருளியுள்ளார். இராவணன்-என்பது அவரைக் குறிக்குமென்று பல உரையாசிரியர்கள் எழுதி யுள்ளனர். இரவு + வண்ணம் = இராவணம் கருப்பு நிறம்).

இராவணன் பாடிய சாமவேதம்

சிவபெருமானுக்கு இசைப்பிரியன் என்பது பெயர். ஏழிசையாய் இசைப்பயனாய் என்று இசையாகவும், அதன் இனிமையான கேட்டற் சுகமாகவும் இறைவன் இருப்பதைத் திருநாவுக்கரசர் பாடியருள் கின்றார். இராவணன் இசையில் வல்லவன். சாமகானம் பாடுவதில் தலைசிறந்தவன். தான் இசைபாடுவதில் வல்லவன் என்பதை உணர்த்தத் தனது கொடியில் வீணையைச் சின்னமாகக் கொண்டிருந்தான். இதனால் வீணைக்கொடியுடைய வேந்தன் என்பது அவனுக்குப் பெயராயிற்று. அவன் நாள்தோறும் தன் இசையால் சிவபெருமானைப் பூசித்தவன். அவன் கயிலைமலையைத் தூக்கி அதன்கீழ் அகப்பட்டுக் கொண்டபோது சாமகீதம் பாடினான். சாமவேதத்தில் வரும் இனிய சுவரங்களை யுடைய பாடற்பகுதிகளுக்குச் சாமகீதங்கள் என்று பெயர்.

எத்தனையோபேர் சாமகானம் பாடினாலும், இறைவனுக்கு இராவணன் பாடிய சாமகானமே பிடித்தமாயிற்று. அதனைக்கேட்டு உருகியே அவர், அவனுக்கு அருள்செய்தார். இதனால் சிவனடியார் களுக்குச் சாமகானம் என்றதும் இராவணனும் அவனுக்குச் சிவன் அருள்பாலித்த வரலாறுமே நினைவுக்கு வருகின்றது.

இறைவன் சாமவேதப்பிரியன் என்பதால் அவனுக்குச் சாமநல்வேதன், சாகை ஆயிரமுடை யார், சாமம் ஓதுவதுடையார் என்பன பெயராயின.

இராவணன் வழிபட்ட முப்பத்து முக்கோடி லிங்கங்கள்

இராவணன் முப்பத்துமுக்கோடி வாழ் நாளைப் பெற்றவன். அவன் ஒரு நாளைக்கு ஒன்று வீதம் ஒவ்வொரு நாளும் புதியதாக அமைத்து வழிபட்ட 33கோடி லிங்கங்கள் இலங்கையில் இருந்ததென்று கூறுவர். இராவணனை வென்று இராமபிரான் இலங்கையை அழித்தபோது அவையாவும் கடலில் மூழ்கிவிட்டன என்பர்.

இராவணன் மனைவி வண்டோதரி சிவனருள் பெற்றது

இராவணனின் மனைவி வண்டோதரி (மண்டோதரி) மகாசிவபக்தி நிரம்பியவள். அவள் ஓயாது ஐந்தெழுத்தை ஓதுபவள். தாம் எப்போது விரும்புகின்றாளோ அப்பொழுதெல்லாம் சிவபெருமான் தனக்குக் காட்சியளிக்க வேண்டும் என்று அவரிடம் வரம்பெற்றிருந்தாள். ஒரு சமயம் அவள் தனது அந்தப்புரத்தில் பள்ளியறையில் அமர்ந்து கொண்டு சிவபெருமானைத் தியானித்துத் தமக்குக் காட்சியளிக்க வேண்டும் என்று கேட்டாள். அதன்படியே சிவபெருமான் பள்ளிக்குப் பாயத்தினராய் அவள் முன்புதோன்றினார். அவள் அதுகண்டு மகிழ்ந்து உரத்த குரலில் தோத்திரம் செய்தாள். அந்த ஆரவாரத்தைக் கேட்ட இராவணன் என்ன சத்தம் என்று கேட்டுக்கொண்டே அங்கு வந்தான். அப்பொழுது பெருமான் ஒரு குழந்தையாக மாறி அழுதார். வண்டோதரியிடம் யார் இந்தக் குழந்தை என்று இராவணன் கேட்டான். அதற்கவள் எனது சேடியின் மகன். இன்றைக்கு அவள் என்னிடத்தில் இவனை விட்டுச் சென்றுள்ளாள் என்றாள். இலங்கையர்கோன் அங்கிருந்து சென்றுவிட்டான். குழந்தை வடிவில் இருந்த சிவபெருமான் அவளுக்கு மீண்டும் காட்சியளித்து விட்டு மறைந்தார்.

மாணிக்கவாசகர் இக்கதையை நினைவு கூர்ந்து குயில்பத்தில்

ஏர்தரும் ஏழுலகேத்த எவ்வுருவும் தன்னுருவாம்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோதரிக்கு
பேரருள் இன்பமளித்த பெருந்துறை மேயபிரான்

என்று குறித்துள்ளார். இதன் பொருள், ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த தென்னிலங்கையின் அரசியான அழகுநிறைந்த வண்டோதரிக்கு உலகிலுள்ள எல்லா உருவங்களையும் தன் வடிவமாய்க் கொண்ட சிவபெருமான் பெரிய அருளைச் செய்து இன்ப மளித்தான் அவன் பெருந்துறையில் உறைபவன் என்பதாகும்.

உருத்திரகோசமங்கைத் தலபுராணத்திலும் சிவபெருமான் வண்டோதரியின் வேண்டுகோளின் படி இலங்கைக்குச் சென்று அவளுடைய பூசையை ஏற்றார் என்றும், அப்போது அங்கு ராவணன் வரக் குழந்தையாக மாறிவிட்டார் என்றும் குறிக்கப் பட்டுள்ளது.

ஐந்தெழுத்தோதும் வண்டோதரியும் - இராவணனும்

திருஞானசம்பந்தர், வேதியர்களுக்கு ஐந்தெழுத்தின் உண்மையின் பெருமையை விளக்கிக் கூறும் வகையில் பாடிய 'துஞ்சலும்' என்று தொடங்கும் பாசுரத்தில் எட்டாவது பாடலில் "வண்டமர் ஓதி மடந்தை பேணின" என்றும் பண்டை இராவணன் பாடி உய்ந்தன என்று குறித்துள்ளார். வண்டோதரி எப்பொழுதும் ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டேயிருப்பதால் இந்தப்பதிகத்தில் அவளைச் சிறப்புடன் குறித்தார். பின்னும் அவள் கணவனான இராவணனை நினைந்து அடுத்த அடியில் பண்டு ராவணன் பாடி உய்ந்தது என்றும் அருளிச்செய்தார். இப்படிக் கணவன் மனைவி இருவருமே மாபெரும் சிவபக்தர்களாக விளங்கியதால் இருவரையும் திருஞானசம்பந்தர் ஒரே பாடலில் இணைத்துப்பாடியுள்ளார்.

விபீஷண லிங்கம்

இராவணனின் தம்பியருள் இளையவன் விபீஷணன் மிகுந்த சிவபக்தி மிகுந்தவன். 'பீஷண' என்றால் அழிவில்லாதது என்று பொருள். விபீஷண என்புதற்கு என்றும் அழிவில்லாதது என்பது பொருள். விபீஷணன் உலகில் என்றும் அழியாத நிலையில் உள்ள ஏழு சிரஞ்சீவிக்களில் ஒருவராவார். இவர் அமைத்து வழிபட்ட லிங்கங்கள் "விபீஷண லிங்கம்" என்று அழைக்கப்படுகின்றன.

விபீஷணன், வீரசைவ பஞ்சாசாரியர்களில் ஒருவரான ஜகத்குரு ரேணுகாச்சாரியார் என்பவரிடம் தீட்சை பெற்று வீரசைவனானான் என்றும் அவனுடைய விருப்பப்படி ரேணுகாச்சாரியார் ஒரே இரவில் இலங்கையில் மூன்று கோடி லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்தார் என்றும் "சித்தாந்த சிகாமணி"

என்ற வீரசைவ நூல் கூறுகின்றது. இராமர், சீதை, இலக்குவன் ஆகியோர் ராமேசுவரத்தில் சிவபூசை செய்யும் வகையில் அமைத்திருக்கும் சிற்பம், ஓவியம் ஆகியவற்றில் விபீஷணனும் அவர்களுடன் இருந்து சிவபூசை செய்வதைக் காணலாம்.

கேரளத்தில் விபீஷணலிங்கம்

கேரள மாநிலத்திலுள்ள வைக்கம், எட்டுமானூர், கடித்திருத்தி என்ற மூன்று ஊர்களில் மூன்று சிவாலயங்கள் உள்ளன. இவற்றை விபீஷணன் நிறுவினான் என்பர். ★ அவனுக்கு ஒரு சமயம் மூன்று லிங்கங்கள் கிடைத்தன. அவை மூன்றையும் ஒரே நேரத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்றும் அவன் அறிந்தான். அவற்றைப் பிறரிடம் கொடுத்துப் பிரதிஷ்டை செய்தால் நேரம் முன்பின்னாகி விடும் என்பதால் வலதுகையால் ஒரு லிங்கத்தையும், இடது கையால் எட்டி ஒரு லிங்கத்தையும் வாயால் கடித்து ஒரு லிங்கத்தையும் ஒரே நேரத்தில் உரியபீடத்தில் நிறுத்தினான். வலது கையால் வைக்கப்பட்ட இடம் வைக்கம் என்றும் எட்டி வைக்கப்பெற்ற ஊர் எட்டுமானூர் என்றும் பல்லால் கடித்திருத்திய ஊர் கடித்திருத்தி என்றும் இப்பொழுது அழைக்கப் படுகின்றது. இதில் வைக்கம் கோயில் மிகச் சிறப்பு மிக்கதாகப் போற்றப்படுகின்றது.

(★ இதை ராவணன் செய்தான் என்று சில நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது)

இராவணன் காண ஆடிய நடனம்

தமிழர் வாழ்வில் நடனங்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. மகிழ்ச்சியான நேரங்களில் நடனமாடுவதால் மனமகிழ்ச்சியும்/ புத்துணர்ச்சியும் மேலும் அதிகப்படுத்துகின்றன. போர்களங்களுக்குச் சென்றபோதும் அங்கு வெற்றி பெற்றபோதும் நடனமாடி மகிழ்ந்தனர். தமிழ் இலக்கியங்களில் முன்தேர்குரவை, பின்தேர்க்குரவை, வாளோர் ஆடும் அமலை முதலிய அனேக வீர நடனங்களைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

சிவபெருமான் வீரச்செயல்களை நிகழ்த்திய பின் அன்பர்கள் காண நடம்புரிந்தான். அவர் திரிபுரம் எரித்தபின் கொடுகொட்டி என்ற நடனத்தை ஆடினான். மேலும் பாண்டரங்கம், கொட்டிச்சேதம் முதலான சிவநடனங்களைப் பற்றிய செய்திகளைப் புராணங்களிலும் இலக்கியங்களிலும் காணலாம்.

இராவணனை அடக்கி அவனுக்கு அருள் செய்ததும் சிவபெருமானுடைய வீரச்செயல்களில் ஒன்றாகும். இந்த வீரச் செயலுக்குப் பிறகும் அவன் நடனமாடி அனைவரையும் மகிழ்வித்தான் என்பர். இராமாயணம் சிவபுராணம் முதலிய நூல்களில் இதற்கான குறிப்புகள் இல்லை என்றாலும் திருஞானசம்பந்தப்பெருமான் திருமுதுகுன்றம் கைச்சினம் ஆகிய தலங்களில் எழுந்தருளிப்பாடிய பாடல்களில் இராவணனின் கர்வத்தை அடக்கிச் சிவபெருமான் நடனமாடியதைப் பாடியுள்ளார்.

அவை, இராவணன் தோள் நெரித்துப்
புயங்கராக மாநடத்தான். - திருமுதுகுன்றம்.

(பொருள். இராவணனின் தோள்களை நெருக்கிப் பாம்புகளை அணிந்து ஆடும் பெருமான்)

மலையெடுத்த வாளரக்கன் நீதியினால்
நிகழ்வித்து
நின்றாடும் காதலினான். (கைச்சினம்)

(பொருள்: மலையை எடுத்த வாள் அரக்கனான இராவணன் (வருந்தித் துன்புற்று அழுது அருள்பெற்றபின்) மலையை அங்கேயே வைத்தான். அதைக்கண்டு, பெருமான் அன்பினால் நெகிழ்ந்து ஆடினான்) என்பனவாகும்.


வடமொழி இலக்கியங்களில் இராவணன் சிவனை மகிழ்விக்கப் பாடியதாகப் பாடும் பாடல்கள் நல்ல ஜதிகளுடன், சந்தங்கள் கொண்டதாக அமைந்துள்ளன. இவை பாடி, ஆடுவதற்கென்றே புனையப்பட்டதாகத் தெரிகிறது.

கயிலைமலையானைக் கவர்ந்த காம்போதி

சிவபெருமானுடைய பெயரால் சங்கராபணம் என்ற ராகம் உள்ளது. அதையும் விட சிவபெருமானை மகிழ்விப்பது "காம்போதி" என்ற ராகமாகும். இராவணன் காம்போதி ராகத்தில் சாமவேதத்தைப் பாடினான் என்று கூறப்படுகின்றது.

பரமனை விரும்பிய பாவையர் - 2

திருப்புகலூர்ச் தீனசிந்தாமணி



திருப்புகலூர் என்பது தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம் அப்பரடிகள் சிவபிரானோடு இரண்டறக்கலந்த திருப்பதி.

இத்தலத்தில் நெடுநாட்களுக்கு முன்பு ஒரு உருத்திரகணிகை வாழ்ந்து வந்தாள். அவள் சிவபெருமானிடம் இடையறாத அன்பு பூண்டவள். திருப்புகலூர் ஆலயத்திற்குப் பல திருப்பணிகளைச் செய்தவள். இவள் ஒரு நாள் காலையில் கோயிலுக்கு வந்து சுவாமியை வழிபட்டு அமர்ந்திருக்கையில் அரசாங்கக் காவலர்கள் ஒரு சிவனடியாருடன் கோயிலுக்கு வருவதைக் கண்டு நின்றாள்.

அந்நாளில் நெற்குன்றவாணர் எனும் வேளாளர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த சிவபக்தரும், கவிஞருமாவார். ஏழைகளுக்கு உதவுவதையே தமது வழக்கமாகக் கொண்டவர். ஒருமுறை சரியாக விளைச்சல் இல்லாததாலும், கிடைத்த கொஞ்சம் தானியங்களையும் ஏழைகளுக்கு அளித்து விட்டதாலும் அவரால் அரசனுக்குச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்த இயலவில்லை. வரியைச் செலுத்தாததால் அரச சேவகர்கள் அரசனிடம் கொண்டு செல்ல அவரைக் கைது செய்தனர். அவர் எப்போதும் சிவாலயதரிசனம் செய்த பிறகே பிற வேலைகளைச் செய்வது வழக்கம். அதன்படியே இன்றும் செய்ய அந்தக் காவலர்களிடம் கெஞ்சி சிவாலயதரிசனம் செய்ய அனுமதி வேண்டினார். காவலர்கள் அவருடைய தோற்றப் பொலிவையும் பக்தியையும் கண்டு அதற்கு உடன்பட்டனர்.

காவலர்கள் உடன்வர நெற்குன்றவாணர் திருப்புகலூர் ஆலயத்துட்சென்று விநாயகர் சந்நிதியில் நின்று மனமுருக வேண்டினார். தம்முடைய இந்த நிலைக்கு மிகவும் மனமுருகினார். அவருடைய வருத்தம் ஒரு பாட்டாக வெளிப்பட்டது அப்பாடல்

உரைசெய் மறைக்கும் தலைதெரி
யாவொரு கொம்பை யென்றே
பரசு மவர்க்குப் பெருநிழ
லாக்கும் பழனமெல்லாம்
திரை செய் கடற்றுறைச்
சங்க முலாவுந் திருப்புகலூர்
அரசினிடத்து மகிழ் வஞ்சி
யீன்ற வோரத்தி நின்றே.

(இப்பாடலின் பொருள்: திருப்புகலூர் அரசனாகிய சிவபிரானிடத்தில் மகிழ்ந்து இருக்கின்ற இளவஞ்சியாகிய பார்வதி தேவி பெற்ற அத்தி-யானை முகமுடைய விநாயகப்பெருமான்

தன்னைத் துதிப்பவர்களுக்குத் தண்ணருள் செய்வார் என்று கூறுகிறது. இதில் அரசு, மகிழ், அத்தி, ஆகிய மரப்பெயர்களுடன் வஞ்சி என்ற கொடிப் பெயரும் தொடர்ந்து வந்து இரண்டு பொருள் தருவது காண்க)

அக்காட்சியைக் கண்டு நின்ற * உருத்திர கணிகையும் அப்பாடலைக் கேட்டாள். அப் பாடலின் இறுதி அடிகள் அவளுடைய நெஞ்சில் நிறைந்தது. அவள் குன்றவாணரை நோக்கி இப்பாடலை ஒரு நூலுக்கு காப்பாக்கலாமே என்றாள்.

காப்பாக்கலாம் அது கைவிலங்கை நீக்குமா? என்று கேட்டு அமைதியாக இருந்தார். அவருடைய மனம் போராட்டத்தில் இருந்ததால் பேச நா எழவில்லை. அருகில் இருந்தவர்கள் மூலம் நடந்த செய்திகளைக் கேட்ட அவள் அவர் செலுத்த வேண்டிய பணத்தைத் தானே செலுத்தி அவருக்கு விடுதலை வாங்கித் தந்தாள்.

அவளுடைய அன்பு அவரை வியப்பில் ஆழ்த்தியது. நெற்குன்றவாணர் அவளிடம் நீங்கள் சொன்னபடியே இப்பாடலை ஒரு நூலுக்குக் காப்பாக்கலாம். உண்மையில் என் மானம் காத்த காப்புப்பாடல் இது தானே, என்றார்.

திருப்புகலூர் அந்தாதி

நெற்குன்றவாணர் இயற்றிய "திருப்புக லூரந்தாதி" ஆரணி கௌரவ நீதிபதி இராவ் சாகிப் உயர்திரு. ஆ.க. சீனிவாச முதலியாரின் பொருள் உதவியால், காமக்கூர் பேராசிரியர் திரு. மு. சுந்தரமுதலியார் அவர்களால் 1939 ஆம் ஆண்டில், ஆரணி கிருஷ்ணா அச்சு நிலையத்தில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

அப்பெண் அவரை வணங்கி இத்தலத்துச் சிவபெருமான் மீது நூலொன்று பாடும்படி கேட்டுக் கொண்டாள். அதன்படியே நெற்குன்றவாணர் அப்பாடலைக் காப்பாகக் கொண்டு "திருப்புகலூரந் தாதி" எனும் நூலைப்பாடி அரங்கேற்றினார்.

மீண்டும் தன்னாடு சென்ற நெற்குன்றவாணர் நன்கு விளைந்ததும் தன் சார்பில் அரசனுக்கு அக்கணிகை செலுத்திய தொகையை அவளுக்குத் திருப்பி அனுப்பினார். ஆனால் அவளோ அப் பொருளையும் திருப்புகலூர் பெருமானின் திருப் பணிக்கே செலவிட்டு விட்டாள். அப்பெண்ணின் வரலாற்றை நாம் நேரடியாக உணராவிட்டாலும் அவளுடைய சிவபக்தி அந்நூலில் நிலையாக நிலைத்திருக்கின்றது.

*இவளுடைய பெயர் தீனசந்தாமணி என்றும் இவள் தம்பெயரால் திருப்புகலூர் ஆலயத்துள் சிந்தாமணிச்சரம் என்ற சிவாலயத்தை அமைத்துள்ளாள் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

வீரம் விளைத்த சிவனடியார்கள்

(அச்சிறுபாக்கத்து வீரர்கள்)

அச்சிறுபாக்கம் என்பது தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்றச் சிவத்தலங்களில் ஒன்றாகும். திருஞானசம்பந்தர் பாடிய ஒரு பதிகமும் அப்பரடிகளின் திருத்தலக்கோவையில் ஒரு பாடலும் இத்தலத்தைச் சிறப்பிக்கின்றன.

இத்தலத்தில் உள்ள ஆட்சீசுவரர் ஆலயம் ஒரு காலத்தில் செங்குந்த மரபினர்களுக்குச் சொந்தமாக இருந்து வந்தது. இடையில் செட்டியார்கள் செல்வாக்குப் பெற்று இக்கோயிலின் நிர்வாகத்தைக் கைக்கொண்டனர். இவர்களை அச்சரபாக்கம் செட்டியார்கள் என அழைப்பர்.

சில காலத்திற்குப் பிறகு செங்குந்தர்கள் கூடி ஆட்சீசுவரர் ஆலயத்தின் நிர்வாகத்தை மீண்டும் தாமே மேற்கொள்வது எனத் தீர்மானித் தனர். அதன்படி ஒரு குழுவினராகச் சென்று பெருஞ்செல்வாக்கும், வலிவும், பெற்ற செட்டியார் களின் குழுவைச் சந்தித்து மீண்டும் கோயிலைத் தங்கள் வசம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். செல்வாக்கில் ஓங்கியிருந்த செட்டியார் கள் அதற்கு உடன்படவில்லை.

மீண்டும் செங்குந்தர்கள் கூடினர். செட்டியார் களின் பணபலம், படைபலத்திற்கு முன்னால் தங்களால் எதுவும் செய்ய முடியாது. அதே சமயம் இந்தக் கோயில் நிர்வாகத்தைப் பெறாமல் இவ்வூரில்

வாழ்வதால் பயனில்லை. கூண்டோடு வெளியூருக்குச் சென்றுவிடலா மென்றால் அடுத்தவர்க்குப் பயந்து கொண்டு ஓடிவிட்டனர் என்ற கெட்ட பெயர் வரும். என்று பலவாறு யோசனை செய்தனர்.

இறுதியில் கோயிலை உயிர்த் தியாகம் செய்து மீட்பது என்று தீர்மானித்தனர். அதன்படி வீட்டுக்கு ஒருவர் ராஜகோபுரத்தின் மீதேறிக் கீழே குதித்து உயிர்த்தியாகம் செய்வது. எத்தனை நாள் இந்த நிலை நீடித்தாலும் ஒரு நாளைக்கு ஒருவர் வீதம் இவ்வாறு குதித்து உயிர் விடுவோம் என்ற சபதத்தை மேற்கொண்டனர்.

இதனைக் கேட்ட செட்டியார்கள் அஞ்சினர். அப்படி எதுவும் நடக்காதபடியும், கோயில் கோபுரத்தின் மீது யாரும் ஏறாதபடியும், பாதுகாப்பு ஏற்பாடுகளைக் செய்தனர். ஆனாலும் செங்குந்தர்கள் தாம் மேற்கொண்ட சபதத்தை விடாமல் தடையை மீறிக் கோபுரத்தின் மீதேறி கீழே வீழ்ந்து உயிர் நீத்தனர்.

இப்படியே மூன்று நாட்கள் கழிந்தன. தினமும் ஒவ்வொருவராக மூன்று பேர்கள் ஏறிவீழ்ந்து உயிர்விடுத்தனர். செட்டியார்கள் இதைக் கண்டு மனம் கலங்கினர். வீணாக இவர்களின் உயரிழப்புக்கு நாம் காரணமாக இருப்பதைவிட இந்த நிர்வாகத்தை விட்டுக் கொடுத்து விடுவதே சாலச்சிறந்தது என்ற முடிவெடுத்தனர்.

மேலும் உயிரிழந்த மூவரின் ஆவியால் தங்கள் குடும்பங்களுக்கு ஏதேனும் தீங்கு நேரலாம். எனவே நாம் இந்த ஊரை விட்டுச் செல்வதே நல்லது என்று வெளியூர்களுக்குப் பயணமாயினர்.

பெரும்பாலானவர்கள் ஊருக்குத் தெற்கே சென்று பெரும்பேறு கண்டிகை எனும் ஊரில் தங்கினர். அதில் பலர் சிவபூஜா துரந்தரர்களாவர். அவர்களால் ஆட்சீப்பெருமானைப் பிரிந்து வாழ முடியவில்லை. எனவே இறைவனின் உத்திரவுடன் பெரும்பேறு கண்டிகையில் கைலாசநாதர் கோயிலை அமைத்தனர். அக்கோயிலுக்குக் காணும் பொங்கல், விஜயதசமி, சித்திரை பௌர்ணமி ஆகிய மூன்று நாட்களுக்கு ஆட்சீசுவரரை எழுந்தருளி வைத்து வழிபடுவது என்ற வழக்கத்தை மேற்கொண்டனர்.

செட்டியார்களின் வெளியேற்றத்திற்குப் பின்னர் செங்குந்தர்கள் ஆட்சீசுவரர் ஆலய நிர்வாகத்தைச் சிறப்புடன் மேற்கொண்டனர்.

அவர்கள் கோயில் நிர்வாகத்தைத் திரும்பப் பெறத் தியாகம் புரிந்த மூவருக்கும் நடுகல் எடுத்தனர். இவை மூன்றும் கோயிலின் தென் கிழக்கு, வடகிழக்கு மேற்கு ஆகிய இடங்களில் நடப்பட்டுள்ளன. அவர்களின் பெயரும் பெருமையும் இந்த கற்களில் எழுதப்பட்டுள்ளன. மக்கள் தொடர்ந்து போற்றிப் பாதுகாக்காததால் அவைகளில் உள்ள செய்திகளை இப்போது நாம் அறிய முடியவில்லை. ஆயினும் சந்திகாப்பன் எனும் பெயரில் இவற்றை மஞ்சள் குங்குமம் பூசி பொங்கலிட்டு இன்றளவும் வழிபடுகின்றனர்.

இப்பணியில் முதல்முதலாக உயிர் நீத்தவர்க்கு மட்டும் மேற்கு மதிற்சுவரின் வெளிப் புறத்தில் பெரிய மாடத்தில் சாவாரக்கல் திருவுருவம் அமைத்துப் பதிக்கப்பட்டுள்ளது.

அவர்களுடைய அரிய செயலால் கிடைத்த நிர்வாகத்தைச் செங்குந்தர்கள் நெடுங்காலம் பரிபாலித்தார்கள். இவ்வழியில் வந்த செங்குந்த ஆதீனபரம்பரை அழகப்ப முதலியார் குமாரர் பழனியப்ப முதலியார் எனும் துறவி கோயிலுக்குப் பல்வேறு திருப்பணிகளைச் செய்தார். (இதைக் குறிக்கும் கல்வெட்டு கோபுரவாயில் நிலைப்படியில் உள்ளது).

காலம் ஒரே மாதிரியாக இருப்பதில்லையல்லவா? செங்குந்தர்களுக்குப் பிறகு செல்வாக்கு பெற்ற ரெட்டியார்களான இந்தளூர் ஜமீன்தார்களின் வசம் நிர்வாகம் சென்றது. இம்மரபில் வந்த வணக்கத்திற்குரிய அமரர் வக்கீல் திரு. வீ. வரதா ரெட்டியார் அவர்கள் இக்கோயிலின் நிர்வாகத்தைப் படிப்படியாக இந்து சமய அறநிலையத்துறையிடம் ஒப்படைத்தார்கள்.

இக்கோயிலைத் திரும்பப்பெறும் பணியில் இன்னுயிர்நீத்த சிவனடியார்களான, அந்த மூவரின் பெயரை நாம் அறிய முடியவில்லை என்றாலும் அவர்களுடைய நினைவுக்கற்களும் சாவாரக் கல்லும் அவர்களுடைய தியாகத்தையும், மாபெரும் சிவபக்தியையும், இனப்பற்றையும் பறைசாற்றிக் கொண்டு நிற்கின்றன.

சிவ தீக்கைஷ



'தீ' என்பதற்குத் தானம் அல்லது கொடுத்தல் என்பது பொருள். "க்ஷ" என்பதற்குப் புத்தி, முத்தி, பாசத்தை அறுத்தல் என்ற பல பொருள் உண்டு. எனவே தீக்ஷை என்பது புத்தியைத் தருதல் முத்தியைத் தருதல் எனப் பலவாறு பொருள் தரும்.

இது ஆதியில் சிவபிரானிடமிருந்து தொடங்கி வழிவழியாக ஞானபரம்பரையின் மூலம் முனிவர்கள், தேவர்கள் என்று ஒருவரால் மற்றவர்க்குக் கொடுத்துவரப்படுகின்றது. மக்கள் இதனைத் தங்கள் குருவின் வாயிலாகப் பெறுகின்றனர். குருவால் மாணவனுக்கு முறையே தீக்ஷை கொடுக்கப்படுதல், மாணவனால் அது பெறப்படுதல் என்ற வகையில் இவற்றின் வகைகளைக் காணலாம்.

(1). முதலில் இந்த தீக்ஷையால் அடையப்பெறும் பலன்களைப் பொருத்து இது இரண்டு வகைப்படும். இவை "பௌத்க, நைஷ்டிக்" என்று அழைக்கப் படுகின்றன. "பௌத்க" என்பது விசித்திரமான சுகபோகங்களை நல்கி இறுதியில் மோட்சத்தைத் தருவதாகும். "நைஷ்டிக்" என்பது தவசீலர்களுக்கு நிஷ்டையைக் கூட்டுவித்து இறுதியில் மோட்ச மளிப்பதாகும்.

(2). மேலும் நியதிகளைக் கடைப்பிடிக்கும் வகையில் இவை "சாபேக்ஷை" "நிராபேக்ஷை" என இருவகைப்படும். "சாபேக்ஷை" என்பது சமயத்தில் கூறியுள்ள பலவேறு நியதிகளைக் கடைப்பிடிக்க ஏற்றுக் கொள்ளும் நிலையை உணர்த்துகின்றது.

"நிராபேக்ஷை" என்பதுத எந்த நியதிகளையும் கடைப்பிடியாது மோட்சத்தில் பற்றுக் கொண்டு சுய கட்டுப்பாட்டுடன் வாழ ஏற்றுக் கொள்ளும் நிலையாகும்.

(3). மேலும் குரு, சீடன், என்பவர் ஒருவரை ஒருவர் தேடி, அளித்து பெற்றுக் கொள்ளும் நிலையையொட்டி இதனை நிராதாரை, சாதாரை என இருவகையாகக் கொள்வர். நிராதரை என்பது இறைவனே குருவடிவில் வந்து அன்பனுக்கு தீக்ஷையளித்து ஆண்டு கொள்வதாகும். சாதாரை என்பது மாணக்கன் உரிய குருவைத்தானே தேடிச் சென்று தீக்ஷை பெறுதலாகும்.

தீட்சை பெறும்முறை எப்படியாயினும் தீக்ஷையின் பயன் (மந்திரங்கள் விஷத்தை இறக்கிவிடுவது போல) மாணாக்கனின் ஆன்மாவில் பற்றியுள்ள மும்மலங்களை நீக்கி அவனுக்கு இறைவனை உணர்த்துவதாகும். எனவே தீக்ஷை என்னும் இக்கிரியை, "ஆன்ம சமஸ்காரம்" ஆன்மா தெளிவித்தல் எனப்பெயர் பெறுகின்றது. அறிவு, அறிவற்ற பொருள்களின் தன்மையை விளக்கிக் கூறி ஆன்மாவை மோட்சப் பாதையில் செலுத்துதலின் இதுவே தலைசிறந்த நெறியாகப் போற்றப்படுகின்றது.

குருவினால் மாணவனுக்குப் பலமுறைகளில் தீக்ஷை செய்விக்கப்படுகின்றது. இனி இவற்றின் வகைகளைக் காணலாம்.

1. நயன தீக்ஷை: குரு தன் மாணவனைப் பார்த்த மாத்திரத்தில் கண்ணால் அளிக்கும் தீக்ஷையாகும்.
2. ஸ்பரிசதீக்ஷை: இது குரு தன் மாணவனைக் கையால் தொட்டு அளிக்கும் நிலையாகும்.
3. மானச தீக்ஷை: இது குரு தன் மனத்தால் எண்ணிய மாத்திரத்தில் சீடனின் உள்ளதே நிறைந்து நின்று அளிக்கும் வகையாகும்.
4. வாசக தீக்ஷை: குரு தன் திருவாக்கால் பஞ்சாடசரம் முதலான மந்திரங்களைச் சீடனின் காதில் ஓதி செய்யப்படும் நிலையாகும்.

5. சாத்திர தீக்ஷை: குருவானவர் குருகுலத்தில் சீடனை வைத்துச் சிலகாலம் அவனுக்குச் சிவாகமங் களைப் போதித்து அதன் வாயிலாகச் செய்யப்படும் தீக்ஷையாகும்.

6. யோக தீக்ஷை: தன் தவயோக சாதனையால் குருவானவர் தன் சீடனின் இருதயத்தில் வீற்றிருந்து அருள, சீடன் தனது ஆன்மாவை உள் முகமாகத் திருப்பிப் பெற்றுக் கொள்ளும் தீக்ஷையாகும்.

7. ஔத்திரி தீக்ஷை: இது ஹோமகுண்டம், மண்டலம் அமைத்து அதில் பூரணகும்பங்களைத் ஸ்தாபித்து பூசித்து, அக்கும்பங்களைக் கொண்டு மாணாக்கனுக்கு நீராட்டலின் மூலம் செய்யப்படும் தீக்ஷையாகும். இது இரண்டு வகையாகும்.

(1) ஞான தீக்ஷை, இம்முறையில் குண்டம், வேதிகை, கலசம் இவற்றை ஆசாரியர் தம்மனத்தில் கற்பித்து உரிய மந்திரங்களைக்கூறி ஞானவழியில் மாணவனுக்குச் செய்கின்ற தீக்ஷையாகும். இதில் புறக்கிரியைகள் ஏதும் தெரியாது.

(2) கிரியா தீக்ஷை, என்பது பெரிய வேள்விச் சாலையமைத்துக் கும்பங்களும் குண்டங்களும் நிறுவிப் பூசித்து அந்நீரைக் கொண்டு சீடனுக்கு முழுக்காட்டி அளிக்கின்ற அபிஷேகத் தீக்ஷையாகும்.

இந்த வகையான கிரியா தீக்ஷை இரண்டு வகையாகச் சொல்லப்பட்டுள்ளது. அவை சபீஜம், நிர்பீஜம் என்பனவாகும். மேலும் நிர்பீஜ்தை, சத்யோ நிர்வாணம், அசத்தியோநிர்வாணம் என்று இருவகையாகவும் கூறுவர்.

சபீஜம் என்பது ஒரு ஆசிரியரிடத்தில் பலகாலும் வேதம், சிவாகமங்களையோதி சமய நெறிகளில் வழுவாது நிற்பவருக்குச் செய்யப்படும் தீக்ஷையாகும். இதில் பீஜமந்திரங்கள் அதிக அளவு பயன்படுத்தப்படுகின்றன. எனவே இது சபீஜம் எனப்பட்டது.

இந்த சபீதீக்ஷை லோகதர்மணி, சிவ தர்மணி என்று இருவகையாகும். லோகதர்மணி சீடனை புவனங்களில் சேர்ப்பிக்கச் செய்வது. இது பல சுகங்களைத் தருவதாகும். சிவதர்மணி என்பது மோக்ஷத்தில் பற்றுக்கொண்ட சீடனைச் சிகாசேதம் முதலான கிரியைகளுக்கு உட்படுத்தி மோஷத்தில் சேர வகைசெய்வதாகும்.

நிர்பீஜத்தில் உள்ள முதல் வகையான சத்யோநிர்வாணம் என்பது ஞானம் பெறும் பக்குவம் இருந்தும் வயோதிகம், நோயுடைமை முதலிய வற்றால் தளர்ந்தவர்க்குச் செய்வதாகும்.

இரண்டாவதான அசத்யோ நிர்வாணம் என்பது வாலிபர், குழந்தைகள் முதலியோர்க்குச் செய்வதாகும். இவற்றின் பீஜமந்திரங்களைப் பயன்படுத்துவதில்லையாதலின் நிர்பீஜதீக்ஷை எனப்படுகின்றது.

இவை ஒவ்வொன்றையும் சற்று விரிவாக இனிவரும் மலர்களில் காணலாம்.

சாம்பவி தீக்ஷை

ஓயாது வெள்ளம் பாய அதனைத் தேவையானவர் தேவைக்கேற்பப் பயன்படுத்திச் சுகம் பெறுவதுபோல அருள்ஞானம் பிரகாசிக்க அதைப் பக்குவம் பெற்ற ஆன்மாக்கள் பயன்படுத்திப் பேறுபெறும் வகையில் ஆலயங் களில் நடைபெறும் திருவிழாவிற்கு "சாம்பவி தீட்சை" என்று பெயர்.

இதில் இறைவன் குருவாக இருந்து தீட்சிக்கின்றான். ஆனால் பக்குவம் பெற்ற ஆன்மாக்களே பயன்பெறுகின்றனர்.

பொதுவாக, தீக்ஷை நடைபெறும்போது ஞானம் அருளவல்ல குரு, மண்டலமமைத்து அதில் கும்பம் அமைத்து அக்கினியில் வேள்வியாற்றி கும்பநீரைச் சீடனுக்கு அபிஷேகித்துத் தீக்ஷை செய்கின்றார். ஆகவே தீக்ஷையில் மண்டலம், கும்பம், அக்னி, ஆசாரியன், சீடன் ஆகிய ஐவர் இடம்பெறுகின்றனர். திருவிழாக்காலங்களில் இந்த ஐந்துமாக இருந்து சிவபெருமான் ஆன்மாக்களுக்கு சிவதீக்ஷை அருள்கின்றார். இவ்வகையில் பலிநாயகர் மண்டலமாகவும்; அத்திரதேவர் கும்பமாகவும்; சோமாஸ்கந்தர் அக்னியாகவும்; ஆசாரியார் குருவாகவும் விழாவைக்காண வந்த எல்லா ஆன்மாக்களும் சீடர்களாகவும் கருதப் படுகின்றனர்

இதனால் சிவாலயத் திருவிழாவைக் கண்ணாரக் காணுதல் "சாம்பவி தீக்ஷை" எனும் சிவதீக்ஷையைப் பெற்றுக் கொள்ளுதலாகும்.

உ

திருச்சிற்றம்பலம்



திருஆவடுதுறை ஆதீனம்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தைக் கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே.

– திருமூலர்

சிவபெருமான் திருவருள் நமக்குக் குருவின் மூலமாகவே கிடைக்கின்றது. பக்குவம் பெற்ற ஆன்மஞானிகளுக்கு இறைவன் தாமே குருவாக வந்து அவர்களின் பாசங்களைக் களைந்து, ஞானத்தை அருளிப் பேரின்ப வாழ்வை நல்குகின்றான். எளிய, நம் போன்றவர்களுக்குச் சிவனருள் வாழையடிவாழையென வளர்ந்து வரும் குருமரபில் தோன்றிய அருட்குருமார்களின் வாயிலாகக் கிடைக்கின்றது. எனவே ஒவ்வொருவரும் தமது ஆன்மா மேன்மை பெற, தகுந்த குருவினை அடுத்து அவர் வழியே சமய நூல்கள் கூறும் தீட்சைகளைப் பெற்று நல்வழிகளைக் கடைபிடிக்க வேண்டும். குருவின் அருளின்றி ஆன்மா பேரின்ப நிலையை எய்தாது. ஆதலால்தான் "குருவருள் இன்றேல் திருவருள் இல்லை" என்ற பழமொழியும் உருவானது.

குருமார்கள் உயிர்களுக்குச் சைவத்தின் ஆதாரப் பொருளாகிய பசு, பதி, பாசம் என்ற முப்பொருளை விளக்கி, பாசம் என்ற வினைக்கட்டுகளிலிருந்து விடுபட்டுப் பதியாகிய இறைவனை அடையும் வழியினைப் போதிக்கின்றனர்.

மும்மலமாகிய பாச இருளைக் கடியும் ஞான சூரியனான, குருமார்கள் பரம்பரை பரம்பரையாக ஞானப்பயிரைச் செழித்து வளரச் செய்கின்றனர். மானுடம் உய்யும் பொருட்டுச் சிவனருளால் தோன்றிய ஞானபரம்பரைகள் பலவாகும். இவற்றில் குறிப்பிடத்தக்கது திருக்கைலாய ஞான பரம்பரையாகும். இந்தப் பரம்பரையில் பல கிளைகள் தோன்றி ஆங்காங்கு மடங்களை நிறுவிச் சைவ சமயத்தை வளர்த்து வருகின்றன. இவற்றில் முதலில் தோன்றிய பெருமையை உடையது திருவாவடுதுறை ஆதீனம் ஆகும். இப்பரம்பரையில் வழிவழியாக வரும் குருமார்கள் சிவஞானத்தைச் செழிக்க வைக்கின்றார்கள்.

சிவஞானத்தைப் போதிக்க ஆதாரமாக விளங்குபவை சைவ சமய சாத்திரங்கள் என்ற தத்துவ நூல்களாகும். இந்நூல்களை அருளிய மூல ஆசிரியர்களிடமிருந்தே திருக்கயிலாயபரம்பரைகள் தோன்றிச் சமயத்தையும், தமிழையும் போற்றி வளர்த்து வருகின்றன.

சிவபெருமானின் திருவருளைச் சிவமஞ்சரியின் மூலம் சிந்திக்கும் நாம் அதனைப் பெறக் குருவருளை வேண்டி நிற்பதால் திருக்கயிலாய ஞானபரம்பரையில் தோன்றிய குருமார் களைப் பற்றிச் சிந்தித்துப் போற்றி வணங்குவோம்.

சைவ குருமார்கள் பசு, பதி, பாசம் என்ற முப்பொருளை மூலப்பொருளாகக் கொண்டு அதனை விளக்கிச் சைவசித்தாந்த சாத்திரங்களை வகுத்துள்ளனர். இந்த முப்பொருள், தத்துவத் திரயம், முப்பொருள் உண்மை என்று பலவாறு அழைக்கப்படும். இந்த முப்பொருளை விளக்கும் குருமார்களை அறிந்து கொள்ள உதவியாக சிவமஞ்சரியின் இந்த மூன்றாவது மலர் மலர்கின்றது.

இதில், மெய்கண்டதேவர் வழிவந்த குருமார்களின் பரம்பரையான திருக்கயிலாய ஞானபரம்பரையைப் பற்றியும், அதன் வழிவந்த திருவாவடுதுறை ஆதீனத்தையும், அதில் கொலுவீற்றிருந்து ஞானச் செங்கோல் நடத்துபவர்களையும், அந்த மடாலயம் செய்துவரும் அருட்பணிகளையும் அறிந்து மகிழலாம்.

மெய்கண்ட சைவ சித்தாந்த பரம்பரை

சைவ சமயத்தின் ஆதாரமாகத் திகழ்வது சைவ சித்தாந்தமாகும். இந்தச் சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்கி நிற்பது பதினான்கு சாத்திரங்களாகும். இவை மெய்ப் பொருளைக் காட்டி ஆன்மாவை விளக்கம் பெறச் செய்தலின் **"மெய்கண்ட சாத்திரங்கள்"** என்று அழைக்கப்படுகின்றன.

சிவநெறியாளர்களின் சித்தத்தின் முடிவாக இருத்தலின் இது "சைவ சித்தாந்தம்" எனப்பெற்றது.

சைவ சித்தாந்தத்தைத் தோற்றுவித்தவர் ஸ்ரீகண்டராகிய பரமேசுவரனே ஆவர். அவர் வழியாகவே இச்செம் பொருள், வழிவழியாக ஞான ஆசாரியர்கள் மூலமாகச் செழித்து வளர்ந்து வருகிறது.

இந்த ஞானச் செம்பொருளின் மூலபண்டாரமாக விளங்குபவை **"சைவ மடாலயங்களாகும்"** இம்மடாலயங்களில், ஞானமூர்த்தியாக எழுந்தருளி சைவ ஞானதீபத்தைச் சுடர்விடச் செய்து சகல மக்களையும் தங்கள் திருவருள் நோக்கால் அருள் பெற வைத்து முத்தி யெனும் கரைசேர வைப்பவர்கள். ஸ்ரீ மடாதிபதிகளான மகாசந்நிதானங்கள் ஆவர். இத்துறவரசர்கள் யாவரும் சிவபெருமானாகவே எண்ணி போற்றி வணங்கத்தக்கவர்கள்.

இவர்களின் அருளாட்சியில் சைவ மடாலயங்கள் தமிழ்ப் பண்ணையாகவும், ஞானம் விளைகின்ற வயல்களாகவும், பசிப்பிணியும் உடற்பிணியும் நீக்கும் அருள் நிலையங்களாகவும் நிலையங்களாக விளங்குவதுடன் மக்கள் தொண்டேயே மகேசன் தொண்டாகக் கருதிச் செயல்பட்டு வருகின்றன.

தென்னிந்திய வரலாற்றினை நோக்கப் பல்வேறு காலங்களில் பலவேறு சைவ சமயக் கொள்கைகளை விளக்கும் சைவ மடாலயங்கள் இருந்ததை அறிய முடிகிறது. இவற்றில் பல, கால வெள்ளத்தில் கரைந்து போயின. இவற்றில் கலங்கரை விளக்கமாக இப்போதும் நிலைத்து நிற்பது திருக்கயிலாய ஞானபரம்பரையாகும்.

திருக்கயிலாய ஞான பரம்பரை

திருக்கயிலாயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கண்டராகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு 28 சிவாகமங்களை உபதேசித்தார்.

ஒருசமயம் நந்திதேவர் சிவபெருமானிடம் சென்று, "பெருமானே, தாங்கள் அருளிச்செய்த ஆகமங்கள் 28லும் அதற்குத் துணையாய் எழுந்த உபாகமங்கள் 208லும் ஆன்மாக்களுக்குக்காட்டும் ஞானநெறி ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மாதிரி யாகச் சொல்லப்பட்டிருக்கின்றதே, அதன் காரணம் யாது? அந்நூல்கள் கூறும் முடிந்த பொருள்தான் என்ன? அதனை உரைத்தருள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதற்குச் சிவபெருமான் "ஆகமங்களும் உபாகமங்களும் பல்வேறு காலங்களில் சூழ்நிலை களில், பக்குவமுடைய ஞானவான்களுக்கு உபதே சிக்கப்பட்டனவாதலின் பற்பல வகையாக அமைந் துள்ளன. ஆயினும் அவையாவற்றிலும் கூறப் பட்டுள்ள முடிவு ஒன்றேயாகும். அவற்றைச் சுருக் கமாக உமக்கு உரைப்பேன்" என்று கூறி 12 சூத்திரங் களடங்கிய **"சிவஞான போதம்"** என்ற நூலை அருளிச் செய்தார்.

இப்படிச் சிவபெருமானிடமிருந்து உதித்த முதல் ஞானம் நந்தியம் பெருமானை அடைந்தது. இதனை நந்தியம்பெருமான் தனது எட்டு முதன்மைச் சீடர்களான சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர், சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிரபாதர், திருமூலர் ஆகியோருக்கு விரித்து உபதேசித்தார்.

இவர்களில் ஒருவரான சனற்குமார முனிவர், சத்திய ஞானதரிசினிகள் என்பவருக்குச் சிவ ஞானத்தினை விரித்துரைத்தார். அவர் பரஞ்சோதிமா முனிவருக்குச் சிவஞானச்செல்வத்தை உபதேசித்தார்.

இவர்கள் நால்வரும் திருக்கயிலாயத்திலேயே உறைபவர்களாதலின் **"அகச் சந்தான குரவர்கள்"** என்று போற்றப்படுகின்றனர். இவர்களைத் தேவசந் தானக் குரவர்கள் எனவும் அழைப்பர்.

இதில், பரஞ்சோதி மாமுனிவர் வான நாடாகிய கயிலையிலிருந்த ஞானச் செல்வத்தைப் பூமிதனில் பலரும் உய்ய மெய்கண்ட நாயனார்க்கு அருளிச் செய்தார். மெய்கண்டதேவரே சிவஞான போதச் செழும் பொருளைப் பூவுலகில் மக்களிடம் பரப்பிய முதல் குருமாராவார்.

இவர் ஸ்ரீ அருள்நந்தி சிவாச்சாரியாரைத் தமது தலைமைச் சீடராக ஏற்றுக் கொண்டு அவருக்குச் சிவ ஞானபோதத்தினை உபதேசித்தருளினார்.

அப்பெருமான் ஸ்ரீ மறைஞான சம்பந்தருக்கும், மறைஞான சம்பந்தர், ஸ்ரீ உமாபதி சிவாசாரியாருக்கும் வழிவழியாகச் சிவஞானத்தை உபதேசித்தருளி னார்கள்.

இவர்கள் நால்வரும் முதன்முதலாக மண் ணகத்தில் சிவஞானத்தை அருளித் தழைக்கச் செய்த தால் **"சந்தான ஆசாரியர்கள்"** என்று அழைக்கப்படு கின்றனர்.

இவர்களில் நான்காமவராகிய உமாபதி சிவாசாரி யார் ஸ்ரீ அருள் நமசிவாயருக்குச் சிவஞான உபதேசத் தைச் செய்தார். (இவரை மச்சு செட்டியார் எனவும் அழைப்பர்.)

இவர் கொற்றவன் குடியில் இருந்த உமாபதி சிவாசாரியாரின் மடத்திலே எழுந்தருளியிருந்தார். இவருடைய சீடர் ஸ்ரீ சித்தர் சிவப்பிரகாசராவார். இவர் திருவாவடுதுறையில் வாழ்ந்தவர். எல்லாவிதமான சித்துக்களும் கைவரப் பெற்றவர்.

சித்துகள் கைவரப் பெற்றிருந்தாலும் சிவஞானத் தெளிவைக் குருவழியாகப் பெற்றாலன்றி முத்தி கிடைக்காது என்பதால், உரிய குருவைத் தேடித்திரிதார். இறுதியில் அருள் நமச்சிவாயரைக் கண்டு பணிந்து அவருடைய சீடராகிச் சிவஞான உபதேசம் பெற்றார்.

சித்தர் சிவப்பிரகாசரின் சீடரே திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவியவரும் அதன் முதல் ஆசாரிய ருமான **"ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்"** ஆவார். இவரைப் பஞ்சாட்சர தேசிகர் எனவும் வழங்குவர். இவ ரிடமிருந்து குருசீட பரம்பரையாக ஞானச்செல்வர்கள் தோன்றித் திருஆவடுதுறை ஆதீனத் திருமடத்தில் கொலுவீற்றிருந்து சிவஞான போத தீபத்தை ஒளிவிடச் செய்து வருகின்றார்கள்.

இவர்கள் அபிஷேக பரம்பரையினர் நந்தி மரபினர் திருக்கயிலாய பரம்பரையினர்எனப்பலவாறு அழைக்கப்படுகின்றனர். இவ்வகையில் முதன் முதலாகத் தோன்றிச் செழித்து வளர்ந்து வரும் ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனமாடும் இதைத் தொடர்ந்து பல மடாலயங்கள் தோன்றின. அவற்றின் அரும்பணிகளால் சைவமும் தமிழும் வளர்ந்து வருகின்றன.

பூவுலகில் திருக்கயிலாய ஞான பரம்பரையைத் தோற்றுவித்த ஸ்ரீ மெய்கண்டார்

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பாடல்பெற்ற திருத்தலம் பெண்ணாகடம். இதனைக் கடந்தை எனவும் அழைப்பர். புராணங்கள் இத்தலத்தைச் சோகநாசம், சிவவாசம், புஷ்பவனம் முதலிய பெயர்களால் குறிக்கின்றன.

இந்திர சபையில் இருந்த தேவ கன்னியர், காம தேனு, ஐராவதம் முதலியோர் இங்குத் தங்கி பூசித்ததால் இவ்வூர் (பெண்+ஆ+கடம்) பெண்ணாகடம் எனப்பெயர் பெற்றது என்பர்.

தில்லையில் மூவாயிரம் தீட்சிதர்கள் நடராசரை வழிபடுவது போன்று, இத்தலத்தில் ஆறாயிரம் பேர் சிவபூசை செய்து வந்ததாக வரலாறு கூறுகின்றது. இதனால் "தில்லை மூவாயிரம் கடந்தை ஆறாயிரம்" என்ற பழமொழியும் வழங்குகின்றது. அவ்வாறாயிரம் பேருக்கும் காவலாயிருந்த பிடாரி ஆறாயிரத்தம்மன் எனும் பெயரில் இங்கு வீற்றிருக்கின்றாள்.

இங்குள்ள இறைவனின் திருப்பெயர் பிரளயகாலேச்சுவரர் என்பதாகும். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான கலிக்கம்ப நாயனார் வாழ்ந்த திருப்பதி.

இத்தகு பெருமை வாய்ந்த திருத்தலத்தில் சைவசமய சாத்திரங்களுக்கு ஆதாரமான சிவஞான போத நூலை அருளிச் செய்தவரும், மெய்கண்ட சந்தான பரம்பரையைத் தோற்றுவித்து இன்றைய சைவசித்தாந்த மடாலயங்கள் அனைத்திற்கும் ஆதி குருவாக விளங்குபவரான மெய்கண்டார் திருஅவதாரம் செய்தருளினார்கள். இவர் வரலாற்றைத் தொடர்ந்து காணலாம்.

இத்தலத்தில் பெருமைமிக்க சைவ வேளாளர் மரபில் அச்சுதகளப்பாளர் என்ற ஒரு சிற்றரசர் வாழ்ந்து வந்தார். இவருக்கு வெகுகாலமாக குழந்தைப்பேறு வாய்க்கவில்லை. இதனால் வருத்தமுற்ற அவர் திருத்துறையூரில் வசித்து வந்த தம் குலகுருவான சகலாகம பண்டிதரை அணுகித் தம் குறையைச் சொல்லி முறையிட்டார்.

அப்பெருமகன் பண்டைக்கால வழக்கப்படி தேவாரத்தில் கயிறு சார்த்திப் பார்த்தபோது திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய "பேயடையா பிரிவெய்தும்" என்ற திருவெண்காட்டுப்பதிகம் கிடைத்தது. அதனைக் கண்ட குலகுரு அச்சுதகளப்பாளரையும் அவர் மனைவியையும் திருவெண்காட்டிற்குச் சென்று முக்குளநீராடித் திருவெண்காட்டு நாதரை வழிபட்டு வரும்படிப் பணித்தார். அதன்படியே களப்பாளர் தன் மனைவியுடன் திருவெண்காட்டினை அடைந்து முக்குளநீராடி மன, மொழி,மெய்களால் இறைவனை வணங்கி வந்தார்.

ஒருநாள் சிவபெருமான் அச்சுதகளப்பாளரின் கனவில் தோன்றி, "அன்பனே பூர்வ ஜென்ம வினைகளின்படி உனக்கு இப்பிறவியில் பிள்ளைப்பேறு வாய்க்க வழியில்லை என்றார். கண்விழித்த அச்சுதகளப்பாளர் மறுநாள் இறைவனைத் தொழுது "ஐயனே திருஞான சம்பந்தர் வாக்கு பொய்க்கலாமா? அவருடைய வாக்கெல்லாம் உமது வாக்கன்றோ?" என்று கூறி மனமுருக வேண்டினார். அன்றிரவு மீண்டும் கனவில் தோன்றிய இறைவன், திருஞானசம் பந்தரின் வாக்கில் நம்பிக்கை வைத்து எம்மை வழிபட்டதால் உமக்குத், திருஞான சம்பந்தரைப் போன்ற புதல்வனை அளிப்போம்" என்று கூறி மறைந்தார்.

மேலும் சிலநாள் அங்குத் தங்கியிருந்த பின் அச்சுதகளப்பாளர் தம் மனைவியுடன் பெண்ணாகடம் மீண்டார். சில மாதங்கள் கழித்து அத்தம்பதியர்க்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. திருவெண்காட்டுச் சுவேதாரண்யப் பெருமானின் அருளால் பிறந்ததால் அக்குழந்தைக்கு "சுவேதவனப் பெருமான்" என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

சில ஆண்டுகள் சென்றபின் அச்சுதகளப்பாளர் ஒரு போரில் உயிர் துறந்தார், அதன் பின்னர் சில நாட்களில் அவருடைய மனைவியரும் சிவ நிழல் பெற்றார்.

குழந்தையின் தாய்மாமனான திருவெண்ணெய் நல்லூர்க் காங்கேயபூபதி என்பார், அக்குழந்தையைத் தன்னுடன் திருவெண்ணெய் நல்லூருக்கு எடுத்துச் சென்று வளர்த்து வரலாயினர்.

அக்குழந்தை ஒருநாள் தெருவில் மணலால்

சிவன் கோயிலும், சிவலிங்கமும் அமைத்து விளை யாடிக் கொண்டிருந்தது. அப்போது வான்வழியாக ஒரு தேவவிமானத்தில் பரஞ்சோதி முனிவர் கயிலா யமலையில் இருந்து அகத்தியரைக் காணப் பொதிய மலைக்குச் சென்று கொண்டிருந்தார். (இம்முனிவர் நந்தியம் பெருமானிடம் ஞான உபதேசம் பெற்ற சனற்குமாரர்வழி வந்த சத்திய ஞானதரிசினிகளின் மாணவராவார்.

அவர் சென்ற விமானத்தின் நிழல் கீழே விளையாடிக் கொண்டிருந்த குழந்தையின் மீது விழுந்ததால் அது மேலே பறக்காமல் அங்கேயே நின்றது. இதன் காரணத்தைத் தன் ஞான உணர்வால் அறிந்த பரஞ் சோதிமாமுனிவர் கீழே இறங்கி வந்து அக்குழந்தைக்குத் தமக்கு ஞான வழியில் வந்த சிவஞான போதத்தை உபதேசித்தார். பிறகு அக்குழந்தைக்குத் தீட்சா நாமமாக (தம் குருவின் பெயரான சத்ய ஞானதரிசினிகள் எனும் பெயரைத் தமிழ்ப்படுத்தி) மெய்கண்டார் எனும் பெயரைச் சூட்டி விட்டு தன் வழியே சென்றார்.

மெய்கண்டார் தான் கேட்ட அனைத்து உபதேச மொழிகளையும் திருவெண்ணெய்நல்லூர் அருட்டுறை ஆலயத்துள் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானின் சந்நிதியில் அமர்ந்திருந்து, சிந்தித்துத் தெளிந்து சைவசமயம் உய்யும் பொருட்டுச் **"சிவஞானபோதச் சூத்திரத்தை"** அருளிச் செய்தார். அதனைத் தொடர்ந்து அதற்கு வார்த்திகம் என்ற பொழிப்புரையை உதாரணச் செய்யுள்களுடன் அருளிச் செய்தார். அவருடைய ஞான உபதேசத்தால் கவரப் பெற்ற பலரும் அவருக்குச் சீடராயினர்.

இது இப்படியிருக்க அவருடைய குல குருவான சகலாகம பண்டிதர் தம் ஆலோசனைப் படி இறைவனை வழிபட்டுப் பிறந்த குழந்தையான மெய்கண்ட தேவர் தம்மிடம் வந்து ஞானப்பாடம் கேட்பார் என எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

சிவ ஞானபரம்பரையின் அருள்ஞானம் கிட்டிவிட்ட பிறகு, மெய்கண்டாருக்குப் பரம்பரைக் குலகுருவின் உபதேசம் தேவையற்றதாகிவிட்டது. சீடன் தன்னைத் தேடிவராததால் குரு தம்முடைய மாணா க்கர் சிலரை ஒருவர் பின் ஒருவராகத் திருவெண் ணைய் நல்லூருக்குச் சென்று மெய்க்கண் டாரை அழைத்து வரும்படி அனுப்பி வைத்தார். அப்படிச் சென்றவர்கள்



அருள்மிகு மெய்கண்டார்
கோமுத்தீசுவரர் கோயில் திருவாவடுதுறை

மெய்க்கண்டாரின் உபதேசத்தால் கவரப் பெற்று அவருக்குச் சீடராகி அங்கேயே தங்கிவிட்டனர். சென்றவர்கள் திரும்பிவராமற்போகவே சகலாகம பண்டிதர் தாமே திருவெண்ணெய் நல்லூருக்கு வந்தார். இதனை அறிந்த போதிலும் மெய்க்கண்டார் நேரிற்சென்று குலவழி குருவைக் காணவில்லை.

இறுதியில் அவர் தானே மெய்கண்டார் பாடம் சொல்லுமிடத்திற்கு முன்னே வந்து உலவிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் மெய்க்கண்டார் சீடர்களுக்கு ஆணவ மலத்தைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். அதுகண்ட பண்டிதர் தம் வித்யா கர்வம் தொனிக்க ஆணவமலத்தின் சொரூப மென்ன? என்று மெய்கண்டாரிடம் கேட்டார். அதற்கவர் அவரை நோக்கி, "நீரே ஆணவ மலத்தின் வடிவம்" என்று உரைத்தார். மெய்கண்ட ரின் மௌனதீக்ஷையால் உண்மை தெளிந்த குலகுருவானவர் மெய்கண்டாருக்குச் சீடரானார். இவருடைய வழியாகவே சைவசித்தாந்த தத் துவ பரம்பரையான சந்தானபரம்பரை தொடர்ந்து வளருவதாயிற்று.

சிற்றரச மரபில் வந்த மெய்க்கண்ட தேவர் சில காலம் அப்பகுதியை ஆண்டு வந்ததாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவர் காலத்திலேயே பல மடங்கள் தோன்றிச் சிவஞானம் தழைக்க வழி கண்டன.

பல ஆண்டுக் காலம் சைவ சித்தாந்தத்தைத் தழைக்கச் செய்த மெய்க்கண்டதேவ நாயனார் ஒரு ஐப்பசிச் சுவாதி நாளில் திருவெண்ணெய் நல்லூரிலேயே சிவபரிபூரணம் எய்தி அருளினார்கள்.

மெய்கண்டதேவர் ஆலயம்

தென்னாற்காடு மாவட்டம் திருவெண்ணை நல்லூரில் ஊருக்கு மேற்கே மெய்கண்ட தேவரின் பெரிய ஆலயம் உள்ளது. இதில் மூலமூர்த்தியாக மெய்கண்ட தேவர் எழுந்தருளியுள்ளார். திருவாவடுதுறை ஆதீனத்திற்குரியதாகத் திகழும் இக்கோயிலில் நாள் வழிபாடுகள் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. ஐப்பசி சுவாதி நாளில் குருபூஜை விழா சிறப்புடன் நடத்தப்படுகிறது. சுவர்களில் மெய்கண்ட சாத்திரங்கள் கல்லெழுத்துக்களில் பதிக்கப்பட்டுள்ளன.

மெய்கண்டீச்சரம்

திருவண்ணாமலையில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டில் திருவெண்ணெய்நல்லூருடைய மெய்கண்ட தேவர் ஊருடைய பெருமாளான எடுத்தது வலிய வேளாளர் என்பவர், மாற்றூரான மெய்யூரில் ஒரு ஏரியை வெட்டி அதற்கு மெய் கண்டப் புத்தேரி எனும் பெயரிட்டதுடன் அவ்வூரில் மெய்கண்டீச்வரம் என்னும் சிவாலயத்தையும் அமைத்தார் என்ற செய்தி காணப்படுகிறது. இதனைக் கொண்டு மாற்றூரிலுள்ள மெய்கண்டீச்சரம் மெய் கண்டதேவரால் கட்டப்பட்டதென்றும் அவருடைய இயற்பெயர் எடுத்தது வலிய வேளாளர் என்றும் கருதுகின்றனர்.

ஆனால் இச்செய்தி ஏற்புடையதாக இல்லை. ஏனெனில் திருவெண்ணெய் நல்லூர் வேளாளர்கள் தம்மினத்தில் தோன்றிய மெய்கண்ட தேவர் குழந்தைப்பருவத்திலேயே அதிசயமாக ஞானத்துடன் பேரருள் பெற்றுப் பெருமையுடன் விளங்கியதால் அவருடைய ஊரினர் உறவினர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொண்டனர். எடுத்துக்காட்டாகச் செங்காட்டங்குடி கார்காத்த வேளாளரின் பெருமைக்குரியவற்றில் சைவபரிபாலனர். மெய் கண்ட சிவாசாரியார் என்று அவர்கள் தம்மை அழைத்துக் கொள்வதைக் குறிப்பிடலாம்.

அவ்வகையில் திருவெண்ணெய் நல்லூருடைய பெருமாளான எடுத்தது வலிய வேளாளர் என்பார், மெய்கண்ட தேவர் பெயரால் இவ்வூரை அமைத்து ஏரியையும் கோயிலையும் அமைத்தார் என்பதே பொருத்தமுடையதாகும்.

மெய்கண்ட தேவர் 1223-ல் பிறந்ததாகப் பல ஆராய்ச்சியாளர்களால் முடிவு செய்யப்பட்டுள்ளது. அவர் இரண்டாவது வயதில் பரஞ்சோதி மாமுனிவரிடம் ஞானோபதேசம் பெற்றதாகக் கூறுவர். திருவண்ணாமலைக் கல்வெட்டின் காலம் கி.பி. 1232 என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அப்படிப் பார்த்தால் மெய்கண்டாரின் 9-வது வயதில் இக்கல் வெட்டு வெட்டப்பட்டுள்ளது தெரியவரும். இவ்வளவு இளம் வயதில் சிற்றரசராக பொறுப்பேற்றுக் கொண்டார் என்பதும் ஒரு கோயிலைக் கட்டி அதில் நிர்வாகச் சிக்கல் வந்து அதை திருவண்ணாமலை சிவப்பிராமணரிடம் ஒப்படைத்தார் என்பதும் ஏற்க முடியாததாகும். எனவே திருவெண்ணெய்நல்லூர் அன்பர் ஒருவர் தம் தரப்பில் தோன்றியவரின் பெயரைத் தம்முடன் இணைத்துக் கொண்டு சிறப்பு பெற்றார் என்றும், அப்பெயரால் கோயிலையும் ஏரியையும் அமைத்தார் என்றும் கொள்வதே சிறப்புடையதாகும்.

திருவண்ணாமலைக்குத் தெற்கில் அமைந்துள்ளது (மாத்தூர்) மெய்யூராகும். அவ்வூரில் உள்ள ஒரு வீட்டின் பின்புறத்தில் மேற்புறம் முழுவதும் இடிந்த நிலையில் ஒரு சிவாலயம் உள்ளது. அதில் சிவலிங்கம் மட்டுமே உள்ளது. அதிஷ்டானத்தில் உள்ள கல்வெட்டில் மெய்கண்டீச்சரம் என்ற தொடர் காணப்படுகின்றது. இக்கோயிலில் இருந்து கோஷ்ட மூர்த்திகளான விநாயகர், தென்முகக்கடவுள், லிங்கோற்பவர், பிரமன், துர்க்கை ஆகிய திருவுருவங்களும் ஊரின் மேற்கில் உள்ள விநாயகர் கோயிலில் வைக்கப் பெற்றுள்ளன. கோயில் முழுவதும் வேலிகாத்தான் காடாக உள்ளது. இதனைச் சைவ உலகம் கவனித்து மெய்க்கண்டீச்சரத்தைத் திருப்பணி செய்ய வேண்டுவது அவசியம் ஆகும்.

திருக்கயிலாய பரம்பரைத் திரு ஆவடுதுறை ஆதீனக் குரு முதல்வர் அருள் திரு நமசிவாய மூர்த்திகள் வரலாறு

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் மயிலாடுதுறை சாலையில் மயிலாடுதுறைக்கு அருகில் அமைந்துள்ள தலம் திருமூவலூர். அவ்வூரில் ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சைவ வேளாளர் குடும்பம் வாழ்ந்து வந்தது. அக்குடும்பத்திற்கு நீண்ட நாட்களாகக் குழந்தைப்பேறு வாய்க்கவில்லை. அந்தக் குடும்பத்தலைவரான கணவரும், மனைவியாரும் பரம்பரையாகச் சிவபெருமானின் திருவடிக்கே சிந்தை வைத்தவர்கள். ஆதலால் அப்பெருமான் திருவருளையே தமக்குக் குழந்தைப் பேறு உண்டாக நாடினர்.

சிதம்பரம் -மயிலாடுதுறை செல்லும் வழியில் உள்ளபாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்று வைத்தீசுவரன் கோயில். திருப்புள்ளிருக்கு வேளூர் என்பது அதன் பழைய பெயர்.

திருமூவலூர் அன்பரும் அவருடைய துணைவியாரும் திருப்புள்ளிருக்கு வேளூருக்குச் சென்றனர். அங்கு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு தையல் நாயகி உடனாய வைத்தியநாதப் பெருமானை வணங்கிப் பிள்ளைவரம் வேண்டிப் பலகாலம் வழிபட்டனர்.

அவர்கள் செய்த வழிபாட்டுக்கு வைத்தியநாதரும் அருள் செய்தார். சைவம் ஓங்கவும் தமிழகம் தழைக்கவும் இறைவர் இன்னருளால் நல்லதோர் நாளிலே அவர்களுக்கு ஆண்மகவு பிறந்தது. வைத்தியநாதப்பெருமான் அருளால் பிறந்ததால் அக்குழந்தைக்கு, "வைத்தியநாதன்" என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வைத்தியநாதர் வளர்ந்து வந்தார். பிறந்த நாள் முதலாக தூய உள்ளமும் சிவ சிந்தனையும் உடையவராகவே இருந்தார். அவர் இடைஇடையே பெற்றோரோடு திருப்புள்ளிருக்கு வேளூர் செல்லுவார். அங்குப் பெருமானை வணங்குவார், வாழ்த்தி மகிழ்வார்.

இப்படியே ஆண்டுகள் கழிந்தன. வயது ஏழு ஆயிற்று. வழக்கம் போல் ஒரு நாள் பெற்றோரோடு புள்ளிருக்கு வேளூர் சென்றார். அங்கு சிவபெருமானை வழிபட்டு நின்றார். அப்போது சிவபெருமான் அர்ச்சகர் போல் திருமேனி தாங்கி, அங்கு



அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

வழிபட்டு நிற்கும் வைத்தியநாதப் பிள்ளையின் முன்பு வந்தார்.

அவரைத் திருஅருள் நோக்கம் செய்ததுடன் தம் திருக்கையால் அவரிடம் ஒரு சிவலிங்கத் திருமேனியைக் கொடுத்தருளி அதனை வழிபடும் முறையையும் உணர்த்தினார்.

இந்த நிகழ்ச்சியை அறிந்த பெற்றோர்கள் பேரின்பம் அடைந்தனர். வைத்தியநாதப் பெருமானை மனம் நெகிழ்ந்து வாழ்த்திப் போற்றி வீடு திரும்பினார். அன்று முதல் மூவலூர் வைத்தியநாதர் சிவ வழிபாட்டில் சிறக்கலாயினார்.

நவகோடி சித்தபுரம் என்று போற்றப்படும் தலம் திருஆவடுதுறையாகும். இதுபோலவே அன்று திருமறைக்காடு என்று போற்றப்பட்ட தலம் வேதாரண்யம் ஆகும். இந்த இரண்டிடத்தும் சித்தராய் விளங்கியவர் சிவப்பிரகாசர் அவர் சைவ சித்தாந்த சந்தான மரபில் வந்த திருஅருள் நமச்சிவாயரின் சீடராவார்.

அருள் நமச்சிவாயர் சந்தான ஆசிரியருள் ஒருவரான உமாபதி சிவாசாரியார் வழிபட்டு வந்த அழகிய திருச்சிற்றம்பலம் உடையாரையும் அம்பல வாணரையும் அருள் நமச்சிவாயர் பெற்று வழிபாடு செய்து வந்தார். அவரிடமிருந்து அம்மூர்த்திகளைச் சித்தர் சிவப்பிரகாசர் தம் வழிபாட்டிற்குப் பெற்று வழிபட்டு வந்தார்.

*****

சித்தர் சிவப்பிரகாசர் ஒருநாள் மூவலூருக்கு வந்தார். வைத்தியநாதர் அவரைக் கண்டு வணங்கினார். அவர் உள்ளம் சித்தர் சிவப்பிரகாசர் பால் நாடிற்று. அவர் திருவடிகளில் வீழ்ந்து தம்மை ஆட்கொண்டருளுமாறு வேண்டிநின்றார். சிவப்பிர காசர் பிள்ளையின் பக்குவத்தை அறிந்தார்.

பெற்றோர் இசைவோடு அவரைத் தம்முடன் திருஆவடுதுறைக்கு அழைத்துச் சென்றார். சில முறை அவர்கள் இருவரும் திருமறைக்காடு சென்று மீண்டனர். பிறகு திருஆவடுதுறையில் நிலையாகத் தங்கி அங்குக் கோயில் கொண்டருளும் அருள்மிகு மாசிலாமணிப் பெருமானையும் ஒப்பிலாமுலை அம்மையையும் வணங்கி வந்தனர்.

சித்தர் சிவப்பிரகாசர் வைத்தியநாதரின் பக்கு வம் கண்டு ஒருநாள் அவருக்குச் சிவஞானதீக்ஷை செய்தருளினார். தம் ஆசிரியர் திருப்பெயரையே தீட்சைப் பெயராக அவருக்குச் சூட்டியருளினர். அன்று முதல் வைத்தியநாதர் **"ஸ்ரீநமச்சிவாயர்"** ஆனார்.

ஒருநாள் நமச்சிவாயர் காவிரிக்கு நீராடிவரச் சென்றிருந்தார். அப்பொழுது சிவப்பிரகாசர் தாம் எழுந்தருளியிருந்த இடத்தைக் கீறித்திருஅறை ஒன்று அமைத்தார்.

மற்றைய மாணாக்கரை நோக்கி "அன்பர்களே, நாம் திருமறைக்காடு செல்கின்றோம். இன்று முதல், அழகிய திருச்சிற்றம்பலம் உடையார், அம்பல வாணர் பூசைகளை நமச்சிவாயன் செய்து வருவானாக., இந்த அறையில் அமர்ந்து சித்தாந்த மரபு தழைக்க, அன்பர்க்கெல்லாம் ஞானத்தை வழங்கி வருவானாக, இது நமது ஆணை என்று அவனிடம் கூறுங்கள் எனத் திருவாய் மலர்ந்து அருளினார். பின்னர் அங்கிருந்து நீங்கித் திரு மறைக் காட்டிற்குச் சென்றுவிட்டார்.

காவிரியில் நீராடித் திருமடத்திற்கு மீண்ட நமச்சிவாயர் நடந்ததை, அறிந்தார். உள்ளம் கலங்கினார். ஆசிரியப் பெருமானை இனி என்று காண்போம் என அலமந்தார். அவருடைய "ஆணைவழி" நிற் பதே தமக்கு உரிய கடமை என உணர்ந்தார்.

அன்றுமுதல் உமாபதிசிவம் வழிபட்டு வந்த அழகிய திருச்சிற்றம்பலம் உடையாரையும் அம்பல வாணரையும் தம் உயிர்த் தலைவராகிய வைத்திய நாதரையும், ஆகமநெறி வழுவாது வழிபாடாற்றத் தொடங்கினார். சித்தர் சிவப்பிரகாசர் வகுத்தருளிய திருவறையில் வீற்றிருந்து தம்மை அணுகிவந்த அன்பர்க்கெல்லாம் ஞானப் பெரும் பொருளை வழங்கி வரலானார்.

இவரிடம் ஞானதீட்சை பெற்ற முதல் சீடரான சிவப்பிரகாசர், வீரசைவ நெறியில் செல்ல நேரிட்ட மையால் துறைசை மறைஞான தேசிகர்க்கு ஞான நன்னீராட்டியருளினார். சிலநாளிலேயே மறை ஞான தேசிகர் இடையறாத நிட்டையில் இனிது அமர்ந்துவிட்டார்.

பின்னர், நமசிவாயதேசிகர் தம் அடியார் திருக் கூட்டத்தில் மேலும் இருவருக்கு ஞானத் திருமு ழுக்குச் செய்வித்தார். அவ்விருவர் தட்சிணாமூர்த்தி தேசிகரும், அம்பலவாண தேசிகரும் ஆவர்.

தட்சிணாமூர்த்தி தேசிகர் தச காரியம், உபதேச பஃறொடை முதலான நூல்களை அருளிச் செய்து ஒரு மாசித்திங்கள் சித்திரை நாளில் சிவநிறைவில் இரண்டறக் கலந்தார்.

பின்னர் நமசிவாயர் அம்பலவாணருடன் நீண்ட காலம் இருந்து மாணாக்கர் பலருக்கு அருள் ஞானம் வழங்கிவந்தார். நமசிவாயப் பெருமான் தமது மாணாக்கர் அம்பலவாண தேசிகருக்கு அருள் ஆணை தந்தபின் ஒரு தை அசுவதி நன்னா ளில் தமது பூத உடம்போடு இருந்தபடியே இருந்து எங்கும் செறியும் பரசிவப் பெரும் பொருளோடு வேற்றக்கலந்து சிவமாம் தன்மையிற் திகழ்ந் திருந்தார்.

அருள்திரு நமசிவாயரது அருள் ஒளி அன்று முதல் அம்பலவாண தேசிகரிடத்தும், பின்னர் வழிவழியாக வந்து கொண்டிருக்கும் குரு மகாசந்நிதானங்கள் இடத்தும் நிலைபெற்று நின்று சைவ உலகத்தை வாழ்வித்துக் கொண்டு வருகிறது.

நெற்றிக்கண்ணும் நீலகண்டமுடைய திருக்க யிலைச் சிவபெருமானே சீகண்டதேவர் தொடங்கி

நந்தியம்பெருமான் வழி வந்த மெய்கண்ட தேவ ராகவும். இங்கு நமக்கு அருளிவரும் நமசிவாய மூர்த்தியாகவும் தொடர்ந்துவரும் சந்நிதானங் களாகவும் இருந்து இருமை வாழ்வும் சிறக்க அருள் புரிந்து வருகின்றார் என்பது அருளாளர்களின் நம்பிக்கையாகும்.

அத்திருமரபிலே இன்று நம் கண்கள் கண்டு களிக்க இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதான மாக **சீர் வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி** அவர்கள் வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள் பாலித்து வருகின்றார்கள்.

மகரத் தலைநாள் குருபூசைவிழா


ஆதீனக் குருமுதல்வர் சிவநிலையெய்திய தைமாத அசுவினி நட்சத்திரத்தைக் கடைநாளாகக் கொண்டு பத்துநாட்கள் விழா நடத்தப்படுகிறது. இதன் முதல் நாளான மூலநாளில் காவிக் கொடியேற்றப்படும். தொடர்ந்து விழா சிறப்பாக நடைபெறும். குரு பூசையை ஒட்டியே திருவாவடுதுறை கோமுத்தீசப்பெருமான் பெருந்திருவிழாவும் நடைபெறும். இவை இரண்டையும் ஒன்றுசேர அன்பர்கள் கண்டுகளிக்கலாம்.

ஞானமா நடராஜப்பெருமான்

திருவாவடுதுறை ஆதீனத்தில் பெரிய பூசை மடம் என்னும் பூஜா மண்டபத்திலுள்ள வெள்ளித்தேர் மஞ்சத்தில் ஞானமாநடராரும், அழகிய சிற்றம்பல முடையார் என்னும்சிவலிங்கமூர்த்தியும் எழுந்தருளி யுள்ளனர். இம்மூர்த்திகள் சந்தானாசாரியர்களுள் ஒருவரான உமாபதி சிவத்தால் நாள் தோறும் பூசிக்கப் பெற்றவர்களாவர். அவரிடமிருந்து அருள்நமசிவாயர் சித்தர் சிவப்பிரகாசர் வழியாக இவ்வாதீனத்தின் ஆதி குரு முதல்வரான நமசிவாய மூர்த்திகளிடம் வந்து சேர்ந்தவர்களாவர்.

மேலும், இந்ததேரில் குருமுதல்வரான ஸ்ரீநம சிவாயமூர்த்திகளுக்கு வேளூர் வைத்தீசுவரப் பெருமான் சிவாசாரியர் வடிவில் தோன்றி அளித்த வைத்தியநாதர் என்ற சிவலிங்கமூர்த்தியும் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளது. இம்மூர்த்திகளை ஆதி குருமுதல்வர் அவரைத் தொடர்ந்து ஆதீனகர்த்தராக இருந்து வரும் மடாதிபதிகளும் தொடர்ந்து தினப்பூசை கள் செய்து வழிபட்டுவருகின்றனர்.

நாள்தோறும் காலையில் அபிஷேக ஆராதனை களும், இரவில் தீபாராதனையும் நடைபெறுகின்றன. இந்த மூர்த்திகளை நினைவூட்டும் வகையில் ஆதீனத்தின் அத்தனை கிளை மடங்களிலும் தனிப்பூசை மண்டபத்தில் சிவலிங்கமும், நடராஜ மூர்த்தியும் எழுந்தருளி வைக்கப் பெற்று பூசனைகள் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன.



திருவாவடுதுறை ஆதீனத்தில் ஸ்ரீ ஆனந்த மாநடராசப் பெருமானும் சிவலிங்கங்களும் எழுந்தளியுள்ள வெள்ளி மஞ்சம்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
குரு பரம்பரை விளக்கம்

சீகண்ட பரமசிவன்
(முழுமுதற்பொருளாகிய சிவபெருமான்)
↓
திருநந்தி தேவர்
↓
சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர்
↓
சத்தியஞானதரிசினிகள்
↓
பரஞ்சோதிமாமுனிவர்
↓
மெய்கண்ட தேவநாயனார்
↓
அருள்நந்தி சிவாசாரியார்
↓
மறைஞானசம்பந்த சிவாசாரியார்
↓
உமாபதி சிவாசாரியார்
↓
அருணமச்சிவாயர்
↓
(சித்தர் சிவப்பிரகாசர்)

இவர்களிடமிருந்து அருள் பெற்ற நமச்சிவாய மூர்த்திகளிடமிருந்து திருஆவடுதுறை ஆதீனம் தொடங்குகிறது. (தொடர்ச்சி இடப்புறம்).



● "ஆதீனக்குருமுதல்வர்"

(திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வரான)

1. ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் - 1560-1621
2. ஸ்ரீ மறைஞான தேசிகர் - 1621-1625
3. ஸ்ரீ அம்பலவாண தேசிகர்
4. ஸ்ரீ உருத்திரகோடி தேசிகர்
5. ஸ்ரீ வேலப்ப தேசிகர்
6. ஸ்ரீ குமாரசுவாமி தேசிகர்
7. ஸ்ரீ (பின்) குமாரசுவாமி தேசிகர்
8. ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் - 1625-1658
9. ஸ்ரீ இராமலிங்க தேசிகர் - 1658-1678
10. ஸ்ரீ வேலப்ப தேசிகர் - 1678-1700
11. ஸ்ரீ (பின்)வேலப்ப தேசிகர் - 1700-1730
12. ஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர் - 1730-1770
13. ஸ்ரீ அம்பலவாண தேசிகர் - 1770-1789
14. ஸ்ரீ (வேளூர்) சுப்பிரமணிய தேசிகர் - 1789-1845
15. ஸ்ரீ அம்பலவாண தேசிகர் - 1845-1869
16. ஸ்ரீ (மேலகரம்) சுப்பிரமணிய தேசிகர் - 1869-1888
17. ஸ்ரீ அம்பலவாண தேசிகர் - 1888-1920
18. ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் - 1920-1922
19. ஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர் - 1922-1937
20. ஸ்ரீ அம்பலவாண தேசிகர் - 1937-1951
21. ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் 13-4-1951 முதல் 23-9-1967
22. ஸ்ரீ அம்பலவாண தேசிகர் 23-9-1967 முதல் 7-4-1983
23. சீர் வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரசந்நிதி அவர்கள் (7-4-1983 முதல் ஆதீன ஞானபீடத்தில் கொலுவிருந்து அருளாட்சி செய்து வருகின்றார்கள்.)



"இந்நாளைய குருபிரான் மகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாசதேசிக பரமாச்சார்யார்"

ஆதீனம் பரிபாலித்து வரும் ஆலயங்கள்

"ஆலயத்தை அரன் எனத் தொழுமின்" என்ற மெய்கண்ட வாசகத்தின்படி ஆதீனம் சிவாலயங்களையும், அவற்றைச் சார்ந்த துணைக் கோயில்களையும் நன்முறையில் பராமரித்து வருகின்றது. ஆதீனத்தின் ஆட்சியின் கீழுள்ள ஆலயங்களின் பெயர்கள் வருமாறு:-

1. அருள்மிகு கோமுக்தீசுவரசுவாமி திருக்கோயில் - திருவாவடுதுறை
2. அருள்மிகு வடவாரண்யேசுவரசுவாமி திருக்கோயில் - திருவாலங்காடு
3. அருள்மிகு வீழிநாத சுவாமி திருக்கோயில் - திருவீழிமிழலை
4. அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயில் - திருவிடைமருதூர்
5. அருள்மிகு மனோக்கியநாதசுவாமி திருக்கோயில் - திருநீலக்குடி
6. அருள்மிகு பிராணநாத சுவாமி திருக்கோயில் - திருமங்கலக்குடி
7. அருள்மிகு அட்சயநாதசுவாமி திருக்கோயில் - திருமாந்துறை
8. அருள்மிகு ஆத்மநாத சுவாமிகள் திருக்கோயில் - திருப்பெருந்துறை
9. அருள்மிகு அட்சயநாதசுவாமி திருக்கோயில் - நரசிங்கன்பேட்டை
10. அருள்மிகு சுயம்புநாதசுவாமி திருக்கோயில் - நரசிங்கன்பேட்டை
11. அருள்மிகு கஸ்தூரியம்மன் திருக்கோயில் - நரசிங்கன்பேட்டை
12. அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயில் - மயிலாடுதுறை
13. அருள்மிகு நீலகண்டேசுவரசுவாமி திருக்கோயில் - இலுப்பைப்பட்டு
14. அருள்மிகு பாணபுரீசுவரசுவாமி திருக்கோயில் - பாணாபுரம்
15. அருள்மிகு கலியாணசுந்தரேசுவரசுவாமி திருக்கோயில் - நல்லூர்
16. அருள்மிகு விசுவநாதர் திருக்கோயில் - கரைகண்டம்
17. அருள்மிகு சிவசூரியப் பெருமான் திருக்கோயில் - சூரியனார்கோயில்
18. அருள்மிகு சந்திவிநாயகர் திருக்கோயில் - குறுக்குத்துறை
19. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் - குறுக்குத்துறை
20. அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயில் - ஆறுமுகநேரி

இந்த இருபது பெருங்கோயில்களைத் தவிர மேலும் அறுபது சிறுகோயில்களும் ஆதீனத்தின் ஆட்சியில் உள்ளன. இவற்றில் பூசைகளும் விழாக்களும் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன.

மண்டகப்படிகளும் திருவிழாக்களும்

ஆதீனம் தமது நேரடிப் பார்வையிலுள்ள கோயில்களைப் பரிபாலிப்பதுடன் அனேக கோயில்களில் மண்டகப்படிகளையும், விழாக்களையும் நடத்தி வருகின்றது. இவ்வகையில் நூற்றுக்கும் மேற்பட்ட விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன.

கட்டளைகள்

ஆதீனத்தின் ஆட்சியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்டளைகள் நடத்தப்பட்டு வருகின்றன. திருச்செந்தூர், மதுரை, குற்றாலம் முதலிய தலங்களிலுள்ள கட்டளைகள் மூலம் அங்குள்ள ஆலயப் பூசைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

● இந்துசமய ஆலயங்களில் மிகவும் பெரிய நிகழ்ச்சியாகக் கொண்டாடப்படுவது கும்பாபிஷேகமாகும். கும்பாபிஷேகத்தின் ஒரு அங்கமாக இறைவனின் திருவுருவத்தையும் அதன் பீடத்தையும் இணைக்கும் வகையில் மருந்து சாத்துதல் என்ற நிகழ்ச்சி நடைபெறும். அஷ்டபந்தனம் என்கிற இந்த மருந்து எட்டு சித்த மருந்துப் பொருள்களை வெண்ணையுடன் கலந்து இடித்து ஆகமங்களில் கூறப்பட்டுள்ளப்படி தயாரிக்கப்படுவதாகும். தரமான அஷ்டபந்தன மருந்துகளை ஆதீனம் தயாரித்துக் கும்பாபிஷேகம் நடைபெறும் கோயில்களுக்குத் தமது அருட்கொடையாகவும் அடக்கவிலைக்கும் அளித்து வருகின்றது.

ஆதீனத்தின் அரும்பணிகள்

❊ மருத்துவம்- பெண்கல்வி - சிறுபாலர்க்கல்வி ஆகியவற்றில் ஆதீனம் அதிக கவனம் செலுத்துகின்றது. ஆதீனத்தின் சார்பில் தட்டச்சுப் பயிற்சிப் பள்ளி, தையற்பயிற்சிப்பள்ளி, பாலர் வகுப்புகள், மேனிலைப் பள்ளிகள், மருத்துவமனைகள் முதலியன நடத்தப்படுகின்றன. திருக்குறளைப் பரப்பத் திருக்குறட்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவ்வகையில் இருபதுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பெற்று திறம்பட செயலாற்றப்படுகின்றன.

❊ ஆதீனம் தாமே பல தொண்டுகளைச் செய்தாலும் பிற தொண்டு நிறுவனங்களையும் ஆதரித்து வருகின்றது. ஆண்டுதோறும் ஆதீனத்தால் இருபத்தேழுக்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்யப்பட்டு வருகின்றது.

❊ சமயக் கருத்துகளை மக்கள் கேட்டு மனம் மகிழும் வகையில் ஆதீனம் அறிஞர்களைக் கொண்டு சமயபோதனைகளை ஆங்காங்கு நடத்திவருகிறது. சுசீந்திரம், விக்கிரமசிங்கபுரம், சங்கரன் கோயில், காஞ்சீபுரம் உள்ளிட்ட பதினைந்து ஊர்களில் நிரந்தரமாக மாதந்தோறும் அறிஞர் பெருமக்கள் ஆதீனத்தின் சார்பில் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்ந்து வருகிறது.

பசுமடங்கள்

பார்வதி தேவியார் பசுவடிவம் கொண்டு வழிபட்ட தலம் திருஆவடுதுறை. இதனால் இதற்குக் கோமுத்தி, கோகழி, கோபுரம் போன்ற பல பெயர்கள் வழங்குகின்றன. திருவாவடுதுறையில் பசுக்களின் துன்பத்தை நீக்கவே ஒரு சித்தர் மூலன் என்பவனின் உடலில் புகுந்து திருமூலரானார். இதுபோன்ற பலவழிகளில் திருவாவடுதுறை பசுக்களோடு தொடர்பு கொண்டிருப்பதைக் காண்கிறோம். சைவத்தின் கடமைகளில் ஒன்று பசுக்களைப் பேணுதலாகும். திருமூலர், "யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை" என்று குறிப்பிடுவார். பலவகையிலும் சிறப்புமிக்கதான பசுக்களைப் பேணுதலை ஆதீனம் சிறப்புடன் போற்றுகிறது. ஆதீனத்தில் பசுமடம் ஒன்று சிறப்புடன் செயல்படுகிறது. இதில் நல்ல கறவைமாடுகள் உள்ளன. பூசைக்கும், மாகேசுவரபூசைக்கும் வேண்டிய பாலும், பால் பொருட்களும் இங்கிருந்து பெறப்படுகின்றன. மாட்டுப்பொங்கலன்று ஆதீனம் இங்கு வந்து கோபூசை செய்து பசுக்களுக்குப் பிரசாதம், சர்க்கரைப் பொங்கல் ஆகியவற்றை அளிப்பதைக் காணலாம்.

நந்தவனங்கள்

பூவினால் செய்யப்படுதலின் இறைவழிபாட்டிற்குப் பூசை என்பது பெயராற்று. தூய பூக்களைப் பெற நந்தவனங்களைப் பரிபாலிக்க வேண்டியது அவசியமாகும். ஆதீனம் திருமடத்தில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளின் பூசனைக்குரிய பூக்களைப் பெற நந்தவனங்களைப் பாலிக்கின்றது. ஆதீனத்திற்குரிய கோயில்களிலும் நந்தவனங்கள் நன்கு பராமரிக்கப்படுகின்றன. குறிப்பாக திருவதிகையில் அப்பர் சுவாமிகளின் தமக்கையாரான திலகவதியார் வாழ்ந்து வந்ததாகக் கருதப்படும் இடத்தில் பெரிய நந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது.

சைவ சித்தாந்த பேரிகை " மெய்கண்டார்" மாத இதழ்

மெய்கண்டபரம்பரையில் தலைமை பெற்ற முதல் ஆதீனமாகிய திருஆவடுதுறை ஆதீனத்தின் சார்பில் வெளிவரும் திங்கள் இதழ், **"மெய்கண்டார்"** ஆகும். இவ்விதழ் சிறப்புடன் தொடர்ந்து சைவ சமயக் கருத்துக்களைப் பரப்பி வருகிறது. இதில் சைவசமயம் சார்ந்த பலவேறு கட்டுரைகள் இடம் பெற்று வருகின்றன.இப்போது திருமந்திரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இதில் மடாலயத்து நிகழ்ச்சிகள், கல்வெட்டுச் செய்திகள் வரலாற்று ஆராய்ச்சிகள் முதலானவை இடம் பெற்றுள்ளன. இந்த இதழுக்கு இவ்வாண்டு (2003) இருபத்திரண்டாவது ஆண்டாகும்.

ஒடுக்கம்

ஆதீனத்தில் குருமகாசந்நிதானம் வீற்றிருந்து அலுவல்களைப் பார்ப்பது, நாடிவரும் அன்பர்களுக்கு அருட்காட்சி அளிப்பது அளவளாவி மகிழ்வது முதலியவற்றிற்கு உரிய இடமாக இருப்பது ஒடுக்கமாகும். இது நடுவில் விசாலமான முற்றமும் நாற்புறமும் திண்ணைகளும் கொண்ட பெரிய கூடமாகத் திகழ்கிறது. இதில் கிழக்கு நோக்கியவாறு பெரிய பீடத்தில் சந்நிதானம் அமர்ந்திருப்பார்கள். அவர்களுக்கு நேராக குருமுதல்வரின் கருவறை விமானம் அமைந்துள்ளது.

கிளைமடங்கள்

ஆதீனத்தின் தலைமையிடமாகத் திருவாவடுதுறை விளங்கிவருகின்றது. ஆதீனத்தின் கட்டளைகளைச் செயல்படுத்தவும், பல்வேறு சமயப்பணிகளைக் கவனிக்கவும் கிளைமடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் அறுபத்தெட்டு கிளைமடங்கள் இயங்குகின்றன. இவ்விடங்களில் தம்பிரான்கள் இருந்து ஆன்ம சாதனைகளையும் சமயத்தொண்டுகளையும் செய்து வருகின்றனர்.

சித்தர்களும் - ஆதீனமும்

தென்னகத்தின் சமயமரபில் தனித்த பெரும் நிலையில் உள்ளவர்கள் சித்தர்கள். இவர்கள் அளப்பரிய சக்தி படைத்தவர்கள். இவர்களின் பெருந்தலைவன் சிவபெருமான். அதனால் அவனுக்கு மகாசித்தன் என்பது பெயராயிற்று. மாபெரும் சித்தரான திருமூலநாயனார்திருவாவடுதுறையில் படர்அரசின் கீழ் இருந்து மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திரமாலையை அருளிச் செய்தார். இந்நூல் தமிழ்வேதமான பன்னிரு திருமுறையில் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. இவருடைய சமாதி ஆலயம் கோமுத்தீசுவரர் ஆலயத்தின் மூன்றாம் பிராகாரத்தில் உள்ளது.

திருவாவடுதுறையில் கொலுவீற்றிருக்கும் மற்றுமொரு பெருஞ்சித்தர் திருமாளிகைத் தேவர். இவர் எண்ணற்ற சித்துக்களைச் செய்தவர். இவர் தம்மீது படைதிரட்டிவந்த மன்னனை எதிர்க்கத் திருவாவடுதுறை ஆலயத்தின் மதில்மீதிருந்த நந்திகளுக்கு உயிர்கொடுத்து அனுப்பினார் என்பர். இவருடைய ஆலயம் திருவாவடுதுறை ஆதீனத்தில் குருமுதல்வரான ஸ்ரீநமசிவாயசுவாமிகள் சந்நிதி மகாமண்டபத்தின் வடபகுதியில் உள்ளது. காலையிலும் மாலையிலும் இங்குச் சிறப்பான பூசைகள் நடைபெறுகின்றன. நண்பகலில் இங்குப் பூசையும், நிவேதனமும் ஆன பிறகே திருமடத்தில் மகேசுவரபூசை நடத்தும் வழக்கம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஆதீனகுரு முதல்வரின் குருவான சித்தர் சிவப்பிரகாசரும் மாபெரும் சித்தராவார். அவர் ஒரே நேரத்தில் திருமறைக்காட்டிலும், திருவாவடுதுறையிலும் இருந்ததைப் பலரும் அறிவர். அனேக சித்துக்கள் கைவரப்பெற்றவர். அவர் அருவ நிலையில் வாழ்ந்துவரும் சித்தர்காடு என்ற இடம் (திருமறைக்காடான) வேதாரண்யத்தின் அருகிலுள்ளது. ஆதீனகர்த்தர்கள் ஆண்டின் சில நாட்கள் அங்குச் சென்று யோகசாதனை பயில்வது வழக்கம்.

இப்படிப் பலவகையிலும் ஆதீனம் சித்தர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாக உள்ளது. திருமூலர், திருமாளிகைத் தேவர் முதலிய சித்தர்களின் விழாக்களை ஆதீனம் சிறப்புடன் கொண்டாடி வருகிறது.



● திருமாளிகைத் தேவர்

திருவாவடுதுறை ஆதீனத்தின் மாபெரும் தமிழ்ப்பணிகள்

திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்கள் சிறந்த நிர்வாகத்திறமை கொண்டவர்களாக இருந்ததுடன் சிறந்த தமிழ் அறிஞர்களாகவும் தமிழ்ப்புலவர்களாகவும் விளங்கினர். இவர்கள் சமயக் கொள்கைகளை விளக்கும் பண்டார சாத்திர நூல்களையும் பல்வேறு தமிழ்ப்பிரபந்தங்களையும் இயற்றியுள்ளனர்.

மேலும், ஆதீனத்தில் பெரும்புலவர்களை ஆதரித்துத் தமிழை வளர்த்தனர். இப்படி வீற்றிருந்த புலவர் பெருமக்கள் இயற்றியுள்ள தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள் ஏராளமாகும். ஆதீனத்தின் அன்பினாலும் ஆசியினாலும் தமிழ்ப்புலவர் பலர் சிறப்பிக்கப் பெற்றனர். அவர்கள் அனைவரையும் நினைவு கூர்தல் எளிதல்ல என்பதால் குறிப்பிடத்தக்க சிலரையும் அவர்களுடைய நூல்களை நினைவுகூரலாம். ஆதீனம் தென்மொழியைப் போற்றியது போலவே வடமொழியையும் போற்றியது. அனேக வடமொழி அறிஞர்கள் மடத்திற்கு வந்து பலவகைச் சிறப்புகளைப் பெற்றனர்.

ஸ்ரீ மாதவச் சிவஞானமுனிவர்

ஆதீனத்தின் குலதெய்வம் என்று போற்றப் படும் விக்கிரமசிங்கபுரம் ஸ்ரீமத்மாதவச் சிவஞான முனிவர் பல அரிய நூல்களை இயற்றியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை சிவஞானபோதத் திற்கு உரையாக அமைந்த திராவிடமாபாடியம் என்ற பேருரை, சிற்றுரை காஞ்சிப்புராணத்தின் முதற்காண்ட மொழிபெயர்ப்பு ஹரதத்தர் இயற்றிய சுலோக பஞ்சக விஷயம், மொழி பெயர்ப்பு சோமேசர் முதுமொழி வெண்பா, ஏகம்பர் அந்தாதி, திருமுல்லைவாயிலந்தாதி, குளத்தூர் பதிற்றுப்பத்தந்தாதி முதலியனவாகும். வடமொழி, தென்மொழி என்ற இரண்டு கடலையும் கரை கடந்த அறிஞரான இவர் இயற்றிய பிரபந்தங் களும் மொழிபெயர்த்து அருளிய நூல்களும் பலவாகும்.

ஸ்ரீ கச்சியப்ப முனிவர்

ஸ்ரீமாதவச் சிவஞானமுனிவரின் தலை மாணாக்கரான ஸ்ரீ கச்சியப்ப முனிவர் கவிராட்சசன் என்று போற்றப்பெற்றார். இவர் இயற்றிய நூல் களும் எண்ணிலாதன. இவற்றில் பூவாளூர்ப் புரா ணம், பேரூர்ப் புராணம், விநாயக புராணம், திருவா னைக்கா புராணம், காஞ்சிப்புராண இரண்டாம் காண்டம், திருத்தணிகைப்புராணம், திருத்தணிகை ஆற்றுப்படை, பெருநகர் பிரமீசர் பதிற்றுப் பத்தந்தாதி பஞ்சாட்சரதேவி அந்தாதி முதலியன குறிப்பிடத்தக்கனவாகும். இவர் குளத்தூர் கந்தசாமி முதலியாரின் வேண்டுகோளின் படி விநாயக புராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடியுள் ளார். இது ஏறத்தாழ 6000 பாடல்களைக் கொண்ட பெரிய நூலாகும்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்கள் பத்துக்கம்பன் என்றும் லட்சக்கவியோகி என்றும் பாராட்டப்பட்டவர். இவர் ஆதீனத்தில் பல ருக்குத் தமிழ்ப் பயிற்றுவித்ததுடன் பல்லாயிரம் பாடல்களையும் இயற்றினார். இவற்றில் குறிப்பிடத் தக்கவை தியாகராஜ லீலை, உறையூர்ப் புராணம், சூதசம்ஹிதை, வாட்போக்கிக்கலம்பகம், சீர்காழிக் கோவை, ஆற்றூர்ப் புராணம், மாயூரப்புராணம், திரு நாகைக் காரோண புராணம், அம்பர் புராணம் முத லியனவாகும். இவர் எண்ணிலாத பிரபந்தங்களை இயற்றியுள்ளார்.

டாக்டர். உ.வே. சாமிநாதஐயர்

டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் அவர்கள் திரு வாவடுதுறை ஆதீனத்தில் நீண்ட நாட்கள் இருந்து மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர் களிடம் தமிழ் பயின்றதுடன் அவருக்குப் பின் ஆதீன வித்துவானாகவும் இருந்தார். அனேக சிற்றிலக் கியங்களைப் பாடியுள்ளார். பண்டைய தமிழ் நூல்களான சங்க இலக்கியங்களைத் தேடி ஆராய்ந்து பதிப்பித்து மாபெரும் தமிழ்ப்பணி யாற்றியுள்ளார். இவர் தமிழ் நூல்களை ஆராய்ந்து வகைப்படுத்திப் பதிப்பித்த முறையையே இன்று பலரும் பின்பற்றி வருகின்றனர். இவர் சேர்த்து வைத்திருந்த நூல் களைக் கொண்டு சென்னை பெசன்ட் நகரில் (ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் கோயி லுக்கு அருகில்) "டாக்டர் உ.வே. சாமிநாதைய்யர் நூலகம்" எனும் பெயரில் நூலகம் ஒன்று இயங்கி வருகிறது.

சரஸ்வதி மகாலயம்

ஆதீனம் அறிவின் அரசியான சரஸ்வதியின் இருப்பிடமாகத் திகழ்கிறது. அதனால் ஆதீனத்தில் சரஸ்வதியின் கொலுமண்டபமாக "சரஸ்வதி மகாலயம்" என்ற நூல்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் சமயக்கலை நூல்கள் நிறைய உள்ளன. பல ஏட்டுச் சுவடிகளும் பல நூல்களின் கையெழுத்துப் பிரதிகளும் பாதுகாத்து வரப்படுகின்றன. விலை மதிப்பும், பழமையும் வாய்ந்த அச்சுநூல்களும் உள்ளன. ஆகமம், சாத்திரம், வேதம், உபநிடதம் ஆகிய பல்வேறு தலைப்புகளில் உள்ள நூல்கள் கற்போருக்கு அமிழ்தம் போன்றவையாகும். மேலும் விக்கரமசிங்கபுரத்தில் சிவஞான முனிவர் நூல் நிலையம் செங்கோட்டையில் அம்பலவாணர் நூல்நிலையம், ஆரல்வாய் மொழியில் பன்னிரு திருமுறை நூல்நிலையம் மூவலூரில் நமசிவாய மூர்த்திகள் நூல்நிலையம் முதலான நூல்நிலையங்களும் ஆதீனத்தால் நடத்திவரப்படுகின்றன.

பண்டார சாத்திரங்கள்

சைவ சமயத்தின் மெய்கண்ட சாத்திரங்களான பதினான்கு நூல்களையும் படித்துப் புரிந்து நடப்பது பலருக்கும் எளிதல்ல என்பதால் ஆதீனக்குருமார்கள் சித்தாந்த சாத்திரங்களை விளக்கிப் புதிய வழி நூல்களைச் செய்தனர். இந்நூல்களே பண்டார சாத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் விரிவை சிவமஞ்சரியின் 14வது மலரில் காண்க. திருவாவடுதுறை ஆதீனத்தில் பயிலப்பட்டு வரும் பண்டார சாத்திர நூல்கள் பதினான்கு ஆகும். இவையாவும் கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துக் குருமார்களால் எழுதப்பட்டவைகளாகும். இவை

1. அம்பலவாண தேசிகர் தசகாரியம்
2. தட்சிணாமூர்த்தி தேசிகர் தசகாரியம்
3. சுவாமிநாத தேசிகர் தசகாரியம்
4. சன்மார்க்க சித்தியார்
5. சிவாச்சிரமத் தெளிவு
6. சித்தாந்த பஃறொடை
7. உபதேசப் பஃறொடை
8. பஞ்சாட்சரப் பஃறொடை
9. சித்தாந்த சிகாமணி
10. உபாய நிஷ்டை வெண்பா
11. நிஷ்டை விளக்கம்
12. உபதேச வெண்பா
13. அதிசய மாலை
14. நமசிவாய மாலை என்பனவாகும்.

இவற்றில் பத்து நூல்கள் மேற்படி ஸ்ரீ ஆதீனத்தில் மூன்றாவது குரவராக எழுந்தளியிருந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகளாலும் இரண்டு நூல்கள் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகளாலும் ஒன்று இலக்கணக்கொத்து ஸ்ரீ சுவாமிநாத தேசிகராலும், ஒன்று பேரூர் ஸ்ரீ வேலப்ப தேசிகராலும் அருளிச் செய்யப்பட்டனவாகும்.

அஞ்சல்வழி சமயக்கல்வி

சைவ சித்தாந்தத்தைப் பலரும் அறிந்து தெளிவு பெற வேண்டும் என்பதற்காக ஆதீனத்தின் சார்பில் அஞ்சல்வழிக் கல்வி நடத்தப்படுகின்றது. இந்தத் திட்டத்தில் சேர்ந்து ஆயிரக்கணக்கான அன்பர்கள் சமயக் கல்வி விளக்கம் பெற்றுள்ளனர். தொடர்ந்து இப்பயிற்சியால் பல்லாயிரவர் பயன்பெற்று வருகின்றனர். அஞ்சல்வழிப் பாடங்களுடன் மாதத்திற்கு ஒருமுறை நேர்முகப் பயிற்சி வகுப்பும் நடத்தப்படுகிறது. இதன் இயக்குனராக வித்யாகுரு சிவத்திரு கு. வைத்யநாத தேசிகர் விளங்கி பல்லாயிரக் கணக்கான அன்பர்களை சித்தாந்த ரத்தினங்களாக ஒளிப்பெறச் செய்து வருகின்றார்.

ஸ்ரீநமசிவாயமூர்த்திகள் அச்சகம்

சமய விளக்க நூல்களைக் குறைந்த விலையில் வெளியிட ஆதீனம் தாமே ஒரு பெரிய அச்சகத்தை நிறுவியுள்ளது. நமச்சிவாயமூர்த்திகள் அச்சகம் என்ற இதன் மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. தலவரலாறுகள், திருமுறைப்பதிகங்கள், சாத்திரநூல் கருத்துக்கள் ஆகியன தெளிவாகவும் சிறப்பாகவும் குறைந்த விலையிலும் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

தங்கச் செங்கோல்



இந்திய சுதந்திர தினப் பிரகடன நாளில் அந்நாளைய பிரதமர் நேருஜியுடன் ஆதீனத் தம்பிரானும் பணியாளர்களும்

திருவாவடுதுறை ஆதீனம் சைவத்தையும், தமிழையும் இருகண்களாகப் போற்றுவதைப் போன்றே இந்திய தேசிய ஒருமைப்பாட்டையும் தேசபக்தியையும் போற்றுகிறது. அகில இந்திய தலைவர்களான நேரு, இந்திராகாந்தி, காமராஜர் முதலான முதுபெரும் அரசியல் தலைவர்கள் திருவாவடுதுறையில் வீற்றிருந்த ஆதீனகர்த்தர்களிடம் ஆசி பெற்றுச் சென்றுள்ளனர். ஆதீனம் நாட்டிற்கு நெருக்கடி நேர்ந்த சமயங்களில் மக்கள் நலனுக்காக வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றது.

அயலவர் ஆதிக்கத்தில் இருந்து இந்தியா 200 ஆண்டுகளுக்குப் பிறகு மகான் காந்தியடிகளும் சுதந்திர வீரர்களும் நடத்திய சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக நாடு விடுதலை பெற்றது. இதனையொட்டி 14.8.1947 ஆம் நாள் நள்ளிரவு 12 மணிக்கு சுதந்திரப் பிரகடனம் செய்யப்பெற்றது. அந்நிகழ்ச்சிக்கு முன்னர் கனம் ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் முன்னிலையில் வைதிகச் சடங்குகள் பல நடைபெற்றன.

அந்நாளில் திருவாவடுதுறையில் அருட்செங்கோலோச்சியவர் இருபதாவது மகாசந்நிதானம் ஸ்ரீ அம்பலவாண தேசிகராவர். அப்பெருமான், மேன்மைகொள் சைவநீதி உலகமெங்கும் விளங்குக எனும் கருத்திற்கேற்ப அழகிய நந்திதேவரை உச்சியிற் கொண்ட நீண்ட செங்கோலைச் செம் பொன்னாற் செய்து, ஆதீனத்துப் பெரிய தம்பிரான் ஓதுவா மூர்த்திகள் பெரிய காரியஸ்தர்கள் முதலியவர்களை டில்லிக்கு அனுப்பி அதனை இரவு 11.45 மணிக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற முதல் பிரதம மந்திரியான ஜவஹர்லால் நேருவிடம் கொடுக்கச் செய்தார்கள். அப்போது நமசிவாய மூர்த்திகளின் விபூதிப் பிரசாதமும் சந்தன மாலைகளும் பிரதமரிடம் அளிக்கப்பெற்றன. செங்கோலை பெரிய தம்பிரான் சுவாமிகள் **"தங்கச் செங்கோல் தங்கள் செங்கோல் தங்கள் செங்கோல் எங்கள் ஆட்சியின் சின்னம்"** என்று கூறி அளித்தார்கள். உடனிருந்த ஓதுவாமூர்த்திகள் **"அரசாள்வர் ஆணைநமதே"** என்ற திருஞான சம்பந்தரின் திருப்பதிகத்தை ஓதினார்கள்.

அச்செங்கோல் டெல்லி செங்கோட்டையில் உள்ள பரிசுப்பொருள் கண்காட்சியில் திருவாவடுதுறையின் சிறப்பைப் புலப்படுத்திக் கொண்டு இருந்து வருகின்றது.

சிவதீக்ஷை

சைவர்கள் சிவபூசையைச் செய்வதற்கான தகுதியைப் பெற சிவதீக்ஷையை உரிய குருவின் மூலமாக பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாகும். சைவநெறி கிரியா நூல்களில் சொல்லப்பட்டுள்ள விதிகளின் படி சிவதீக்ஷையைப் பெற்றுக்கொண்டு சிவபூசை செய்வதால் அதன் பயன் ஒன்று ஆயிரமாகிறது. இந்தத் தீக்ஷையை எல்லாக் காலங்களிலும் பெறலாம் என்றாலும் சிவராத்திரியின் மூன்றாம் காலத்தில் பெறுவதால் அதிக நன்மையை அடைகிறோம். திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவ நெறிகளைக் கடை பிடித்து சிவபூசை செய்யும் பக்குவம் உடையவர்களுக்கு ஆகம மரபின்படி சிவதீக்ஷை அளிக்கப்படுகிறது. சிவராத்திரி நாளில் அன்பர்கள் ஆதீனத்திற்கு வந்து சிவதீக்ஷையைப் பெற்றுக்கொண்டு பலர் தம்முடைய ஆத்மார்த்த சிவபூசையைச் செய்யத் தொடங்குகின்றனர். இவர்களுக்கு வேண்டிய பயிற்சிகள் யாவும் ஆதீனத்தால் விளக்கமாகக் கூறப்படுகிறது.



சதுர்முகலிங்கம் - திருவதிகை
படம் உதவி - தமிழ்நாடு தொல்பொருள் துறை

முகலிங்கம்

உலகிலுள்ள வணக்கத்திற்குரிய பொருள் களில் தலைசிறந்த முதன்மைப் பொருளாக இருப்பது சிவலிங்கமாகும்.

இந்தியாவெங்கும் பல்லாயிரக்கணக்கான சிவலிங்கங்கள் வணங்கப்பட்டு வருகின்றன. இவை வடிவம், வண்ணம், அளவு என்று பல ஆயிரம் தன்மைகளையுடையதாக உள்ளன. இவை அனைத்தையும் பெரியோர்கள் நான்கு பிரிவாக வகைப்படுத்தியுள்ளனர்.

இவை ஆட்யம், ஸூரேட்டயம், அநாட்டயம் சர்வசமம் என நான்கு வகைகளாகும்.

இவற்றில் ஆட்யம் என்பது தன்னுள் 1001 முகங்களைக் கொண்ட ஆயிரத்தொருலிங்கம் எனப்படும்.

ஸூரேட்டயம் என்பது தன்னுள 108 லிங்கங்களைக் கொண்ட நூற்றெட்டு லிங்கமாகும். இது அஷ்டோத்திரலிங்கம் எனவும் அழைக்கப்படும்.

மூன்றாவதான அனாட்டயம் என்பது இப்போது வழக்கில் உள்ளதும் (முகலிங்கங்களாக இல்லாததுமாகிய அனைத்து வகை சிவலிங்கங் களாகும்.

சர்வசமம் என்பது தன்னில், ஒன்று முதல் ஐந்து முகங்களைக் கொண்ட முகலிங்கமாகும். இந்த முகலிங்கங்களைப் பற்றிய விரிவான செய்திகளையே இம்மலரில் காணப்போகிறோம்.

இனி ஆகமம், புராணம், வழக்கியல் முதலியவற்றின் மூலம் முகலிங்கங்களைப் பற்றிய செய்திகளை விரிவாகக் காணலாம்.

முகலிங்கங்கள் - அறிமுகம்

சிவாலயங்களில் ஆயிரக்கணக்கான வகையில் அமைந்த லிங்கங்கள் வைத்து வழிபடப் பட்டாலும் முகலிங்கங்கள் அபூர்வமாகவே வழிபடப்படுகின்றன. இவை

ஒரு முகம் கொண்ட ஏகமுகலிங்கம்;
இரண்டு முகம் கொண்ட துவிமுகலிங்கம்;
மூன்று முகம் கொண்ட திரிமுகலிங்கம்;
நான்கு முகம் கொண்ட சதுர்முகலிங்கம்;
ஐந்து முகம் கொண்ட பஞ்சமுகலிங்கம்;

என ஐந்து வகைப்படுகின்றது. ஆறாவது வகையான ஷண்முகலிங்கம் என்ற லிங்கமும் உண்டு. ஆனால் இதனை வழிபடுகிற வழக்கம் காணப்படவில்லை.

முகலிங்கங்களில் உள்ள முகங்கள் சிவபெருமானின் வடிவமான பஞ்சப்பிரம்மங்கள் எனப்படும் சத்யோஜாதர், அகோரர், தத்புருஷர், வாமதேவர், ஈசானர் என்னும் ஐவரின் திருமுகங்கள் என்பர் சிலர்.

சிலர் உலக உற்பத்திக்காகச் சிவபெருமான் கொள்ளும் பஞ்சசாதாக்கிய நிலைகளில் மூன்றாம் நிலையில் ஒருமுகமுடையவராக சிவபெருமான் லிங்கத்தின் நடுவில் தோன்றுகிறார். இந்நிலையே ஒருமுகலிங்கம் அடைவதற்கு காரணம் என்பர்.

இதுபோலவே சிவசாதாக்கியத்தின் நான்காவது நிலையில் நான்கு முகம் கொண்டவராகச் சிவபெருமான் விளங்குகின்றார். இதை உணர்த்துவதாகவே நான்கு முகலிங்கம் அமைகிறது. இந்த நான்கு முகலிங்கம் பிரம்ம லிங்கம் எனவும் அழைக்கப்படுகிறது என்பர்.

மேலும் ஐந்தாவது சாதாக்கிய நிலையில் ஐம்முகம் கொண்டவராக சதாசிவம் எனும் பெயரில் சிவபெருமான் எழுந்தருளுகிறார். இந்நிலையைக் குறிக்க அமைந்ததே பஞ்சமுகலிங்கமாகும்.

பொதுவாக நான்கு முகங்கள் கொண்ட லிங்கத்தையே பஞ்சமுகலிங்கம் என அழைக்கின்ற வழக்கமும் உள்ளது. நான்கு திசையை நோக்கியவாறு உள்ள நான்கு முகங்களுடன் உச்சியில் விளங்கும் வழவழப்பான பகுதியை ஐந்தாவது முகமாகவும் கொள்கின்றனர். இத்தகைய ஐந்து முகலிங்கங்கள் பலதலங்களில் அமைந்திருக்கக் காணலாம்.

முகலிங்கங்களை வழிபடுவதால் இம்மையில் அஷ்ட ஐஸ்வர்யங்களும் மறுமையில் சிவசாயுஜ்யமும் கிடைக்கும் எனப் புராணங்கள் கூறுகின்றன.

முகலிங்கங்களை அமைக்கும்போது சிவலிங்கத்தின் பாணப்பகுதியில் முகத்தை மட்டுமே அமைக்க வேண்டும் என்பது விதியாகும். ஆனாலும் காலப்போக்கில் சிவனின் மார்பகம் வரையில் உருவம் செதுக்கும் நிலை தோன்றியது. தொடர்ந்து இரண்டு கரங்கள் வரையிலாக அமைக்கப் படலாயின. எடுத்துக்காட்டாக, நேப்பாளத்தில் உள்ள பசுபதிநாதர் கோயிலின் மூலலிங்கத்தில் சிவபெருமானின் திருஉருவம் மார்பு வரையில் இரண்டு திருக் கரங்களுடன் அமைந்திருப்பதைக் காணலாம்.

மேலும் சிவசாதாக்கிய நிலையில் சிவலிங்க வடிவின் நடுவில் பெருமான் நான்கு கரங்களில் மான், மழு அபயவரத முத்திரை தாங்கியவராய் விளங்கக் காணலாம். இதுவே வளர்ச்சி அடைந்து திருவண்ணா மலையார் (லிங்கோற்பவ) உருவமாயிற்று என்பர்.

நாட்டுப்புற அமைப்புகளில் அமைந்த பல சிவலிங்கங்களின் நடுவில் முழு உருவில் சிவன் மட்டுமின்றி, கணபதியையும் அம்பிகையையும் கூட அமைத்துள்ளனர்.

இனி முகலிங்கங்கள் எழுந்தருளியுள்ள தலங்கள், முகலிங்கங்களின் தன்மை ஆகியவற்றைக் காணலாம்.

ஏகாதிகம் லிங்க சகஸ்ர மாட்யே
த்வஷ்டோத்ரம் லிங்கசதம் சுரேட்யே
விஸேஷ தஸ் ஸர்வ ஸமேஸ வக்த்ர
மாட் யேப்ய நாட் யேவிந தேவி பூஜ்யே

- சித்தாந்தசாராவளி

பொருள் : ஆயிரத்திற்கும் ஒன்று அதிகம் கொண்ட லிங்கம் ஆட்டயம், நூற்றெட்டு லிங்கங்களைத் தம்முள் கொண்டது சுரேட்டயம், சிறப்புகளை உடைய முகங்களைக் கொண்டது சர்வசமம், ஆநாட்டயம் என்பது மற்றைய பூஜைக்குரிய லிங்கங்கள் யாவுமாகும்.

ஏகமுகலிங்கம்

சிவபெருமானின் ஐந்து முகங்களில் கிழக்குநோக்கிய முகம் தத்புருஷம் எனப்படும். இது வெண்மை நிறமும் எல்லையில்லா சாந்த குணமும் கொண்டதாக அமைகிறது. ஒரு முகலிங்கத்தில் அமைவது இந்த தத்புருஷ முகமேயாகும் எனவே இந்த லிங்கம் தத்புருஷலிங்கம் என்று அழைக்கப்படுகிறது.

ராஜபதவியை விரும்புபவர்களும் அஷ்ட ஐச்சுவரியங்களை விரும்புவர்களும் இந்த தத்புருஷலிங்கத்தையே வழிபடுவர்.

இது ஆலயத்தில் நிருதி மூலையில் அமைவதாகும் எனவே இது நிருதிலிங்கம் எனவும் அழைக்கப்படுகின்றது. நிருதி மனிதனை வாகனமாகக் கொண்டவன். எனவே அவனால் தொழப்படும் இந்தலிங்கத்தை வணங்குபவர்கள் மனிதர்களுக்கு அரசனாகி அவர்களை அடக்கி ஆளலாம் என்று நம்புகின்றனர்.



ஏகமுகலிங்கம்

தென்னகத்தில் மூலத்தானத்தில் முதன்மையாக வைத்து வழிபடும் நிலையில் ஏகமுகலிங்கம் இல்லை. திருவண்ணாமலை அருணசலேசுவரா் ஆலயத்தில் பெரிய நாயகர் சந்நிதிக்குத் தெற்கில் நிருதி மூலையில் ஒரு ஏகமுகலிங்கம் அமைக்கப் பட்டுள்ளது. இது வனப்பும் வடிவழகும் வாய்ந்ததாகும்.

தில்லை சிற்றம்பலத்தில் ரகசியத்திற்கு அருகில் ஒரு முகலிங்கம் அமைந்துள்ளது. இதில் பாணப்பகுதி பாண லிங்கமாகவும் முகம் தங்கத்தாலும் அமைக்கப் பட்டுள்ளது.

கர்னாடகா, கேரளா மாநிலங்களில் லிங்கத்திற்கு உருத்திரபாகத்தில் முகம் இல்லாவிட்டாலும் வெள்ளி அல்லது பொன்னாலாகிய கண், மூக்கு, மீசை, வாய் இவற்றை வைத்து முகங்களை அமைக் கின்றனா். சிலதலங்களில் முகம் போன்ற கவசங்களும் அணிவிக்கப் படுகின்றன.

சுசீந்திரம் தாணுமாலய சுவாமி ஆலயத்தில் கவசத்துடன் காட்சியளிப்பதை காண்கிறோம்.

இந்த லிங்கங்களுக்கு ஏகமுக உருத்திராக்கங்களில் 11, 121 ஆகிய எண்ணிக் கையில் கோர்க்கப்பட்ட உருத்திராக்க மாலையணிவித்து வில்வதளங்களால் ஆராதித்தால் சிறந்த செல்வங்களையும் மன அமைதியையும் பெறலாம்.

போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே புலர்ந்தது. பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றி, நின் திருமுகத் தெமக்கருள் மலரும் எழில் நகை கொண்டு, நின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ் திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய் எமை யுடையாய் எம்பெருமான் பள்ளி யெழுந்தரு ளாயே.

துவிமுகலிங்கம்

சிவலிங்கத்தின் பாணப்பகுதியில் கிழக்கிலும் மேற்கிலும் இரண்டு முகங்கள் அமையப்பெற்றதே இருமுகலிங்கமாகும். இதிலுள்ள கிழக்குமுகம் தத்புருஷம் என்றும், மேற்குமுகம் சத்யோஜாதம் என்றும் அழைக்கப்படும்.

தியாகம் புரிய நினைப்பவர்களும் உலகிற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்களும் இந்த லிங்கத்தை வழிபடுவர்.

குறிப்பாக வீரசைவர்களே சத்யோஜாத முகத்தை வழிபடுபவர்கள். ஆதலின் இருமுகலிங்கம் அவர்களுக்கே உரியதாகும். இதனை மந்திரலிங்கம் எனவும் அழைப்பர். இதன் சந்நிதிக்கு கிழக்கிலும் மேற்கிலும் வாயில் அமைக்க வேண்டும் என்பது விதியாகும்.

இந்த லிங்கத்தை இரட்டை முக உத்திராட்ச வடம் சூட்டி இருவாட்சி முதலிய மலர்களால் அலங்கரித்து வழிபட்டால் தியாகம் தொண்டு செய்கிற மனமும், புகழும் உண்டாகும் என்பது நம்பிக்கையாகும்.

வழக்கத்தில் ஆலயங்களில் எங்கும் இத்தகைய இருமுகலிங்கம் இல்லை.

காளத்திவளர் கண்ணப்பலிங்கம்

பண்டைக் காலத்தில் முகலிங்கம் அமைத்து வழிபட்டதைப் பற்றிய நேரடியான குறிப்புகள் சமய நூல்களில் இல்லையென்றாலும் கண்ணப்ப நாயனாரின் கதையை நோக்கும்போது முகலிங்கங்கள் வழிபாட்டில் இருந்ததை உணரமுடிகிறது.

காளத்திமலையில் எழுந்தருளியிருந்த குடுமித் தேவரான லிங்கத்தின் கண்களில் இருந்து இரத்தம் வழிவதைக் கண்ணப்பர் கண்டு தன் கண்ணைப் பெயர்த்து அப்பியதும் அதனைத் தொடர்ந்த வரலாறும் இங்கு நோக்கத்தக்கதாகும். இதனால் காளத்தியில் இருந்த லிங்கம் முகலிங்கம் என்பது அறியப்படுகிறது. இதையொத்து பல ஆலயங்களில் முகலிங்கம் இருந்திருக்கலாம். ஆனால் இக்காலத்தில் திருவக்கரை சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தைத் தவிர ஏனைய இடங்களில் முகலிங்கங்களைக் காணமுடியவில்லை. காளத்தியிலும் இப்போது ஒருமுகலிங்கம் மூலத்தானத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



கண்ணப்பர் மறம்

வலத்திருக் கண்ணில் தன்கண் அப்பிய வள்ளலார்தன்
நலத்தினை பின்னும்காட்ட நாயனார் மற்றைக்கண்ணில்
உலப்பில் செங்குருதி பாயக் கண்டனர்..............................இன்னம்
உண்டொரு கண் அக்கண்ணை இடந்து அப்புவேன் (என்று முயன்றார்) - பெரியபுராணம்.

மும்முகலிங்கம்

சிவலிங்கத்தின் பாணப்பகுதியில் கிழக்கு, தெற்கு, வடக்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் முகம் கொண்டது மும்முகலிங்கம் எனப்படும்.

இந்த முகங்களில் கிழக்கில் உள்ளது தத்புருஷம் என்றும் தெற்கில் உள்ளது அகோரம் என்றும், வடக்கில் இருப்பது வாமதேவம் என்றும் பெயர் பெறும்.



★ திரிமூர்த்தி எலிபெண்டா குகைக்கோயில்.

இந்த மூன்று முகங்களில் கிழக்கில் உள்ளது ஆண்மைப்ட்டன் புன்னகை புரிவதாகவும், வடக்கில் உள்ளது பெண்சாயலுடன் மந்தகாசம் கொண்டதாகவும், தெற்கில் உள்ளது கடுத்து விழித்த கோபவடிவம் கொண்டதாகவும் அமைக்கப் படும்.

இந்த லிங்கம் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலைச் செய்யும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகியோரின் முகங்களைத் தன்னுள் கொண்டதென்பர். எனவே, இது திரிமூர்த்திலிங்கம் எனவும் அழைக்கப்படும்.

எலிபெண்டா குகையில் மூன்று முகங்களைக் கொண்ட பெரிய வடிவம் உள்ளது. இதனை அங்கு சதாசிவர் எனக்குறித்துள்ளனர். அஞ்சலட்டைகளிலும் தபால் தலைகளிலும் நீண்டகாலம் இந்த மும்முகமே முத்திரையாக இருந்து வந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

மூன்று முகங்களையுடைய லிங்கம் தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனத்திற்கு அருகில் உள்ள திருவக்கரை என்னும் பாடல் பெற்ற திருத்தலத்தில் உள்ள சந்திரமௌலீசுவரர் ஆலயத்தின் கருவறையில் மூலமூர்த்தியாக அமைந்துள்ளது. இது போல் மூலமூர்த்தியாக மும்முகலிங்கம் வேறெங்கும் இல்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பன்னிரு ஜோதிர் லிங்கங்களில் ஒன்றாகிய திரியம்பகத்தில் உள்ள சிவலிங்கத்தின் மீது மூன்று முகங்களை தங்கத்தால் செய்து கவசமாக அணிவித்துள்ளனர்.

ஈரோடு நகரில் அமைந்துள்ள மகிமாலீசுவரர் ஆலயத்தில் உள்ள பன்னிரண்டு ஜோதிர்லிங்க சன்னதியில் அமைந்துள்ள திரியம்பக லிங்கமும் மூன்று முகங்கள் கொண்டதாக அமைக்கப் பட்டுள்ளதைக் காணலாம். இதனை தத்துவத்திரைய லிங்கம் என்றும் கூறுவர்.

இம்மும்முக லிங்கத்திற்கு மூன்று வேதங்களை ஓதி மும்முக உருத்திராக்கத்தை அணிவித்து மூன்று தளவில்வங்களால் அருச்சனைபுரிய எண்ணிலாத செல்வங்களை அடையலாம் என்பர். ❖

மூவராய் நின்ற முதல்வா போற்றி
முக்கண் எந்தை பரமா போற்றி

சதுர்முகலிங்கம்

இந்த இலிங்கத்தின் பாணப்பகுதியில் நான்கு திசைகளை நோக்கியவாறு நான்கு முகங்களை அமைப்பர். இதில் கிழக்கில் உள்ள முகம் தத்புருஷம் தெற்கில் உள்ளது அகோரம், மேற்கில் உள்ளது சத்யோ ஜாதம், வடக்கில் உள்ளது. வாமதேவம் என்று அழைக்கப்படும்.

சிலர் நான்கு முகங்களுக்கு மேலாக வட்டமாக வழவழப்பாக அமைந்திருக்கும் உச்சிப் பகுதியை ஐந்தாவது முகமாகக் கொள்வர்.



★ சதுர்முகலிங்கம் - காளாஸ்திரி (ஆந்திரமாநிலம்)

நேப்பாளத்தில் உள்ள பசுபதிநாதர் கோயிலில் அமைந்திருப்பது இத்தகைய சதுர்முகலிங்கமேயாகும். இங்கு லிங்கத்தின் முகங்கள் மார்புவரை இரண்டு கரங்களுடன் அமைந்துள்ளன. ஒருகையில் ஜெபமாலையும் மற்றோர் கையில் அமுத குடமும் உள்ளன.

இந்த லிங்கத்தின் நான்கு முகங்களையும் நான்கு வேதத்தால் அர்ச்சித்து பூசை செய்கின்றனர். இந்த லிங்கம் அமைந்துள்ள ஆலயத்திற்கு நாற்புறமும் வாயில் அமைக்க வேண்டியது முறையாகும். நேப்பாளத்தில் நாற்புறம் வாயிலைக் கொண்ட கோயிலே அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு அமையும் கோயில் நான்முகக் கோயில் என்று தமிழிலும் "சர்வதோ பத்ராலயம்" என வடமொழியிலும் அழைக்கப்படும்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பண்ருட்டியின் ஒரு பகுதியாகிய திருவதிகையில் நான்முகக் கோயில் ஒன்று இருந்ததாக வீரட்டேசுவரர் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. செங்கல்லால் ஆன அக் கோயில் சிதைந்துவிடவே நூறு வருடத்திற்கு முன்பு அக்கோயிலில் இருந்த நான்முகலிங்கம். இடம் பெயர்த்துக் கொண்டுவரப்பட்டு வீரட்டேசுவரர் கோயிலின் மாளிகை பத்தியில் தென் மேற்கு முனையில் நிலைப் படுத்தப்பட்டுள்ளது. இது கலையழகு நிரம்பியதாகும்.

மேலும் திருவண்ணாமலை, திருவானைக் காவல் முதலிய அனேக இடங்களில் சதுர்முகலிங்கம் அமைந்த சந்நிதிகள் உள்ளன. இச்சந்நிதிகளுக்கு நாற்புறமும் வாயில் அமைக்க முடியாதபோது ஒருபுறம் வாயிலும் மற்றைய பகுதிகளில் ஜன்னல்களும் அமைக்கின்றனர்.

காஞ்சீபுரத்தில் உள்ள கச்சபேசர் ஆலயத்தில் நடராசர் சந்நதியை யொட்டி ஒரு நான்முகலிங்கம் அமைந்த சந்நிதியுள்ளது. இந்த லிங்கத்தின் நான்கு முகங்களில் இருந்து நான்கு வேதமும் வெளிப்பட்டதால் இதனை வேதலிங்கம் என்று குறிப்பிடுகின்றனர். இதனைக் காஞ்சிப் புராணத்தால் அறியலாம்.


இந்த லிங்கத்தை நான்கு முக உருத்திராட்சத்தால் அலங்கரித்து நால்வகை வில்வங்களாய் அர்ச்சிப்பவர் எட்டுத் திக்கிலும் புகழ்பரப்பும் பெரிய அறிஞனாக விளங்குவர் என்பது நம்பிக்கையாகும்.

ஸ்ரீகாளத்தியில் (காளாஸ்திரியில்) கோயிலுக்கு அருகில் உள்ள குன்றின் சாரலில் மகேசுவர மூர்த்திகள் புடைப்புச் சிற்பமாக அமைந்த பாறை

உள்ளது. அதன் மீது அமைந்த மண்டபத்தின் மேற்பகுதியில் நான்கு முகலிங்கம் அமைக்கப் பட்டுள்ளது. இது மிகவும் கலையழகு நிரம்பியதாகும்.

இந்த லிங்கம் பிரம்மலிங்கம் எனவும் அழைக்கப்படும். இந்த லிங்கத்தை நான்கு முக உருத்திராட்சங்களால் அலங்கரிப்பர்.

பஞ்சமுகலிங்கம்



★ சிவாகமம் கூறும் பஞ்சமுகலிங்கம்

நான்கு முகலிங்கங்களையே வழக்கத்தில் பஞ்சமுக லிங்கம் என அழைக்கின்றனர். உண்மையில் பஞ்ச முகலிங்கம் வேறானது. இது நான்கு திசைகளில் உள்ள நான்கு முகங்களுடன் கிழக்குத் திக்கில் உள்ள முகத்தின் மீது ஐந்தாவது முகத்தைக் கொண்டதாக விளங்குகிறது. அபூர்வமாகவே இத்தகைய லிங்கங்கள் அமைக்கப்படுகின்றன.

வேலூர் அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள விரிஞ்சிபுரம் மார்க்க சகாய ஈசுவரர் ஆலயத்தில் வெளிப் பிராகாரத்தில் அமைந்த ஒரு சந்நதியில் பஞ்சமுகலிங்கம் அமைந்துள்ளதைக் காணலாம்.

ஸ்ரீகயிலாயத்தில் உள்ள மகா சிவாலயத்தில் பஞ்ச முகலிங்கம் ஒன்று இருப்பதாவும் அதன் ஐந்து ஜடாபாரங்களில் இருந்தும் ஐந்து கங்கைகள் பொங்கி வருகின்றன என்றும் சிவரகசியம் கூறும். அந்த ஐந்து கங்கைகளே பஞ்ச கங்கை எனப்படும்.

வடநாட்டில் இந்நாளில் கட்டப்பட்ட பல ஆலயங்களில் பஞ்ச முகலிங்கம் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

இந்த லிங்கத்திற்கு ஐம்முக உத்திராட்சத்தால் விதானம், மாலை ஆகியவற்றை அமைத்து பஞ்சகவ்யத்தால் அபிஷேகித்து, பஞ்ச வில்வத்தால் அர்ச்சித்துப் பஞ்ச வித உபசாரம் செய்து பஞ்ச அன்னங்களை நிவேதித்து வழிபட உலகம் வசியமாவதுடன் எண்ணிய எல்லா நலமும் பெறலாம் என்பது நம்பிக்கையாகும். இந்த ஐந்து முகங்களில் இருந்து ஆகமங்கள் வெளிப்பட்டதால் இதனை சிவாகமலிங்கம் எனவும் அழைப்பர்.

சிவாகமங்கள் காட்டும் பஞ்சமுக லிங்கம்

இதுவரை நடைமுறையில் உள்ள ஐந்து வகையான பஞ்சமுக லிங்கங்களைப் பற்றிய செய்திகளை நாம் கண்டோம். சிவாகமங்களில்



★ பஞ்சமுகலிங்கம் - ஸ்ரீமார்க்சகாய சுவாமி கோயில் - விரிஞ்சிபுரம்

பஞ்சமுகலிங்கத்தில் உள்ள முகங்கள் பரசிவத்திடம் இருந்து முதலில் தோன்றிய ஐந்து சாதாக்கிய மூர்த்திகளின் முகங்கள் என்று கூறப்பட்டுள்ளது. இனி இவற்றைப்பற்றிய செய்திகளைக் காணலாம்.

பரசிவத்திடமிருந்து முதலில் தோன்றிய அநாசிருதர், அநாகதர், அநந்தர், வியோமரூபர், வியாபகர் என்னும் மூர்த்திகள் ஐவரும் அவரிடத்தில் தோன்றிய ஐந்து சக்திகளான பராசக்தி, ஆதிசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, இச்சாசக்தி ஆகியோரைத் துணை கொண்டு ஐந்து சிவசாதாக்கியங்களைத் தோற்றுவித்து அவர்கள் மூலம் ஐந்தொழிலாகிய படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல் எனும் ஐந்தொழிலையும் இயற்றிவருகின்றனர். இவர்களுடைய திருமுகங்களே பஞ்சமுகலிங்கத்தில் அமைந்துள்ள திருமுகங்களாகுமென்பர்.

இவர்கள் ஐவரும் ஐந்தொழில் புரியும் காலத்தில் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரர், மகேச்சுவரர், சதாசிவர் என்று பெயர் பெறுவர். இவர்களின் திருமுகம் அமைந்ததே இந்த முகலிங்கம் என ஆகமங்கள் கூறுகின்றன.

இந்த ஐவரும் ஐந்தொழில் புரிவதோடு தனக்கென திருவுருவம் தாங்கி அத்திரு வுருவத்திற்கான தனிப்பெயர் பூண்டு தமக்குரிய இடத்தில் வீற்றிருப்பர்.

பிரம்மா எனும் அநாசிருதர், பராசக்தியுடன் சகல ஆன்மாக்களின் உள்ளத்திலும் நீங்காது வீற்றிருப்பார்.

அநாகதராகிய விஷ்ணு, பெரிய ஆமை வடிவமாக ஆதாரசக்தி என்ற பெயர் பூண்டு சகல புவனங்களையும் சுமந்து நிற்பார்.

அநந்தர் எனும் உருத்திரன் காலாக்கினி உருத்திரதேவர் என்ற பெயருடன் சராசரங்களிலுள்ள அனைத்துப் பொருள்களையும் இருப்பிடமாகக் கொண்டு அதனை நடத்துவார்.

வியோமரூபர் ஆகிய மகேச்சுவரன் கூர்மாண்டதேவநாயனார் என்ற பெயருடன் இருபத்தெட்டுகோடி நரகங்களுக்கு அதிபதியாக இருந்து அதனை ஆளுவார்.

ஐந்தாவதான வியாபகர் என்னும் சதாசிவன் ஆடகேசுவரர் என்ற பெயருடன் பாதாளத்திற்கு அதிபதியாகி அங்குள்ளோர் தொழ வீற்றிருப்பார்.

இவ்வாறு தனித்தனி மூர்த்திகளாயும் அதே சமயம் மூலசிவத்தை விட்டு நீங்காதவர்களாகவும் இருப்பதைக் குறிக்கும் வகையில் பஞ்சமுகலிங்கம் அமைகிறது என்று ஆன்றோர் கூறுவர்.

-- இக்கருத்து சிவபராக்கிரமம் எனும் நூலில் முகலிங்கங்கள் என்ற தலைப்பில் காணப்படுகிறது.



நேபாளம் பசுபதி நாதர்

நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவை அடுத்துள்ள பசுபதி நாதர் ஆலயத்திலும் நேபாளத்தின் பிறபகுதியில் அமைந்த அனேக ஆலயங்களிலும் சதுர்முகலிங்கங்கள் வைத்து வணங்கப்படுவதைக் காண்கிறோம். இதனால் சதுர் முகலிங்கம் நேபாளத்திற்கே உரியதாகக் கருதப்படுகிறது. இதன் நான்கு முகங்களும் இந்தியாவில் உள்ள நான்கு பெரிய தலங்களில் உள்ள தெய்வங்களின் முகம் என்ற நம்பிக்கை நிலவுகிறது. படத்தில் உள்ளது நேபாளத்தில் உள்ள சதுர்முகலிங்கங்களில் ஒன்றாகும். இதன் விரிவை ஆறாவது மலரான பசுபதியில் காணலாம்.

இதுவரை ஆகம நூல்களில் கூறப்பட்ட சர்வசமம் எனும் முகலிங்கங்களைப் பற்றிய செய்திகளைக் கண்டோம். இனி தொடர்ந்து அன்பர்கள் பலவேறு வகைகளில் அமைத்து வழிபடும் பலவகையான லிங்கங்களைப்பற்றிய செய்திகளைக் காணலாம்.

ஆறு முகலிங்கம் - ஷண்முகலிங்கம்

சிவபெருமானுக்கு ஆறு முகங்கள் உண்டு. இவற்றில் நான்கு முகங்கள் நான்கு திக்குகளை நோக்கியும் ஐந்தாவது முகம் உச்சியில் வானத்தை நோக்கியும் ஆறாவது முகம் எப்போதும் பாதாளத்தை நோக்கியவாறும் இருக்கும். மேல்நோக்கிய முகம் ஊர்த்துவமுகம் என்றும் கீழ்நோக்கிய முகம் அதோமுகம் எனவும் அழைக்கப்படும்.

இந்த அதோமுகம் எண்ணிலடங்கா ஆற்றல் உடையது. வடவைத் தீயைப் போன்றது. அதனால் பக்தர்களின் கண்ணுக்குப் புலனாகாமல் கீழ் நோக்கியே இருக்கின்றது.

முருகப்பெருமானின் திரு அவதாரத்தின் போது பெருமான் ஐந்து முகங்களுடன் ஆறாவதான இந்த முகத்தையும் சேர்த்து அவற்றின் நெற்றிக்கண்களில் விளைந்த நெருப்புப் பொறிகள் மூலம் அவனை உற்பவித்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.

இதனை குமரகுருபர சுவாமிகள்

ஐந்து முகம் தந்து அதோமுகமும் ஆறாக

என்று கந்தர் கலிவெண்பாவில் அருளிச் செய்துள்ளார்.

பாற்கடல் கடைந்த காலத்தில் பெருகி வந்த ஆலகாலம் பொங்கி எழுந்தபோது அதனை உண்டதும் இத்திருமுகமேயாகும். ஆகையால் நடைமுறையில் ஸ்ரீகண்டத்தையே ஆறாவது முகமாக பாவித்து அர்ச்சிக்கின்றனர்.

நடைமுறையில் ஆறுமுக லிங்கம் எங்கும் அமைக்கப்பட்டதாகவோ வழிபடப்படுவதாகவோ தெரியவில்லை. பெருமானின் ஆறுமுகங்களில் இருந்து உண்டான முருகனே அறுமுகச் சிவனாகக் காட்சியளிக்கின்றான்.

28 சிவாகமலிங்கம்

சிவபெருமான் தனது ஐந்து முகங்களின் மூலமாகவும் 28 சிவாகமங்களை அருளிச் செய்தார். இச் சிவாகமங்கள் யாவும் சிவவடிவேயாகும். எனவே 28 சிவலிங்கங்களை 28 சிவாகமங்களாக பாவித்து வணங்குகிற வழக்கம் சிலரால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இப்போது இத்தகைய சிவலிங்கங்கள் பரவலாக காணப்படவில்லை. பாடல் பெற்ற திருத்தலமான திருநெல்வாயில் அறத்துறை என்கின்ற தலத்தில் உள்ள சிவாலயத்தின் மேற்கு பிரகாரத்தில் அமைந்துள்ள ஒரு லிங்கம் சிவாகமலிங்கம் என்று அழைக்கப்படுகிறது. இதன் பாணப்பகுதியில் 28 சிவலிங்கங்கள் அமைந்துள்ளன. இந்த லிங்கத்தை வணங்குவோர் சிவாகமத் தேர்ச்சி பெற்று சிவசாரூபம் எய்தி கயிலையங்கிரியில் சிறப்புடன் வாழ்வர் என்று கூறப்படுகிறது.

சதலிங்கம் (சதருத்திரலிங்கம்)

தன்னுள் நூறு லிங்கங்களைக் கொண்ட லிங்கமே சதலிங்கம் எனப்படும். இது எட்டுத்திக்கிலும் விண்ணிலும் பாதாளத்திலும் சஞ்சரித்துக் கொண்டு உலகினைக் காத்துவரும் சதருத்திரர்களால் வணங்கப்பட்டு ஒன்றான லிங்கமாகும். எனவே, இதனை சதருத்ரலிங்கம் என அழைப்பர்.

இந்த லிங்கத்தை உருத்திரமந்திரத்தால் 100 முறை அபிஷேகித்து 100 உருத்திராக்கங்களால் அலங்கரித்து வழிபட்டால் எல்லையற்ற ஆற்றலும் வலிமையும் உண்டாகும். பகைவர்கள் நாசம் அடைவர் என்று நம்பப்படுகிறது.


108 லிங்கம் (சுரேட்டயம்) (அஷ்டோத்திர லிங்கம்)

சிவலிங்கத்தின் நான்கு வகைகளில் இரண்டாவதாக சொல்லப்பட்ட சுரேட்டயம் என்பது இந்த அஷ்டோத்திர லிங்கமாகும். இந்த லிங்கத்தின் பாணப்பகுதியில் 108 சிறு லிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அமைவதற்கு பலவகையான காரணங்கள் கூறப்பட்டுள்ளன.

சில நூல்கள் நூறு (சத) உருத்திரர்களாலும் அவர்களின் தலைவர்களான அஷ்ட ருத்திரர்களாலும் பூசிக்கப்பட்டு ஒன்றாக்கப்பட்டது இந்த 108 லிங்கம் என்பர். காஞ்சீபுரம், சிதம்பரம், திருவொற்றியூர் முதலிய அனேக தலங்களில் 108 லிங்கம் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

சென்னைக்கு வடக்கேயுள்ள பொன்னேரியை அடுத்துள்ள சின்னக் காவணம் எனும் ஊரில் நூற்றெட்டீசுவரர் எனும் சிவாலயம் உள்ளது. ஆனால் இச்சிவலிங்கம் சாதாரண லிங்கமாகவே உள்ளது.

இதனை அகத்தியர் அமைத்தார் என்பர். அவர் நாள்தோறும் ஒன்று வீதம் 108நாட்கள் 108 லிங்கங்களைப் பூசித்து இறுதியில் அவற்றை ஒன்றாக்கி நூற்றெட்டீசுவரர் என்ற பெயரில் நிறுவினார் என்று கூறுவர்.



நூற்றெட்டு லிங்கம்

சகஸ்ர லிங்கம் (1000 முகலிங்கம்)

இந்த லிங்கம் ஆயிரம் முகங்களைக் கொண்டதாகும். சிவபெருமான் ஆயிரம் கரங்களையும் ஆயிரம் திருவடிகளையும் ஆயிரம் முகங்களையும் உடையவர். இதனை

ஆயிரம் தாமரை போலும்
ஆயிரம் சேவடியானும்
ஆயிரம் பொன்வரை போலும்
ஆயிரம் தோளுடையானும்
ஆயிரம் ஞாயிறு போலும்
ஆயிரம் நீண்முடியானும்
ஆயிரம் பேருகந்தானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே.

- எனும் அப்பரடிகளாரின் தேவாரப்பாடலால் அறியலாம்.


ஆயிரம் என்றசொல் ஆயிரம் என்ற எண்ணைக் குறிப்பதுடன் அளவில்லாதது என்ற பொருளையும் கொண்டதாக உள்ளது. எண்ணிலா முகமும் பாதமும், கரங்களும் கொண்ட பெருமானை ஆயிரம்பெயரால் குறிக்கின்றோம். ஒரு லிங்கத்தில் ஆயிரம் முகங்களை அமைக்க வேண்டியதே முறையாகும். ஆனால் நடைமுறையில் முகங்களாக இல்லாமல் இதனை சிவலிங்கத்தின் பாணப்பகுதியில் சிறு சிவலிங்கங்களாகவே அமைக்கின்றனர்.

1001 லிங்கம் ஏகாதிக சகஸ்ரலிங்கம்

சிவாகமங்களில் சொல்லப்பட்டுள்ள நான்கு வகை லிங்கங்களுள் ஆட்யம் என்று சொல்லப்படும் லிங்கம் இதுவேயாகும். இந்த லிங்கத்தின் பாணப்பகுதியில் 1001 சிறுலிங்கங்கள் அமைந்துள்ளன. இது சிவபெருமான் எங்கும் பரந்திருக்கின்ற நிலையை உணர்த்துகிறது.

1008 லிங்கம் அஷ்ட சகஸ்ரலிங்கம்

சிவபெருமானின் எண்ணிலாது பரந்திருக்கின்ற ஆயிர முகங்களுடன், அளவிலா ஆற்றலும் வரம்பிலா சக்தியும் உடைய அஷ்ட மூர்த்தியின் முகங்களையும் இணைத்து 1008 முகங்களைக் கொண்டதாக அமைந்ததே இந்த அஷ்ட சகஸ்ர லிங்கமாகும்.



சகஸ்ரலிங்கம்
ஸ்ரீகும்பேஸ்சுவரர் ஆலயம் - குடந்தை

ஆயிரத்தெட்டு அண்டங்களில் உள்ள மகாலிங்கங்களை நினைவுபடுத்துவதாக ஆயிரத் தெட்டு லிங்கம் அமைவதால் இதற்கு அண்டலிங்கம் என்ற பெயரும் உண்டு.

நூற்றுக்கு மேற்பட்ட முகங்களை லிங்கத்தில் அமைப்பது நடைமுறையில் இயலாது என்பதாலும் அப்படியே நுணுக்கமாக அமைத்தாலும் தினமும் அபிஷேகிக்கப்படும் லிங்கத்தில் அழுக்கு படிந்து முகங்களை அறிய முடியாது போகும் என்பதாலும் முகங்களை அமைப்பதற்குப் பதில் அழகிய சிறுலிங்கங்களாகவே அமைக்கின்றனர்.

காஞ்சிபுரத்தில் நூற்றெட்டு லிங்கம், ஆயிரத்தெட்டு லிங்கங்களும் சிறப்புடன் திகழ்கின்றன. காளத்தி, திருவானைக்காவல் முதலிய தலங்களில் சகஸ்ர லிங்கங்கள் உள்ளன.

கோடிலிங்கம் (கோடீசுவரர்)

சிவபெருமான் அருளினால் தோன்றிய ஒரு கோடி உருத்திரர்கள் சிவபூசை செய்து பெருமானை வழிபட்டனர். அவர்கள் ஒவ்வொருவர் முன்னும் பெருமான் தனித்தனியே காட்சி கொடுத்தார். பின்னர் கோடிமுகங்களையுடைய சிவலிங்கமாகத் தோன்றினார். அந்தலிங்கமே கோடீஸ்வரலிங்கமாகும். இந்த லிங்கத்தின் பாணப்பகுதியில் (பலாக்காயின் மேற்பகுதியில் முட்கள் அமைந்திருப்பது போல) நெருக்கமாக சிறுமுகங்கள் அமைந்துள்ளன. இத்தகைய கோடிலிங்கம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவலஞ்சுழியை அடுத்த ஊரான கொட்டையூரில் உள்ள கோடீசுவரர் ஆலயத்தில் அமைந்துள்ளது. ★

லிங்கத்தில் அமைந்த பிறதெய்வங்கள்

சிவலிங்கத்தில் ஆரம்ப நாட்களில் சிவனுடைய முகத்தை மட்டுமே அமைப்பதென்பது கடைபிடிக்கப்பட்டது. ஆனால் பின்னாளில் வந்தவர்கள் தங்கள் மனதிற்கேற்ப விநாயகர், முருகர், ஆகியோரையும் கூட சிவலிங்கத்தில் அமைக்கத் தொடங்கி விட்டனர்.

திருவானைக் கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் உள்ள 108 லிங்கங்களில் ஒரு லிங்கத்தில் விநாயகப் பெருமானையும், ஒரு லிங்கத்தில் முருகப்பெருமானையும் அமைத்திருப்பது இங்கு எண்ணத்தக்கதாகும். ★

சக்தி லிங்கம்

நாட்டுப்புறத் தெய்வங்களான பிடாரி, காளி ஆகிய தேவியர்களும் சிவவழிபாடு செய்வதாகவும் சிவநிலையில் ஒன்றியதாகவும் கூறப்படுகிறது. பலபெரிய சிவாலயங்களுக்கு உள்ளேயே ஊர் காவல்தெய்வங்களான பிடாரிகளுக்குச் சிற்றாலயங்கள் அமைந்திருக்கவும் காண்கிறோம்.

இதற்கு எடுத்துக்காட்டாக, காஞ்சீபுரம் மணிகண்டீசுவரர் ஆலயத்தில் உள்ள சுந்தரி அம்மன், திருவண்ணாமலையில் உள்ள அண்ணாமலையார் ஆலயத்தில் வடவாயிற் செல்வி ஆலயம், திருவக்கரையில் சந்திரமௌலீசுவரர் கோயிலில் உள்ள வக்ரகாளியம்மன் ஆலயம் ஆகியவற்றைக் கூறலாம்.

இந்நிலை வளர்ந்து காலப்போக்கில் சிவலிங்கத்தில் பிடாரியையும் அமைக்கும் வழக்கம் வந்தது. ஆனால் இம்முறை அன்பர்களால் ஏற்கப்படவில்லை. இப்போது காஞ்சீபுரத்தில் பிடாரியைத் தன் பாணப்பகுதியில் கொண்ட சிவலிங்கம் ஒன்று உள்ளது.

ஆதிபீட காமாட்சியம்மன் கோயில் என்றழைக்கப்படும் காளிகாம்பாள் கோயிலில் முன் மண்டபத்தில் ஒரு மேடை மீது அமைந்துள்ள இந்த லிங்கம் **சக்திலிங்கம்** என்றழைக்கப்படுகிறது.

இதன் பாணப்பகுதியின் முகப்பில் பிடாரி அமைக்கப்பட்டுள்ளாள். அவள் நான்கு கரங்கள் கொண்டு அமர்ந்தவாறு காட்சியளிக்கின்றாள். மேலிரு கரங்களில் பாசம் அங்குசம் கீழ்க்கரங்களில் கத்தி கபால்மும் ஏந்தியுள்ளாள்.

இது போன்ற சக்திலிங்கத்தை இங்கு தவிர வேறு எங்கும் பார்க்க முடியவில்லை. இந்த வகையில் அது அபூர்வமான லிங்கமேயாகும். ★



சக்திலிங்கம்

குடிமல்லம் பரசுராமேசுவரர்

இதற்கு முந்தைய கட்டுரைகளில் ஆரம்ப காலத்தில் சிவலிங்கத்தில் சிவபெருமானின் முகங்கள் மட்டுமே அமைந்திருந்ததையும் தொடர்ந்து மார்பு வரையில் அமைக்கப்பட்டதையும், அதைத் தொடர்ந்து அண்ணாமலையார் எனும் லிங்கோற்ப வடிவத்தில் முழந்தாள் வரையில் அமைக்கப் பட்டதையும் கண்டோம்.

இந்நிலையும் வளர்ந்து காலப்போக்கில் லிங்கத்தில் சிவபெருமானின் முழு உருவத்தையும் அமைக்கும் வழக்கமும் தோன்றியது. ஆனால் இந்நிலை வளர்ச்சியடையாமல் நின்றுவிட்டது.

ஆந்திர மாநிலத்தில் உள்ள குடிமல்லம் எனும் ஊரில் லிங்கத்தில் முழுஉருவத்துடன் தோன்றும் சிவபெருமானைக் காண்கிறோம்.

இப்பெருமான் இந்நாளில் பரசுராமேசுவரர் என்றழைக்கப்படுகின்றார். இங்கு சிவபெருமான் வேட்டையாடியின் உருவில் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வடிவத்தின் வலக்கையில் நீண்ட தடியும், இடக்கையில் வேட்டையாடிக் கொண்டுவரும் மலையாடும் உள்ளன. காலடியில் ஒரு பூதம் அமைந்துள்ளது. தலையில் சடாபாரமும், இடையில் மெல்லிய ஆடையும் கொண்டதாக விளங்கும். இவ்வடிவம் நிர்வாணத்தில் உள்ளதாகவே தோன்றுகிறது. இது பெருமான் சிவலிங்கத்தில் இருந்து புறப்பட்டு வெளிவரும் கோலத்தில் உள்ளது.

இதனை மும்மூர்த்தியின் வடிவம் என்றும், இதன் கையில் உள்ளது மான் என்றும், தமது கற்பனை கலந்த கருத்துக்களை பல கட்டுரையாளர்கள் கூறியுள்ளானர். இவையாவும் ஏற்புடையவை அல்ல.

இறைவனை வேட்டுவனாவும் அவனைப் பூதங்கள் சூழ்ந்து வருவதாகவும் கூறுவதை புராணங்களில் காணலாம். அவ்வகையில் பூதத்தின் மீது நின்றவாறு காட்சியளிக்கும் இப்பெருமானை வேட்டுவ கோலத்தினன் என்றே கொள்ள வேண்டும். அவனுடைய வெற்றியையே அவன் கையில் உள்ள மலையாடு குறிக்கின்றதென்பர். முகலிங்கங்களின் வளர்ச்சியில் இது ஒரு நிலையாகும்.

இத்தகைய வடிவங்களை அமைக்கும் முறையை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை போலும். அதனால் இவற்றை உருவாக்கப்படுவது நின்று போய் விட்டது.

இது தொன்மைவாய்ந்த லிங்கத் திருமேனியாகக் கருதப்படுகின்றது. இந்நாளில் இது இந்திய தொல்பொருள் துறையினரால் பாதுகாக்கப் பட்டு வருகிறது.



குடிமல்லம் பரசுராமேசுவரர்
(ஆந்திர மாநிலம்)



லிங்கோற்பவம்

ஐம்முக சிவலிங்கத் திருமேனிக்கு காரணமான சிலகாரணங்களைக் முன்பகுதியில் கண்டோம். இனி லிங்கோற்பவரை சிந்திக்கலாம். லிங்கம் என்பதற்கு உருவம் என்றும் உற்பவம் என்பதற்கு வெளிப்படுதல் என்றும் பொருள். லிங்கோற்பவம் என்ற சொல்லுக்கு உருவமற்ற இறைவன் திருவடிவம் கொள்ளுதல் என்பது பொருள். இனி ஒருருவம் ஒரு நாமமில்லாதவன் உருவம் தாங்கி வந்து அருள் பாலிப்பதை விளக்கமாகக் காணலாம்.

ஊழிக்காலத்தின் முடிவில் உலக உற்பத்திக்காகவும், ஞானிகளின் மல நீக்கத்திற்காகவும் சிவபரம்பொருள் தன்னில் இருந்து ஐந்து சக்திகளைத் தோற்றுவிக்கின்றார். அப்போது அவருடைய ஆயிரத்தில் ஒரு பகுதி அவரிடமிருந்து பராசக்தியாக வெளிப் படுகின்றது.

இந்தப் பராசக்தியின் ஆயிரத்தில் ஒரு பகுதியில் இருந்து ஆதிசக்தி தோன்றுகின்றது.

இந்த ஆதிசக்தியின் ஆயிரத்தில் ஒரு பகுதியில் இருந்து இச்சா சக்தி தோன்றுகிறது.

அந்த இச்சாசக்தியின் ஆயிரத்தில் ஒரு பகுதியில் இருந்து ஞானசக்தி வெளிப்படுகின்றது.

இந்த ஞானசக்தியின் ஆயிரத்தில் ஒரு பகுதியே கிரியா சக்தியாகும்.

இந்த ஐந்து சக்திகளும் அவற்றின் இயல்புகளுக்கேற்ப சிறப்புப் பெயர் அமைக்கின்றது. அவை முறையே

பராசக்தி - சாந்தியாதீத சக்தி
ஆதிசக்தி - சாந்தி சக்தி
இச்சாசக்தி - வித்யாசக்தி
ஞானசக்தி - பிரதிஷ்டாசக்தி
கிரியாசக்தி - நிவர்த்தி சக்தி
என்பனவாகும்.

பராசக்தியே இறைவனின் எல்லையில்லா ஆனந்தத் திருஉருவினைக் கண்டு தெளிந்து அவரோடு ஐக்கியமாகவதற்குக் காரணமாதலின் அது சாந்தியாதீத சக்தி எனப்பெயர் பெறுகின்றது.

ஆதிசக்தியானது ஆன்மாவைப் பற்றியுள்ள மும்மலங்களை நீக்கி அதனைச் சிவநிலைக்கு உயர்த்துதலின் சாந்திசக்தி என்று அழைக்கப் படுகின்றது.

இச்சாசக்தியானது ஆன்மாக்களை இறைவனை அடையவொட்டாமல் தடுக்கும் மாயையும், மாயையால் தோற்றுவிக்கப்படும் பொருள்களையும் விளக்கி ஆன்மாவைத் தன்னையறியும் நிலைக்கு உயர்த்துகிறது.

ஆதலின் இச்சாசக்தியை வித்யாசக்தி என அழைக்கின்றனர். (வித்தை என்பதற்கு அறிந்து கொள்ளுதல் என்பது பொருள்).

மிகநுண்ணியதாகவுள்ள புருஷ தத்துவங்களை ஆன்மாவுக்குள் தோற்றுவிப்பதால் ஞான சக்தியைப் பிரதிஷ்டாசக்தி என அழைப்பர்.

ஆன்மாக்களுக்கு (நன்மை, தீமை ஆகிய வினையனுபவங்களை உணர்த்தி நிற்றதலின் கிரியா சக்தியானது நிவிர்த்தி சக்தி என்றழைக்கப்படுகிறது.

இந்த ஐந்து சக்திகளிடமிருந்து ஐந்து சதாசிவ தத்துவங்கன் தோன்றுகின்றன.

முதலில் சொன்ன பராசக்தியின் பத்தில் ஒரு பாகத்திலிருந்து முதல் சதாசிவ தத்துவமான சிவசாதாக்கியம் தோன்றுகிறது. இவரை ஈசன் என அழைப்பர். இவர் மின்னலைப் போன்ற ஒளிவீசும் நுண்ணிய தெய்வ ஒளியாக எங்கும் பரவி வியாபித்துள்ளார்.

இரண்டாவதாகச் சொல்லப்பட்ட ஆதிசக்தியின் பத்தில் ஒரு பாகத்திலிருந்து இரண்டாவது சதாசிவ தத்துவமான அமூர்த்தி சாதாக்கியம் தோன்றுகிறது. இது ஒரு கோடி சூரியர்கள் ஒன்றாக்கியது போன்ற பிரகாசமுடைய சோதித்தூணாக நிற்கின்றது இது ஜோதித்தம்பம், மூலத்தம்பம் என்ற பலவாறு அழைக்கப்படுகின்றது. இவரை ஈசானன் என்பர்.

மூன்றாவதான இச்சாசக்தியின் பத்தில் ஒரு பாகத்தில் இருந்து மூன்றாவது தத்துவமான மூர்த்த சாதாக்கியம் தோன்றுகிறது. இவரைப் பிரம்மா என அழைப்பர். இது நெடுந்தூணின் மையப்பகுதியில் இடுப்புவரை காணப்படும் திருவடிவமாகும். சுற்றிலும் தீச்சுடர் விளங்க நடுவில் ஒருமுகமும் முக்கண்ணும் நான்கு திருக்கரங்களும் அவற்றில் பின்கரங்களில் மான்மழுவும் முன்னிருகைகளில் அபய வரத முத்திரையும் கொண்டவராக இவர் விளங்குகின்றார்.

ஞானசக்தியின் பத்திலொரு பாகத்தி லிருந்து நான்காவது சதாசிவ தத்துவமான கர்த்ரு சாதாக்கியம் தோன்றுகிறது. இவர் திருவடிவை ஈசுவரன் என்பர்.

இது அளவில்லா நீள அகலம் கொண்ட பெரிய திரு உருக்கொண்ட ஸ்படிகம் போன்ற நிறமற்ற தெளிந்த அதே சமயம் பிரகாசமான லிங்கமாகும். இந்த லிங்கத்தில் தான் இந்த உலகங்களைப் படைத்து உருவாக்கும் மூலவித்தாக விளங்கும் சிவபெருமான் நான்கு முகங்களும் பன்னிரு கண்களும் எட்டுக் கரங்களும் கொண்டவராக விளங்குகின்றார். எண் கரங்களில் முறையே வலக்கரத்தில் சூலம், பரசு, கட்கம், அபயம், ஆகியனவும் இடக்கரங்களில் பாசம், பாம்பு, மணி, வரதம் ஆகியனவும் தாங்கியுள்ளார்.



ஞான சக்தியிலிருந்து நான்காவது சதாசிவதத்துவமான கர்த்ரு சாதாக்கியம், ஈசுவரன் எனும் லிங்கமாகத் தோன்றுதல். அதிலிருந்து உலகினைப்படைக்கும் ஆதிபிரம்மன் தோன்றி சக்திலிங்கத்தை வழிபடுதல். (இதில் பிரம்மனுக்கு ஐந்து முகங்கள் காட்டப்பட்டுள்ளன. முதலில் பிரம்மனுக்கு ஐந்து முகங்களே இருந்தன. பின்னாளில் அவனுடைய அகங்காரம் குறையும் பொருட்டு சிவபெருமான் ஒரு சிரத்தைக் கிள்ளி எறிந்தார். அதுமுதலே அவன் நான்முகன் ஆனான். இந்த சிற்பம் புராணகாலத்திற்கு முந்திய ஆதிசிவ தத்துவத்தைக் குறிப்பதால் இதில் பிரம்மன் ஐந்து முகங்களுடன் காட்டப்பட்டுள்ளான்.

சேலம் மாவட்டம்-தாரமங்கலம்-கைலாசநாதர் கோயில் தூண் சிற்பம்.

கிரியா சக்தியின் பத்திலொரு பாகத்திலிருந்து ஐந்தாவது சதாசிவ தத்துவமான கர்ம சாதாக்கியம் தோன்றுகிறது. இது அழகிய பீடத்தின் மீது அமர்ந்த திரு உருவமாக திகழ்கிறது. இதனைச் சதாசிவம் என அழைப்பர்.

இந்த ஐந்து தத்துவங்களும் ஒன்றையொன்று சார்ந்து ஒன்றுக்குள் ஒன்றாக உள்ளது. கர்ம சாதாக்கியம் தன்னுள்ளே மற்றவற்றையும் கொண்டுள்ளது.

கர்ம சாதாக்கிய மூர்த்தி ஐம்முகம் கொண்ட மூர்த்தியாக அருள்பாலிக்கின்றார். இவர் எல்லா சாதாக்கியங்களும் கலந்த மூர்த்தியாவர்.

நம்மை நோக்கியுள்ள இவருடைய (கிழக்கு) முகம் தத்புருஷம் எனப்படும். அமூர்த்தி சாதாக்கியதை உணர்த்தும் இம்முகம் ஈசானன தத்துவத்தை உணர்த்தி குங்குமப்பூ வண்ணத்தில் உள்ளதாகும்.

இடப்புறம் உள்ள சிவப்பு நிறங்கொண்ட முகம் வாமதேவம் எனப்படும். இது சிவசாதாக்கியத்தை உணர்த்தும் ஈசன் எனப்பெயர் பெறும்.

வலப்புறத்தில் தெற்கு நோக்கி கருப்பு வண்ணத்துடன் கோரைப் பல்லுடன் திகழும் அகோரம் எனும் முகம் கர்த்ரு சொரூபமான ஈசுவரனைக் குறிப்பதாகும்.

பின்புறத்தில் மேற்கு நோக்கியவாறு வெண்மையுடன் திகழும் முகம் சத்யோஜதம் எனப்படும் இது மூர்த்த சாதாக்கிய சொரூபமான பிரம்மனைப் குறிப்பதாகும்.

நான்கிற்கும் மேலே கிழக்கு நோக்கி அமையும் முகம் ஈசானன் எனப்படும் இது ஸ்படிகம் போன்ற தூய நிறமுடையது. கர்ம சாதாக்கிய தத்துவத்தை உணர்த்தும் இம்மூர்த்தியின் பெயரை யாவற்றையும் உள்ளடக்கிய சதாசிவ மூர்த்திக்குப் பெயராகத் திகழ்கிறது.

இம்மூர்த்தி பத்துக் கரங்கள் கொண்டவர். பத்துக் கரங்களில் வலக்கரங்களில் சூலம், பரசு, கட்கம், வஜ்ஜிரம், அபய முத்திரை ஆகியவற்றையும் இடக்கரங்களில் நாகம், பாசம், அங்குசம், மணி, அக்கினி, ஆகியவற்றையும் ஏந்தியுள்ளார், இவர் மிக உயர்ந்த ஆடைகளுடன் பத்மாசனத்தில் வீற்றிருக்கின்றார்.

இவருடைய ஐந்து முகங்களில் இருந்தே இருபத்தைந்து ஆகமங்களும் தோன்றின.

இந்த சதாசிவமூர்த்தியின் ஆயிரத்தில் ஒரு கூறிலிருந்து தோன்றும் மூர்த்தியே மகேசுவரன் என்று அழைக்கப்படுகின்றார்.



திருமந்திரம் காட்டும் சதாசிவன்

கூடிய பாதம் இரண்டும் படிமிசை
பாடியகை இரண்டெட்டும் பரந்தெழுந்
தேடு முகம் ஐந்து செங்கண் மூவைந்து
நாடும் சதாசிவ நல்லொளி முத்தே.

ஐந்து முகம்உள ஐம்மூன்று கண்ணுள
ஐந்தனோடைந்து கரதலம் தானுள
ஐந்துடன் ஐந்தாயுதமுள நம்பி என்
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே.

-- திருமூலர்

இம்மூர்த்தியே காத்தல், படைத்தல், கரத்தல், அருளல், அழித்தல் எனும் ஐந்தொழில்களையும் ஆற்றுகின்றார். இவரே ஆயிரக்கணக்கான வடிவம் தாங்கி அரக்கர்களைத் தண்டித்தும் அன்பர்களைக் காத்தும் அனவரதமும் ஓய்விலாது காரியம் இயற்றுகின்றார். இவரே இருத்தல், நிற்றல், ஆடல்

என்ற நிலைகளிலும் வாகனங்களில் ஏறிவருபவராகவும் விளங்குகின்றார். இவர் ஜடாமகுடம் கொண்டு நான்கு கரங்களில் மான், மழு, அபய வரதமுத்திரை தாங்கி நின்றவாறு அம்பிகையுடன் அருள்பாலிக்கின்றார்.

★★★

இவ்வகை சாதாக்கிய நிலைகளில் ஆதி நிலையில் ஒன்றுமே இல்லாத சூன்யமாக இருந்தது முதல் சாதாக்கிய நிலையில் மின்னலைப்போன்ற ஒளியாக அது வெளிப்படுகிறது. இரண்டாவது நிலையில் ஒளித்தூணாகத் திரண்டு உருப்பெறுகிறது. மூன்றாவது நிலையில் அத்தூணின் மையத்தில் இருந்து ஒரு முகமும் நாற்கரம் கொண்டவராகப் பெருமான் வெளிப்படுகிறார். அது விரிந்து நான்காவது நிலையில் நான்கு முகமும் எட்டு தோளும் கொண்டவராகப் பெருமான் காட்சியளிக்கின்றார். ஐந்தாம் நிலையில் பெருமான் லிங்கத்தை விடுத்து வெளிவந்து ஐம்முகம் கொண்ட சதாசிவராகக் காட்சியளிக்கின்றார்.

இப்படிச் சிவபெருமான் சூன்யத்திலிருந்து படிப்படியாக உருவம் கொள்ளும் நிலையே லிங்கோற்பவம் எனப்படும். லிங்கம் = உருவம் உற்பவம் = தோன்றுதல் ஓருருவம் ஒரு நாமம் இல்லாத பெருமான் உருவம் தாங்கி அருளும் நிலையே லிங்கோற்பவம் எனப்படும்.

ஆனால் நடைமுறையில் பிரம்ம, விஷ்ணுக்கள் தேட பெருமான் நெருப்புத்தூண் மத்தியில் நின்று அருள்பாலிப்பதையே லிங்கோற்பவர் என்று அழைக்கிறோம். அத்திருமேனிகளையே ஆலயங்களில் வைத்து வழிபடுகிறோம்.

இப்படி பெருமான் உருவம்கொண்ட நிலையான லிங்கோற்பவ காலம் தினமும் அதிகாலை 3.30 மணி முதல் 4.30 மணி வரை உள்ள காலமாகும். இதனை நித்ய லிங்கோற்பவ காலம் என்பர். திரயோதசியும் சதுர்தசியும் சந்திக்கின்ற வேளை பட்ச லிங்கோற்பவகாலம் ஆகும். மகாசிவராத்திரியின் மூன்றாம் காலம் வருஷ லிங்கோற்பவகாலம் ஆகும்.

இந்த லிங்கோற்பவ காலங்களில் சிவ பெருமானைத் தியானிக்க வேண்டுமென்று ஆன்றோர் கூறுவர்.



மணபடடை லிங்கம் (அஸ்டதாரா லிங்கம்) (பக்-98)
காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில்
படம் உதவி - தமிழ்நாடு தொல்பொருள் துறை.

இனி சாதாக்கிய தத்துவம் அதன் பெயர், பஞ்சமுகங்களில் முகம், அது நோக்கியுள்ள திசை, அதன் வண்ணம் ஆகியவற்றைக் காணலாம்.

எண்	சாதாக்கியம்	பெயர்	முகம்	திசை	வண்ணம்
1.	சிவசாதாக்கியம்	ஈசன்	வாமதேவம்	வடக்கு	சிவப்பு
2.	அமூர்த்த சாதாக்கியம்	ஈசானன்	தத்புருடம்	கிழக்கு	குங்குமப்பூ
3.	மூர்த்த சாதாக்கியம்	பிரம்மா	சத்யோஜாதம்	மேற்கு	வெண்மை
4.	கர்த்ரு சாதாக்கியம்	ஈசுவரன்	அகோரம்	தெற்கு	கருப்பு
5.	கர்ம சாதாக்கியம்	சதாசிவம்	ஈசானன்	உச்சி (நடு)	ஸ்படிகம்

தாரா லிங்கங்கள்

முகலிங்கங்களைப்போலவே தனிச்சிறப்பு வாய்ந்தவை தாராலிங்கங்களாகும். முகலிங்கத்தின் பாணப்பகுதியில் சிவ பெருமானின் முகம் அமைந்திருப்பதைப் போலவே தாராலிங்கங்களின் பாணப்பகுதியில் அழகிய பட்டைகள் அமைந்திருக்கின்றன.

இவ்வாறு பட்டைகளைத் தீட்டி தாரா-லிங்கங்களைச் செய்வது பல்லவ அரசர்களால் மட்டுமே சிறப்பாகப் கையாளப்பட்டிருக்கின்றது என்பர்.

காஞ்சீபுரம் கயிலாசநாதர் கோயில் ; மதங்கீசர் கோயில் மாமல்லபுரம் கடற்கரைக் கோயில், தென்னாற்காடு மாவட்டம் பனைமலைக்கோயில் ஆகியவற்றில் நேர்த்தியான தாராலிங்கங்களைக் காண்கிறோம்.

இவற்றைச் செய்வது கடினமாக இருந்ததாலும் இவற்றிலுள்ள பட்டைகள் காலப்போக்கில் மழுங்காமலிருக்க இவைகளைச் செய்ய உயர்வகைக் கருங்கற்கள் தேவைப்பட்டதாலும் பின்னாளில் இந்தமுறையில் லிங்கங்களை அமைப்பது கைவிடப்பட்டது என்பர்.

இச்சிவலிங்கங்களில் பாணப்பகுதியில் 4, 8, 16, 32, 64 ஆகிய எண்ணிக்கையில் ஐந்து வகையாக பட்டைகள் அமைந்துள்ளன. இந்தப் பட்டைகளை தாரைகள் என்பர். இனி இவற்றைப் பற்றிய விளக்கங்களைக் காணலாம்.

நான்கு பட்டைலிங்கம்

இவற்றில் முதல்வகையான நான்கு பட்டைகள் கொண்ட லிங்கம் வேதலிங்கம் எனப்படும் பாடல்பெற்ற திருத்தலமான சக்ரப்பள்ளியில் மூலவர் சற்று சாய்சதுரமான நான்குபட்டை லிங்கமாகக் காட்சியளிக்கின்றார்.

மேலும் சிவபெருமானேயன்றி திருமாலும் கோவை மாவட்டம் காரமடை ரங்கநாதர் ஆலயத்தில் இத்தகைய நாற்பட்டை லிங்கமாகவே காட்சி யளிக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இது சர்வதோபத்திர தாராலிங்கம் எனப்படும்.

அஷ்டதாரா லிங்கம்
(எண்பட்டை லிங்கம்)


பொதுவாக எண்பட்டை லிங்கங்கள் பல்லவர்களின் ஆலயங்கள் அனைத்திலும் இடம்பெற்றுள்ளன. இதன் எட்டுபட்டைகளும் முதல்வகையில் சிவபெருமானின் எட்டு இயற்கைத் தோற்றங்களான நிலம், நீர், காற்று, தீ ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டையும் குறிக்கிறதென்றும்

இரண்டாவது வகையில் எட்டு பைரவ சக்திகளைக் குறிக்கின்றதென்றும்,

மூன்றாம் வகையில் இறைவன் எட்டுருவில் நின்று நிகழ்த்திய அஷ்டவீரட்டத்தை உணர்த்தும் எண்மூர்த்தங்களைக் குறிக்கின்றதென்றும் கூறுவர்.

காஞ்சீபுரம் கயிலாசநாதர் கோயில், திருவதிகை வீரட்டானேசுவரர் கோயில், பனைமனை சுற்றாலயங்கள், சிதம்பரம் நவலிங்கம் சந்நிதியில் உள்ள எட்டு திசை லிங்கங்கள் ஆகியவை எண்பட்டை லிங்கங்களாக இருக்க காண்கிறோம். இத்தகைய லிங்கங்களை அஷ்டதாரா லிங்கம் என்பர்..

இவை அஷ்டதாராலிங்கம் எனப்படும்.



16 பட்டை லிங்கம்
படம் உதவி - தமிழ்நாடு தொல்பொருள் துறை

ஷோடசதாரா லிங்கம்
(16 பட்டை லிங்கம்)

பதினாறுபட்டைகளை உடைய லிங்கம் ஷோடசதாரா லிங்கம் எனப்படும். இது சந்திரனின் பதினாறு கலைகளையும் பதினாறு பட்டைகளாகக் கொண்டது என்பர்.

இதனைச் சந்திர கலாலிங்கம் எனவும் கூறுவர். பல்லவர் காலத்தில் குளிர்ச்சி மிக்க கல்லைத் தேர்ந்தெடுத்து இவ்வகை லிங்கங்களை அமைத்தனர் என்பர். பல தலங்களில் உள்ள இத்தகைய லிங்கங்களை உச்சிவேளைப் பொழுதில் தொட்டாலும் கூட சில்லென்று குளிர்ச்சியாய் இருப்பதைக் அனுபவப் பூர்வமாக உணரலாம் என்பர்.

சிதம்பரம் நவலிங்கம் சந்நிதியில் மையத்தில் அமைந்த லிங்கம், காஞ்சி கயிலாயநாதர் கோயில் சுற்றாலயத்தில் உள்ள லிங்கம் பழையாறை மேற்றளியில் உள்ள லிங்கம் ஆகியன இத்தகைய பதினாறுபட்டை லிங்கங்கள் ஆகும்.

தர்மதாரா லிங்கம்
32 பட்டை லிங்கம்

32 பட்டைகளைக் கொண்ட லிங்கம் தருமத்தின் 32 வகைகளைக் குறிப்பிடும் லிங்கம் என்பர். எனவே இது தருமலிங்கம் எனவும் அழைக்கப்படும். காமாட்சி அம்பிகை 32 அறங்களை வளர்த்த காஞ்சீபுரத்தில் வயல்வெளியில் 32 பட்டைகளைக் கொண்ட கலையழகுமிக்க ஒரு சிவலிங்கம் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

சதுஷ்சஷ்டி தாராலிங்கம்
64 பட்டை லிங்கம்

64 பட்டை லிங்கம் என்பது சிவபெருமானின் 64 லீலா வினோதங்களை விளக்கும் வகையில் 64 பட்டைகளை உடையதாகத் திகழ்கிறது என்பர். எனவே இது சிவலீலாசமர்த்த லிங்கம் என்றழைக்கப் படுகிறது.

மேலும் இந்த சிவலிங்கத்தில் அமைந்த 64 பட்டைகளும் 64 யோகினி சக்திகளைக் குறிக்கிற தென்றும் கூறுவர். எனவே இது யோகினி லிங்கம் என்றழைக்கப்படும். சைவமத்தினரில் ஒரு பிரிவாகிய பைரவ மதத்தினரால் இச்சிவலிங்கம் கொண்டாடப் படுகின்றது. இவர்கள் கருத்துப்படி இந்த 64 பட்டைலிங்கம் பைரவரையும் அதன் 64 பட்டைகள் 64 யோகினிகளையும் குறிப்பதாகும்.

பொதுவாக தாராலிங்கங்கள் பைரவ சமயத்தோடு தொடர்புடையதாகவே விளங்குகின்றது. அவர்களே அஷ்டபைரவர் 64 யோகினியர் ஆகியோர்களோடு இந்த லிங்கத்தின் பட்டைகளைத் தொடர்புபடுத்துகின்றனர்.

பைரவ சமயத்தினர் அதிகமாக வாழ்ந்த காஞ்சீபுரத்தில் ஏராளமான தாராலிங்கங்கள் கிடைப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிறப்புமிக்க தாராலிங்கங்கள்

தாராலிங்கங்களில் அமையும் பட்டைகளும் கலைஞர்களால் சில சமயம் தனிக்கவனத்துடன் அமைக்கப்பட்டன. ஆரம்பநாட்களில் சமதளமாக அமைக்கப்பட்ட இந்தப் பட்டைகள் காலப்போக்கில் வெளியில் குவிந்த (Convex Surface) குவிதள வளைபரப்புடையவையாகவும், உட்புறம் குழிந்த (Concave Surface) குழிதள வளைபரப்புடையவை யாகவும் அமைக்கப்படலாயின.

மேலும் சிலவகை சிவலிங்கங்களில் உச்சியை விடுத்து பாணப்பகுதியில் மட்டும் பட்டைகளை அமைத்துள்ளனர். இத்தகைய லிங்கங்களின் உச்சிப்பகுதி வழவழப்பாகவும் உச்சியில் சிறுவட்டமும் அமைகிறது.

சிலவகை லிங்கங்களில் உச்சிப்குதியில் வட்டமான பகுதி அல்லது ஒரு புள்ளியில் தொடங்கி பக்கங்களில் தொடர்ந்து அமையும் வகையில் பட்டைகளை அமைத்துள்ளனர்.

பல்லவர்காலத்தில் தொடங்கி அவர்களால் மட்டுமே செய்யப்பட்டு தனிச்சிறப்பு கொண்டவை தாராலிங்கங்களாகும்.

இவற்றை வணங்குவதால் இறைவனோடு இரண்டறக் கலக்கும் தன்மையைப் பெறலாம் என்பர். எனவே இது சாயுஜ்யலிங்கம் என அழைக்கப் படுகின்றது.

தாராலிங்கங்களின் மீது தாராபாத்திரத்தை வைத்து அபிஷேகிக்கும் போது அந்த நீர் பட்டைகளின் வழியே பலகிளைகளாகப் பிரிந்து வழிந்தோடுவது இன்பம் பயப்பதாகவும் இறைவனின் அருள் சுரப்பதையும் சுட்டுகிறது.

பஞ்சதேக மூர்த்தி

சிவபெருமான் ஐந்து சக்திகளாகவும் ஐந்து சதாசிவதத்துவங்களாகவும் பின்னர் அதை உணர்த்தும் பஞ்சமுகலிங்கமாகவும் விளங்கும் நிலைகளை இம்மலரில் கண்டோம்.


இதில் பக்கம்..........ல் கூறியபடி பெருமானின் ஐந்து மூர்த்திகளும் தனக்கென தனித்தனி வடிவம் கொண்டு வெளிப்படும் நிலையில் அமைந்த திரு வடிவமே பஞ்சதேக மூர்த்தி எனப்படும். சதாசிவதத்துவங்கள் ஐந்தும் இந்த புவனங்களை உள்ளிருந்து நடத்தி வருகின்றன என்றாலும் தனக்கென தனித்தனி வடிவம் தாங்கி ஐந்து மூர்த்திகளாகவும் வடிவம் தாங்கி அருள்வதே பஞ்சதேக மூர்த்தி என்று பெரியோர் கூறுவர்.

இம்மூர்த்தியின் வடிவம் பஞ்சமுகலிங்கத்தின் வளர்ந்த நிலையைக் குறிக்கிறதென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இதில் பஞ்சமுக லிங்கத்தில் இருப்பது போன்றே ஐந்து சிவ வடிவங்கள் அமைகின்றன. பஞ்சமுகலிங்கத்தில் சிவபெருமானின் முகம் மட்டுமே இருக்கும். ஆனால் இதில் அவருடைய முழுஉருவம் அமையும். இதுவே இரண்டிற்கும் வேறுபாடாகும்.

இதில் மையத்தில் பெரிய வடிவமாக சதாசிவர் பத்து கரங்களுடன் நிற்கின்றார். அவரை ஒட்டிய நாற்புறத்தும் நான்கு திசைகளை நோக்கியவாறு சத்தியோஜாதர், அகோரர், தத்புருஷர், வாமதேவர் ஆகியோர் நன்னான்கு கரங்களுடன் நின்றவாறு காட்சியளிக்கின்றனர். இத்தகைய திருமேனியை நாம் ஆலயங்களில்-காணமுடியவில்லை

✤ ✤ ✤

சதாசிவமூர்த்தியை வழிபடுபவர்கள் லகுளீசபாசுபத சைவர்களேயாவர். இம்மதத்தைப் பின்பற்றிய மன்னனான முதலாம் ராஜராஜசோழன் தான் எழுப்பிய தஞ்சைப் பெரிய கோயிலில் சதாசிவமூர்த்திக்குச் தனிச்சிறப்பிடம் கொடுத்து விமானத்தில் பலவேறு நிலைகளில் சிலைகளாக அமைத்து மகிழ்ந்தான். மேலும் சதாசிவ தத்துவத்தை விளக்கும் வகையில் அமைந்த பஞ்சதேக மூர்த்தியின் வடிவத்தையும் இக்கோயிலுக்குச் செய்து அளித்தான். அம்மூர்த்தியின் அழகினையும் எடை, உயரம் ஆகியவற்றையும் அவர் அணிந்திருந்த ஆபரணங்களையும் விளக்கும் செய்திகளைத் தஞ்சை பெரிய கோயில் தென்புறத்தூண் ஒன்றில் கல்வெட்டாகவும் பொறித்து வைத்துள்ளான். இன்னாளில் இம்மூர்த்தியின் வடிவம் இக்கோயிலில் இல்லை. அண்மையில் கிடைத்த கல்வெட்டு ஒன்று மேலும் ஒரு பஞ்சதேகமூர்த்தியின் வடிவத்தை விபரமாக குறிப்பிடுவதால் பஞ்சதேகமூர்த்தியின் இரண்டு வடிவங்கள் இக்கோயிலில் இருந்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.



பஞ்சதேக மூர்த்தி
(ஆய்வுக்காக வரையப்பட்டது)



பிரதோஷ மகிமை

உலக உயிர்கள் யாவும் இன்பமாக வாழவே விரும்புகின்றன. இடையறா இன்பம் மட்டும் கிடைத்துக் கொண்டிருந்தால் போதுமா? அதை சர்வ சுதந்திரத்துடன் அச்சமின்றி அனுபவிக்க வேண்டிய நிலையும் வேண்டும் அல்லவா ? எடுத்துக்காட்டாக ஏராளமான செல்வம் படைத்தவன் ஒருவன் இருக்கின்றான். அவனிடம் அவ்வளவு செல்வம் இருந்தும் அது கொள்ளை போய்விடுமோ? என்று அவன் நிமிடத்திற்கு நிமிடம் அஞ்சிக் கொண்டிருந்தால் அச் செல்வத்தினை அனுபவிக்கும் சுகம் அவனுக்கு எள்ளளவும் கிடைக்காமல் போய் விடுகிறது. ஆதலின் இன்பம் மட்டும் போதாது. அதனை அனுபவிக்க மனவலிமை, உடல் வலிமை, அச்சமற்ற நிலை ஆகிய மூன்றும் வேண்டியது அவசியமாகிறது.

இம் மூன்றிலும் அச்சமே மிகுந்த வலிமை படைத்ததாகும். அது இன்பத்தின் நிழலைக்கூடக் கொல்லும் ஆற்றல் படைத்தது. அதனால் தான் சான்றோர்கள் "அச்சம் தவிர்" என்று ஆணையிட்டு மொழிந்துள்ளனர். பயத்தினை வெல்வதே உண்மையான சுகத்திற்கான வழியாகும்.

பயம் பலவகைப்படுகிறது. நோயால் வரும் பயம், பகையால் வரும் பயம். இல்லாமையால் வரும் பயம், விலங்குகளால் வரும் பயம் என்று பல நிலைகளில் பயம் நம்மை வாட்டுகிறது. இத்தகைய பயங்கள் யாவற்றிலும் மிகப்பெரிய பயமாக விளங்குவது மரணபயமேயாகும். இதுவே ஓயாது உயிர்களை வாட்டி வதைக்கின்றது. ஆகையால் யமனை வென்று இறவாவரம் பெறுதலே கிடைத்தற்கரிய பேறுகளில் பெரும்பேறாக எல்லோராலும் போற்றப்படுகின்றது. மரணத்திற்கு அஞ்சாத உயிர்களே இல்லை. சித்தர்களும் யோகியர்களும் கூட மரணத்தை வென்று இறவாத தன்மையை அடையவே தங்கள் தங்கள் வழிகளில்

பலமுறை முயன்று முயன்று அதில் வெற்றியும் பெற்றனர்.

சித்தர்கள் தங்கள் பரம்பரை வழியில், இயற்கையில் கிடைக்கும் அரிய மூலிகைகளைக் கலந்து மந்திர தந்திரங்கள் மூலம் அவற்றை மருந்தாக்கியுண்டு. அவற்றால் தங்கள் உடலை வஜ்ர தேகமாக்கி இன்றும் நிலைபெற்று வாழ்ந்து வருகின்றனர்.

யோகியர்கள் தமது யோகசாதனையால் மனத்தினை அடக்கி உடலில் உள்ள ஆறாதாரங் களைக் கடந்து உச்சியில் உள்ள சகஸ்ரதள தாமரையில் வீற்றிருக்கும் இறைவனை தரிசித்து அங்குப் பெருகும் பேரானந்த வெள்ளமாகிய அமுதத்தையுண்டு இறவா நிலை பெற்றுள்ளனர்.

இவ்விருவரும் பெற்றுண்டது முறையே சித்தாமிர்தமும், ஞானாமிர்தமும் ஆகும். இவை அவர்களுக்கு மட்டுமே பயன் தருவதாகும். இதனை உட்கொண்டு அவர்கள் இறைவனை ஒத்தவர்களாக ஐந்தொழில் புரியும் வல்லமை பெற்றவர்களாகக் கரையற்ற இன்ப வெள்ளத்தில் மூழ்கிக் களிக்கின்றார்கள். அவர்கள் கொண்டுள்ள மானுடதேகம் பல விக்கிரியா சக்திகளை யுடையதாகப் பல கோடி ஆண்டுகளுக்கு இளமை நலம் மாறாததாக இருந்து வருகின்றது.

இது பேன்றே அமரர்களாகிய தேவர்கள், அசுரர்களால் அடிக்கடி உதைப்பட்டு அடிபட்டு மரணமடையாதிருக்கவும், ஆயுதங்களால் தாக்கப் பட்டு உடல் சிதையாதிருக்கவும், உடலில் வலிகள் தோன்றாதிருக்கவும், வைரம் போன்று உறுதியான தேகம் பெறவும், அனந்த சுகங்களை இடையறாது அனுபவிக்கவும் பாற்கடலைக் கடந்து அமிர்தம் பெற்று உண்டனர்.

இவர்கள் உட்கொண்ட அமிர்தம் இந்த ஊழிக்காலம் வரையே பயன்தரத்தக்கதாகும். ஊழிமுடிவில் இவர்கள் யாவரும் அழிந்து சிவபெருமானுள்ளேயே ஒடுங்குவர். ஆனால் சித்தர்களும், ஞானிகளும் உண்ட அமிர்தம் எல்லையற்ற காலம் அழியாததாகும்.

முற்பிறப்பில் செய்த தானதருமங்களின் பயனால் உயர் நிலையெய்தி, முப்பத்து முக்கோடி தேவர்களாக நிலைபெற்றுள்ள அமரர்கள் உண்டது தேவமிர்தமாகும். இந்த அமிர்தத்தை அவர்கள் அடைந்ததைப் பலவேறு புராணங்கள் பலவாறு விளக்குகின்றன.

சிவமகாபுராணம், வாமன புராணம், பிரம்மாண்ட புராணம், பாகவதம் முதலிய நூல்களில் தேவர்கள் அமிர்தம் பெற்று அதனை உண்ட வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இனி பலவேறு புராண வரலாறுகளை ஒப்புநோக்கி தேவர்கள் பாற்கடலைக்கடைந்து அமிர்தம் பெற்ற வரலாற்றினைத் தொகுத்துக் காணலாம்.



திருஞானசம்பந்தர் தேவாரம்

நாகம்தான் கயிறாக நளிர்வரை அதற்கு மத்தாகப்
பாகம் தேவ ரோடசுரர் படுகடல் அளறெழக் கடைய
வேக நஞ்செழ ஆங்கே வெருவொடும் திரிந்தெங்கும் ஓட
ஆகந் தன்னில் வைத்தமிர்தம் ஆக்குவித்தான் மறைக்காடே.

வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும், மந்திரமலையை அதற்கு மத்தாகவும் கொண்டு தேவர்களும் அசுரர்களும் கூடி பாற்கடலைச் சேறுகலங்கும்படிக் கடையும்போது வேகம் பொருந்திய விஷம் எழ அஞ்சிய தேவர்கள் அலமந்தோட அந்த விஷத்தைத் தன் திருமேனியில் வைத்து தேவர்களை வாழவைத்து அமிர்தம் ஆக்கிய சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் திருமறைக்காடே.

பாற்கடல் கடைந்த கதை

நீண்ட காலத்திற்கு முன்பு தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் பெரும் போர் மூண்டது. இரண்டு புறத்திலும் ஏராளமான பேர் மடிந்தனர். பலர் நோயுற்றனர். எனவே தேவர்கள் பிரமனை அடைந்து அசுரர்களுடன் நீண்ட நாள் தொடர்ந்து போரிடுவதற்கான வலிமையும், அழியாத உடலும், இறவாத உயிரும், பெறவேண்டி, அதற்கு என்ன வழி என்று கேட்டனர்.





நீலகண்டர் - விஹாபஹரணர்

அவர் அவர்களைத் திருப்பாற்கடலில் துயிலும் நாராயணனிடம் அழைத்துச் சென்றார். நாராயணன் தேவர்களை நோக்கி தேவர்களே! பாற்கடலைக் கடைந்தால் அமிர்தம் கிடைக்கும். அதனை நீங்கள் உண்டால் இறவாத நிலையையும், அளவற்ற வலிமையையும் பெறலாம். ஆனால் பாற்கடலைக் கடைவதென்பது அவ்வளவு எளிதல்ல. நீங்கள் தனியே சென்று அதனைக் கடைந்து விடவும் முடியாது. எனவே அசுரர்களையும் துணைக் கழைத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

அசுரர்களை இதற்காகத் துணைக்கழைத்தால் அமிர்தத்தில் அவர்களுக்கும் பங்கு தரவேண்டும் என்பதால் தேவர்கள் முதலில் தயங்கினர். என்றாலும் பின்னர் வேறுவழியில்லாதால் பாற்கடலைக்கடைய அசுரர்களையும் துணைக் கழைத்துக் கொண்டனர்.

பின்னர் அனைவரும் கூடி மந்திர மலையை மத்தாகப் பயன் படுத்த முடிவு செய்தனர். ஆனால் அதனைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு பாதி வழி வரை வருவதற்குள்ளேயே அவர்கள் சோர்ந்து விழுந்து விட்டனர். பின்னர் நாராயணன் கருடனை ஏவி அந்த மலையைக் கொண்டு சென்று பாற்கடலில் சேர்த்தார்.

இப்போது மலையாகிய மத்து கிடைத்து விட்டது. கடைவதற்குக் கயிறு வேண்டுமல்லவா? அனைவரும் கூடி அஷ்டமா நாகங்களில் ஒருவனும் பாம்புகளின் அரசனுமான வாசுகியைத் தங்கள் வேலைக்குக் கயிறாக இருக்கும்படி வேண்டினர்.

பின்னர் ஒரு நல்ல வேளையில் சூரியனை (சில நூல்களில் சந்திரன் என்று குறிக்கப்பட்டுள்ளது) தறியாகவும், மந்திரமலையை மத்தாகவும், வாசுகியை கயிறாகவும் கொண்டு தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைய முற்பட்டனர். அப்போது தேவர்கள் வாசுகியின் தலைப்பக்கம் நின்றனர்.

அசுரர்கள் தேவர்களை நோக்கி, "நாங்கள் வேதம் பயின்று மேன்மை பெற்றவர்கள் இப்பாம்பின் வாலைப் பிடிப்பது எங்களுக்குக் கேவலம், அதனால் நாங்கள் தலைப்பகுதியில் நிற்கின்றோம் என்றனர்." அதன் படியே அவர்கள் தலைப்பகுதியிலும் தேவர்கள் வால் பகுதிகளிலும் பிடித்துக்கொண்டு பாற்கடலைக் கடைய முற்பட்டனர்.

ஆனால் மத்தாகிய மந்திரமலை சற்றும் அசைவதாக இல்லை. மேலும் அது கடலுக்குள் அமுந்தத் தொடங்கியது. அப்போது திருமால் ஆமை அவதாரம் எடுத்து அதைத் தாங்கிப் பிடித்தார். அதன் பிறகு இருச்சாரரும் கூடிக் கடலைக் கடையத் தொடங்கினர்.

இவ்வாறு இவர்கள் பாற்கடலைக் கடையத் தொடங்கி ஓராயிரம் ஆண்டுகள் ஆயின. இவர்கள் முதலில் சிவபெருமானைத் துதிக்காமலும் அவருடைய அனுமதி இன்றியும் பாற்கடலைக் கடையத் தொடங்கியதால் அவர்களுக்கு உரியபயன் கிடைக்கவில்லை.

மேலும் இரண்டு பக்கத்தினரும் மாறிமாறி இழுத்ததால் வாசுகியின் உடல் புண்ணானது. அத்துன்பத்தால் அவனது கண்கள் சிவந்தன. அவன் தன்னையுமறியாமல், வலிபொறுக்கமாட்டாமல் தன் ஆயிரம் வாயினாலும் விஷத்தைக் கக்கினான். அச்சமயத்தில் கடலில் இருந்தும் ஒருவகை விஷம் பொங்கியது. இப்படி பாம்பினால் கக்கப்பட்ட காளம் என்கிற நீலவிஷமும், பாற்கடலில் பிறந்த ஆலம் என்கிற கருப்பு விஷமும் சேர்ந்து கருப்புப் புயல்போல கொடிய வெப்பமும், கரும்புகையும்

கொண்டதாக இடமும் வலமுமாக மாறி மாறி உலகமெங்கும் சூழ்ந்தது. அதற்கு அஞ்சிய தேவர்கள் தறிகெட்டு இடமும் வலமுமாக ஓடினர்.

பாம்பின் தலைப்பக்கம் நின்ற பல நூற்றுக் கணக்கான அசுரர்கள் விஷத்தின் வெப்பத்தால் எரிந்து சாம்பலாகி விட்டனர். எஞ்சியவர்களுடைய உடல்கள் தீயில் வெந்து கருப்பாகவும், சிவப்பாகவும், கோரமாகவும், அழகற்றதாகவும் மாறிவிட்டன.

பொங்கி வரும் விஷத்தைக் கண்டு பிரமன் ஓடி ஒளிந்துவிட்டான். பிரகாசமான முத்தைப் போன்று ஒளிவீசும் வெண்ணிறம் கொண்ட திருமால் இந்த விஷத்தை நான் எளிதில் அடக்குவேன் என்று முன் வந்து நின்றார். உடனேயே அவர் உடல் கருத்து மயங்கி வீழ்ந்தார். அன்று முதல் அவர் கருப்பு உடல் கொண்டவரானார். அதன் பின்னர் அவர் ஒருவாறு தேறி அனைவரையும் அழைத்துக் கொண்டு கயிலாய மலையை அடைந்தனர்.

அங்கு திருவாயிலில் வீற்றிருக்கும் நந்தியம் பெருமானிடம் அனுமதி பெற்று உட்சென்று சிவபெருமானை வணங்கி, பொங்கி வரும் விஷவேகத்திலிருந்து தம்மைக் காப்பாற்ற வேண்டுமென்று முறையிட்டு அழுது தொழுதனர். அப்போது அவர் பார்வதியை நோக்கி என்ன செய்யலாம் என்று கேட்க ★ பார்வதிதேவியும் தேவர்களைக் காத்து அருள் புரியுமாறு வேண்டினாள்.

அப்போது சிவபெருமான் தன் நிழலில் இருந்து தோன்றியவரும், பேரழகரும் ஆகிய "சுந்தரர்" எனும் தமது அணுக்கத்தொண்டரை அனுப்பி அவ்விஷத்தைத் திரட்டிப் பற்றிக் கொண்டு வருமாறு கூறினார்.

சுந்தரரும் வெளியே சென்று, உலகெங்கும் பரவிக் கொண்டிருக்கும் அந்தக் கொடிய ஆலகால விஷத்தைப் பற்றித் திரட்டி ஒரு கருநாவற் பழம்போல ஆக்கி அதனை அடக்கி சிறுபாத்திரத்தில் வைத்துக் கொண்டு வந்து சிவபெருமானிடம் அளித்தார்.

அப்போது தேவர்கள், "ஐயனே எங்கும் வியாபித்து எங்களைத் துன்புறுத்திய இந்த விஷம் உங்கள் கையில் கட்டுண்டு கிடக்கின்றது. ஆதலின் இதை வெளியே விடாது தங்களே தங்களுடைய திருமேனியில் அடக்கியருள வேண்டுமென்று கூறினர்.

சிவபெருமான் ஒரு கணநேரம் 'விஷா பகரணமூர்த்தி' என்னும் ரௌத்திர வடிவம் தாங்கி அவ்விஷத்தை உண்டருளினார். அப்போது தேவியார் அந்த விஷத்தை பெருமான் உட்கொண்டால் சகலபுவனமும் அழியுமே என்று அவ்விஷம் உட்செல்லவொட்டாமல் அவருடைய கழுத்தில் தங்கும்படி செய்தாள். அப்போது தேவர்கள் அவருடைய அச்சமூட்டும் வடிவைக்கண்டு அஞ்சி, "பெருமானே ! எங்களையும் சகல புவனங்களையும் நீங்கள் காத்தருளியதன் அடையாளமாக தங்கள் கண்டத்திலேயே அந்த விஷம் விளங்கட்டும்" என்று வேண்டினர். பின்னர் அவர் மீண்டும் இயல்பான வடிவம் பெற்றார்.

சிவபெருமானும் அதற்கிசைந்து அந்த விஷத்தை ஒரு நீலமணியைப் போல தமது கழுத்தில்



★ அமுதாம்பிகை

சிவபெருமான் விஷமருந்தியபோது அதனை அமிர்தமாக்கியவள் அம்பிகை பார்வதிதேவியே ஆவாள். இதனால் அவளுக்கு அமிர்தேசுவரி என்பது பெயராயிற்று. அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியில் அருந்திய நஞ்சை அமுதம் ஆக்கிய அம்பிகை என்று குறிப்பிடுவது எண்ணத்தக்கதாகும். இவ்வாறு சிவன் உண்ட நஞ்சை அமிர்தமாக்கி தன்னுடைய மாங்கல்யத்தைக் காத்துக்கொண்டு அந்த விஷம் பிறரை வருத்தாது இந்திராணி முதலான அனைவரின் மாங்கல்யத்தையும் காத்ததால் மங்களேஸ்வரி என்று பெயர் பெற்றாள்.

நிறுத்தினார். பின்னர் ஒரு திருவிளையாடல் புரியக்கருதி மயக்கம் கொண்டவர் போலப் படுத்துக்கொண்டார். சிவன் இவ்வாறு படுத்துக் கொண்டதை அறிந்த தேவர்கள் கலங்கினர். எல்லோரும் அவரைப் போற்றித் துதிபாடியவாறு இருந்தனர். ஏகாதசியன்று விஷத்தை உண்ட சிவபெருமான் துவாதசி முழுவதும் பள்ளி கொண்ட நிலையில் இருந்தார். பின்னர் திரியோதசி நாளில் பகலும் இரவும் சந்திக்கும் மாலை வேளையில் எழுந்து உமையவளை ஒரு பக்கம் கொண்டு சூலத்தைச் சுழற்றி டமருகத்தை ஒலித்து **சந்தியாநிருத்தம்** எனும் நடனம் ஆடினார்.

இந்த நாட்டியத்தைக் கண்ட தேவர்கள் அஞ்சியதுடன், மகிழ்ச்சியும் கொண்டனர். இந்த நடனத்திற்கு நந்திதேவர் மட்டும் சுத்தமத்தளம் வாசித்தார். அனைவரும் "ஹர ஹர" என்று துதித்தனர்.

அவருடைய நீலகண்டத்தையும் அவர் உலக உயிர்கள் உய்யும் பொருட்டு விடமுண்டதையும் போற்றி பதினெண்கணங்களும் பலவகையாக வாழ்த்தி வணங்கினர்.

(அன்று முதல் பெருமான் ஒவ்வொரு நாளும் அந்திவேளையில் இக்கூத்தை நிகழ்த்துகின்றார். இக்கூத்தில் சரஸ்வதி வீணையையும், பிரமன் தாளத்தையும், நந்தி மத்தளத்தையும், திருமால் புல்லாங் குழலையும் பூதகணங்கள் எண்ணற்ற இசைக் கருவிகளையும் இசைக்கின்றனர் என்பர்.)

பிறகு மீண்டும் தேவர்கள் பாற்கடல் கடைந்து அமிர்தம் பெற விரும்பி, அதற்குச் சிவபெருமானின் அனுமதியைக் கேட்டனர். அவரும் அப்படியே செய்யுங்கள் என்று ஆசியளித்து அனுப்பினார்.

பின்னர் தேவர்களும் அசுரர்களும் தங்கள் களைப்பை நீக்கிக்கொண்டு புத்துணர்ச்சியுடன் பாற்கடலை அடைந்து அதனை முன்போலவே கடையத் தொடங்கினர்.

நீலகண்டம் குறித்த வடமொழி வாக்கியங்கள்



பபேதோ ஹாலாஹலம் தந்தம் |
தஸ்மை ருத்ராய நமோ அஸ்து ||

(எவர் தகிக்கும் ஆலகால விஷத்தைக் குடித்தாரோ அந்த ருத்திரர்க்கு நமஸ்காரம்) *—சரபோபநிஷத்*

கால கூட விஷதாரணே
நீலவர்ணக்ரீவா யஸ்ய அஸௌ நீலக்ரீவ:|

(கால கூட விஷத்தைத் தரித்ததனால் நீலவர்ணமான கழுத்து எவருக்கு உண்டோ அவரே நீலகண்டர் எனப்படுகின்றார்.)

—தைத்ரிய சம்ஹிதை

த்ரைலோக்யம் மோஹிதம் யஸ்ய தந்தமாக்ராய தத்விஷம் |
ப்ராக்ரஸல் லோகர க்ஷார்த்தே ப்ரஹ்மணோரு வச நாச்சிவ :|
ததார பகவாந் கண்டே மந்திரமூர்த்திர் மகேச்வர :|
ததாப்ரப்ருதி தேவஸ்து நீல கண்ட இதி ச்ருதி :|

(மூன்று லோகங்களும் அவ்விஷத்தால் மோக மடைந்தன. உலகினைக் காக்கும் பொருட்டு பிரம்மா செய்த பிரார்த்தனையால் மந்திரமூர்த்தியும் மகேச்சுவரரும் பகவானுமாகிய சிவபெருமான் அவ்விஷத்தை தம்கண்டத்தில் தரித்தருளானார். அதுமுதல் அவர் நீலகண்டரானார் இது சுருதி)

—மஹாபாரதம்

பார்கடல் தந்த பரிசுகள்



சிவபெருமானின் அருள் பெற்றுத் திரும்பிய தேவர்கள் தமது இடைவிடாத முயற்சியால் பாற்கடலைக் கடைந்த போது அதிலிருந்து பல பொருள்கள் தோன்றின.

சிவனருள் பெறாமல் கடைந்த பாற்கடலில் முதலில் பிறந்தது கொடும் விஷமேயாகும். இதனைச் சிவபெருமான் ஏற்றுக்கொண்டு நீலகண்டரானார். அவர் இந்த விஷத்தை ஏற்று உண்டபோது சில துளிகள் கீழே சிந்தின. அவைகளே தேள், நட்டுவாக்கிளி, பூரான் முதலிய விஷ ஜந்துக் களாயின. அவைகளைக் கண்டு யாவரும் அஞ்சினர். விஷாபகரண மூர்த்தியான சிவபெருமான் அவைகளை மாலையாகக் கோத்து அணிந்து கொண்டார். மேலும் சில துளிகள் பூமியில் உள்ள மரங்கள் செடி, கொடிகள் மீதும் வீழ்ந்தன. அவைகளே நச்சுமரங்களாகவும், விஷச்செடி கொடிகளாகவும் மாறின. நச்சுவேகம் பாதித்த பிரமனின் படைப்பில்தான் கொலை, களவு முதலியவற்றைச் செய்யும் கொடிய மனிதர்கள் தோன்றினார்கள்.

சிவனருள் பெற்று இரண்டாம் முறையாக பாற்கடலைக் கடைந்த போது முதலில் "காமதேனு" என்ற பசு தோன்றியது. காமம் என்பதற்கு விருப்பம் என்று பொருள். விரும்பியதெல்லாம் அளிக்கவல்ல இந்தத் தெய்வீகப்பசுவை முனிவர்கள் ஏற்றுக் கொண்டனர். யாகங்களுக்கு உரிய (ஹவிஸ்) அவிர்ப்பாகமாகிய நெய்யையும் பிற பொருள்களையும் இப்பசு தருவதாகும். தெய்வீக ஆற்றல் கொண்ட இப்பசு பெண்முகமும் அழகிய தோகையும், பொன்மயமான இறக்கைகளையும் கொண்டதாகும்.

இப்பசு ஒருமுறை பிரமன் களைப்பால் கைசோர்ந்து படைப்புத்தொழிலை விட்டு நீங்கிய போது இந்தப்பசு சிவனருள்பெற்று படைப்புத்



தொழிலைப் புரிந்த தென்று பேரூர்ப்புராணம் கூறும். இது பலசமயம் பார்வதிக்கு வாகனமாக வும் அமையும். அதைத் தொடர்ந்து மீண்டும் கடைந்தபோது உச்சை சிரவஸ் என்ற குதிரை பொன்மயமான ஒளியுடன் தோன்றியது. இதை தேவர்கள் ஏற்றுக் கொண்டனர். இது பறக்கும் ஆற்றலும் ஒற்றைக் கொம்பையும் வலிய சிறகுகளையும் கொண்டதாகும்.

அடுத்தாக ஐராவதம் தோன்றியது. நான்கு கொம்புகளைக் கொண்டதாய் வெண்மையான பனிமலை போன்ற இந்த யானையை இந்திரன் ஏற்றுக் கொண்டான். அது முதல் அந்த யானை அவனுக்கு வாகனமாயிற்று. இதுவே முருகனின் தேவியான தெய்வயானைப்பிராட்டியாரை அன்புடன் வளர்த்ததாகும். சிறந்த சிவபக்தியுடைய இந்த யானை அனேகத் திருத்தலங்களில் சிவலிங்கம் அமைத்துச் சிவபூஜை செய்துள்ளது.

அடுத்ததாக பஞ்ச தருக்கள் தோன்றின. ஹரிசந்தனம், கற்பகம், சந்தனம், பாரிஜாதம், மந்தாரம் ஆகிய ஐந்து மரங்களே பஞ்சதருக்கள் எனப்படும். இவற்றில் கற்பகமரம் தன் நிழலில் இருந்து வேண்டுபவர்க்கு வேண்டியதெல்லாம் கொடுக்கும் ஆற்றலுடையது. இது எட்டுக் கிளைகளைக் கொண்டதாகும். இதனைச் சுற்றிலும் காமவல்லி எனும் கொடி படர்ந்துள்ளது. மற்ற நான்கு மரங்களும் பூஜைக்களுக்கான புஷ்பங்கள் முதலான யாவற்றையும் அளிப்பதுடன் விரும்பியதையளிக்க வல்லவை. இவற்றையும் தேவர்கள் எடுத்துக் கொண்டனர்.

அடுத்ததாக கௌஸ்துபம் என்னும் ஒளிவீசும் மாலை தோன்றியது. இது தன்னை அணிபவர்க்கு அளவற்ற ஆற்றலையும் வெற்றியையும் கொடுப் பதாகும். இதனைத் திருமால் ஏற்றுக் கொண்டார்.

அடுத்ததாக மூதேவி தோன்றினாள். இவள் சற்று அழகில் குறைந்தவளாகவும், தூக்கத்தையும் சோம்பலையும் தருபவளாகவும், இருந்ததால் எல்லோரும் அவளை ஏற்கத் தயங்கினர். அவளும் பூவுலகிற்கு வந்து தங்கினாள். இவளை "ஜேஷ்டா தேவி" என அழைப்பர்.

அடுத்ததாக ஆடல், பாடல் முதலிய அநேக கலைகளில் வல்லவர்களாகிய அறுபது கோடி தேவ

திருப்பாற்கடலில் பிறந்த ஐஸ்வர்யலட்சுமி

(எதிர்பக்கம் 109ல் உள்ள படத்தின் விளக்கம்)

பாற்கடலில் பிறந்த செல்வங்களை தேவர்களும் அசுரர்களும் பெற்று மகிழ்ந்தனர் என்பதை அறிந்தோம். அப்படிப்பிறந்த செல்வங்கள் யாவும் மங்கலச் சின்னங்களாகும். அவற்றின் உருவங்களைப் பட்டுத்துணியில் எழுதிவைத்து வழிபட்டால் சகல செல்வமும் சேரும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. இந்த ஓவியத்தின் மையத்தில் மகாலட்சுமி மணமாலையுடன் விளங்குகின்றாள். அவளுக்கு மேற்புறம் விரும்பியதை அளிக்கும் கற்பக மரமும் அதில் படர்ந்துள்ள காமவல்லி என்ற கொடியையும் காண்கிறோம். அவளுக்கு கீழே தன்வந்திரி என்ற தெய்வீக மருத்துவன் அமிர்தத்தையும், வைத்திய சாத்திர நூலையும் ஏந்தியவனாகக் காட்சியளிக்கின்றான். லட்சுமி தேவியின் வலப்புறம் கீழிருந்து மேலாக ஐராவதம் என்கின்ற இந்திரன் பெற்ற யானை உச்சைவரஸ் என்ற தேவலோகப் பறக்கும் குதிரை, ரத்தினங்களை ஏந்திய தேவமங்கை ஆகியோர் உள்ளனர். இடப்புறம் மேலிருந்து கீழாக அமுதத்தைப் பொழியும் சந்திரன், வாருணி என்ற மலைத்தெய்வம், விரும்பியதை அளிக்கும் காமதேனுப்பசு ஆகியோர் இடம் பெற்றுனர். இதனை வெண்மை அல்லது சிவப்பு நிற பட்டுத் துணியில் எழுதி வைத்து வெள்ளிக் கிழமைகளில் ஐந்துமுகக் குத்து விளக்கேற்றி தாமரை அல்லது மல்லிகை மலர்களைக் கொண்டு பூசிக்க எண்ணிய செல்வங்களை அடைவர் என்பது உறுதியாகும்.

திருப்பாற்கடலில் பிறந்த ஐஸ்வர்ய லட்சுமி





மாதர்கள் அளவற்ற அழகுடன் தோன்றினர். அவர்களைத் தேவர்கள் தங்கள் மனைவியர்களாக ஏற்றுக்கொண்டனர்.

அடுத்ததாக மதுவாகிய சுராவும், அதன் அதிதேவதையான சுராதேவி என்ற வலிய சிறந்த அழகுள்ள பெண் தனது கணக்கற்ற தோழியருடன் தோன்றினாள். அவளையும் அவளுடைய தோழியரையும் அசுரர்கள் ஏற்றுக் கொண்டனர்.

அவனையடுத்து எல்லோருக்கும் இளையவளாக ''ஸ்ரீ'' என்கிற மகாலட்சுமி மணமாலையைக் கையில் ஏந்தியவளாகத் தோன்றினாள். மிகுந்த பிரகாசத்துடன் தாமரை மலரில் தோன்றிய அந்தத் தேவி திருமாலிடம் சென்று அவருக்கு மாலை அணிவித்து அவருடைய தேவியானாள்.

அவளுக்குப் பின்னர் சந்திரன் அமுத கலைகளுடன், விஷம் நீக்கும் மூலிகைச் செடிகளை ஏந்தியவனாக வெளிப்பட்டான். இவன் நீலோற்ப மலர்களையும் மோக சாஸ்திரச்சுவடியும் தனது கைகளில் கொண்டவனாக விளங்கினான்.

அதன்பிறகு தோன்றிய ஸ்யமந்தக மணியை சூரியன் எடுத்து அணிந்து கொண்டான். அது கோடி சூர்யப்பிரகாசமுடையது. அதற்கு "தினமணி" என்பது பெயர். அதனை அவன் தன்னை நோக்கிக் கடும்தவம் செய்த விருக்ஷ்ண்யந்தக வம்சத்தில் வந்த க்ரோஷ்டாவின் பேரனான ஸத்ராஜித் என்பவனுக்கு அளித்தார். அம்மணி பலரிடம் கைமாறிமாறி இறுதியில் கண்ணனை அடைந்தது. கண்ணனிடமே

திருமகள் திருமணம்

பாற்கடலில் பிறந்த பாவையான மகாலட்சுமிக்கு தேவர்கள் பல ஆபரணங்களைச் சூட்டி அவளை நோக்கி, "உனக்கேற்ற கணவனைப் பெறுக" என்றனர். அவள் கருநெய்தல் பூவால் புனைந்த மாலையை ஏந்தி திருமாலை நோக்கிச் சென்றாள். பின்னர் இவர் என்னை உவந்து ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இவரையே ஏற்பேன் என்று மகிழ்ச்சியுடன் கூறி திருமாலுக்கு தன் கையில் உள்ள மாலையைச் சூட்டி அவனைத் தழுவி அசைவின்றி இருந்தாள்.

இதனைக் குறிக்கும் பாடல் செவ்வை சூடுவார் பாகவதத்தில் இடம்பெற்றுள்ளது. இதனை பிரதோஷ காலத்தில் கூறி பெண்கள் வழிபட்டு வந்தால் நல்ல கணவன் கிடைப்பான் என்றும் பொதுவாக அனைவரும் ஓதிவரின் திருமகளின் அருள் கிடைக்கும் என்றும் மக்கள் நம்புகின்றனர். அப்பாடலை இனிக் காணலாம்.

உளத்திடை இவ்வாறு உன்னி
உவந்திலன் எனை யென்றாலும்
களிப்புறும் யானே சென்று
கலப்பன் என்று "அமலை"யாவும்
அளிப்பவள் அலங்கல் சூட்டி
அருமறை "முதலி"மார்பின்
துளிப்பு யன் மணக்கு மின்னில்
தோய்ந்தனள் துயக்கு அற்றாள்.

தங்கிவிட்டது. இதனைத் தமிழில் "சிந்தாமணி" என்பர்.

அதனை அடுத்து "தன்வந்திரி" என்கிற தேவ மருத்துவர் தோன்றினார். இவர் நான்கு கரங்களுடன் அவற்றில் சீந்தல்கொடி, அட்டைப்பூச்சி, அமிர்தகலசம், கதாயுதம் இவற்றுடன் நீலமேனி கொண்டவராக மஞ்சள் நிற பீதாம்பர ஆடையணிந்து கடல் அலைகள் மீது தோன்றினார்.

அவரிடம் இருந்த கலசத்தில் இருந்து விழுந்த அமுதத் துளிகளில் இருந்து பிரகாசமான பல வண்ணங்களையுடைய தேவ மாதர்கள் தோன்றினர்.

கோடி சூர்ய பிரகாசத்துடன் கூடிய ரத்தினங்களால் இழைக்கப்பெற்ற பொன்மயமான பாத்திரத்தில் அமிர்தம் விளங்கியது. இது எடுக்க எடுக்கக் குறையாததாகும். இதில் உலகினைப் படைக்க உதவும் மூலவித்துக்கள் அடங்கியுள்ள தென்பர். இப்போது அசுரர்களும் தேவர்களும் அவரிடத்தில் இருந்து அந்த அமிர்த கலசத்தைப் பெற்றுக் கொள்ள போட்டியிட்டுச் சண்டையிடத் தொடங்கினார்கள்.



ஜகன் மோஹினி

அமிர்தத்துக்காக சண்டையிட்டுக் கொண்டி ருக்கும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையில் திருமால் கண்ணைக்கவரும் ஜெகன்மோகினியாக அவதாரம் எடுத்தார். ஜொலிக்கும் ஆபரணங் களையும் சிறந்த பட்டாடைகளையும் அணிந்த சுந்தரியான அப்பெண்ணைக் கண்டதும் தேவர்களும் அசுரர்களும் தங்களை மறந்து அவளுடைய அழகில் ஈடுபட்டனர். தங்கள் சண்டையை உடனே நிறுத்தினர். பின்னர் அவளிடம் சென்று அமிர்தத்தைப் பங்கிட்டுத் தரும்படி வேண்டினர். முதலில் அதற்கு மறுத்த மோகினி ஒரு நிபந்தனையுடன் ஒருவாறு உடன்பட்டாள் அதாவது பங்கிட்டு முடியும் வரை அவள் செய்வது எதையும் ஏன்? எதற்கு? என்று யாரும் கேட்கக் கூடாது. என்ற நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டால் தான் பங்கிட்டுத் தருவேன் என்று கூறினாள்.

அவளுடைய அழகில் மயக்கம் கொண்ட யாவரும் அதற்கு உடன் பட்டனர். அதன் பிறகு அவள் தனது மாயையால் யாவரையும் மயக்கித் தேவர்களுக்கு மட்டுமே அமுதத்தைக் கொடுத்து வந்தாள். அசுரர்கள் இதைத் தெரிந்து கொண்டாலும் பங்கிட்டு முடியும் வரை அவள் செய்வது எதையும் ஏன்? என்று கேட்பதில்லை என்று வாக்களித்து இருந்ததால் பேசாமல் இருந்தனர்.

ஆனால் ஒரு அசுரனுக்கு மட்டும் மோகினியின் செய்கை பிடிக்கவில்லை. அவன் தனது மாயாசக்தியால் தேவவடிவம் எடுத்து தேவர்களுக்கு இடையே சென்று அமர்ந்து அமிர்தம் வாங்கி உண்டான். இதனை தெரிந்து கொண்ட சூரியனும், சந்திரனும் மோகினியிடம் அவனை காட்டிக் கொடுத்தனர். மோகினியும் தன் கையில் இருந்த அமிர்தம் பங்கிட்ட கரண்டியால் அவனுடைய தலையை அரிந்தாள். ஏற்கனவே அமிர்தம் உண்டிருந்தபடியாலும், அமிர்தம் தோய்ந்த கரண்டியால் வெட்டுப் பட்டதாலும் அவன் இறந்து போகாமல் இரண்டு துண்டாய் உயிருடன் நின்றான். பின்னர் ஒரு பாம்பின் உடலை எடுத்து வெட்டி ஒட்டி அவனை இரு வேறு வடிவமாக்கினர். அசுர உடலும்

பாம்புத்தலையும் கொண்ட உடல்பகுதி கேது எனவும், அசுரத் தலையும் பாம்பு உடலும் கொண்ட வடிவம் இராகு எனவும் அழைக்கப்பட்டனர்.

பின்னர் இராகும், கேதுவும் தவங்களைச் செய்து கிரகங்களாகும் பேற்றினைப் பெற்றனர். இவர்களைச் சாயா கிரகங்கள் (நிழற்கோள்கள்) எனவும் அழைப்பர்.

இவர்கள் தன்னைச் சூரியனும், சந்திரனும் காட்டிக் கொடுத்ததால் அன்று முதல் ஆண்டின் சில நிமிடங்களுக்குப் அவர்களை பற்றிச் செயலிழக்கச் செய்கின்றான் என்று புராணங்கள் கூறுகின்றன. அந்த நேரமே சூரியகிரகணம், சந்திரகிரகணம் என வழங்குகின்றது என்பர்.

இறுதியில் தேவர்களுக்கு மட்டுமே அமிர்தத்தைப் பங்கிட்டுக் கொடுத்து விட்டு, ஜகன் மோகினி அசுரர்களை அழைத்து உங்கள் உலகிற்குச் சென்று உங்களைத் தூய்மைச் செய்துகொண்டு வாருங்கள் என்று அனுப்பினாள். அசுரர்கள் மதுவுடனும் சுராதேவியுடனும் அவளுடைய தோழிகளுடனும் அசுர லோகத்தை அடைந்தனர். அங்கு அப்பெண்களோடும் அவர்கள் கொண்டு வந்த மதுவர்க்கங்களோடும், இனிமையுடன் பொழுதைக் கழித்து அமிர்தத்தை மறந்தே போனார்கள்.

ஜகன் மோகினியாகிய திருமால் பின்னர் தேவேந்திரலோகத்தில் அமிர்தகுடத்தை வைத்து அதனைச் சுற்றி மேலே ஓயாது சுழல்வதும் கோடிப் பற்களையுடையதும், பகைவரை இரக்கமின்றிக் கொல்வதும் சுதர்சனத்தைப் போன்றதுமான பெரிய சக்கரத்தையும் அதன் கீழேபார்வையாலேயே விஷத்தைக் கக்கும் இரண்டு பெரிய பாம்புகளையும் காவலாக வைத்து அதைச் சுற்றி நீர் வளையம், நெருப்பு வளையம் ஆகியவற்றை அமைத்து விட்டு வைகுண்டத்தை அடைந்தார்.

தேவர்களுக்கு அமிர்தம் அளித்ததை நினைவு கூரும் வகையில் திருமால் கோயில்களில் இன்றும் பெருந்திருவிழாவில் ஒருநாளில் திருமாலை ஜகன் மோகினியாக அலங்காரம் செய்து திருவீதி உலாச்செய்கின்றனர். சில இடங்களில் இந்த அலங்காரத்தை நாச்சியார் "திருக்கோலம்" என்பர்.

மோகினியாக அவதாரம் செய்து தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் அமுதத்தைப் பங்கிட்டுத் தருவேன் என்று சொல்லித் தேவர்களுக்கு மட்டுமே அளித்து ஒரவஞ்சனை செய்ததால் உண்டான பாவம் நீங்கும் பொருட்டு மோகினி வடிவுடன் திருமால் காசியில் சிவபூஜை செய்தார். அவர் அமைத்து வழிபட்ட சிவபெருமானுக்கு மோகினீசர்' என்பது பெயராயிற்று.



★ திருப்பதி - ஸ்ரீனிவாசப் பெருமாள்
மோஹினி அலங்காரம் நாச்சியார் திருக்கோலம்

நீலகண்டர்

விடம்கொள் கண்டத்துவிடங்கர்

சிவபெருமான் விஷமருந்திச் செய்த திருவிளையாடலை நினைவு கூறும் வகையில் சிறப்புமிக்க பல சிற்பங்கள் அமைக்கப் பெற்றன. இவைகளுக்கு நீலகண்டர் அல்லது விஷாபகரணர் என்பது பெயராகும். சோழர் காலத்தில் இச்சிலைகள் செம்பினால் செய்து வணங்கப்பட்டதையும் அறிய முடிகின்றது. இந்நாளில் சிவாலயங்களில் இத்தகைய மூர்த்தியைக் காணமுடியவில்லை. அபூர்வ மாகக் கிடைத்த நீலகண்டரின் செப்புத் திருமேனி ஒன்று சென்னை அருங்காட்சி யத்தில் உள்ளது. இது பல்லவர் காலத்திய (8 அல்லது 9 ஆம் நூற்றாண்டில் செய்யப் பெற்றதாகும்). இதையே அருகிலுள்ள படத்தில் காண்கிறோம். இது தஞ்சை மாவட்டதிலுள்ள கீழ்ப்புத்தானூர் என்னும் இடத்தில் இருந்து கொண்டுவரப்பட்டதாகும். இதில் பெருமான் சுகாசனத்தில் அமர்ந்தவாறு காட்சியளிக்கின்றார். மேற்கரங்களில் மானும், மழுவும் திகழ்கின்றன. கீழ்க்கரங்களில் வலது கையில் திரண்டு உருண்டையான விஷம் உள்ளது. இடக்கையில் விஷத்தை அளித்த வாசுகி எனும் பாம்பு படமெடுத்தவாறு உள்ளது. பாற்கடலில் பெருகி வந்த விஷத்தை சுந்தரமூர்த்தி சுவாமிகள் திரட்டி ஒரு நாவற்பழம் போலாக்கி பெருமானிடம் அளித்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆனாலும் சிற்பிகள் அவர் பாம்பு விஷத்தை ஏந்தியுள்ளதைக் குறிப்பதற்காக இடது கரத்தில் பாம்பையும் ஏந்தியிருப்பதுபோல அமைத் துள்ளனர்.

மேலும் கீழைச்சாளுக்கியர் காலத்திய விஷாபஹரணர் என்ற நீலகண்ட மூர்த்தியின் செப்புத் திருமேனியொன்று கான்சாய்நகரில் உள்ள வில்லியம்ராக்ஹில் நெல்சன் கலை காட்சிசாலையில் உள்ளதாக அறிகிறோம். இதில் பெருமான் நின்ற நிலையில் பின் கரங்கள் மான், மழு ஏந்தியும் முன்கரங்களில் பாம்பையும் விஷத்தையும் ஏந்தியவாறு காட்சியளிக்கின்றார்.



★ நீலகண்டர்

பாண்டியர்களால் அமைக்கப்பெற்ற கழுகுமலை வெட்டுவான் கோயிலின் விமானத்தில் கற்சிற்பமாக வடிக்கப்பட்ட நீலகண்டரைக் காண்கிறோம். இவ்வடிவில் இவர் மேற்கரங்களில் மான்மழு ஏந்தியும் வலக்கையால் பாம்பைப் பற்றியும் இடக்கையை பீடத்தில் ஊன்றியவாறும் காட்சியளிக் கின்றார். இவரை நீலகண்டர் என அழைக்கின்றனர்.

சிவபெருமானின் தனிச்சிறப்பையும், தியாகத்தையும், உணர்த்தும் இத்திருமேனிகளை அமைத்து வழிபடும் வழக்கத்தை பின்னாளில் ஏனோ நிறுத்தி விட்டனர். இதற்கான காரணத்தை அறியமுடியவில்லை.

விஷாபஹரண மூர்த்தி


நீலகண்ட பரமேச்சுவரரின் விஷமருந்திய திருவடிவைச் சிவாகமங்கள் விஷாபஹரண மூர்த்தி என்று குறிக்கின்றன. அபகரணம் என்பதற்கு ஏற்றுக்கொள்ளுதல் என்பது பொருள். எனவே விஷத்தை விரும்பி ஏற்று அருந்திய பெருமானை விஷாபஹரணர் என்று அழைக்கின்றனர். இம்மூர்த்தியின் வடிவை இரண்டு நிலையில் சிற்ப நூல்கள் குறிக்கின்றன.

முதல் வகையில் காரணாகமம் இம் மூர்த்தியைப்பற்றிக் குறிப்பிடுவதைக் காணலாம். இவர் ஜடாமகுடம் தரித்து மூன்றுகண்களும் நான்கு கரங்களும் கொண்டவராக விளங்குகின்றார். மேற்கரங்களில் மானும் மழுவும் கொண்டவராய் முன்கரங்களில் இடது கையைத் தேவர்களுக்கு அபயமளிக்கும் பாவனையிலும் வலக்கரத்தில் விஷம் நிறைந்த பாத்திரத்தையும் கொண்டவராகவும் விளங்குகின்றார். அவர் விஷம் அருந்த முற்படுபவராகவும் அருகில் உள்ள பார்வதிதேவி சிவபெருமானை தழுவிக் கொண்டு வலக்கரத்தால் அவருடைய கழுத்தைப் பற்றி அவ் விஷத்தைக் அவருடைய கண்டத்தில் நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்ட நிலையில் முகத்தில் வேதனையும், குழப்பமும் கொண்டவளாக விளங்குகின்றாள்.

மற்றோர் வகையில் அம் மூர்த்தியைத் தழல் முடிகொண்டவராக விழித்த பார்வையும், கோரைப்பல் துலங்க புலித்தோலாடை அணிந்து சிறுமணிகளால் ஆனமாலையையும் தேள்களால் கோக்கப்பட்ட மாலையையும் பாம்பணிகளையும் அணிந்தவராகச் சித்தரிக்கின்றனர். இவர் முன்வலக்கரத்தில் விஷப்பாத்திரத்தையும் முன் இடக்கரத்தில் அஞ்சி நிற்கும் தேவியை அணைத்து அச்சம் நீக்குபவராகவும். பின் வலக்கரத்தில் திரிசூலத்தையும் பின் இடக்கரத்தில் மணியையும் (சிலர் கபாலம் எனவும் எழுதுவர்) ஏந்தியவராகக் காட்சியளிக்கின்றார். இருவரும் இடப வாகனத்தில் வீற்றிருக்கின்றனர்.

சிதம்பரம், மதுரை, முதலான திருத்தலங்களில் விஷாபஹரண மூர்த்தியை ஓவியமாகவும் சிற்பமாகவும் அமைத்துள்ளனர். ஆனால் இவையாவும் ஆகமம் கூறும் வகையில் இல்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். பல நூல்களில் விஷாபஹரணமூர்த்தியைப் பள்ளி கொண்டிருப்பவராகவும் அவருக்குப் பார்வதிதேவி பணிவிடை புரிபவளாகவும் சித்தரிக்கப்படுகின்றனர்.





"வானவர்கள் தானவர்கள் வாதைபட வந்ததொரு மாகடல் விடம் தனை தான் அமுது செய்தருள் புரிந்த சிவன்"



நந்தியம்பெருமான்



பிரதோஷவேளையில் நந்தியம்பெருமானுக்குத் தனிச்சிறப்பு அமைகின்றது. இந்நாளில் சிவபெருமான் பிராகாரத்தில் உலா வருகையில் இவருக்கு முதல் சுற்றில் அபிஷேகம் செய்வதும்; இரண்டாம் சுற்றின் போது அலங்காரம் செய்து நிவேதனம் செய்வதும்; மூன்றாம் சுற்றின் போது உற்சவரை வடக்குநோக்கி நிறுத்தி இவருக்கும் உற்சவருக்கும் ஒரே நேரத்தில் மகாதீபாராதனை செய்ய வேண்டும் என்றும் கூறுவர்.

இந்த வேளையில் அறுகம்புல்லை மாலையாகக் கட்டி இவருக்கு சாற்ற வேண்டும். வில்வம், மல்லிகை, மருக்கொழுந்து முதலிய மலர்களாலும் அலங்காரம் செய்வர்.

இவருக்கு காப்பரிசி, (பச்சரிசி, பயத்தம் பருப்பு ஆகியவற்றை ஊறவைத்து அதனுடன் வெல்லம் கலந்து) நிவேதனம் செய்ய வேண்டும். சிவபெருமானுக்கு சர்க்கரைப் பொங்கல், பாயசான்னம் ஆகியவற்றை நிவேதிப்பர். நீர்மோர் பானகம் இவற்றையும் நிவேதனம் செய்வதுண்டு.

இந்தவேளையில் மூலவரை நந்தியம் பெருமானின் இருகொம்புகளுக்கு இடையேயுள்ள இடைவெளியின் வழியே கண்டு தரிசிக்கவேண்டும். பெருமான் விடம் உண்டு சயனித்துத் திருவிளையாடல் புரிந்த பிறகு எழுந்து அம்பிகை காணுமாறு "சந்தியா நிருத்தத்தை" மூன்றேமுக்கால் நாழிகை ஆடினார். அந்நடனமே பிரதோஷ நடனமாயிற்று. அதனைக் கண்ட நந்தியம் பெருமான் ஆனந்த நிலை எய்தியதால் தனது உடல் பருத்தார். அதனால் கயிலாயமே மறைக்கப் பெற்றது. இறைவன் ஆடிய அந்த நடனக் காட்சியை தேவர்கள் அவருடைய கொம்புகளுக்கு இடையேயுள்ள வழியினால் மட்டுமே பார்க்கமுடிந்தது. அதனை நினைவு கூரும் வகையில் நாம் இப்போதும் நந்தியின் இரண்டு கொம்புகளுக்கிடையே பெருமானைத் தரிசிக்கின்றோம்.

சிவபூஜையின் பலனைத் தரும் அதிகாரம் சண்டேவரரிடம் உள்ளது. சிவபூஜையின் இறுதியில் சண்டீசரை வணங்கினால் மட்டுமே சிவபூஜையின் பலன் கிட்டும். அது போன்ற பிரதோஷ காலத்தில் நந்தியம்பெருமானை வணங்கினால் தான் பிரதோஷதரிசன பூஜையின் பயன் முழுமையாகக் கிடைக்கும்.



பிரதோஷ காலத்தில் பெருஞ்சிறப்புடன் வழிபடப்படும் வேந்தன்பட்டி நந்திகேசுவரா

பிரதோஷ நாயகர்

பிரதோஷகாலங்களில் கோயிற் பிராகாரத்தில் வலம் வருவதற்காக அமைந்துள்ள உற்சவ மூர்த்தியே **பிரதோஷ நாயகர்** என்று அழைக்கப்படுகின்றார். இவர் அளவால் சிறிய மூர்த்தியாவார். ஏறத்தாழ ஒன்றரை அடி உயரத்திற்கு உட்பட்டதாகவே இவர் வடிவம் அமைக்கப்பட வேண்டும் என்பது மரபாகும்.


இந்த மூர்த்தி சந்திரசேகரரைப் போலவே தோற்றமுடையவர். பின்னிருகரங்களில் மான் மழுவும் ; முன்னிரு கைகளில் அபய, வரத முத்திரை தாங்கியவராய் நின்ற நிலையில் விளங்குகின்றார். தலையில் ஜடாமகுடம் விளங்க அதில் வெண்பிறை, கங்கை, ஊமத்தைமலர், கொக்கிறகு ஆகியவற்றைத் தரித்தவராய் மூன்று கண்ணும் கருத்தகண்டமுடையவராய் எல்லையில்லா மகிழ்ச்சி பொங்கும் முகத்துடன் அமைந்துள்ளார். அவரது இடப்புறத்தில் அம்பிகை தனது வலக்கரத்தில் நீலோற்பலமலர் ஏந்தி இடது கரத்தைத் தொங்கவிட்ட நிலையில் நின்றவாறு காட்சியளிக்கின்றாள்.

பொதுவாக இருவரையும் தனித்தனியே ஒரே பீடத்தில் நின்றவாறே அமைப்பது தான் வழக்கம் என்றாலும் காலப்போக்கில் கலைஞர்கள் சில மாறுதல்களை ஆகம அடிப்படையில் செய்யத் தொடங்கினர்.

சிவன் விடமுண்ண முற்பட்டதைக் கண்டு தேவி அஞ்சினாள். அவளுடைய பயத்தைப் போக்கும் வகையில் அவர் அவளை அணைத்துக் கொண்டார். இந்த அடிப்படையில் முதல் நிலையில் இறைவன் அம்பிகையை தனது இடக்கரத்தால் அணைத்துக் கொண்டிருப்பது போன்று பிரதோஷ நாயகர் உருவம் அமைக்கப் பெற்றது. இந்த மூர்த்தியை **உமாஆலிங்கன மூர்த்தி** யென்றும். அணைத் தெழுந்தநாதர் என்றும் அழைக்கின்றனர். (படம். பக்கம் 119)

இரண்டாவது நிலையில் இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்த நிலையில் எழுந்தருள்கின்றனர். இந்த மூர்த்தியை **பரஸ்பர ஆலிங்கன மூர்த்தி** என அழைக்கின்றனர்.

சென்னை பெசன்ட் நகர் இரத்தினகிரீசுவரர் ஆலயத்தில் உள்ள பிரதோஷ நாயகர் "உமா ஆலிங்கனமூர்த்தியாகவும் சென்னையை அடுத்த மண்ணிவாகம் எனும் ஊரில் உள்ள மூர்த்தி "பரஸ்பர ஆலிங்கனமூர்த்தி"யாகவும் விளங்குவதைக் காணலாம்.



பிரதோஷ நாயகர்

பிரதோஷதினத்தில் மாலையில் இந்தப் பிரதோஷமூர்த்தியை இடப வாகனத்தில் வைத்து அலங்கரித்து கோயிலின் உட்பிராகாரத்தில் வலம் வருகின்றனர்.

திரயோதசி நாளில் பிரதோஷ காலத்திற்கு மூன்றே முக்கால் நாழிகைக்கு முன்னதாகவே மூலவருக்கும் உற்சவமூர்த்திக்கும் ஸ்ரீ ருத்திரம்

முதலான மந்திரங்களால் பலவகைப் பொருள்களைக் கொண்டு திருமுழுக்காட்டவேண்டும்.

தமிழில் பூசிப்பவர்கள் **"நீலகண்டப் பதிகம்,"** திருக்கடவூர், திருப்பாசூர் பதிகங்கள் முதலிய வற்றைப் பாராயணம் செய்யலாம்.



அணைத்தெழுந்த பிரான்

பின்பு மூலவரை அலங்கரித்து தூப, தீப நிவேதனங்களால் ஆராதிக்க வேண்டும். பின்னர் உலாத்திருமேனியை இடப வாகனத்தில் வைத்து மலர்களால் அலங்கரித்து உட்பிராகாரத்தில் மும்முறை வலம் வரச் செய்யவேண்டும்.

இவ்வாறு வலம் வரும் போது ஒவ்வோர் முறையும் கருவறையை நோக்கி அமைந்துள்ள பிரதான நந்தி (கொடி மரத்தின் அருகில் உள்ளவர்) யின் அருகில் சுவாமியை வடக்கு நோக்கியவாறு நிறுத்தி உலாத்திருமேனிக்கும், நந்திக்கும், மூலவருக்கும் ஒரே நேரத்தில் தீப ஆராதனை செய்யவேண்டும்.

மூன்றாவது சுற்று வரும்போது மட்டும் ஈசான (வடகிழக்கு) திசையில் பெருமானை தெற்கு நோக்கியவாறு நிறுத்தி சிறப்பு வழிபாடு நடத்த வேண்டும். இந்த ஈசான திக்கில் நடைபெறும் வழிபாட்டினைக் காண்பது சிறந்த புண்ணியமாகக் கருதப்படுகின்றது.

சிவபெருமான் விஷத்தை அருந்தி மயங்கியது போலக் கிடந்தபோது எப்போதும் மகிழ்ச்சியில் திளைத்து விளையாடி மகிழும் அவருடைய கணங்களான பூதகணங்கள் தாமும் மயங்கி வீழ்ந்து வருந்தின. பின்னர் அவர் திருநடனம் புரிந்தபோது தாமும் தமது மகிழ்ந்து தாமும் விளையாட்டு நடனங்களை நிகழ்த்தின. இவை **"பூத நிருத்தம்"** எனப்படும். இதனால் பூதர்கள் வாழும் ஈசான திசையில் பிரதோஷ வேளையில் சுவாமியின் முன்பு பூத நிருத்தம் நடத்தப்படுகின்றது. இதற்கான வாத்திய அமைப்பு இராகம், தானம் ஆகியன உள்ளன.

பின்னர் உலாத்திருமேனிக்கு உரிய உபசாரங்களைச் செய்து அவருடைய இருப்பிடத்தில் சேர்க்க வேண்டும்.

பிரதோஷநாயகருக்கு வில்வமாலைகளை அணிவிப்பது பெரும்புண்ணியம் தருவதாகும். பன்னீர் அபிஷேகம் செய்தல், வடைகளை நிவேதனம் செய்தல் ஆகியனவும் சிறப்புடைய தாகும்.



பிரதோஷ வேளை என்றால் என்ன?



பரஸ்பர ஆலிங்கன மூர்த்தி
மண்ணிவாக்கம் (பக்கம் 117 காண்க)

இரவும் பகலும் சந்திக்கின்ற நேரத்திற்கு **"உஷத்காலம்"** என்பது பெயர். உஷத் காலத்தைப் பகற்பொழுதின் முகம் என்பர். இந்த வேளையின் அதிதேவதை சூரியனின் மனைவியாகிய உஷா என்பவளாவாள். அவள் பெயராலேயே இது உஷத்காலம் என அழைக்கப்படுகின்றது.

இதற்கு நேர் எதிராக பகலும் இரவும் சந்திக்கும் நேரம் பிரத்யுஷத்காலம் எனப்படும். சூரியனின் இன்னொரு மனைவியாகிய பிரத்யுஷா இக்காலத்திற்கு அதிதேவதையாதலின் அவள் பெயரால் இது **''பிரத்யுஷத்காலம்''** என்று அழைக்கப்பட்டு இப்போது பேச்சுவழக்கில் **"பிரதோஷகாலம்"** என அழைக்கப்படுகிறதென்பர்.

பிரதோஷ வேளையை **"ரஜ்னிமுகவேளை"** எனவும் அழைப்பர். இதற்கு இரவின் முகம் என்பது பொருளாகும். நிகண்டுகள் பிரதோஷகாலத்தை இரவின் முகம் என்றே குறிப்பிடுகின்றன.

இந்தப்பொழுது சாயும்நேரத்திற்கு அதி தேவதையான பிரத்யுஷாவிற்குச் **"சாயா"** என்பது ஒரு பெயராகும். இந்த வேளையில் பகல் முழுவதும் உழைத்துக் களைத்த உயிர்கள் அவளால் ரக்ஷிக்கப்படுகிற காலம் என்ற பொருள்பட இந்த நேரம் ''சாயரட்சை'' எனவும் அழைக்கப் படுகிறதென்பர்.

தோஷம் என்றால் குற்றமுடையது என்பது பொருள்: பிரதோஷம் என்றால் குற்றமில்லாது. எனவே குற்றமற்ற இந்தப் பொழுதில் இறைவனை வழிபடுவதால் நம்முடைய தோஷங்கள் நீங்கும் என்று பிரதோஷ வேளைக்குப் பண்டிதர்கள் விளக்கம் கூறுவர்.

பிரதோஷ ரிஷப வாகனம்

சிவபெருமான் பிரதோஷ காலங்களில் உலாவருவதற்காக சிறு அளவில் அமைந்த ரிஷபவாகனமே பிரதோஷ ரிஷபம் எனப்படும். இது மரத்தால் செய்யப்பட்டு பல வண்ணம் தீட்டப்பட்டதாக அமையும். மைலாப்பூர் முதலிய பல தலங்களில் வெள்ளியால் அமைந்த பிரதோஷ ரிஷப வாகனங்களைக் காணலாம். சென்னை சிவாவிஷ்ணு ஆலயத்தில் பித்தளையால் ஆன பிரதோஷ ரிஷபம் உள்ளது.

திருவக்கரை சந்திரமௌலீசுவரர் ஆலயத்தில் இடபத்திற்கு பதிலாக அதிகார நந்தியை பிரதோஷ நாயகருக்கு வாகனமாக அமைத்து உலாவரச் செய்யும் வழக்கம் நீண்ட காலத்திற்கு முன்பு இருந்து வந்தது என்பர். இந்நாளிலும் அழகிய சிறு அதிகார நந்தி வாகனம் அக்கோயிலில் உள்ளதைக் காணலாம்.

பிரதோஷ காலத்தில் வலம் வரும் இந்த நந்தியைச் சுற்றி வியாக்ரபாதர், பதஞ்சலி ஆகிய முனிவர் சிற்பங்களையும் அமைக்கின்றனர்.

சந்தியா தாண்டவம்



சந்தியா தாண்டவம்

பிரதோஷ வேளை என்பது இரவும் பகலும் சந்திக்கும் காலமாகும். எனவே இதனைச் சந்தியா காலம் என்பர். விஷம் அருந்தி எழுந்தபின் ஒருசந்தியா காலத்தில் சிவபெருமான் உமா தேவியார் காண சந்தியாதாண்டவத்தை நிகழ்த்தினார். அதன் பிறகு ஒவ்வோர் மாலையிலும் சந்தியா நடனத்தை இறைவன் நிகழ்த்துகின்றான். அதனால் தான் சிவாலயங்களில் மாலை வழிபாடு சிறப்பு டையதாகிறது.

முதலில் நிகழ்ந்த இந்தத் தாண்டவத்தில் தேவர்கள் செயலற்று நின்றதால் இசைக்கருவிகள் ஏதும் வாசிக்கப்படவில்லை. ஆனால் தாள லயத்திற்கு நந்தியம்பெருமான் மட்டும் சுத்த மத்தளத்தை வாசித்தார்.

இந்தக்கூத்து பகலும் இரவும் சந்திக்கும் போது மட்டும் ஆடும் கூத்தல்ல, ஒவ்வோர் உயிரும் ஒரு உடல் விட்டு இன்னொரு ஜென்மமெடுக்க உள்ள இடைப்பட்ட நேரத்திலும் நிகழும் கூத்து.

ஒருயுகம் முடிந்து இன்னொரு யுகம் தொடங்குவதற்கு இடையில் உள்ள யுக சந்திப்பின் போதும் ஆடும் கூத்து.

சிவன் ஓயாது இந்தக் கூத்தை நடத்து கின்றான். இந்தக் கூத்தே அமுதக்கூத்து ஆனந்தக்கூத்து. இதை அறிவதே பேரானந்தம். இதனைப் பூரணமாக உணர்ந்தவரே நந்தியம் பெருமான்.

சிவன் பிறப்பும், மரணமும் அற்றவர். இதனை தேவர்கள் உணர்ந்தவர்களே என்றாலும் அவர் நஞ்சுண்டு திருவிளையாட்டாகக் கண் அயர்ந்த போது அதை உணராது ஓடி ஒளிந்தனர். பின்னரும் நந்தியானவர் சிவானந்தக் கூத்தினைக் கண்டு களிக்கையில் அவருடன் இணைந்து அதுவே மரணமிலாப் பெருவாழ்வுக்கு மூலமென்று உணர்ந்து கொள்ளாமல் மீண்டும் பாற்கடல் கடைந்து அமிர்தம் பெறவே எண்ணினர். அதனால் தான் யுக முடிவில் நந்திதேவர் பெருமானால் அணைத்துக் கொள்ளப் பெற்று அழியாது நின்றார்.

ஆனால் தாற்காலிக அமிர்தத்தை உண்ட தேவர்களோ யுகமுடிவில் அழிந்தனர். ஆதலின் அமுதமயமான சிவபெருமானின் சந்தியா தாண்டவமே சிவனோடு நம்மை இணைத்துக் கொள்ளும் சாதனமாகும்.

ஆதலின் தினந்தோறும் சந்தியா காலங்களில் இறைவனை வழிபடவேண்டும். அது உலக நடைமுறை வாழ்க்கையில் இயலாது என்பதால் பிரதோஷ விழாக் காலங்களில் மட்டுமாவது சந்தியா நடனத்தை மனக்கண்ணால் தரிசிக்க வேண்டும் என்று பெரியோர் வகுத்துள்ளனர்.

நடனபேதங்களில் கூறப்படும் சந்தியா தாண்டவமும் இப்போது கூறப்படும் சந்தியா தாண்டவமும் வேறு வேறு என்பதை இங்கு கருத்தில் கொள்ள வேண்டும்.

சிவபெருமான் பிரதோஷ வேளையில் நடனமாடுகிறார் என்று கூறுகின்றோம். அதற்கேற்ப பிரதோஷ நாயகரை நடனமாடும் கோலத்தில் அமைக்காமல் சந்திரசேகரராக அமைத்திருப்பதேன்? என்ற கேள்வி எழுகின்றது.

இந்நடனம் சூட்சும நடனமாகும். எனவே இந்த வேளையில் பெருமான் நடனமாடுவதாகப் பாவனை செய்து வணங்க வேண்டும். ஆதலால்தான் பெருமானை நடன கோலத்தில் அமைக்கவில்லை. மேலும் இந்தக்கூத்தை உணர்ந்து நெகிழ்ந்து காண்பதன் மூலம் சிவாமிர்தம் உண்டு பேரின்ப நிலையை அடைய இயலும்.

ஆகையால் பிரதோஷகாலங்களில் சிவாலயத் திற்குச் சென்று இடபவாகனத்தில் வலம் வரும் பெருமானை சந்தியா நிருத்தராக பாவித்து வணங்கி வரவேண்டும். இவ்வாறு செய்வதால் இம்மையில் பெருஞ்செல்வமும், தொல்லையற்ற வாழ்வும் மறுமையில் சிவப்பேறும் கிடைக்கும்.

பிரளயகாலப் பிரதோஷம்

யுகம் முடியும்போது இந்த அண்ட சராசரங்கள் யாவும் கடலால் கொள்ளப்படும். இறுதியில் வெள்ளத்தால் யாவும் அழிந்து சிவபெருமானும் நந்தியும் தேவியுமே எஞ்சி நிற்பர். அப்போது சிவபெருமான் உலகினை அழிக்கும் பிரளயதாண்டவம் ஆடுவார். இந்த ஆட்டத்தால் உலகம் முழுமையாக மறையும். பின்னர் உலக படைப்புக்கான, தாண்டவம் நிகழ்த்துவார், அப்போது உலகம் படிப்படியாக உண்டாகும். இவ்வாறு ஒரு யுகம் முடிந்து புதிய யுகம் தொடங்கும் இடைப்பட்ட நேரத்தில் ஆடும் திருக்கூத்தே "பிரளய காலத் தாண்டவம்" எனப்படும். இதனை "யுகப்பிரதோஷம்" என்றும் "பிரளயப்பிரதோஷம்" எனவும் அழைப்பர்.

பிரதோஷ நேரம்

ஒவ்வொரு நாளும் காலை சூரிய உதயாதி முதல் 26.15 நாழிகைக்கு மேலுள்ள ஏழரை நாழிகைப் பொழுதே பிரதோஷ காலம் எனப்படும். இது சுமார் மாலை 4.30 மணிக்கு மேல் 6.00 மணிக்குள்ளாக அமையும் காலமாகும். பகல் முகூர்த்தங்கள் எட்டுப் பிரிவில் எட்டாவது முகூர்த்தமே பிரதோஷம் எனப்படும்.

தினந்தோரும் மாலையில் வருவது பிரதோஷம் என்றாலும் வழக்கத்தில் வளர்பிறை, தேய்பிறைக் காலங்களில் திரயோதசியன்று வரும் மாலைக் காலத்தையே பிரதோஷம் எனச் சிறப்பாக அழைக்கின்றோம். திங்கட்கிழமையன்று வரும் பிரதோஷம் சிறப்புடையதாகும். இதனை சோமப்பிரதோஷம் என அழைப்பர்.

அதனைவிட சனிக்கிழமையன்று வரும் பிரதோஷத்தை அதிகச்சிறப்புடையதாகப் போற்று கின்றனர். சிவபெருமான் விடமுண்டு சயனித்து எழுந்து ஒரு சனிக்கிழமை மாலையில்தான் முதன் முதலாக சந்தியா தாண்டவத்தை ஆடினார் என்பதால் சனிப்பிரதோஷம் சிறப்புடையதாகின்றது.

தினமும் உள்ள மாலை நேரமான சந்தியாகாலத்தை **தினப்பிரதோஷமென்றும்**, வளர்பிறை தேய்பிறை திரயோதசி நாட்களில் வரும் பிரதோஷத்தை **பட்சப்பிரதோஷமென்றும்**, மகாசிவராத்திரிக்கு முன்தினம் வருகின்ற பிரதோஷத்தை **மகாப்பிரதோஷமென்றும்**, சனிக்கிழமை வரும் பிரதோஷத்தை **சனிப் பிரதோஷமென்றும்** அழைக்கின்றோம்.

மகாசிவராத்திரிக்கு முன்புவரும் பிரதோஷம் சனிக்கிழமையன்று வருமாயின் அது சனிமகாப் பிரதோஷம் எனப்படும். இது ஆயிரமடங்கு பலனைத்தருவதாகும்.

பிரதோஷவிரதம் தொடங்குபவர்கள் கார்த்திகை அல்லது ஆவணிமாதத்திய பிரதோஷங் களில் தொடங்குவது நல்லதாகும்.

தொடர்ந்து பதிநான்கு ஆண்டுகாலம் பிரதோஷ நாளில் சிவாலயதரிசனத்தை முறைப்படி செய்பவர்கள் சாருப பதவி பெற்று சிவகணங்களாகத் திகழ்வர் என்று புராணங்கள் கூறுகின்றன.

நீலகண்டப் பதிகம்



சிவபெருமானுக்கு எத்தனையோ பெயர்கள் இருக்கின்றன. அவையாவும் புனிதமானவையே என்றாலும் அவையெல்லாவற்றிலும் தலைசிறந்தது நீலகண்டன் என்பதேயாகும்.

உலகமக்கள் எவ்வகையிலும் தன் உயிரைப் பாதுகாத்து வாழ்வதையே பெரிதும் விரும்புவர். ஆனால் தகைசால் சான்றோரோ. தான் உயிர் இழப்பதாக இருந்தாலும் பிறருடைய வாழ்வைச் சிறப்பாக்கவே முயல்வர்.

சிவபெருமான் தேவர்கள் உயர்நிலைபெற்று வாழத் தன் உயிரைப்பொருட்படுத்தாது பெருகிவந்த நஞ்சினை உண்டதை இந்த நீலகண்டம் உணர்த்தி நிற்கின்றது. பிறருடைய இன்னுயிரைக் காக்கும் தியாகத்தின் சின்னமே திருநீலகண்டமாகும். இதனால் சிவபெருமானுக்குத் "தியாகேசன்" என்பது பெயராயிற்று. இந்த நீலகண்டத்தின் பெயரைச் சொன்னாலே தீவினைகள் நம்மைத் தீண்டாது விலகும் என்பர்.

ஒரு சமயம் திருஞானசம்பந்தப் பெருமான் அடியார் குழாத்துடன் திருச்செங்கோட்டிற்கு எழுந்தருளியபோது திருநீலகண்டப்பதிகம் பாடினார். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் "தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்" என்ற தொடர் அமைந்துள்ளது.

எத்தனையோ தலப்பாடல்களில் சிவபிரான் நஞ்சுண்டு கருத்து நீலகண்டரான நிகழ்ச்சியைக் குறிப்பிட்ட ஞானசம்பந்தப் பெருமான் இப்பதிகத்தில் எங்கும் அந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடாததும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

இப்பாடல் எழுந்த வரலாற்றை திருஞானசம்பந்தர் புராணத்தில் சேக்கிழார் பெருமான் தனிச்சிறப்புடன் குறிப்பிடுகின்றார்:-


கொடிமாடச் செங்குன்றூர் என்று இலக்கியங்களில் பேசப்படும் இன்றைய திருச்செங் கோட்டுக்குப் பெருமான் தம்அடியார் குழாத்துடன் எழுந்தருளினார். அந்நாளில் அப்பகுதியில் கடும் பனியும், குளிரும் நிலவியதால் அடியார்களுக்கு ஜ்வரநோய் உண்டாயிற்று. அப்பகுதியில் உள்ளோர் இது கால நிலையால் வந்த துன்பம் இதனை மாற்ற முடியாது என்றனர். அதற்கு திருஞானசம்பந்தப் பெருமான், "இது நிலத்தின் இயல்பாக இருந்தாலும் அடியவர்களான நம்மை இது தீண்டத்தகாதது. இதனை இப்போதே மாற்றுவேன்," என்று கூறி நீலகண்டப்பதிகம் பாடினார்.

சிவபெருமான் பாற்கடல் தந்த நஞ்சினைத் தான் உண்டு மற்றவரைக் காக்கும் செயலில் வெற்றி பெற்றதைக் குறித்து நிற்பது இந்த நீலகண்டமேயாகும் என்பதால் இப்போதும் அடியார் இடரைக் கெடுத்து நலம் அருள்வது அதுவே எனத்துணிந்து, அவ்வினைக்கிவ்வினையாம் எனத்தொடங்கி "செய்வினை தீண்டா திருநீல கண்டம்" என்று மகுடமிட்ட இப்பாடலைப் பாடினார் என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

இப்பதிகத்தின் இறுதிப்பாடல் முடியுமுன்பே அடியவர்க்குற்ற அத்திய தீப்பிணியானது அகன்றது.

நீலகண்டராக சிவபெருமான் நடனம்புரிந்த பிரதோஷகாலத்தில் இப்பதிகத்தை ஓதிவரின் அடியவர்களின் துன்பம் நீங்கும் என்று ஆன்றோர் கூறுகின்றனர்.

பள்ளிகொண்ட பரமேசுவரர்
(சுரட்டப்பள்ளி)



(சுரட்டப்பள்ளி நீலகண்ட பரமேசுவரர் - ஆந்திர மாநிலம்)

திருமாலுக்கு யோக நித்திரை பிடித்த ஒன்று. எனவே அவர் பாற்கடலில் ஆதிசேடனின் மீது பள்ளி கொண்டவராகக் காட்சியளிக்கின்றார். இந்த நிலையிலான அர்ச்சா வடிவமே திருவரங்கம் முதலான பல்லாயிரத் திருத்தலங்களில் அமைந்துள்ளதாகும்.

இராமபிரான் இராமேசுவரத்தையடுத்த திருப்புல்லாணியில் படுத்த கோலத்தில் காட்சியளிக்கின்றார். அபூர்வமாக நரசிம்மர் திருவதிகையில் படுத்த நிலையில் சேவை சாதிக்கின்றதைக் காண்கிறோம்.

பௌத்த சமயத்தைத் தோற்றுவித்த புத்தர் பரி நிர்வாண நிலையில் சயன கோலத்தில் காட்சியளிக்கின்றார். இதனை இலங்கையில் உள்ள பல பௌத்த ஆலயங்கலில் காணலாம்.

ஆனால் சிவபெருமான், முருகன், விநாயகர், முதலிய தெய்வங்களைச் சயன கோலத்தில் அமைப்பது வழக்கமில்லை, என்றாலும் சிவபெருமான் விஷத்தை அருந்திய பின் திருவிளையாடல் புரியும் எண்ணத்துடன் ஒரு நாள் முழுவதும் சயன கோலத்தில் இருந்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. அப்போது தேவர்கள் மயிற்பீலியாலான விசிறிகொண்டு வீசினர். அம்பிகை தன் மடியில் அவருடைய தலையை வைத்துக் கொண்டு அமர்ந்தாள். அசுவினித்தேவர்கள் ஆலவட்டம் வீசினர். நாரதர், தும்புரு முதலியோர் விஷத்தைப் போக்கும் அமிர்தவர்ஷினி இசையைப் பொழிந்தார்கள். தேவர்கள் அஞ்சி, திருவடியில் அஞ்சலி செய்தவராக நின்றனர். பிரமன், திருமால் முதலானோர் பகவானைத் தோத்திரம் செய்து நின்றனர்.



கூர்ம சங்கார மூர்த்தி. (பார்க்க பக்கம் 126)

பின்னர் ஒருநாள் கழிந்த பிறகு அவர் மாலை வேளையில் எழுந்து யாவரும் காண நடனமாடினார் என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழகத்தில் சிவபெருமானின் படுத்த நிலையிலான திரு வுருவத்தை திருக்கோயில்களில் காணமுடியவில்லை.

அபூர்வமாக ஆந்திர மாநிலத்தில் உள்ள சுரட்டப்பள்ளி எனும் தலத்தில் சிவபெருமான் சயன கோலத்தில் இருப்பதைக் காண்கிறோம். இங்கு பெரிய மேடைமீது பெருமான் சயனித்துள்ளார். (இது சுமார் 15 அடிநீளமுள்ள சுதைத்திருமேனியாகும்) தலையை அம்பிகையான மங்களேச்சுவரியின் மடியில் வைத்துள்ளார். முகம் நம்மைப் பாராது வானத்தைப் பார்த்தவாறு உள்ளது. அம்பிகை தேவர்களுக்கு அபய முத்திரை காட்டுவதுடன் மலரையும் ஏந்தியுள்ளாள். குபேரன் வெண்சாமரம் வீசுகின்றான். மேலே கந்தர்வர்கள் இசை பொழிகின்றனர். அகஸ்தியர், கௌதமர், புலஸ்தியர், தும்புரு வசிட்டர் விசுவாமித்திரர் இந்திரன் ஆகியோர் காலடியில் நிற்கின்றனர். அம்பிகையின் வலப்புறம் சந்திரனும், இடப்புறம் சூரியனும், தம் பிரபா மண்டலத்துடன் காட்சியளிக்கின்றனர். பிரமன், திருமால், இந்திரன் ஆகியோர் சூழ நிற்கின்றனர்.

இத்தகைய அறிய காட்சியை வேறெங்கும் காண இயலாது. இதனைக் கருத்தில் கொண்டு காசி நகரில் இத்தகைய சிற்பத்தினைப் புதியதாக அமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். காசிநகரில் அனுமான் காட் என்னுமிடத்தில் புதியதாக பஞ்சாயதன ஆலயம் கட்டப்பட்டுள்ளது. தென்னாட்டுப்பாணியில் ராஜகோபுரத்துடன் உரிய பரிவார தெய்வங்களுடன் அமைக்கப்பட்டுள்ள இக்கோயில் நயாமந்திர் என்றழைக்கப்படுகின்றது.


இங்கு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் எழுந்தருளியிருந்து கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள். அவர்கள் ஆணைப்படி இங்கு சுரட்டப்பள்ளியில் இருப்பது போலவே நீலகண்ட பரமேசுவரரின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. இவரைச்சுற்றி அம்பிகை, சாமரம் வீசுவோர் சூரிய சந்திரர்கள் முனிவர்கள் யாவரும் சுரட்டப்பள்ளியில் இருப்பது போலவே இங்கும் புதிய பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை திருவான்மியூர் மருந்தீசுவரர் ஆலயத்தில் உள்ள அம்பிகை சந்நிதி மகா மண்டபத்தின் வடக்கு நாடக சட்டத்தில் புராணம் கூறும் வகையிலான இத்தகைய சிற்பத்தொடர் அமைக்கப்பட்டுள்ளதும் இங்கு எண்ணத்தக்கதாகும். சுரட்டப்பள்ளி சென்னை சித்தூர் சாலையில் உள்ள பள்ளிப்பட்டு என்ற ஊருக்கு அடுத்துள்ளது.

துளசி

பெரும்பான்மையான அன்பர்கள் "துளசி" திருமாலுக்கு மட்டுமே உரியது என்று எண்ணுகின்றனர். சிவபூசைக்குரிய இலைகளில் துளசியும் ஒன்றாகும் சோமப்பிரதோஷம் எனப்படும். திங்கட்கிழமை வரும் பிரதோஷ நாட்களில் சிவபெருமானுக்கு துளசியால் மாலை அணிவித்து அருச்சனையும் புரியலாம்.

கூர்ம சங்கார மூர்த்தி



கச்சபேசத்தில் திருமால் சிவபூசை செய்தல்

அமிர்தம் பெற்று அமரலோகத்தில் சுகமாக வாழ்ந்திருக்கும் ஒரு நாளில் தேவர்கள் திருமாலிடம் வந்து ஆமை வடிவம் கொண்டு மந்திரமலையைத் தாங்கி நின்று நீங்கள் செய்த திருவருளே நாங்கள் அமிர்தம் பெறக் காரணம் என்றுகூறி அவரை வாழ்த்தி வணங்கினர்.

அந்த சிறந்த அவதாரக்காட்சியான கூர்மாவதாரத்தை மீண்டும் எங்களுக்குக் காட்டுங்கள் என்று கூறினார்கள். உடனே திருமால் முன்போலவே பெரிய ஆமை அவதாரம் கொண்டார். பாற்கடலில் சிறிது நேரம் நீந்தி விளையாடினார்.

கொஞ்ச நேரத்தில் அமிர்தம் என்னால்தான் கிடைத்தது என்ற அகந்தை அவருடைய மனத்தில் தோன்றியது. அதனால் இந்த உலகமே அழியும்படிக் கடலைக் கலக்கத் தொடங்கினார். இதனால் உலகம் நிலைபெயர்ந்தது. ஏதோ பெருமைப்படுத்தச் சொல்லப்போய் இப்போது இவர் உலகையே அழிக்கத் தொடங்கிவிட்டாரே என்று அஞ்சிய தேவர்கள் சிவபெருமானிடம் போய்ச் சென்று இந்தத் துன்பத்தை முறையிட்டனர்.

சிவபெருமான் கயிலையில் இருந்து பாற்கடலுக்கு வந்து பலமுறை அழைத்தும் திருமால் வெளியே வரவில்லை. கோபம் கொண்ட சிவன் பெரிய வடிவம் கொண்டு ஆமைவடிவாக விளங்கும் திருமாலைப் பிடித்து அதன் ஓட்டைப் பறித்துத் தன் மார்பில் பதக்கமாக அணிந்து கொண்டார்.

அதனால் துன்புற்ற திருமால் உண்மையை உணர்ந்து தன் விளையாட்டினை நீக்கிச் சிவபெருமானைத் துதித்தார். சிவபெருமான் தேவர்க்கு அருள் செய்து மறைந்தருளினார். பின்னர் திருமால் காஞ்சீபுரம் சென்று முருக்கமரத்தின் கீழ் ஜோதிவடிவமாக அமைந்துள்ள சிவபெருமானைப் போற்றி வணங்கினார். ஆமைவடிவம் கொண்ட திருமாலால் பூசிக்கப்பெற்றதால் அக்கோயில் கச்சபேசுவரர் கோயில் என்றழைக்கப்படுகின்றது.

ஆமையின் ஓட்டைப் பறித்து அணிந்த சிவபெருமானை சிவபராக்கிரமம் கூர்மசங்காரி என்று அழைக்கப்படுகின்றது. இந்தப்பெருமான் வாள், சூலம், கேடயம் ஏந்தியவராய் விளங்குகிறார் என்று அது குறிப்பிடுகின்றது.

பின்னர் திருமால் சிலகாலம் கூர்ம புராணத்தைப் பாராயணம் செய்து சிவனருள் பெற்று வைகுந்தம் சேர்ந்தார் என்பர்.

ஆதிகச்சபேசம்

அமுதம் கடையும் போது, மத்தாக நின்ற மந்திர மலை நிலையாக இல்லாமல் அழுந்தத் தொடங்கியது. அதனைத் தாங்குவதற்கு வலிமை யான பொருள் எதுவும் கிடைக்கவில்லை. ஆதலின் கடலைக் கடைய முடியாமல் தேவர்களும் அசுரர்களும் திண்டாடினர். அப்போது திருமால் ஆமையாக வடிவெடுத்து மந்திரமலையைத் தாங்கினார். அதன் பிறகே பாற்கடலைக் கடைய முடிந்தது.



காஞ்சிபுரத்தில் திருமால் சிவலிங்கத்தை பூசிக்கும் காட்சி தலவிருட்சமான முருக்கமரத்தின் கீழ் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. அதனையே இங்கு காணகிறோம்.

திருமால் மந்திர மலையைத் தாங்கும் வலிமையைப் பெறவும், அமிர்தம் எளிதில் வெளிப்படவும் ஒரு சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். அச்சிவலிங்கம் அமைந்துள்ள திருத்தலமே (செங்கல்பட்டு மாவட்டம் சிங்கபெருமாள் கோயிலுக்கு அருகில் உள்ள) திருக்கச்சூர் ஆகும். இங்கு திருமால் கச்சப அவதாரம் எடுத்து வழிபட்டதால் இறைவன் கச்சபேசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். இவ்வூரும் "திருக்கச்சூர்" என்று பெயர் பெறுவதாயிற்று.

இங்குள்ள தியாகராசப் பெருமான் அமிர்தம் கிடைக்க என்று அருள் செய்ததால் அமிர்தத்தியாகர் என்று அழைக்கப்படுகின்றார்.

இங்குள்ள விநாயகர் சந்நிதியின் வாயிலுக்கு மேற்புறம் அமைந்த கற்பலகை முகப்பில் ஆமை வடிவம் கொண்ட திருமால் கலசத்தை எடுத்துச் சென்று சிவலிங்க பூசை செய்யும் காட்சி புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

காஞ்சீபுரத்திலும் திருமால் வழிபட்ட கச்சபேசுவரர் கோயில் இருப்பதால், திருக்கச்சூரை ஆதிகாஞ்சி எனவும் இங்குள்ள பெருமானை ஆதிகச்சபேசுவரர் எனவும் அழைக்கின்றனர்.

திருக்கச்சூரில் ஆமைவடிவம் கொண்ட திருமால் அமைத்த தீர்த்தம் கூர்ம தீர்த்தம் என்று வழங்கப்படுகின்றது. இதில் பிரதோஷகாலத்தில் நீராடி கச்சபேசுவரரை வணங்கினால் வாழ்வில் செல்வம், கல்வி, இன்பம் ஆகியவை நிறைவாகக் கிடைக்கும் என்று இவ்வூர்ப்புராணம் கூறுகின்றது. அதனை விளக்கும் பாடலை இங்கு காணலாம்.

செப்பரும் கூர்மகுண்டத்
தீர்த்தத்தில் பிரதோஷத்தில்
ஒப்பரும் மதிவாரத்தில்
உகந்தாடி கச்சபேசன்
மைப்படி கண்ணி தன்னை
வணங்கியே தரிசிப் போர் தா
மிப்புவி கல்வி, செல்வம்
முற்ற இனிது வாழ்வார்.

இதன் பொருள்:

சொல்வதற்கரிய பெருமைகளையுடைய கூர்ம குண்டம் எனும் தீர்த்தத்தில் பிரதோஷ காலத்திலும் திங்கட்கிழமைகளிலும் விருப்பமுடன் நீராடி கச்சபேச பெருமானையும் மைப்படிந்த கண்ணியான உமாதேவியாரையும் வணங்குவோர் பூமி, கல்வி, செல்வம், ஆகியவற்றை முழுமையாகப் பெற்று, இனிமையாக வாழ்வர்.

வாசுகீசுவரர்

பாற்கடலைக் கடைய தாம்புக்கயிறாக விளங்கியது அஷ்டமகா நாகங்களில் ஒன்றாகிய வாசுகி எனும் பாம்பாகும். அவன் ஆயிரம் பணாமுடிகளைக் கொண்டவன். மிக்க வலியவன் என்றாலும் தேவர்களும் அசுரர்களும் கூடிநின்று கடைந்த போது உடல் வலி பொறுக்கமாட்டாது விஷத்தைக் கக்கினான். அவ்விஷத்தைப் பெருமான் தானே உண்டருளினார்.

அந்த வாசுகி வேண்டுமென்றே சிவனுக்கு விஷத்தைத் தரவில்லை என்றாலும் அவனுடைய மனதில் பரமசிவனுக்கு விஷத்தைக் கொடுத்து விட்டோமே என்ற மனக்கலக்கம் தோன்றியது. எனவே அந்தப் பாவம் தீரும் பொருட்டு காஞ்சீபுரத்தில் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தான்.

அவனிடம் இருந்து விஷத்தை வாங்கி அருந்திய சிவமூர்த்தி மணிகண்டேச்சுவரர் எனவும், வாசுகியால் வழிப்பட்ட இறைவன் பணாமணிச்சுரர் எனவும், வாசுகியின் அச்சத்தைப் போக்கி தன்மேனியில் அணிந்து கொண்ட நிலையில் அவர் பணாதரேச்சுவரர் எனும் பெயரிலும் காஞ்சீபுரத்தில் எழுந்தருளியுள்ளார்..

காஞ்சீபுரத்தில் தேவர்களுடன் வாசுகி வழிபட்ட மணிகண்டீச்சுரர் கோயில் திருக்கச்சிநம்பி தெருவில் உள்ளது. வாசுகி வழிபட்ட பணாமணிச்சரம் என்பது சின்ன காஞ்சீபுரம் ஐயங்கார் பாளையத் தெருவிலும் பணாதரேச்சுவரர் கோயில் பெரிய காஞ்சிபுரத்திலும் உள்ளன.

இம் மூன்று சிவாலயங்களையும் தரிசித்து வணங்குவோர்க்கு வாழ்வில் விஷபயம் இல்லை என்று ஆன்றோர் கூறுவர்.

சென்னையை அடுத்த திருஒற்றியூரிலும் வாசுகி பூசித்துப் பேறு பெற்றான் என்று அவ்வூர்த்தலபுராணம் கூறுகிறது. வாசுகியை தன் உடலில் ஒடுக்கிக் கொண்டதால் திருஒற்றியூர்ப் பெருமான் வாசுகீசுவரர் என்று அழைக்கப் படுகின்றார். இப்போதும் திருஒற்றியூர் பெருமான் மேனியில் வாசுகியின் திருவடிவைக் காணலாம்



(படம்-ஆகிய பாம்பை தம் மேனியில் பக்கவைத் திருத்தலின் இப்பெருமானுக்கு படம்பக்கநாதர் என்பதும் பெயராயிற்று).

நேப்பாளத்தில் உள்ள பசுபதி நாதர் கோயி லிலும் வாசுகிநாதருக்குத் தனிச் சந்நிதி உள்ளது.

வாசுகி அனுக்கிரக நடனம்

கண்ணபிரான் காளிங்கன் என்ற பாம்பின்மீது நடனமாடி மகிழ்கின்றான். அதுபோலவே சிவபெருமானும் வாசுகியின் மீது நடனமாடுகின்றார். கண்ணன் காளிங்கனை அழிக்க நடனமாடினார். ஆனால் சிவபெருமானோ வாசுகிக்கு அருள்புரிய ஆனந்தத் தாண்டவம் புரிந்தார். திருமால், பிரமன் முதலானோர் எருது வாகனமாகிப் பெருமானைத் தாங்கும் பேறு பெற்றனர் என்பதை அறிந்த வாசுகி தாமும் அவரைத் தாங்கி மகிழ எண்ணினான். பாற்கடல் கடைந்து அமுதம் பெற்ற பின்னர் தேவர்கள் மகிழச் சிவபெருமான் மீண்டும் ஒரு சந்தியாகால நடனத்தை ஆடினார். அப்போது வாசுகியின் படத்தின்மீது நடனம் நின்று ஆடினார். அப்போது அவன் தன் உடலை வலைத்து பிரபாமண்டலம் போல விளங்கினான்.

இந்த நடனக்காட்சியைக் கண்ட முயலகன் (எப்போதும் அவருடைய திருவடிக்கு விளங்குபவன்) ஆச்சர்யத்துடன் பார்த்து மகிழ்ந்தான் அப்போது தேவர்கள் பலவகையான வாத்தியங்களை இசைத்து மகிழ்ந்தனர். இந்த காட்சியை திருவலஞ்சுழி செஞ்சடையப்பர் கோயிலில் உள்ள ஓவியத்தில் கண்டு மகிழலாம்.

பிரதோஷ நடனம்

சிவபெருமான் விஷம் அருந்தியபின் நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஆகமத் திரட்டு என்ற நூல் பட்டியலிட்டு காட்டுகிறது. அப்பாடலையும் அதன் பொருளையும் இனிக் காணலாம்.

பொங்கு கங்காதரன் காளம் அயின்றே ஒன்றும்
புகலாமல் இருந்தனன் ஓர்கணப் பொழுது புலவோர்
அங்கு அவனை இடைவிடாது அருச்சனை முன்புரிந்தார்
அத்திதியே ஏகாதசியாம் அடுத்த திதியதனில்
புங்கவர் பாரணம் புசித்தே பூர்த்தியுற்றார் இதன்மேல்
பொருந்தும் திதியனில் இமவான் பொற்கொடியிடை வைத்தே
சங்கரன் சூலம் சுழற்றி நடித்தனன் ஓர்யாமம்
சதுர்மறை நூலது பிரதோடம் எனவே சாற்றும். -ஆகமத்திரட்டு

இதன் பொருள் : பொங்கும் புதுவெள்ளமாகிய கங்கையைத் தலையில் அணிந்த கங்காதரனாகிய சிவபெருமான் விஷத்தை அருந்திய பின் ஒன்றும் கூறாது ஒரு கண நேரம் அமைதியாக இருந்தார். அப்போது தேவர்கள் அவரை இடைவிடாது அர்ச்சனை புரிந்தனர். அந்தநாள் ஏகாதசிதிதியாம். அடுத்த திதியான துவாதசியில் தேவர்கள் உணவருந்தி சிவபெருமானை அர்ச்சனை செய்தனர். அடுத்த திரியோதசி நாளில் இமவான் பொற்கொடியாகிய பார்வதியை சிவபெருமான் தனது இடபாகத்திலே வைத்து சூலத்தை சுழற்றி ஒரு ஜாம நேரம் நடனம் ஆடினார். அந்த நேரத்தை நான்கு மறைகளும் பிரதோஷம் என்று கூறுகின்றன என்பதாகும்.

பிரதோஷ விரதம்

சிவாகம நூல்களின் படி பிரதோஷம் உத்தமம், மத்திமம், அதமம் என மூன்று வகைப்படும்.

சூரியன் உதயம் முதல் மறுநாள் சூரிய உதயம் வரை திரயோதசி திதி இருப்பின் அந்நாள் உத்தமப் பிரதோஷம் எனப்படும்.

சூரியன் மறைவது முதல் அடுத்தநாள் சூரியன் மறைவது வரை திரயோதசி இருந்தால் அது மத்திமப் பிரதோஷமெனவும் சூரியன் மறைவுக்கு மேல் திரயோதசி வந்து மறுநாள் 26 நாழிகைக்குள்ளேயே முடிந்து விடுமானால் அது அதமப்பிரதோஷமெனவும் வழங்கப்படும்.

வளர்பிறை சனிக்கிழமையில் சூரிய அஸ்தமானத்திற்கு முன்னும் பின்னும் மூன்றே முக்கால் நாழிகைக்கு குறைவில்லாமல் திரயோதசி இருக்கும் நாளே சனி மகாபிரதோஷம் எனப்படும்.

உத்தம, அதம, மகா பிரதோஷ காலங்களில் அதே நாளிலும் மத்திம பிரதோஷத்திற்கு அடுத்த நாளிலும் பிரதோஷபூஜை செய்ய வேண்டும்.

பிரதோஷ விரதம் தொடங்குவோர் மகாபிரதோஷ நாளில் தொடங்குவது நல்லது. பிரதோஷ வேளையில், எண்ணை தேய்த்துக் கொள்ளுதல். உண்ணுதல். சிவசம்பந்தமில்லாத மந்திரங்களைச் ஜெபித்தல், நூல்களைப் படித்தல் முதலியவற்றைச் செய்யக் கூடாது.

பிரதோஷ விரதம் கடைப்பிடிப்போர் அந்நாளில் அதிகாலையில் நீராடி சிவபூசனை செய்து உணவருந்தாது இருந்து மாலையில் சிவதரிசனம் செய்த பிறகே உண்ணுதல் வேண்டும். இயன்றவரை சிவனடியார்களுக்கு உணவிட்டு உண்ணலாம்.

இலக்கியங்களில் நீலகண்டர்

நீலகண்டரைப் பற்றிய செய்திகள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

நீலமணிமிடற்றொருவன்

ஒரு நெடிய மலையின் பிளவில் அபூர்வமாகக் காய்க்கும் நெல்லி மரம் ஒன்று இருந்தது. அம்மரத்தின் கனியை உண்டவர் நெடிது நாள் வாழ்வர். அக்கனி ஒரு முறை அதியமான் என்ற அரசனுக்குக் கிடைத்தது. அவன் அதனைத்தான் உண்பதை விட தமிழ் மூதாட்டியான ஔவையார் உண்டால் தமிழுக்கு நல்லது என்று எண்ணி அதன் பயனை சொல்லாமல் அவரிடம் அதனைக் கொடுத்து உண்ணச் சொன்னான். அதன் தன்மையைப் பின்னாளில் அறிந்த ஔவையார், அவன் தன்பால் கொண்டிருந்த அன்பினைப் போற்றி,

"நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே",

— என்று வாழ்த்தினார்.

பிறர் வாழ தான் நஞ்சுண்டு தியாகம் புரிந்த சிவனைப் போலவே நெடுநாள் வாழ்வைத்தரும் இந்தக் கனியை நீயுண்ணாது எனக்கு அளித்து தியாகம் புரிந்துள்ளாய். ஆதலின் நீலமணி போன்ற கழுத்தையுடைய அச்சிவபெருமான் போலவே நீயும் நிலைத்திருப்பாயாக என்று வாழ்த்தினார். இதில் சிவபெருமான் "நீல மணிமிடற்றன்" என்று குறிக்கப்பட்டுள்ளார்.

கறைமிடற்றண்ணல்

புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தில் இப்புராண வரலாறு,

"கறைமிடற்று அணியலும், அணிந்தன்று அக்கறை பதினெண் கணனும் ஏத்தவும் படுமே"

— என்று குறிக்கப்பட்டுள்ளது.

(கழுத்தில் நீலக்கறையாகிய விஷத்தை அணிதலும், அவ்வாறு அணிந்த நாளில் அக்கறையையும் அதன் காரணத்தையும் பதினெட்டு கணங்களால் போற்றி துதிக்கப் பட்டதும் ஆன சிறப்பை உடையது)

காரியுண்டிக்கடவுள்

பத்துபாட்டுள் ஒன்றான மலைபடுகடாம் எனும் நூலில்

நீரகம் பனிக்கும் அஞ்சுவரு
கடுத்திறற் பேரிசை
நவிரம் மேஎய் உறையும்
காரியுண்டிக் கடவுளது இயற்கையையும்

—என இறைவன் நஞ்சுண்ட வரலாறு குறிக்கப்பட்டுள்ளது.

(கடல் சூழ்ந்த உலகம் அஞ்சும் படியாகத் தோன்றும் நஞ்சினை உண்டு உலகினைக்காத்து "நவிரம்" எனும் மலையின் மீது விளங்கும் இறைவனின் இயல்பைக் குறிப்பிடுகின்றது. இப்பாடலில் இறைவன் நஞ்சுண்டபிறகு நவிரம் என்னும் மலைமீது எழுந்தருளியிருந்த வரலாறு குறிக்கப்படுகின்றது. இது வேறு நூலில் காணப்படாத செய்தியாகும்.

நவிரம் என்பது திருவண்ணாமலைக்கு வடமேற்கில் உள்ள திரிசூலகிரியாகும். இப்போது இதனைப் பர்வதமலை என அழைக்கின்றனர். இதன் அடிவாரத்தில் உள்ள ஏழு தலங்களில் உறையும் இறைவன் கரை கண்டேஸ்வரர் என அழைக்கப் படுகின்றார். இவை சப்தகரைகண்ட க்ஷேத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்நாளில் பர்வத மலைமீது உள்ள இறைவன் மல்லிகார்ச்சுன சுவாமி என்றும் அம்பிகை பிரமராம்பிகை என்றும் அழைக்கப்படுகின்றனர்.

சிலப்பதிகாரம்

சங்கம் மருவிய இலக்கியமான சிலப்பதிகாரம்.

"விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டிருந்தது அருள் செய்குவாய்"

—என்று கூறுகின்றது.

(பொருள்: கிடைத்தற்கரிய அமுதத்தை உண்ட தேவர்களே இறந்து போயிருக்கின்றார்கள். ஆனால் உண்டால் கண்டிப்பாக உயிரைப் போக்கக் கூடிய நஞ்சினை உண்ட சிவபெருமானோ நிலை பெற்றிருந்து அருள் செய்கின்றார் என்பதாகும். இப்பாடல் துர்கைக்குச் சொல்லப்பட்டுள்ளது. துர்க்கைச் சிவபெருமானின் பாதியாக விளங்குதலின் அவளுக்கு விஷம் உண்ட திருவிளையாடல் ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. இதனை நினைவு கூறும் வகையில் அம்பிகைக்கு "நீலகண்டி" என்பதும் பெயராயிற்று.

இது போன்ற எண்ணற்ற வகைகளில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்களில் சிவபெருமான் விஷமருந்தின வரலாறு குறிக்கப் பட்டுள்ளதைக் காண்கிறோம்.

பிற்கால இலக்கியங்களான பக்தி இலக்கியங்களில் பல்லாயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் சிவபெருமான் விடமுண்ட வரலாறு விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

தேவாரமும், திருவாசகமும் அவற்றைத் தொடர்ந்து எழுந்த திருமுறை நூல்களும், அதனைத் தொடர்ந்து எழுந்த பக்திப் பாடல்களும், சிவபெருமான் விடமுண்டதையும், அதனால் தேவர்கள் காக்கப் பெற்றதையும், தேவர்களின் மனைவிமார்களின் திருமாங்கல்யம் காக்கப் பெற்றதையும் விரிவாகக் கூறுகின்றன.



திருக்குறளில் நீலகண்டர்

திருக்குறள் அனைத்து சமயங்களுக்கும் உரிய பொது மறையாகும். இதில் நேரடியாக இல்லாமல் மறைமுகமாகச் சில புராணவரலாறுகள் சுட்டப் படுகின்றன. அவற்றிலொன்றே சிவபெருமான் நஞ்சு உண்டவரலாறாகும். தேவர்கள் தாங்கள் உயிர்வாழ்வதற்காக அவருக்கு நஞ்சினை அளித்து அருந்தும்படி வேண்டினர். இறைவன் அதனை மறுத்திருக்கலாம் என்றாலும் நயத்தக்க நாகரீகமும் பண்பாடும் காக்க வேண்டி அதனை உண்டு அவர்களைக் காத்து அருள்புரிந்தார்.

இந்த வரலாறே மறைமுகமாகத் திருக்குறளில்

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைபவர்
நயத்தக்க நாகரீகம் வேண்டுபவர்

என்று குறிக்கப்பட்டுள்ளது என்பர்.

பன்னீர் அபிஷேகம்

பன்னீர் என்பது பனித்துளிகளைச் சேர்த்து இரண்டடுக்குள்ள மண் பாத்திரத்தில் வைத்து குளிரூட்டி வாசனையூட்டப்பட்ட நீராகும். இது தூய்மையானது, குளிர்ச்சியானது. ஆனால் இப்போது இதனைத் தயாரிப்பது எளிதல்ல என்பதால் அதற்கிணையாக ரோஜாப்பூவில் இருந்து தயாரிக்கப்பெற்ற பன்னீரைப் பயன்படுத்துகின்றனர். பன்னீரால் அபிஷேகம் செய்வது சகல சுகங்களையும் தருவதாகும். பிரதோஷ காலத்தில் சுவாமி பிராகாரத்தில் இரண்டாம் முறையாக வலம் வரும் போது ஈசானத்தில் நிறுத்தி பூதநிர்தம் முதலானவை நிகழ்த்தி பன்னீரால் அபிஷேகம் செய்கின்றனர்.

பாரிஜாதம்

பாற்கடலில் பிறந்த ஐந்து மரங்களில் ஒன்றான பாரிஜாத மரத்தினை இந்திரன் பூமிக்குப் கொண்டுவந்தான். பாரிஜாதத்தைப் பவழமல்லிகை எனவும்அழைப்பர். இது சிவப்பான காம்பையும் தட்டையான ஐந்து வெள்ளையான இதழ்களையும் கொண்ட பூவாகும். இம்மரம் நள்ளிரவுக்கு மேல் பூக்கத்தொடங்கும், பூக்கத் தொடங்கியது முதல் விடியற்காலை வரை வெகுதொலைவுவரை மணம் வீசிக் கொண்டிருக்கும். காலையில் உதயவேளைக்குள் பூக்கள் உதிர ஆரம்பிக்கும் இது சிவபெருமானுக்கு உரிய அஷ்ட புஷ்பங்களில் ஒன்றாகும். இது ஆவணி, புரட்டாசி மாதங்களில் மட்டுமே பூக்கும் மரமாகும். இந்தப்பூவின் மணத்தை நாடிப் பாம்புகள் வருமென்பர்.

"திருநீலகண்ட" அடியவர்கள்

அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரிசையில் இரண்டு நாயன்மார்கள் "திரு நீலகண்டத்தின்" பெயரால் அழைக்கப்படுகின்றனர். இவ்வரிசையில் முதலாகத் திகழ்பவர் திருநீலகண்டத்துக் குயவனார் ஆவார். இரண்டாவதாகத் திகழ்பவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். இவ்விரு அடியவர்களும் மக்கள் தொண்டையே மகேசன் தொண்டாக ஏற்று வாழ்ந்தவர்கள். இவ்விருவரில் முதலாவது நாயன்மாரைப் பற்றிய செய்திகளை இங்கும் யாழ்ப்பாணரைப் பற்றிய செய்தியை வேறு மலரிலும் காணலாம்.



திருநீலகண்ட நாயனார்

திருநீலகண்டர் சிதம்பரத்திலே மட்பாண்டம் செய்யும் குயவர் குலத்திலே அவதரித்தவர். நடராசப் பெருமானை நாள்தோறும் வழிபட்டு வருபவர். இவர் சிவனடியார்களுக்குப் பிச்சைப் பாத்திரங்களைச் செய்து அன்புடன் அளிப்பவர். அடியவர்க்கு உதவுவதையே அரன்பணியென நினைத்து வாழ்ந்து வந்தார்.

இவர் சிவபெருமான் செய்த தியாகத்தின் சின்னமாக விளங்கும் திருநீலகண்டத்தையே பக்தியுடன் நினைத்து எழும்போதும், விழும்போதும் "திருநீலகண்டம்" "திருநீலகண்டம்" என்று கூறுவது வழக்கம். அதனால் இவருடைய இயற்பெயர் மறைந்து திருநீலகண்டர் என்ற பெயரே நிலைத்து விட்டது.

ஒரு சமயம் விதியின் வலிமையால் அவர் ஓர் பெண்ணுடன் உறவு கொண்டு திரும்பினார். அதனை அறிந்த இவர் மனைவி இவரிடம் ஊடல் கொண்டார். எவ்வளவு சொல்லியும் அந்த அம்மையார் சமாதானமடையவில்லை. இவர் அவரை அன்புடன் அணைத்துக் கொள்ள கையை நீட்டினார். அந்த அம்மையாருக்குச் சினம் மேலும் அதிகமாயிற்று. கணவரை நோக்கி, எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்" என்று ஆணை யிட்டார்.

அடியவர் உடனே அவரை விட்டு வெளியேவந்து "எம்மை என்று நாம் வணங்கும் திருநீலகண்டத்தின் பெயரால் நீ ஆணையிட்ட படியால் உன்னை மட்டுமின்றி இனி எந்தப் பெண்ணையும் சிந்தையாலும் தொடேன்", என்று சபதம் செய்தார். அதன் பின்னர் ஆண்டுகள் பல உருண்டோடின.

நீலகண்டர் மனைவியோடு உறவு கொள் வதைத் தவிர அனைத்து இல்லறதர்மங்களையும் ஆற்றி வந்ததுடன் வழக்கப்படியே அடியவர்களுக்கு திருவோடு அளித்துவரும் பணியையும் தொடர்ந்து செய்து வந்தார். அம்மையாரும் இல்லற சுகத்தை நீக்கி ஏனைய உலகியல் நடைமுறைகள் யாவற்றையும் செவ்வனே ஆற்றி வந்தார். இவர்கள் ஆணையிட்டு சபதம் செய்து கொண்டு ஒருவரை ஒருவர் இணையாது வாழும் நிலையை மற்றவர் எவரும் அறிந்து கொள்ளாதபடி இல்லறத்தை நன்கு நடத்திவந்தனர்.

இளமையும் கழிந்தது, முதுமையும் வந்தது. உடலும் தளர்ந்தது. இருவரும் இறையன்பினில் தளர்ந்தாரில்லை. இவர்களின் நிலையும், இருவரும் திருநீலகண்டத்தின்பாற் கொண்டுள்ள பக்தியையும் உலகிற்கு எடுத்துக்காட்ட சிவபெருமான் விரும்பினார்.

பெருமான் அடியவர் வேடம் பூண்டார். ஒரு திருவோட்டை ஏந்தியவாறு திருநீலகண்டரின் இல்லத்தினை அடைந்தார். திருநீலகண்டர் வந்தவரை உபசரித்து உங்களுக்கு நான் செய்ய வேண்டிய பணி யாது? என்று விண்ணப்பித்தார்.

அப்போது அடியவர் வேடம் பூண்டு வந்த சிவபெருமான் தன்னுடைய திருவோட்டை அவரிடம் தந்து, "ஐயா என்னுடைய இந்தத் திருவோடு மிகவும் அரியது. தன்னிடம் அளித்ததையெல்லாம் தூய்மையாக்குவது. நான் வெகுதூரம் செல்வதால் இதனை உன்னிடம் தருகிறேன். நான் திருப்பி வந்து கேட்கும் போது இதை மீண்டும் என்னிடம் தந்தால் போதும்" என்றார்.

திருநீலகண்டர் அத்திருவோட்டினை வாங்கி பத்திரப்படுத்தி வைத்து விட்டு அடியவரான சிவபெருமானுக்கு விடை கொடுத்தனுப்பினார். நாட்கள் நகர்ந்தன.

சிவபெருமான் தன் திருவிளையாட்டால் அந்தத் திருவோட்டைக் காணாமல் போகும்படி மறைத்தருளினார். பின்னர் அடியவர் வேடம் புனைந்து மீண்டும் திருநீலகண்டரின் வீட்டிற்கு வந்தருளினார்.

திருநீலகண்டர் அவரைத் தொழுது உபசரித்தார். பின்னர் அடியவர் நீலகண்டரை நோக்கி "அன்பனே. யான் முன்பு கொடுத்த எமது திருவோட்டினை இப்போது தருவாய்," என்றார்.

வீட்டினுள் சென்ற நீலகண்டர் அடியவரின் திருவோட்டைத் தான் முன்பு வைத்த இடத்தில் தேடினார். அதனைக் காணவில்லை கைதவறி வேறெங்காவது வைத்து விட்டோமா? என்று வீடு முழுக்கத்தேடினார்.

சிவபெருமான்தான் முன்பே அதனை மறைத்து வைத்துவிட்டாரே! அதனால் அது எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

நீலகண்டர் அடியவரின் ஓடுகாணாமல் போனதால் மனங்கலங்கினார். மிகவும் பயந்தார். மிகவும் அஞ்சி அஞ்சி சிவனடியாரிடத்திற்கு வந்து "ஐயனே. அந்தத் திருவோடு எங்கேயோ தொலைந்து விட்டது நான் புதியதாக நல்ல திருவோட்டைத் தருகிறேன் பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று பணிவாகக் கூறினார்.

சிவனடியார் சினம் பொங்க அவரை நோக்கி, "நான் உன்னிடம் அடைக்கலமாகத் தந்த பொருளைத் திருடிக் கொண்டு பொய் சொல்கின்றாய். உண்மையிலேயே நீ திருவோட்டைத் தொலைத்து விட்டது உண்மையாயின் உன் மகனைக் கைப்பற்றிக் கொண்டு இந்தக் குளத்தில் மூழ்கி சத்தியம் செய்," என்றார்.

அதற்கு திருநீலகண்டர்," எனக்கு மகன் இல்லையே யாது செய்வேன்?" என்றார். அதனைக் கேட்ட சிவனடியார், "பரவாயில்லை உன் மனைவியின் கையைப் பற்றிக் கொண்டு தண்ணீரில் மூழ்கிச் சத்தியம் செய்வாய்," என்றார்.

நீலகண்டர் அடியவரிடம்," சுவாமி அதுவும் என்னால் செய்ய இயலாது. ஆதலால் நான் மட்டும் மூழ்கி நீங்கள் சொன்னவாறு சத்தியம் செய்து தருகின்றேன்," என்றார்.

சிவனடியார் இதனை ஏற்கவில்லை. எனவே அவரை அழைத்துக் கொண்டு தில்லைவாழ் அந்தணர்கள் கூடியிருந்த சபையில் முறையிட்டார்.

இவ்வழக்கைத் தீர விசாரித்த நடுநிலை தவறாத அவ்வந்தணர்கள், "திருநீலகண்டர் தம் மனைவியின் கையைப் பற்றிக் கொண்டு நீரில் மூழ்கிச் சத்தியம் செய்து கொடுத்தலே முறைமை என்று தீர்ப்பளித்தனர்.

சிவனடியாரும், திருநீலகண்டரும் சிதம் பரத்தில் உள்ள திருப்புலீச்சரம் எனும் கோயிலின் முன்னுள்ள திருக்குளத்தை அடைந்தனர்.

திருநீலகண்டர் நீண்ட மூங்கிற்கழியை எடுத்துவந்து ஒரு முனையைத் தான் பற்றிக்கொண்டு மற்றோர் முனையைத் தன் மனைவியிடம் தந்து பிடித்துக்கொள்ளச் சொல்லி நீரில் மூழ்கினர். அதனைக் கண்ட சிவனடியார், "நீலகண்டரே. மனைவியின் கையைப் பற்றி மூழ்குதலே முறை எனவே மனைவியின் கையைப்பற்றி மூழ்குங்கள்," என்றார்.


இனி மறைக்க முடியாது என்ற நிலையில், நீலகண்ட நாயனார் "முன்னாளில் தனக்கும் தன் மனைவிக்கும் ஏற்பட்ட பிணக்கையும்

திருநீலகண்டத்தின் பெயரால் எடுத்துக் கொண்ட சபதத்தையும் விரிவாகக்கூறி வணங்கினார். பின்னர் அடியவர் அவர் விருப்பப்படியே கோலைப் பற்றிக் கொண்டு மூழ்கிச் சத்தியம் செய்யும்படி கூறினார். அதன்படியே அவர்கள் நீரில் மூழ்கினார்கள். அப்படி மூழ்கி எழும்போதில் யாவரும் காண அதிசயமான நிகழ்ச்சி நடைபெற்றது.

இருவரும் தமது வயதான உடல் மாறி முன்னைச் சபதமேற்ற நாளில் எவ்வாறு இளமையுடன் திகழ்ந்தார்களோ அப்படியே இளமைபொலிய எழுந்தனர். அப்போது யாவரும் காணச் சிவபெருமான் விடைவாகனத்தில் காட்சி யளித்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். அவர்களை நோக்கிய சிவபெருமான் "ஐம்புலனும் வென்று வாழ்ந்த நீங்கள் என்றும் மாறா இளமை யுடன் திகழ்வீர்கள்" என்று அருள்பாலித்தார். அவர்கள் மூழ்கி இளமையுடன் திகழ்ந்த தீர்த்தம் அன்றுமுதல் இளமையாக்கிய தீர்த்தம் என்று அழைக்கப்பட்டது. இதனைப்புலிமடுஎனவும் கூறுவர்.

இதனால் "நீலகண்டம்" என்ற சிவ மந்திரத்தைக் கூறி வழிபடுவோர்க்கு இளமையுடன் இன்பமும் சேரும் என்பது அறியப்படும்.

இளமையாக்கினார் கோயில்



திருநீலகண்டரும் அவரது மனைவியாரும்
முதுமையும் மீளப்பெற்ற இளமையுமாகிய கோலங்கள்.
இளமையாக்கினார் கோயிலின் எதிரில் உள்ள குளத்து சுவற்றுச் சிற்பம் - சிதம்பரம்.

தில்லையம்பதிக்கு அணிசேர்க்கும் கோயில் களில் ஒன்று இளமையாக்கினார் கோயிலாகும். இது சிதம்பரம் நகரத்திற்கு உள்ளேயே உள்ளது. இக்கோயிலே திருநீலகண்டர் வழிபாடு செய்த கோயிலாகும். இக்கோயிலின் பழைய பெயர் புலீச்சரம் என்பதாகும். வியாக்ரபாதமுனிவர் தில்லையம்பதியில் திருக்கூத்து காணவேண்டி. தவமியற்றும் காலத்தில் இங்கு தம் பெயரால் சிவலிங்கமமைத்து வழிபாடு செய்தார். அதனால் இக்கோயில் இறைவர் வியாக்ரபுரீசுவரர் என்றும் கோயில் புலீச்சரம் எனவும் வழங்குவதாயிற்று.

இக்கோயிலின் முன்புறத்தில் ஒரு பெரிய குளம் உள்ளது. இதனை வியாக்ரபாத தீர்த்தம் எனவும் வழங்குவர். இக்குளத்தில் மூழ்கியே திருநீலகண்டரும் அவரது மனைவியாரும் முதுமை நீங்கி இளமை பெற்றனர். அது முதல் இக்கோயில்

இளமையாக்கினார் கோயில் என வழங்குவதாயிற்று குளத்தின் படிக்கட்டுகளின் ஓரத்தில் புடைப்புச் சிற்பமாக நாயனாரின் வரலாறு செதுக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் இறைவன் காட்சி கொடுப்பது, இருவரின் இளமையானதும் முதுமையானதுமான கோலங்கள் காட்டப்பட்டுள்ளன.

இக்கோயில் நீலகண்டர் வழிவந்த குலாலர்களுக்கு உரியதாகும். இங்கு திருநீலகண்டர் முத்தி பெற்ற நாளான தைமாதம் விசாகத் திருநாளில் இளமையாக்கிய ஐதீகவிழா நடைபெறுகிறது. அந்நாளில் திருநீலகண்டர் அவர்தம் மனைவியர் திருஉருவங்கள் வீதிவலமாக எடுத்துச் சென்று கோயிலின் முன்பு கொண்டு வரப்படுகின்றது. உலாத்திருமேனியான சந்திரசேகரருக்கு துறவியின் அலங்காரம் செய்து அவர்கள் திருஉருவுமுன்பு நிறுத்தி நாயனாரின் வரலாறு படிக்கப்படுகின்றது பின்னர் நாயனாரோடு அவரது துணைவியார் உருவமும் திருக்குளத்துள் எடுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்குவதான ஐதீகக் காட்சி நடைபெறுகிறது. அதே சமயத்தில் சந்திர சேகரர் வடிவம் உள்ளே எடுத்துச் செல்லப்பட்டு பெரிய இடப வாகனத்தில் சோமாஸ்கந்தர் வடிவம் வெளிக்கொண்டு வரப்படுகின்றது. அப்போது நாயனார் தம்பதியர் மேலே கரைக்கு வர ஏக காலத்தில் சுவாமிக்கும் அவர்களுக்கும் தீபராதனை நடைபெறுகின்றது.

இவ்விழாவை யொட்டி கூட்டுச் சிவபூசை, தேவாரபாராயணம், பட்டி மன்றம், இலக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அன்று மாலை விழா ஞாபகமாக ஒரு திருவோடு அறிஞருக்கு அளிக்கப்படுகின்றது.

சந்தனம்

பாற்கடலில் பிறந்த ஐம்மரங்களில் ஒன்றான சந்தன மரத்தினை அரைத்து வாசனை வீசும் சந்தனக் குழம்பு தயாரிக்கின்றனர். இது குளிர்ச்சி மிக்கதாகும். கழுத்தில் விஷ வேகமான தீராத நெருப்பை ஏந்தியிருக்கும் பெருமானுக்கு சந்தனக் குழம்பால் அபிஷேகம் செய்வதும், மார்பிலும் கழுத்திலும் சந்தனத்தை அப்புவதும் சிறப்பான புண்ணியமாகும். ஹரித்ராதேவி என்பவள் சந்தனத்திற்கு அதிதேவதையானவள். இவள் சந்தனக்குழம்பை ஏந்தி எழில்வடிவான சிவபெருமானுக்கு ஓயாது பணிவிடை புரிந்து கொண்டிருக்கின்றாள் என்பர்.

மயிற்பீலி ஆலவட்டம்

சிவபெருமான் விஷவேகத்தால் தாக்குண்டவர்போல் படுத்திருந்த போது அசுவினித் தேவர்கள் அவருக்கு ஆலவட்டம் வீசினர். இது மயிற்பீலிகளை வட்டமாக அடுக்கி அமைக்கப் பெற்ற விசிறியாகும். மயிற்பீலி மருத்துவ குணங்களைக் கொண்டது. இதன் காற்று மருந்தாகும். மேலும் மயிற்பீலிகள் தியாகத்தின் சின்னமாகும். எனவே பெருந்தியாகம் புரிந்த சிவபெருமானுக்கு மயிற்பீலியாலான ஆலவட்டத்தை வீசுகின்றனர்.

திருவான்மியூர் மருந்தீசர் கோயிலில் உள்ள பிரதோஷ காலத்தை விளக்கும் சிற்பத்தில் அசுவினித்தேவர்கள் மயிற்பீலியாலான ஆலவட்டம் வீசுவதைக் காணலாம்.

இப்போதும் பல திருத்தலங்களில் பிரதோஷவேளையில் வெண்சாரமரத்துடன் மயிற்பீலியாலான விசிறிகளைக் கொண்டு வீசுவதையும் காண்கிறோம்.

"அருகு" அர்ச்சனை

சிவபெருமானுக்கு உரிய பத்திரங்களில் தூர்வா பத்திரம் எனும் அருகு சிறப்புடையதாகும். விஷவேகத்தாலான தீயைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற சிவபெருமானுக்குக் குளிர்ச்சியைத் தருவதும் வெப்ப வேதனைகளைத் தவிர்ப்பதுமாகிய அருகம்புல்லால் அர்ச்சனை செய்கின்றனர்.

அருகம்புல்லாலான ஆசனத்தை அமைத்து அந்த தூர்வாசனத்தின் மீது அமர்ந்து கொண்டு பிரதோஷ காலங்களில் சிவமூர்த்தியை தியானம் செய்வது நலமுடையதாகும்.

இவ்வேளையில் அருகம்புல்லைக் கட்டி மாலையாக சிவலிங்கத்திற்கும், நந்திதேவருக்கும் அணிவிக்கின்றனர். அருகம்புல் விஷத்தை நீக்கும் ஆற்றல் படைத்தாகும்.

நீலகண்டரின் பல்வேறு பெயர்கள்

காரியுண்டிக்கடவுள்

காரி என்பது விஷத்தைக் குறிப்பதாகும். விஷத்தையுண்ட சிவனைத் தொன்மையான இலக்கியங்கள் "காரியுண்டிக் கடவுள்" என்றே அழைக்கின்றன.

நீலமணி மிடற்றண்ணல்

பொதுவாக மணி என்பது ரத்தினத்தைக் குறிக்கும் சொல்லாகும். சிவபெருமானின் கழுத்தில் நீலமணிபோன்று பாற்கடலில் பிறந்த ஆலகாலமானது விளங்குவதால் அவருக்கு மணிமிடற்றண்ணல். மணிகண்டர், நீலகண்டர், நீலமணிமிடற்றண்ணல் போன்ற பெயர்கள் அமைந்துள்ளன.

ஸ்ரீ கண்டர்

பிறரை வருத்தும் துன்பமயமான விஷத்தை தன் கழுத்தில் நிறுத்தி சிவபிரான் உலகைக் காத்தார். இதனால் அவருடைய கழுத்து சிறப்படையதாயிற்று. எனவே அவர் அக்கழுத்தின் பெயரால் ஸ்ரீகண்டர் என அழைக்கப்படுகின்றார்.

கறுங்கண்டர்

ஆழ்ந்த நீலம் அடர்வு அதிகமாகும் போது கருமைநிறம் பெறுகிறது. ஆதலின் சிவபெருமானுக்கு கருத்தகண்டத்தவர், கங்குலிங் கருத்தகண்டர். (கங்குல் - இருட்டு, இருள் போன்ற கருத்த கழுத்தை உடையவர் என்று பொருள்) என்ற பெயர்கள் அமைகின்றன.

சுக்ரீவர்

கிரீவம் எனில் கழுத்து என்று பொருள். நீலகண்டரின் கழுத்து மேலான தியாகச் சின்னத்தை உணர்த்தி நிற்றலின் (சிறப்பான கழுத்தை உடையவர் எனும் பொருளில்) அவர் (சு + கிரீவன்) சுக்ரீவன் என அழைக்கப்பட்டார்.

சுக்ரீவன் எனும் குரங்கரசனால் பூஜிக்கப் பட்டதாலும் அவருக்கு சுக்ரீவ ஈச்சுவரர் என்பது பெயராயிற்று.



கொங்கு மாவட்டத்தில் உள்ள சர்க்கார் பெரிய பாளையம் எனும் ஊரில் உள்ள இறைவன் "சுக்ரீவேச்சுவரர்" என அழைக்கப்படுகின்றார். இதுவே குரக்குத்தளி என்கிற வைப்புத்தலமாகும்.

விஷாபரணர்

பலர் பொன்னாலும் வெள்ளியாலும் நவரத்தினங்களாலும் அணி செய்யப்பபெற்ற ஆபரணங்களை அணிந்து மகிழ்கின்றனர். சிவபெருமானோ தனது செம்பொன்மயமான மேனியில் (கழுத்தில்) கருநீலமான விஷத்தையே ஆபரணமாகக் கொண்டுள்ளான். எனவே அவர் விஷாபரணன் என்றழைக்கப் பெறுகின்றார்.

மணிகண்டர்

நீலமணி போன்ற விஷத்தை பெருமான் மணிபோல கழுத்தில் கொண்டிருப்பதால் மணிகண்டர் என்றழைக்கப்படுகின்றார். திருமால் பேறு காஞ்சி மணிகண்டேசம் முதலிய திருத்தலங்களில் பெருமானுக்கு மணிகண்டன் என்பது பெயராயிற்று.



பசுபதி நாயனார்

பசுபதி நாயனார் என்றதும் நம் நினைவுக்கு வருபவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான உருத்திர பசுபதி நாயனார் ஆவார். ஆனால் நாம் இங்கு குறிப்பிடுவது "வசவ புராணத்தில்" வரும் பசுபதி நாயனார் ஆவார்.

இவர் வெய்யலூர் எனும் தலத்தில் வாழ்ந்து வந்த வீரசைவர். ஒரு சமயம் இவர் வேதாகம புராணங்களைப் படித்துக் கொண்டு வருகையில் சிவபெருமான் பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்டார் என்ற செய்தியை அறிந்தார். புராணத்தில் மனம், மொழி, மெய், யாவற்றாலும் ஒன்றியிருந்ததால் சிவன் விடமுண்ட செய்தியைக் கேட்டதும் நடுங்கினார். மயங்கினார். சிவபெருமான் விடமுண்டால் இறந்துவிடுவாரே பார்வதிதேவியார், முருகன், கணபதி ஆகியோர் அருகில் இருந்தும் அவர்மீது அன்புகாட்டாது எவ்வாறு அவரை விடமுண்ண அனுமதித்தனர் என்று புலம்பினார். நான் அங்கிருந்திருந்தால் எப்படியும் இதனைத் தடுத்திருப்பேன் இப்புத்தகத்தைப் படித்ததாலன்றோ? இக்கெடுதியான செய்தியை கேட்கும் படியாகி விட்டது. நான் இனி வாழேன். எம்பிரான் நெஞ்சில் உள்ள விஷம் அவரைத் தாக்கும் அத்துன்பத்தைக் கண்டு என்னால் சகிக்க முடியாது. இப்போதே கடலில் வீழ்ந்து இறப்பேன் என்று ஓடினார்.

அவருடைய பிரேமையைக் கண்ட சிவபெருமான் அவருக்கு காட்சியளித்தார். அவருடைய திருவடிகளில் வீழ்ந்த நாயனார் சிவபெருமானே! " நீங்கள் உண்ட விஷத்தை இப்போதே வெளியே உமிழ வேண்டும்", என வேண்டினார்.

அதற்கு சிவபெருமான் அன்பனே, "நீ சொல்வது போல இப்பொழுதே இந்த நஞ்சை உமிழ்ந்தால் அவ்விஷம் வானையும் மண்ணையும் அழிக்கும் என் கழுத்தில் அது இருப்பதால் எனக்கு எத்துன்பமும் உண்டாகாது", என்றார்.

நாயனார் பெருமானை நோக்கி, " அது விஷம்தானே இன்றில்லாவிட்டால் நாளை உட்செல்லாது என்பதில் என்ன நிச்சயம்? ஆதலால் அதனை நீங்கள் உமிழ்ந்தால் தான் என் உள்ளம் சமாதானமடையும் என்றார். அவருடைய அன்பிற்கு மகிழ்ந்த சிவபெருமான் "அன்பனே! அஞ்சாதே உனக்கு நம்பிக்கையில்லாவிட்டால் என் முன்னால் அமர்ந்து அது உள்ளே போகாமல் பார்த்துக் கொண்டிருப்பாய்", என்றார்.

அதன்படியே அன்று முதல் கயிலாயத்தில் பரமசிவன் பக்கத்திலிருந்து கொண்டு அவருடைய நீலகண்டத்தையே பசுபதி நாயனார் பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்பர்.

இவ்வாறு அரும்பித் ததும்பி ஆனந்தமாகி அறிவழிந்து பக்தி செலுத்துவது ஒரு நிலை. இந்நிலையிலுள்ளோர் புறவுலகை மறந்தவர்கள். ஒளி நிறைந்த தெய்வீகக் காட்சியிலேயே திளைப்பவர்கள். இந்நிலையை எய்தியதால் தான் அபிராமி பட்டர் அம்பிகையின் தெய்வ ஒளியில் ஒன்றி மன்னனி டத்தில் அமாவாசையைப் பௌர்ணமி என்றார். அவர் உரைத்ததை மெய்பிக்கவே அம்பிகையும் அமாவாசையில் தன் காதுத்தோடினால் நிலவினை தோன்றச்செய்தாள்.

இந்நிலை எய்தியோர் காதில் கேட்கும் செய்திகளில் அப்படியே மனம் ஒன்றி விடுகின்றனர். இவர்கள் புராணங்களைப் படிக்கவோ கேட்கவோ செய்தால் அந்த காலத்திற்கே சென்று தம் மனத்தால் அந்த இடத்திலேயே சஞ்சரிக்கின்றனர்.

உதாரணமாக இராமாயணம் என்றோ நடந்த கதைதான் என்றாலும் அதனை உணர்ச்சிப் பூர்வமாகக் கேட்ட குலசேகர ஆழ்வார் உடனே சேனையைத் திரட்டிக் கொண்டு ராமனுக்குத் துணையாகச் செல்லமுயன்றார். அவரை புற உலக நடை முறைக்குக் கொண்டு வருவதற்குள் பெரும்பாடாகி விட்டது.

அதே போலத்தான் அருகில் இருந்தவர் களுக்கு என்றோ வரலாற்றுக்கு முன்காலத்தில் பாற்கடல் கடைந்ததும் அதிலுண்டான விஷத்தைச் சிவபெருமான் குடித்ததுமாகும். ஆனால் பக்திப் பரவச நிலையில் இருந்த பசுபதி நாயனாருக்கு அக்கதை நிகழ்காலத்தில் நடப்பதாகவே தோன்றுகிறது. அதனால் மனம் மயங்கி உயிர் துறக்கச் சித்தமாகினார். சிவபெருமானே அவருக்கு காட்சி கொடுத்து அவரைத்தேற்ற வேண்டியதாகி விட்டது. இத்தகைய பக்தி வாய்ப்பது அபூர்வமே யாகும்.

இத்தகைய பக்தியில் திளைத்தவளே ஆண்டாள். அவள் தன்னை கோபிகையாகவும், வில்லிபுத்தூரையே ஆயர்பாடியாகவும், கண்ண னையே காதலனாகவும் கருதினாள். அந்தப் பிரேமையே அவளுடைய திருவாக்கில் நாச்சியார் திருமொழியாக மலர்ந்தது. இத்தகைய பக்தியில் திளைத்த அடியவர்களின் தெய்வீக மனநிலையை வார்த்தைகளால் எழுதமுடியாது.

பிரதோஷ நடன ஓவியம்

கும்பகோணத்தை அடுத்த திருவலஞ்சுழி (வெள்ளைப்பிள்ளையார் -கபஸ்தீஸ்வரர்) ஆலயத்தில் பிரதோஷ நடனத்தை விளக்கும் தொன்மைக்கால் ஓவியம் ஒன்று விதானத்தில் உள்ளது. இதில் விஷமருந்தியபெருமான் சந்தியாதாண்டவத்தை ஆடுகின்றார். தேவர்களும் கணங்களும் பலவகை யான வாத்தியங்களை இசைக்கின்றனர். வாசுகி என்ற பாம்பு பெருமா னுக்குப் பிரபா மண்டலம் போல விளங்குகின்றது. பெருமான் நடனமாடும்போது அவர் திருவடியின் கீழ் இருக்கும் முயலகன் அச்சத்தால் ஓடி தனியாக நின்று அவருடைய ஆட்டத்தை கண்டு களிக்கிறான். அம்பிகையும் தேவர்களும் சிவ் பெருமானின் ஆட்டத்தை பார்த்து வியந்து நிற்கின்றனர். இத்தகைய ஓவியம் வேறெங்கும் இல்லை என்று கூறுகின்றனர். இந்நாளில் இது மிகவும் சிதைந்து காணப்படுகிறது.

அமிர்த மர்த்தன நாடகம்

தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமுதத்தையும், காமதேனு முதலான அளவற்ற செல்வங்களையும் விளக்கி நாட்டுப்புற கலைஞர்களால் மேடையேற்றி நடிக்கப் பெற்ற நாடகமே அமிர்தமர்த்தன நாடகமாகும். சுமார் 5 மணி நேரம் நடைபெறும் இந்த நாடகத்தில், ஐயப்பன் கதை, மோகினி அவதாரம், ராகு கேது உண்டான கதை போன்ற பலவேறு கிளைக்கதைகளும் இடம்பெற்றுள்ளன. இது ஏட்டுச்சுவடியாகவே உள்ளது.

★ சிவபெருமான் ஆடும் சந்தியா தாண்டவத்தில் அம்பிகை, கைத்தாளம் இட்டுப்பாடுகின்றாள். பிரமன் தாளம் போட, சரஸ்வதி வீணைமீட்ட, நர, நாராயணர்கள் மத்தளம்கொட்ட, இந்திரன் புல்லாங்குழல் வாசிக்க லட்சுமி கஞ்சிரா தட்ட, கந்தவர்கள் ஏழுகோடி இசைக்கருவிகளை முழக்குகின்றனர். இத்தகைய பிரதோஷ நடன ஓவியங்களை வடநாட்டுக் கோயில்களிலும் காணலாம்.

138-ம் பக்க தொடர்ச்சி

அமைந்துள்ள (சக்தி நந்தி அல்லது விஷ்ணு நந்தியை பிரதான நந்தியாக எண்ணி வலம் செய்யவேண்டும்.

- சோம சூத்திரப் பிரதட்சணம் சிவபெருமானுக்கு மட்டுமே உரியது. இந்த வலம் செய்யும்போது அம்பிகை சந்நிதி உள்ளே அமையுமானால் அதையும் சேர்த்து வலம் வரலாம். அப்படி இல்லாவிட்டால் சிவசந்நிதியை மட்டும் வலம் வந்து பிறகு வழக்கம்போல எல்லா சந்நிதிகளையும் மொத்தமாக வலம் வரலாம்.
- மேற்குறித்த பாடலில் இடதுபுறம் சென்று சண்டிசரை வணங்கிவிட்டு திரும்பவேண்டும் என்று கூறுகின்றது. சண்டிசரை வணங்குவதுடன் கோமுகியையும் வணங்கவேண்டியது முறையாகும்.

சோமசூக்தப் பிரதட்சணம்

சிவபூஜா விதி நூல்களில் பிரதோஷ நாளில் சிவாலயத்தை வலம் வேண்டிய முறைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பிரதோஷநாளில் வலம் வரும் முறையைச் "சோம சூத்திர பிரதட்சணம்" என அழைக்கின்றோம். ஆலகால விஷத்தால் தாக்குண்ட தேவர்கள் இடமும் வலமுமாக திசைபுரியாது அஞ்சி ஓடிய நிகழ்ச்சியை நினைவு கூறும் வகையில் இது அமைகிறது. இதைக் குறிக்கும் கடம்பவனப் புராணப்பாடல் வருமாறு:-

தரிசித்துத் திடவிடையைச் சென்றிடபஞ்சண் டேசன்
திருவடியைக் தெரிசித்து மீண்டு திடவிடையைத்
தெரிசித்துச் சென்றுவலஞ் சோமதிசை சேர்ந்து
மீண்டிடபந் தெரிசித்துத் திகழ்சண்ட னடியைத்
தெரிசித்துப் பராசக்தி யெனும் சோமஞ் சேர்ந்து
மீண்டுதிறற் சண்டனடி தெரிசித்து விடையைத்
தெரிசித்துச் சிவலிங்கச் தெரிசித்துப் பணிக
விதுசோம சூத்திரமொன்று அனந்தபலஞ் செயுமே.

இப்பாடலின் பொருள்:-

நந்தி தேவரைத்தரிசனம் செய்து, அங்கு இருந்து இடமாகச் சென்று சண்டீஸ்வரரைத் தரிசனம் செய்து, சென்ற வழியே திரும்பிவந்து நந்தி தேவரை மீண்டும் தரிசனம் செய்து, அங்கு நின்றும் வலமாகச் சென்று பராசக்தியாய் விளங்கும் கோமுகி எனப்படும். சிவபெருமானின் அபிஷேக நீர்வரும் துவார வழியைத் தரிசனம் செய்து, சென்ற வழியே திரும்பி வந்து நந்தி தேவரை மீண்டும் தரிசனம் செய்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசனம் செய்து, அங்கு நின்றும் சென்ற வழியே திரும்பிவந்து நந்தி தேவரை தரிசனம் செய்யாது வலமாகச் சென்று, பராசக்தியாகிய கோமுகியைத் தரிசித்து, மீண்டும் வந்தவழியே திரும்பிவந்து நந்திதேவரை தரிசியாது இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசனம் செய்து, சென்ற வழியே திரும்பி வந்து நந்திதேவரை தரிசனம் செய்து., பின்னரே சிவலிங்கத்தைத் தரிசித்தல் வேண்டும். இதுவே சோமசூத்திரப் பிரதட்சிணம் செய்தால் அது அனந்த கோடி பலனைத்தரும் என்று கடம்பவன புராணம் கூறுகிறது.

சோமசூக்திரப் பிரதட்சணத்திற்குப் பிறகு தன்னைத்தானே ஒரு முறை சுற்றிக்கொள்ளல் வேண்டும். இது ஆத்மப் பிரதட்சணம் எனப்படும். இவ்வாறு சோமசூக்தப் பிரதட்சணத்திற்குப் பிறகு ஆத்ம பிரதட்சணம் செய்வது ஆத்மலிங்கத்திற்கு சோமசூத்திரப்பிரதட்சணம் செய்ததாகும். இப் பிரதட்சணம் பிரதோஷ காலத்தில் மட்டுமே செய்தல் வேண்டும். மற்ற காலங்களில் வலமாகவே சுற்றிவரல் வேண்டும். பிரதோஷ காலத்தில் கோமுகத்தைத் தாண்டலாகாது. எனவே இச்சோமசூத்திரப் பிரதட்சணம் அப்பொழுது சிறந்த பலனைக் கொடுக்கின்றது. இச்சோம சூத்திரப் பிரதட்சணம் சிவபெருமான் ஒருவருக்கே உரியதாகும்.


சித்தர்கள் இவ்வாறு இடமும் வலமுமாக சுற்றுதலை ஞானவழியில் தனிச்சிறப்பாக உபதேசிக்கின்றனர். அவர்கள் அந்திப் பொழுதில் பிராணன், அபானன் என்ற உயிர் மூச்சுக் காற்றை மாற்றி மாற்றி சுழற்றி ஞானமென்னும் கடலைக் கடைந்து சிவஞான அமுதத்தைப் பெறுதலே பிரதோஷகாலமென்பர்.

பிரதோஷகாலங்களில் வலம் வரும்போது கவனிக்க வேண்டியவை

- பிரதோஷ காலங்களில் கோமுகம் அருட்சக்தியின் வடிவாக விளங்குவதால் சிவனருளைப் பெற கோமுகங்களை பக்தியுடன் வணங்கவேண்டும்.
- ஒரே பிராகாரம் கொண்ட சிறிய ஆலயங்களில் பிரதான நந்தி லிங்கத்தின் அருகிலேயே இருக்கும். ஆதலால் மேற்குறித்த வகையில் வலம் செய்வது எளிதாகும். பெரிய ஆலயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பிராகாரங்கள் இருக்கும். பிரதான நந்தி கொடிமரம் பலிபீடம் ஆகியன சற்று தள்ளியிருக்கும். ஆகையால் உட்பிராகாரத்தில்

தொடச்சி முன் பக்கம் காண்க.

சோமசூக்தப் பிரதட்சணத்தை விளக்கும் படம்



→→→ இடது பக்கமாகச் சுற்றுதலைக் குறிப்பது.

➢➢➢ வலது பக்கமாகச் சுற்றுதலைக் குறிப்பது.

Ⓐ அ நந்தியின் கொம்புகளுக்கிடையே சிவலிங்கத்தை கண்டு வணங்கவேண்டிய இடம்.

ஆ கோமுகியையும் தரிசித்து வணங்க வேண்டிய இடம்.

இ சண்டீசப்பெருமானை வணங்கி கோமுகியைத் தரிசிக்க வேண்டிய இடம்.

நீலகண்டத் திருத்தலங்கள்

சிவபெருமான் நீலகண்டராக எழுந்தருளி அருள்பாலிக்கும் தலங்கள் பல நூறு உள்ளன. இவற்றைத் தரிசிப்பதும் வலம் வந்து வணங்குவதும் புண்ணியமாகும். இத்தலங்கள் நீலகண்டத்தலங்கள் என்று போற்றப்படுகின்றன. இவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.

நீலக்குடி நீலகண்டேசுவரர்

இத்திருத்தலம் இப்போது தென்னலங்குடி என வழங்குகிறது. பாற்கடலில் பிறந்த விஷமானது சிவபெருமானின் கழுத்தை நீலநிறமாக்கிய பின் அவர் நீலகண்டர் எனும் பெயரில் எழுந்தருளிய திருத்தலம் இதுவேயாகும்.

இத்தலத்திற்கு ஒரு சிறப்பு உண்டு. இங்கு சுவாமி மீது எண்ணை அபிஷேகம் செய்தால் அவ்வளவு எண்ணையும் லிங்கத்தில் ஊறி உட்சென்று விடுகின்றது.

பொதுவாக விஷம் தாக்கியவர்களுக்கு நல்லெண்ணெய் பண்டம் அளிக்கக்கூடாது என்பர். எண்ணை விஷ வேகத்தை அதிகப்படுத்துவ தாகும். ஆனால் சிவபெருமானோ விசித்திரமான வராயிற்றே. அதனால் உலக இயல்புக்கு மாறாக விஷம் கொண்ட மேனியிலேயே எண்ணை யையும் ஏற்றுக்கொண்டு மக்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

மண்ணிப்படிக்கரை நீலகண்டர்

இந்நாளில் இலுப்பைக்குடி என வழங்கும் இத்தலத்தினை வைத்தீசுவரன் கோயில்-திருபனந்தாள் சாலையில் உள்ள இளந்தோப்பு வழியாக பாப்பாக்குடியை அடைந்து அங்கிருந்து நடந்து சென்று அடையலாம்.

பஞ்ச பாண்டவர்கள் இந்த ஆலயத்தைப் பௌர்ணமிநாளில் வழிபட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. இங்கு தருமன் திரௌபதி தேவியோடு மூலவரான நீலகண்டேச்சுவரரை வழிபட்டார். அவருடைய தம்பியரான வீமன் மதகீசுவரரையும், அருச்சுனன் படிக்கரை நாதரையும், நகுலன் பரமேசு வரரையும், சகாதேவன் முத்தீசுவரரையும் வழிபட்ட திருத்தலம். இங்கு ஐந்து லிங்கங்கள் உள்ளன.

விஷமருந்திய பரமசிவன் கழுத்தைத் தொட்டு அவ்விஷம் உள்ளே செல்லாமல் அம்பிகை நிறுத்திய தலம் இதுவென்பர். அவர் உண்ட நஞ்சை அமுதமாக்கியவள் என்பதால் இங்குள்ள அம்பிகை அமிர்தகரவல்லி என்று அழைக்கப்படுகின்றாள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இப்பெருமானை "நீலமிடற்று எம்பிரான்" என்று பாடி மகிழ்கின்றார். இவ்வூர்க் கல்வெட்டுகள் இறைவனை ஸ்ரீநீலகண்டம் உடையார் என்றே குறிக்கின்றன.

கொங்குநாட்டு நஞ்சுண்டேச்சரம்

கோவைமாவட்டத்தில் கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் வழியில் உள்ள காரமடையில் கலைச்சிறப்பு வாய்ந்த நஞ்சுண்டேசுவரர் கோயில் உள்ளது. இது மதுரை சுந்தரேசுவரர் கோவில் கருவறையைப் போல எட்டு யானைகளால் தாங்கப் பெற்றதும் ஒரே பெருங் கல்லாலான அடித்தளத்தையும் கொண்டதாகும்.

கார் போன்று கருத்த விடமானது மேகம் போல பரவி வந்து பின் அடங்கிச் சிவபெருமானின் நெஞ்சில் இடம் கொண்டதால் (கார்+அம்+அடைந்த+பதி) இப்பதி "காரமடைப்பதி" என பெயர் பெற்றது என்பர். பெருமான் நஞ்சு உண்டார் எனும் பொருள்பட நஞ்சுண்டேசுவரர் என்று அழைக்கப் படுகின்றார் என்பர்.

நாஞ்சில் நாட்டு நீலகண்டசுவாமி

நாஞ்சில் நாட்டின் முக்கிய நகரங்களுள் ஒன்றான பத்மநாபபுரம் என வழங்கும் ஊரில் இக்கோயில் உள்ளது. இது பரசுராமரால் உண்டாக்கப் பட்டதென்பர். அந்நாளில் கல்குளம் என வழங்கப்பெற்ற இவ்வூரின் பழைய கல்வெட்டுகள் இறைவனை கல்குளம் மகாதேவர் என்றே அழைக்கின்றன.



"புலீச்சுவரர்"

தென்னகத்தில் ஆங்காங்கு புலி அல்லது புலிவடிவம் கொண்ட ஆன்றோர்கள் சிவ பெருமானை வழிபட்டுப் பேறு பெற்ற திருத்தலங்கள் புலீச்சரங்கள் என்று பெயர் பெற்றுள்ளன. இவற்றை வடமொழியில் ''வியாக்ரபுரங்கள்'' என்று அழைக்கின்றனர்.

தேவாரப்பாடல் பெற்ற திருமுறைத் தலங்களில் ஐந்து தலங்கள் புலியூர் என்று பெயர் பெற்றுள்ளன. அவை பெரும் பற்றப் புலியூர், ஓமமாம் புலியூர், எருக்கத்தம் புலியூர், திருப்பாதிரி புலியூர், பெரும்புலியூர் என்பனவாகும்.

இவற்றைத் தவிர வைப்புத்தலங்களாகவும் பல புலீச்சரங்கள் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது திருப்புலிவனம் ஆகும். மேலும் புலியைத் தமது இலச்சினையாகக் கொண்ட சோழ மன்னர்களால் சிறப்புடன் கொண்டாடப்பட்ட பல புலீச்சரங்களும் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது சென்னையில் உள்ள வடபழனி புலியூர், செங்கை மாவட்ட புலிபுரக்கோயில், முதலியனவாகும் .

இத்தலங்கள் யாவற்றிலும் ஆன்ம நிலையில் உயர்ந்த புலி அல்லது புலிவடிவம் கொண்ட ஆன்றோர்கள் வழிபாடு செய்து போற்றிப் பேறு பெற்றதை செவிவழிச் செய்திகளாலும் புராணங் களாலும் அறிய முடிகின்றது.

இனி நாம் இந்தமலரில், திருமுறைத்தலங்கள், வைப்புத்தலங்கள், புராணத்தலங்கள், செவிவழிச் செய்திகள் ஆகிய அமைப்புகளுக்குட்பட்ட புலி வழிபட்ட புலீச்சரங்களையும் அங்கு எழுந் தருளியுள்ள புலீச்சரப்பெருமானையும் அத்திருத் தலங்களின் சிறப்புகளையும் காணலாம்.


திருபுலிவனநாதர்

பண்டொரு காலந்தன்னில் பதஞ்சலிக்கு அருளிச் செய்தான்
அண்டர்கோன் வழிபட்டு ஏத்த அனுக்கிரகங்கள் செய்தான்
முண்டகன் திருமால் போற்ற முத்தி மோட்சம் கொடுத்தான்
திண்திறல் புலிபூசித்த திருப்புலிவனத்துள்ளானே. - சிவனார் பாமாலை

திருப்புலிவனம் தொண்டை மண்டலத்தில் காஞ்சீபுரம் - உத்திரமேரூர் சாலையில், காஞ்சீபுரத்திலிருந்து 25 கி.மீ தொலைவிலும் உத்திரமேரூரில் இருந்து 5 கி.மீ தொலைவிலும் உள்ளதாகும். நெடுஞ்சாலையோரத்திலேயே திருக்கோயில் அமைந்துள்ளது.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் இவ்வூரைப் புலிவலம் என்றே குறிக்கின்றன. இவ்வட்டாரத்தில் திருவலம், வலிவலம் என்ற ஊர்கள் அமைந்திருப்பது போலவே, இது புலிவலம் எனப்பட்டது என்பர். இந்நாளில் இது திருப்புலிவனம் என்று அழைக்கப்படுகின்றது.

இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனின் திருப்பெயர் திருப்புலிவலமுடையார், ஆளுடையார் திருப்புலிவலமுடையார். திருப்புலிவலமுடையநாயனார் என்று பலவாறாகக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன.



சோமாஸ்கந்தர்-திருப்புலிவனம்-செங்கை மாவட்டம்

இந்தத் திருப்பெயர் இந்நாளில் வட மொழியில் மொழி பெயர்க்கப்பெற்று. வியாக்ர புரீச்சுவரர் என வழங்குகின்றது.

இப்பெயர் உண்டானதற்கான புராணச்செய்தி ஒன்று வழங்குகிறது அதனை இப்போது காணலாம் :-

முன்னொரு காலத்தில் ஒரு முனிவர் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் இயற்றினார். அவருடைய தவம் நிறைவடையும் நேரத்தில் ஏற்பட்ட ஒரு சிறு பிழையினால் அவர் அடுத்த பிறவியில் புலியாகப் பிறக்க வேண்டியதாயிற்று. அதன் படியே அவர் புலியாகப் பிறந்து காஞ்சீபுரத்திற்குத் தெற்கே அமைந்திருந்த ஒரு கானகத்தில் வசித்து வந்தார். அவர் புலியாகப் பிறந்திருந்த போதிலும் பூர்வ ஜென்ம வாசனையால் அங்கு காட்டின் உள்ளே செல்லும் வழியோரத்தில் இருந்த ஒரு சிவலிங்கமூர்த்தியைக் கண்டு வலம் வந்து வழிப்பட்டுவந்தார்.

இந்தப்புலி உலக இயல்புக்கு மாறாக கொல்லாவிரதத்தை ஏற்றுச் சிவபெருமானுக்கு உரிய அருகம்புல்லையே உண்டு வாழ்ந்து வந்தது. இப்புலி தினந்தோறும் காலையில் சிவலிங்கத்தை வழிபட்ட பின்னர் தன்னைக் கண்டு பிறர் அஞ்சுவார்கள் என்பதற்காக காட்டிற்குள் சென்று தியானத்தில் மூழ்கி விடும்.

இப்படியிருக்கையில் ஒருநாள் அப்புலி காலை நேரத்தில் நெடும் தவத்தில் ஈடுபட்டது. இதனால் அதற்கு நேரம் போனதே தெரியவில்லை. பின்னர் அது சிவபூசைக்கு நேரமாகிவிட்டதை உணர்ந்து பூசை செய்ய விரைந்து ஓடோடி வந்தது.

ஆனால் அதிகாலையில் அக்காட்டின் வழியே சென்ற ஒரு வணிகன் அந்தச் சிவலிங்க மூர்த்தியைக் கண்டதும் மகிழ்ந்து பூசை செய்து மலர் சூட்டிவிட்டுச் சென்றிருந்தான். விரைந்து வந்த புலி

யாரோ தனக்கு முன்னமேயே அப்பெருமானுக்குப் பூஜை செய்து விட்டுச் சென்றதை அறிந்தது.

தினமும் நாம் தானே இவருக்கு முதலில் பூசை செய்வோம். ஆனால் இன்று இந்தச் சிவபெருமான் யாரோ ஒருவர் செய்த பூசையை முதலில் ஏற்றுக் கொண்டாரே? என்று கோபம் கொண்டது.

அன்பில் பிறந்த கோபத்தால் சிவலிங் கத்திற்கு ஓர் அறையும் விட்டது. சிவபெருமான் அதன் அன்பின் பெருக்கை உணர்ந்து பார்வதியின் வளைத்தழும்பையும் முலைத்தழும்பையும் ஏற்றது போலவே அதன் காலடிச் சுவடுகளையும் ஏற்றார்.

பின்னர் தன் தவற்றுக்கு இரங்கிய புலி கண்ணீர் விட்டு அழுது சிவலிங்கத்தைக் கட்டித்தழுவி பிராண்டி வருந்தியது. அப்பிராண்டல் சுவடுகளையும் பெருமான் கனிவுடன் ஏற்றார்.

பின்னர் தேவர்கள் புடைசூழ விடையின் மீது தோன்றி அப்புலிக்கு அதன் பழம் பிறப்பை உணர்த்தி வீடுபேற்றையும் அருளினார்.

புலியால் வலம் செய்யப்பட்ட இடமாதலின் இவ்விடம் அன்று முதல் புலிவலம் என்று பெயர் பெறுவதாயிற்று. சிவபெருமானும் புலீச்சரர் என்று அழைக்கப்பெற்றார்.

சிவலிங்கப்பெருமானின் மேனியில் புலியின் நகக்கீரலையும் பாதச் சுவடுகளையும் இன்றும் காண்கிறோம்.

பிற்காலத்தில் இவ்விடத்தின் சிறப்பை உணர்ந்த மன்னர்களும், மக்களும் இங்கு கோயில் அமைத்து சிவகாம முறைப்படி பூசைகள் செய்து வரலாயினர். இதுவே இந்நாளைய திருப்புலிவனம் எனும் திருப்புலிவலத்தின் தலவரலாறாகும்.

இந்தச் சிவலிங்கத்தின் திருமேனியில் புலியின் கால் சுவடுகள் மட்டுமல்லாது தலை முடியின் உச்சியில் சிறு குடுமியும் விளங்குகின்றது. அது உண்டானதற்கான காரணத்தை மேலுமோர் புராணக்கதை விளக்குகின்றது. அதை இனிக் காணலாம்.

ஒருகாலத்தில் இந்தப் பகுதியை ஆண்டு வந்த ஒரு மன்னன் இப்பெருமானிடம் அளவற்ற



"சிவபெருமானை வழிபடும் புலி"

பக்தியுடையவனாக இருந்தான். இப்பெருமானுக்கு மாலைகள் சூட்டப் பல அறங்களையும் நியமித்திருந்தான்.

அந்நாளில் இக்கோயிலில் பணிபுரிந்து வந்த அர்ச்சகர் பெரும்பக்தராக விளங்கிய போதிலும் ஒரு தாசியின் பால் மனம் பற்று கொண்டிருந்தார். அவர் தினமும் இறைவனுக்கு சூட்டிய மாலைகளை பூஜை முடிந்ததும் களைந்து அவளுக்குக் கொடுத்து விடுவது அவருடைய வழக்கம். அவளுக்கு அதனைச் சூடி மகிழ்வதில் தனிப் பேரின்பம்.

இப்படியிருக்கையில் ஒருநாள் அரசன் எதிர் பாராத விதமாகக் கோயிலுக்கு வந்து தான் ஏற்படுத்திய பூமாலைக் கட்டளைகள் சரியாக இயங்குகிறதா? என்று சோதிக்க முற்பட்டான்.

அன்று சோதனையாக அருச்சகர் பூசைகளை விரைவாக முடித்துக் கொண்டு அன்றைய மலர் மாலைகளை வழக்கத்திற்கு மாறாக சீக்கிரமே தன் அன்பிற்குரியவளுக்கு அனுப்பிவிட்டார். அவளும் அவற்றைச் சூடிக் கண்ணாடியில் அழகு பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள்.


ஆனந்தக் கூத்தர்-திருப்புலிவனம்-செங்கை மாவட்டம்

காவலர்களின் மூலம் அரசனின் வரவை அறிந்த அருச்சகர் ஓடோடிச் சென்று அவள் சூடியிருந்த மாலைகளைத் திரும்ப பெற்று வந்து சிவலிங்கத்திற்கு அணிவித்து விட்டு ஒன்றுமறியாதது போல் பூசனை செய்து கொண்டிருந்தார்.

கோயிலுக்கு வந்த அரசன் இறைவனுக்கு செய்யப்பட்டிருந்த மாலை அலங்காரத்தைக் கண்டு மகிழ்ந்தான். பின்னர் விசேடபூசனைகளை நிகழ்த்திப் பிரசாதமாக இறைவனுக்கு அணிவித்த அம்மலர் மாலைகளைப் பெற்றுக் கொண்டு தன் அரண்மனையைச் சேர்ந்தான்.

அங்கு பார்க்கையில் அம்மலர் மாலைகளில் நீண்ட முடிகள் இருந்தன. இறைவன் சூடிய மாலையில் எப்படி இவ்வாறு நீண்ட முடிகள் வந்தன. யாரோ ஒரு பெண் சூடியதை மீண்டும் இறைவனுக்குச் சூட்டியிருக்கின்றார்கள். நாளை இது பற்றி விசாரித்து குற்றம் செய்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவேன்" என்று கூறி தமது அலுவல்களை முடித்துக் கொண்டு உறங்கச் சென்றான்.

கோயிலுக்கு அரசன் வந்து திரும்பிச் சென்ற பின்னர் அருச்சகர் மிகவும் வருந்தினார். தன் அன்பிற்குரியவள் சூடிக்களைந்ததை மீண்டும் சிவமூர்த்திக்கு அணிவித்து சிவாபராதம் செய்து விட்டோமே என்று வருந்தினார்.

அப்போது அரசன் அம்மாலைகளில் பெண்ணின் தலைமுடி இருப்பது கண்டு கோபித்ததையும் அறிந்து மிகவும் கலங்கினார்..

சிவபிரானைச் சரணமென்று அழுது தொழுதார். அயர்ச்சியால் அப்படியே மூலத்தானத்திலேயே உறங்கியும் போனார். அவர் கனவில் தோன்றிய சிவபெருமான், "அன்பனே! அரசன் கேட்டால் அது நமது சடைமுடி என்று கூறுக, நீ அஞ்சேல், என்று அபயமொழிந்தான்".. காலையில் விழித்தெழுந்த அருச்சகர் முன்னிலும் அன்பனாகி கவலை நீங்கி சிவபூசையைச் செய்து கொண்டிருந்தார்.

அரசன் காலையிலேயே கோயிலுக்கு வந்து அருச்சகரிடம், "ஐயனே! நேற்று நீயளித்த திருமாலையில் பெண்ணுக்குரிய நீண்ட முடிகளைக் கண்டேன் அதில் அவை எப்படிவந்தன," என்று வினவினான்.

இறைவன் தனது கனவில் தோன்றி அருளிய அபயமொழியால் உறுதியுற்றிருந்த அருச்சகர் மன்னனே இந்தச் சுவாமிக்கு தலையில் முடியுள்ளது அதுவே மாலையில் வந்தது என்று மொழிந்தார். அவருடைய பதிலால் திருப்தியடையாத அரசன் சிவபெருமானுடைய திருமுடியைத் தமக்கு காட்டுமாறு கூறினான். இறைவனை தியானித்தவாறே அருச்சகர் சுவாமியின் மாலைகளைக் களைய சிவலிங்கத்தின் உச்சியில் அழகிய குடுமியை அரசன் கண்டான் அந்த நிகழ்ச்சியை அவனிக்கு உணர்த்த அது அப்படியே கல்லாக இருக்கும்படி இறைவன் செய்தார். அக்குடுமியையே இன்றும் நாம் காண்கிறோம் என்பர். இதைக் கண்டு அஞ்சிய அரசன் அருச்சகனைத் தொழுது தன் அரண்மனைக்குச் சென்றான். இந்த நிகழ்ச்சியை நினைவூட்டும் வகையில் பெருமான் சிறுகுடுமியுடன் விளங்குகிறார் என்பர்.

இவ்வாறு புலியின் அடித்தழும்பும், திருமுடியும் கொண்ட சிவபெருமான் கொலு வீற்றிருக்கும் இத்திருக்கோயில் சோழர்கள் காலத்தில்

மிகுந்த சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால் இப்போது கால வெள்ளத்தால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் மிகவும் அழிந்த நிலையில் உள்ளது.

தூங்கானை மாட அமைப்பிலான இத்திருக் கோயில் இன்று மிகவும் அழிபாடுகளுடன் காணப் படுவது வருத்தத்தக்கதாகும்.

அப்பரடிகள் க்ஷேத்திரக் கோவையிலும், திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்திலும் இத் திருத்தலத்தை குறிப்பிடுகின்றார்.

பட்டினத்தடிகள் தம்முடைய திரு "ஏகம்ப முடையார் திருவந்தாதி"யில் 63வது பாடலில் இத்தலத்தை குறித்துள்ளதையும் காணலாம்.

சிவஞான வள்ளலார் என்பவர் தாம் அருளிய "வள்ளலார் சாத்திரம்" எனும் நூலில் 66 பாடல்களில் இப்பெருமானைப் போற்றியுள்ளார். இவற்றைத் தொகுத்து "திருப்புலிவனம் சிவனார் பாமாலை" எனும் பெயரில் திரு. தி.க. சாமிநாதன் என்பார் உரையெழுதி தாமே வெளியிட்டுள்ளார்.

காலச் சூழல் உண்டாக்கிய

புலீச்சரங்கள்

புலி வடிவம் கொண்டவர்களால் சிவவழிபாடு செய்த இடங்களே புலியூர் ஆனதென்று புராண வழக்கமாக இருந்தாலும் சில சமயங்களில் காலப்போக்கில் ஏற்பட்ட ஊர்கள், ஆலயங்கள் ஆகியவற்றின் பெயர்களில் ஏற்பட்ட சிதைவின் காரணமாகவும் சில புலீச்சரங்கள் தோன்றியுள்ளன.

எடுத்துக்காட்டாக, குடியேற்றத்தின் வேலூர் அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள ஒரு பகுதியாக விளங்கும் நல்லூர்பேட்டையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் மூலப் பெயர் கரிப்பொதீசுவரர் என்பதாகும். அந்நாளில் இப்பெருமான் இவ்வழியில் செல்லும் மிளகு வாணிகர்களுக்குக் காவலராகவும் வழித்துணை நாயகராகவும் போற்றப்பட்டதால் இவரை இப்பெயரிட்டு வழங்கினார் பழந்தமிழில் "கரிப்பொதி" என்பது மிளகு மூட்டைகளைக் குறிக்கும் சொல்லாகும்.

காலப்போக்கில் கரிப் பொதீசுவரர் என்பது மக்கள் வழக்கில் கருப்புலீச்சுவரர் என்றாகிவிட்டது. இப்பெயரின் அடிப்படையில் புலியோடு தொடர்புடைய ஒரு புராணம் இயற்றப்பட்டு அதனை விளக்க புராண ஐத்கச் சிற்றாலயமும் கட்டப்பட்டுள்ளது. (இப்பெருமானின் திருவருட் சிறப்புகள் வேறு மலரில் விளக்கப்படும்) அதனை யொட்டி இப்போது பெருமானுக்கு வடமொழியில் பாலசார்த்துயேச்சுவரர் (பால-கருப்பு, சார்த்தூலம் - புலி) என்ற பெயரும் வழங்குகின்றது.

சிலசமயம் புளியமரத்தின்கீழ் அமைந்த சிவலிங்கம் திருப்புளீசுவரர் என்றழைக்கப்பட்டு காலவெள்ளப் பெயர் மாற்றத்தினால் புலீச்சுவரர் எனவும் ஆகியுள்ளது.

சிலசமயம் வேங்கை மரத்தடியில் அமைந்த சிவலிங்கம் வேங்கீசர் என வழங்கி வேங்கை புலீச்சுவராகியுள்ளது.

இவ்வாறே பல புலீச்சரங்கள் பரவலாக தமிழகம் முழுவதும் உள்ளதை நாட்டுப்புறக் கதைகளால் அறியமுடிகிறது.



திருப்புலிவனம் ஆலய ராஜகோபுரம்

அன்பினால் வழிபட்ட புலியைக் கண்ட நாம் இப்போது ஆணவத்தால் உருவாகி சிவபெருமானால் அழிக்கப் பெற்று ஆடையாக உடுத்திக் கொள்ளப்பட்ட புலியைக் காணலாம்.

புலியை வீட்டிய புனிதர்

(சார்த்தூல ஹரர்)

அனைத்து தேவர்களும் பட்டுப் பீதாம்பரங்களை அணிந்து செல்வநிலையில் பிரகாசிக்கிறார்கள். திருமால் பீதாம்பரத்தை அணிந்திருப்பதால் அவருக்குப் பீதாம்பரன், அல்லது பீதாம்பரதாரி என்பது பெயராயிற்று. பார்வதிதேவி செம்பட்டு தரித்துள்ளாள், சரஸ்வதி வெண் பட்டாடையில் பிரகாசிக்கின்றாள்.

ஆனால் சிவபெருமானோ வரிப்புலியின் தோலை ஆடையாகக் கொண்டுள்ளார். இந்த ஆடையினைத் திருமுறை ஆசிரியர்களும் பிறரும் பலவாறு சிறப்பித்துப் போற்றியுள்ளனர். சிவமூர்த்தி வடிவங்களில் இந்த புலித்தோலாடை சிறப்புடன் குறிக்கப் பட்டுள்ளது. இந்த ஆடைவீரத்தின் சின்னமாக விளங்குகின்றது என்பர்.

பெருமான் புலித்தோலாடையை அணிந் துள்ளதற்கான காரணத்தை விளக்கும் இரண்டு மூன்று கதைகள் வழக்கில் உள்ளன. அவற்றிலொன்று தாருக வனத்து முனிவர்கள் இவரைக் கொல்ல அனுப்பிய புலியைக் கொன்று அதன் தோலையுரித்து அணிந்து கொண்டதைக் குறிப்பதாகும். இக்கதையே வழக்கில் உள்ளவற்றில் சிறப்பானதாகும். இதுவே சிவபுராணம் சிவபராக்கிரமம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளது.

அக்கதையாவது:-

ஒரு சமயம் தாருகவனத்து முனிவர்கள் வேள்வியால் உண்டாகும் தவ ஆற்றலுக்கு மேலான சிறந்த பொருள் இல்லை என்று கருதி சிவபெருமானை இகழ்ந்தனர். அவருடைய மனைவியரும் உலகில் தாங்கள் மட்டுமே கற்பிற்சிறந்தவர் என்று வீண்கர்வம் கொண்டனர். அவர்களை கர்வபங்கம் செய்யும் பொருட்டு சிவபெருமான் பிட்சாடனராகவும் திருமால் மோகினியாகவும் திருவுருக் கொண்டு தாருகாவனம் சென்றனர்.



மோகினியின் அழகில் மயங்கிய முனிவர்கள் தங்கள் தவத்தையும் வேள்விகளையும் கைவிட்டு அவள்பின்னேயே சென்றனர்.

முனிபத்தினிகளோ சிவபெருமான் பிட்சாடனனாக திகம்பரகோலத்துடன் வந்ததைக் கண்டு அவரழகில் மயங்கி தங்கள் ஆடைகள் நெகிழ்ந்து வீழ்வதும் தெரியாமல் தம் மனதைப் பறிகொடுத்தது அவர் போன வழியே சென்றனர்

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு திருமாலும் சிவ பெருமானும் தங்கள் உண்மை வடிவத்தை வெளிப்படுத்தி முனிவர்களும். முனிபத்தினிகளும்

எவ்வாறு புலனடக்கமின்றியும். காமத்தை வெல்ல முடியாதவர்களாகவும் இருக்கின்றனர் என்பதை விளக்கி மறைந்தனர்.

அந்த முனிவர்கள் சிவபெருமான் தங்களுடைய கீழான நிலையைத் தங்களுக்கு உணர்த்தியதை எண்ணி தங்களை மாற்றிக் கொள்வதற்குப் பதிலாக அவரிடம் கடுங்கோபம் கொண்டனர். அவரை அழிக்க எண்ணி பெரிய அபிசார வேள்வி ஒன்றை செய்தனர். அந்த அக்கினியில் இருந்து பல கொடிய விலங்குகள் தோன்றின அவற்றிலொன்றே இந்த வம்புலியாகும்.

தமது பெரிய வேள்வித் தீயினின்று. இடிமுழங்குவது போல கர்ச்சனை செய்வதும், பெரிய வாள்போன்று வளைந்த கூறிய பற்களையும் கொடுங் கூரான நகங்களையும், வலிய தேர்வடம் போன்ற நீண்ட வாலையும், தீயுமிழும கண்களையும் உடையதாகத் தோன்றிய அப்புலியை அவர்கள் மந்திரித்து சிவபெருமானை அழித்து வருமாறு ஏவினர்.

அந்தப் புலி உடனே புயல் போலச் சீறிச் சினந்து கயிலைமலையை அடைந்து சிவபெருமானை நோக்கி ஆர்ப்பரித்துக் கர்ச்சித்து முறைத்தது. இதனால் உலகமே நடுக்குற்றது.

சிவபெருமான் பாய்ந்து வந்து அப்புலியினை பூனையைப் பற்றுவது போலப்பற்றி அதனை உரித்து அதன் தோலை ஆடையாக உடுத்தி அதன் தலையை இடைமேகலையும் முகப்பாக அமைத்துக் கொண்டார்.

இவ்வாறு புலியை அழித்த பெருமானையே சிவபராக்கிரமம் (சார்த்தூல ஹரர்) புலியை வீட்டிய புனிதன் என்று கூறுகிறது.

இவ நான்கு கரங்கள் கொண்டவராக வில் அம்பு. கத்தி. தாமரைமலர் ஆகியவற்றை ஏந்தி வலியை புலியைக் கொல்லும் பாவனையில் அமைந்துள்ளார்.

(புலிக்குத்திய பெருமான் புலியை வீழ்த்திய புனிதன்) என்று குறிப்பிடுகின்றது.

வேதவேள்வியின் பயனாகத் தோன்றிய புலியை வென்று ஆடையாக அணிந்திருப்பதால் வேதமே அவருக்கு ஆடையாயிற்று என்பர் பௌராணிகர்.

புலித்தோல்

சிவபெருமானுக்கு உரிய ஆடைகளில் தலையானது புலித்தோலாடையாகும். பெருமான் புலித்தோலாடை அணிந்துள்ளதை தமிழ்திருமுறை பலவாறு புகழ்ந்து போற்றுகின்றது. இந்த ஆடை வெற்றியின் சின்னமாகத் திகழ்கிறது. வீரட்டகாசனான சிவபெருமானுக்கு வெற்றியால் விளைந்த இந்த ஆடை பொருத்தமானதேயாகும். எனவே சிற்பக் கலைஞர்கள் சிவவடிவங்களில் புலித்தோல் ஆடையைச் சிறப்புடன் அமைக்கின்றனர். ஓவியர் களும் சிவபெருமானின் வண்ண ஓவியங்களில் இதனை எழிலுறத் தீட்டியுள்ளனர்.

திருமாணிக்குழி எனும் தலத்தில் திரைச் சீலையில் வரையப்பட்டுள்ள பீமருத்திரரின் வடிவத்தில் முன்னாளில் உண்மையான புலித் தோலை ஆடையாக தைத்து வைத்திருந்தனர் என்று கூறுகின்றனர். இந்நாளில் புலித்தோல் கிடைக்க வில்லை என்பதால் ஆலயங்களில் புலிதோலில் கருப்பு நிறத்தில் அமைந்துள்ள வரிகளைப்போல மஞ்சள் துணியில் அச்சிட்ட துணிகளை புலித்தோலாடையாகப் பயன்படுத்துகின்றனர்.

நடராசர் திருமேனிகளில் இத்தகைய புலித்தோல் போன்ற துணியை அணிவிப்பது பொது வழக்காக இருக்கின்றது. ஆலயங்களில் தோலால் ஆன பொருட்களை தொட்டால் தீட்டு என்பர். ஆனால் முரசங்களாக உள்ள எருதின்தோல், ஆசனங்களாகப் பயன்படுத்தப்படும் மான்தோல், சிவபெருமானுக்கு ஆடையாகப் பயன்படுத்தப்படும் புலித்தோல் ஆகியன புனிதப் பொருட்களாகப் போற்றப்படுகின்றன.

சிவயோகிகள் புலித்தோலில் அமர்ந்து தியானம் செய்வதை விரும்புகின்றனர். இப்படி செய்வதால் காமம், களவு, கடுஞ்சினம் ஆகியவற்றை வென்று ஜீவனைச் சிவனாக்கலாம் என்று எண்ணுகின்றனர்.

புலிவடிவம் கொண்ட முனிவர் அன்பினால் வழிபட்ட வரலாற்றையும், தாருகாவனத்து முனிவர்களின் ஆணவத்தால் உருவாக்கி சிவபெருமானுக்கு ஆடையாகிய புலியின் வரலாற்றையும் கண்டோம். இனி பக்தியில் திளைத்து பரமனின் தாண்ட தரிசனம் பெற்ற ஒரு புலியைக் காணலாம்.

சைவ சமய உலகில் புலி என்றதும் நினைவுக்கு வருவது புலிக்கால் முனிவரான இந்த வியாக்ரபாதரே ஆவார். இனி இவர் வரலாற்றைக் காணலாம்.

வியாக்ரபாதர்

(புலிக்கால் முனிவர்)

தென்னிந்தியாவில் உள்ள புலீச்சுவரர் கோயில்கள் யாவற்றிலும் அங்கு வியாக்ரபாத முனிவர் வழிபாடு செய்வதாகவே அவ்வூர்ப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. இந்த வியாக்ரபாத முனிவரைப் பற்றிய செய்திகளை கோயிற்புராணம் என்ற நூல் விரிவாகக் கூறுகின்றது.


ஒரு காலத்தில் மத்தியந்தின முனிவர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு நெடுநாளாகக் குழந்தைப் பேறு இல்லை. அவர் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவங்கள் புரிந்து இறை அருளால் ஒரு மகனைப் பெற்றார். அன்புடன் அவனை வளர்த்துப் பெயரிடுதல், பூணூல் அணிவித்தல் முதலிய சடங்குகளைச் செய்தார். பின்னர் அவனுக்கு பல்வேறு கல்விகளைக் கற்பித்து வேதாகம உபதேசமும், சிவ தீட்சையும் ஸ்ரீ பஞ்சாட்சர உபதேசமும் செய்வித்து சான்றோனாக்கினார்.

ஒரு சமயம் அந்த முனிகுமாரன் தன் தந்தையை நோக்கி, "தந்தையே எனக்கு பெரிய தவங்களைச் செய்யும் முறைகளையும் ஆற்றலையும் அருள வேண்டும்" என்று கேட்டான்.

அம்முனிவர் தன் குமாரனை நோக்கி, "மகனே, தவங்கள் செய்வதால் இந்திரபோகம் முதலான அழியக் கூடிய செல்வங்களை மட்டுமே பெற முடியும் அது சிவகதிக்கும் மோட்சத்திற்கும் வழிவகுக்காது. எனவே அத்தகைய சித்திகளைத் தரும் தவமுயற்சிகள் உனக்குத் தேவையில்லை. அழியாத இன்பமாகிய மோட்சத்தை அருளும் சிவகதியைப் பெற சிவபூசையே சிறந்தது. நீ அதனைச் செய்து சுகம் பெறுவாய்" என்றார்.

அதனைக் கேட்டு மகிழ்ந்த முனிகுமாரன்," தந்தையை வணங்கி சிவபூசை செய்யும் வழிகள்ளையும், எந்த திருத்தலத்தில் பூசை செய்தால் சிவபூசையின் பலன் பூரணமாகக் கிடைக்கும் என்றும் கூறியருள வேண்டும் எனக் கேட்டான்".

அதற்குத் தந்தையான மத்யனந்த முனிவர், அதிகாலையில் நீராடி விபூதி, உருத்திராட்சம் தரித்து



வியாக்ரபாதர் தில்லை சிற்பம்

சிவலிங்கம் அமைத்து அதற்கு நீராட்டி பூச்சூட்டி வழிபடுதலே சிறந்தது. அதிலும் சிவபெருமான் உலகப் படைப்பிற்கு மூலமாக விளங்கும் மூலத்தான மூர்த்தியாக விளங்கும் தில்லைவனத்தில் இத்தகைய வழிபாட்டினைச் செய்வதே நலம் என்றார்.

அதன்படியே முனிகுமாரன் கயிலைமுதல் குமரி வரை பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு இறுதியில் தில்லைவனத்திற்கு வந்தார். அங்கு ஆலமரத்தடியில் எழுந்தருளியுள்ள மூலத்தானப் பெருமானை வணங்கியதுடன் அருகில், தனக்கு ஓர் பர்ணக சாலையை அமைத்துக் கொண்டார். அங்கு ஓர் தீர்த்தக் குளம் அமைத்தார். முதலில் தனது ஆத்மலிங்க பூசையும் பின்னர் மூலத்தானரைப் பூசை செய்வதையும் கடமையாக மேற்கொண்டார்.

இம்முனிவர் அதிகாலையில் இருள் பிரியுமுன்பே எழுந்து விதிப்படி நீராடி தமது கடமைகளை முடித்துக் கொண்டு நந்தவனம் சென்று வண்டு தீண்டாத புதிய மலர்களை எடுத்து வந்து பூசைக்குப் பயன்படுத்துவது வழக்கம். இப்படிச் செய்யும் போது பனிநாட்களில் மரங்களில் ஏறும் போது கை, கால்கள் வழுக்கும். மேலும் அக்கன்னியிருட்டில் பூக்களுடன் காயரும்பு களையும் சேர்த்துப் பறித்திட நேரும். எனவே அவர் சிவபெருமானை வேண்டி சிவன் அருளால் மரங்களில் ஏறவும், உந்திக் கிளைகளைப் பற்றவும், புலியின் கால்களையும், வாலையும், இரவில் நன்கு கண் தெரியப் புலியின் கண்களையும் பெற்றார்.

அன்று முதல் இம்முனிவர் "புலிக்கால் முனிவர்" என்ற பொருள்பட "வியாக்ரபாதர்" என்றழைக்கப்பட்டார். இவ்வாறு பல ஆண்டுகள் இவர் சிவ பூசை வந்தார்.

இது இப்படியிருக்க ஒரு சமயம் திருமாலிடம் சிவபெருமானின் தாண்டவதரிசன அற்புதத்தைக் கேள்வியுற்ற ஆதிசேடன் அதனைக் காணும் ஆவலில் இமயமலைச்சாரலில் தவம் புரிந்தார். சிவபெருமான் அவரை நோக்கி." அன்பனே தில்லைவனம் சென்று நம்மை வழிபட்டு வருவாய், அங்கு உரிய நேரத்தில் உமக்கு நடனதரிசனம் காட்டியருள்வோமென்றார்."

அதன்படியே அவர் தில்லைக்கு வந்து தமக்கு முன்பே அங்கு வழிபாடு செய்து கொண்டிருக்கும் வியாக்ரபாதரோடு சேர்த்து கொண்டார். இவ்விருவரும் கூடி மேலும் தவம் செய்து வந்தனர். ஒரு வியாழக்கிழமையன்று தைப்பூசம் கூடியநாளில் தில்லைவாழ் அந்தணர்களும் தேவர்களும் காண, சிவபெருமான் தனது பஞ்சகிருத்தியங்களை உள்ளடக்கிய ஆனந்தத்தாண்டவத்தை ஆடியருளினார்.

அன்று முதல் இடையறாது பதஞ்சலியாகிய ஆதிசேடனும், வியாக்ரபாதராகிய முனிவரும் இந்த நடனத்தை தரிசித்து வருகின்றார்கள் என்பது ஆன்றோர் வாக்காகும்.

புலிக்கால் முனிவரான வியாக்ரபாதர் தில்லைவனத்தில் சிவபூசை செய்ததால் அன்று முதல் அது பெரும் பற்றப் புலியூர் எனப் பெயர் பெறுவதாயிற்று. இந்நாளைய சிதம்பரம் இதுவேயாகும்.

அங்கு வியாக்ரபாதமுனிவர் அமைத்து வழிபட்ட சிவலிங்கம் அமைந்த கோயில் வியாக்ரபுரீச்சுவரர் கோயில் என்றும் இளமை யாக்கினார் கோயில் எனவும் வழங்குகின்றது. இங்கு தான் திருநீலகண்டநாயனார் வழிபட்டுப் பேறு பெற்றார். இதன் முன்னுள்ள தீர்த்தக்குளம் புலிதீர்த்தம் என்றும் இளமையளித்த தீர்த்தம் எனவும் இன்று வழங்குகிறது.

பின்னரும் வியாக்ரபாத முனிவர் தீர்த்தயாத்திரையாகச் சென்ற போது ஆங்காங்கு அமைத்து வழிபட்ட தலங்கள் யாவும் அவர் பெயரால் வியாக்ரபுரீச்சுவரம் எனவும், அங்கு எழுந்தருளியுள்ள சிவமூர்த்திகள் வியாக்ரபுரீச்சுவரர் என்றும் அழைக்கப்பட்டு கின்றார்கள்.





ஜைமினி வியாக்ரபாதர் பதஞ்சலி - சிதம்பரத்தில் உள்ள சிற்பத்தை அடியொற்றி வரைந்தது.

"வியாக்ரபாதர்" விழா

தில்லை சிற்றம்பலத்தில் தைமாதம் நிறைமதிப்பூச நாளில் வியாழக்கிழமை உச்சிப் போழ்தில் நடராசப் பெருமான் சிவகாமசுந்தரியை ஒருபால் வைத்து வியாக்ரபாதர், பதஞ்சலி, ஜைமினி ஆகிய மூவருடன், தில்லைமூவாயிரவர், முனிவர், தேவர், மக்கள், யாவரும் காண நடனமாடினார்.

மேற்குறித்த மூவரும் நடன தரிசனம் கண்ட திருநாளை நினைவு கூறும் வகையில் சிதம்பரத்தில் பத்துநாட்கள் சிறப்புத்திருவிழா கொண்டாடப்படுகின்றது.

இம்மூவரும் ஒரே பீடத்தில் எழுந்தருளியவாறு காட்சியளிக்கும் உலோகத் திருமேனி இங்குள்ளது.

தைப்பூசத்திருநாளைக் கடைநாளாகக் கொண்டு பத்து நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் மூன்று முனிவர்களும் உலாவருகின்றனர். பூசநாளில் சிவகங்கையில் தீர்த்தவாரியும், நடன தரிசனம் காணலும் ஐதீக விழாவாக நடைபெறுகின்றன. இரவில் மூவரும் மூன்றாம் பிராகாரத்தில் வலம் வந்து திருமூலநாதர் சந்நிதியை அடைகின்றனர். அங்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

பக்கம் 146-ல் வெளியாகியுள்ள புலிவணங்கிய ஊரான திருப்புலிவனம் எனும் ஊரில் வாழ்ந்துவந்த ஒரு சிவபக்தையின் சிறப்பை இக்கட்டுரை விளக்குகிறது.

பரமனடி தொழுத பாவையர் வரிசையில்

புலிவனப்பாவை பிறைநாறு சீரடியாள்

செங்கை மாவட்டம் திருப்புலிவனத்து திருப்புலிவலமுடையார் கோயிலில் 13 ஆம் நூற்றாண்டில் உஞ்சியார் கற்பூரப்பிள்ளை என்பவள் நாட்டியமாடும் பணியைச் செய்து வந்தாள். இவள் எல்லையில்லா சிவபக்தி கொண்டவள். இவளுக்கு அழகிய ஒரு மகள் இருந்தாள். அவளுடைய பெயர் பிறைநாறு சீரடியாள் என்பதாகும். இந்தப்பெண்ணும் அழகிற் சிறந்தவளாகவும், ஆடற்கலையில் வல்லவளாகவும் யாவற்றிக்கும் மேலாகச் சிவ பிரானிடத்தில் பெரும் பக்தி பூண்டவளாகவும் இருந்தாள். அவளுடைய அறச்செயல்கள் பலவும் இக்கோயிலிலுள்ள கல்வெட்டில் குறித்து வைக்கப் பட்டுள்ளன.

இவள் இப்பெருமானின் சந்நிதியில் ஏற்றுவதற்காக நான்கு பெரிய குத்து விளக்குகளை அளித்தாள். அத்துடன் அவற்றை முறையாக எரிக்கத் தேவையான செலவிற்கு ஈடாக முப்பத்தியிரண்டு பசுக்களையும் அப்பசுக் கூட்டம் விருத்தியடைய ஒரு வலிய காளையையும் அளித்தாள்.

கரிய நம்பிராட்டி பிறை நாறு சீரடியாள் என்றழைக்கப் பெற்ற இப்பெண்மணி (கி.பி 1265 ஆம் ஆண்டில்) திருப்புலிவனமுடையாருக்கு நடைபெற்ற திருவிழாவில் எட்டாம் நாளன்று பெருமானுக்கு பொன்னாலான திருவாசிகையை செய்தளித்தாள். மேலும் 15 ஆம் நாளில் நிவேதனம் செய்ய வெள்ளித்தட்டொன்றையும் அளித்துள்ளாள்.

இவையாவுக்கும் மேலாக பெருமானுக்கு "நான்முகத் தேர்" ஒன்றைச் செய்தளித்தாள். இந்தச் செயலால் மகிழ்ந்த ஊரார்கள் தேர் உலா வரும் போது அவளும் அவளுக்குப் பிறகு அவளுடைய சந்ததியாரும் தேர்த்தட்டின் முன்புறம் அமர்ந்து வலம் வரும் உரிமையையும் அளித்தனர். மேலும் அவளுக்கு சில நிலங்களை உரிமையாக அளித்தனர்.

இன்று புலிவனமுடையார் கோயிலில் தேர்ஓட்டமோ திருவிழாக்களோ இல்லையென்றாலும் சோழர்கள் காலத்தில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டுகள் பிறைநாறு சீரடியாளின் சிவபக்தியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.



புலிநகக் கொன்றை

சிவபுஷ்பம்-பிரணவாகார புஷ்பம் ஓங்காரமலர் என்று பலவாறாகப் புகழப் பெறும் கொன்றைமலரின் ஒரு வகையே புலிநகக் கொன்றையாகும். இது விரிந்து மலராத மொட்டுவகைப்பூ. பெருஞ்செடிவகையைச் சேர்ந்தது இதன் பூக்கள் புலியின் நகம் போன்று கெட்டியாகவும் வளைந்து கூராகவும் இருப்பதால் இப்பெயர் பெற்றது. இதனை அடுக்காக அடுக்கிக் காசுமாலை போலக் கட்டுவர் பசிய மஞ்சள் நிறம் கொண்ட இந்த அடுக்கு மாலை பார்ப்பதற்கு பொற்காசு மாலை போலவே இருக்கும். ஒருவாரம் வரையில் வாடாது.

சரக்கொன்றையை சிவகொன்றை எனவும், மயிற்கொன்றையை குமாரகொன்றை எனவும், புலிநகைக் கொன்றையை சக்தி கொன்றை எனவும் நாட்டுப்புற மக்கள் கூறுவர்.

தொண்டை நாட்டில் சோழர்களின் தூங்கானை மாடங்களும் புலீச்சரங்களும்

தமிழ் நாட்டினையாண்ட முடியுடை மூவேந் தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களில் சோழர்களே பெருவலிபடைத்தவர்களாகவும் சிறந்த சிவபக்தர்களாகவும் விளங்கியுள்ளனர்.

இவர்களின் அரசச் சின்னம் புலியாகும். எனவே இவர்கள் புலியர், வேங்கையர் எனப் பலவாறு குறிக்கப் பெற்றனர். இவர்கள் தமது இலச்சினை மீது கொண்டிருந்த மதிப்பால் புலியூர்கள் பலவற்றை உருவாக்கினார். மேலும் புலியூர்கள் என்று பெயர் பெற்ற தலங்களில் உள்ள சிவாலயங்களுக்குச் சிறப்பான திருப்பணிகளைப் புரிந்தனர்.

குறிப்பாக இவர்களுக்கே உரிய கட்டிடக் கலையான தூங்கானை மாடக் கோயில்களை இத்தலங்களில் அமைந்துள்ளனர். திருப்புலிவனம், புலிபுரக்கோயில், வாயலூர் திருப்புலிவனம், சென்னை புலியூர் முதலிய திருத்தலங்களில் உள்ள புலீச்சுவரான வியாக்ரபுரீச்சுவரர் கோயில்கள் தூங்கானை மாட வடிவிலேயே அமைந்திருப்பது. கண்டுணரத்தக்கதாகும்.

இவற்றில் சோழ மன்னர்கள் காலத்தில் இத்திருக்கோயில்களுக்கு அளிக்கப் பெற்ற அறங்களைக் கூறும் ஏராளமான வரலாற்றுக் கல்வெட்டுகள் உள்ளன.

புலியூர்க் கோட்டம்

சோழமன்னர்கள் காலத்தில் இந்நாளைய சென்னையையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் புலியூர்க் கோட்டம் என்ற நாட்டுப் பிரிவாகக் கொள்ளப்பட்டது (இப்போது வட்டம் அல்லது தாலுக்கா என்று குறிப்பிடுவதை ஒத்தது இந்த கோட்டமாகும்) இதன் தலைநகர் புலியூராகும். இன்றைய கோடம்பாக்கம் வடபழனி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய நகரமே அந்நாளைய புலியூராகும். இப்பகுதியில் உள்ள இறைவன் "புலீச்சுவரர் என்ற பொருள்பட வேங்கீசர் என்றழைக்கப்பட்டார். ஒருகாலத்தில் இப்பகுதியை சிறப்புடன் குறித்து வந்த புலியூர் எனும் பெயர் இப்போது இரண்டொரு தெருக்களை அடங்கிய பகுதிக்குப் பெயராக இருந்து வருகின்றது. சேக்கிழார் பிறந்த குன்றத்தூர், திரிசூலம், மயிலாப்பூர் முதலியன இக்கோட்டத்தில் அடங்கியிருந்த ஊர்களேயாகும்.

புலியூர் சண்டேச்சுவரர்

பொதுவாக சிவன் கோயிலில் நிலத்தை வாங்குதல் விற்றல் முதலியவற்றைச் சண்டீசுவரன் பெயரால் செய்வர் என்பதைக் கல்வெட்டுகளால் அறிகிறோம் இவற்றில் சண்டீசரை இன்னவூர் சண்டீசுவரர் என்று குறிக்கும் வழக்கமில்லை. ஆயினும் சிதம்பரம் கோயிலில் உள்ள கல்வெட்டில் சண்டீசர் "திருப்புலியூர்ச் சண்டேசுவரர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

புலிவாகனம்

சிவாலயங்களில் பஞ்சமூர்த்திகளில் ஒரு வராகிய சண்டேசப்பெருமானைப் புலிவாகனத்தில் அமர்த்தி வீதியுலா காண்பர். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் சண்டீசர் புலி வாகனத்தில் பவனி வருவதைக் காணலாம்.



புலியோ புலி

இலக்கிய விளையாட்டில் ஒரு சொல் பல பொருளைக் குறிக்கின்றது. அது விடுகதைபோல அமைந்து கற்பவர்க்கு இன்பம் ஊட்டுகிறது. அத்தகைய சொல் அலங்கார விளையாட்டை இப்போது காணலாம். அது கேள்வியாக அமைந்துள்ளது. விடைகள் தனியே அமைந்துள்ளன.

சிவபெருமான் . . . . .

1. ஒரு புலியைச் சூடினான் அது என்ன புலி?
2. ஒரு புலியை உடுத்தியுள்ளான் அது எந்தப் புலி?
3. ஒரு புலியை அணிந்தான் அது எந்தப் புலி?
4. ஒரு புலிகாண ஆடினான் அது எந்தப் புலி?
5. ஒரு புலி தாளினான் அது எந்தப் புலி?
6. ஒரு புலியைத் தாங்கினான் அது எந்தப் புலி?

இனி பதிலைக் காணலாம்.

1. சிவன் சூடிய புலி அம்புலி. அம்புலி என்றால் சந்திரன்., 2. உடுத்திய ஆடை புலித்தோல் ஆடை, தாருகாவனத்து முனிவர்கள் தன்னைக் கொல்ல அனுப்பிய புலியை உரித்து ஆடையாக அணிந்தான், 3. அவன் அணிந்த புலி புலிநகைக் கொன்றை, 4. அவன் ஆட கண்டுகளிக்கும் புலி வியாக்ரபாத முனிவர், 5. அவன் தாமரைப் போன்ற பாதங்களை உடையவன், தாமரை என்றால் புண்டரீகம், புலிக்கும் புண்டரீகம் என்பது பெயர், 6. அவன் சண்ட தாண்டவத்தில் (மானை ஏந்துவது போலவே) புலியையும் ஏந்தி மகிழ்ந்தான்.

புலீச்சரங்களும் ஆலவனங்களும்

இனிவரும் 6வது மலரான 'பசு-பதி' யில் பசுக்கள் சிவபெருமானை வழிபட்ட தலங்கள் யாவும் அரச மரத்தோடு தொடர்புடையவனாக இருக்கக் காணலாம். அது போலவே புலியோடு தொடர்புடைய தலங்களில் "ஆலமரம்" சிறப்புற்றிருக்கக் காண்கிறோம்.

பெரும்பற்றப்புலியூரான சிதம்பரத்திற்கு தில்லைவனம் என்பது பெயராக இருந்த போதிலும் அங்கு பெருமான் ஆலமரத்தடியில் வீற்றிருந்தாகவே கோயில் புராணம் கூறுகின்றது. மேலும் திருபுலிவனம் திருவாலங்காடு முதலிய தலங்களிலும் ஆலமரமே சிறப்பு மரமாக இருந்ததை காணலாம்.

ஓமமாம் புலியூர் எனும் திருத்தலத்தில் உள்ள ஆலயத்திற்கு வடதளி என்ற பெயர் வழங்கி வந்ததை அவ்வூர்க் கல்வெட்டுகள் குறிக்கின்றன. வட என்றால் ஆலமரம் என்றும் தளி என்றால் அதன் கீழ் அமைந்த கோயில் என்றும் பொருள். இங்கு சிவபெருமான் ஆலமரத்தின் கீழ் இருந்து வியாக்ரமுனிவருக்கும் அம்பிகைக்கும் பிரணவ மந்திரத்தை உபதேசித்தார் என்பர், எனவே அது பிரணவ வியாக்ரபுரம் ஓம் + ஆம்புலியூர் என அழைக்கப்பட்டதென்பர்.

வைப்புத்தலமான புலிவலம்

புலிவலம் என்ற பெயரில் பல தலங்கள் தமிழகமெங்கும் உள்ளன. தஞ்சை மாவட்டம் செங்கைமாவட்டம் தென்னாற்காடு மாவட்டம் முதலிய பல மாவட்டங்களில் இவை உள்ளன. "புலிவனம் புத்தூர்" என்று தேவாரத்தில் புலிவலம் போற்றப்படுகிறது புலிவலத்திற்கு தனியே பதிக மில்லாததால் இதனை வைப்புத்தலமாக போற்றுகின்றனர்.

பெரும்பாலான திருத்தலப் பயணக் குறிப்பை எழுதிய நூலாசிரியர்கள் தஞ்சை மாவட்டத்தில் திருவாரூரை அடுத்துள்ள புலிவலத்தையே வைப்புத்தலமாகக் குறித்துள்ளனர். என்றாலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உத்திரமேரூரை அடுத்துள்ள திருப்புலிவனமே வைப்புத்தலமாக போற்றத்தகுந்ததாகும். காஞ்சீபுரத்தை அடுத்துள்ள இது சோழர்களால் சிறப்புடன் கொண்டாடப் பட்டுள்ளது. அவர்களுடைய கல்வெட்டுகள் இவ்வூரைப் புலிவலம் என்றும் சுவாமியை புலிவலமுடையார் என்றும் குறிக்கின்றன. புலிசிவலிங்கத்தைப் பூசிக்கும் காட்சிகள் தூண்களில் செதுக்கப்பட்டுள்ளன. எனவே இதுவே தேவாரத்துள் கூறப்படும் புலிவலம் என்பர்.

மேலும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் செய்யாற்றுக்கு அருகில் புலிவலம் என்னும் ஊரும் உள்ளது. இங்கு கோயிலற்ற நிலையில் ஒரு அழகிய சிவலிங்கம் உள்ளது.

புலியாகத் துணைவந்த அண்ணாமலையார்


பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய அருளாளர்களில் கந்தப்ப தேசிகர் (இவர் வரலாறு பின் வரும் மலர்களில் விரிவாக வெளியிடப்படும் என்பவர் சிறப்புடையவராவார். இவர் வடாற்காடு மாவட்டத்திலுள்ள வேலூரில் தோன்றியவர். இளம் வயதினிலேயே சிவதீக்ஷையை ஏற்று சைவச் சுடராக விளங்கியவர். இவர் பல இடங்களில் உள்ள சிவாலயங்களையும் வணங்கி இறுதியில் திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தார். திருவண்ணாமலைச் சிவபெருமான் அவருக்கு அருள் செய்ய அவரை ஈசான்ய தீர்த்தத்தின் கரையில் தவமியற்றும்படிக் கூறினார்.

அதன்படியே தவராஜ சிங்கமான கந்தப்பதேசிகர் ஈசான தீர்த்தத்திற்கு அருகில் அமர்ந்து கடுந்தவம் செய்து வந்தார். இதனால் நாளடைவில் அவருக்கு ஈசான்ய ஞானதேசிகர் என்பது பெயராயிற்று. அந்நாளில் பெரிய வரிப்புலி ஒன்று அவருடைய தவத்திற்கு இடையூறு நேராதபடி காவலாக இருக்குமாம். தேசிகர் தன்னைத் தரிசிக்க வரும் அன்பர்களிடம் அண்ணாமலையாரே புலிவடிவம் தாங்கி இங்கு தமக்குக் காவலாக யிருக்கின்றார் என்று கூறுவாராம்.

அன்பர்கள் தம்மைத் தரிசிக்க வரும் போது புலியிடம் "எம் அண்ணாமலை அரசே! சற்று விலகுங்கள்" என்பாராம். அதைக்கேட்டு அந்த புலியும் விலகியிருக்குமாம்.

இவர் தவம் செய்துப் பேறு பெற்றுச் சமாதி எய்திய இடம் இந்நாளில் திருவண்ணாமலையில் ஈசான்ய மடம் எனும் பெயரில் அடியார்களைப் புரந்து வருகின்றது. தென்னகத்திலுள்ள புகழ் பெற்ற திருமடங்களில் இது ஒன்றாகும்.

தில்லையில் சிவபெருமானின் ஆனந்தத் தாண்ட தரிசனத்தைக் கண்டுகளித்த வியாக்ரபாதர் நாகபட்டினத்தில் உள்ள திருகாயாரோகணேசுவரர் ஆலயத்தில் "இருந்தாடும் கூத்தினை" கண்டு களித்தார் என்று நாகைக்காரோணபுராணம் கூறுகின்றது.



வேங்கீசர்

புலியை "வேங்கை" எனவும் அழைப்பர் வேங்கை என்பது வேங்கைப் புலியையும், ஒருவகை மரத்தையும் குறிக்கும். சொல்லாகும் தமிழர்வாழ்வில் வேங்கைமரம் தனிச்சிறப்புடையதாகத் திகழ்கிறது கண்ணகி வேங்கை மரத்திடியில் இருந்தே விண்ணுலகம் புகுந்ததையும் முருகன் வள்ளியைத் தேடிச் சென்றபோது தினைப்புனத்தில் வேங்கை மரமாக நின்றதையும் இலக்கியங்களால் அறியலாம்.

சில சமயம் வேங்கை மரத்தடியில் எழுந்தருளும் சிவபெருமான் வேங்கீசர் என்று அழைக்கப்படுகின்றார் வேங்கீசர் என்பதனைப் புலீசுவரர் எனவும் அழைப்பர்.

புலி பெற்ற நந்திபதம் (சோமநந்தி)

சிவாலயங்களில் கருவறைக்கு எதிரே நந்தியம்பெருமான் வீற்றிருப்பது போலவே அம்பிகையின் சந்நிதிக்கு முன்பாகவும் ஒரு நந்தி அமைந்துள்ளதைக் காண்கிறோம். இந்த நந்திக்குச் சோமநந்தி என்பது பெயராகும்.

ஒருமுறை உமாதேவியார் ஒரு வனத்தில் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்து கொண்டிருந்தாள். அப்போது ஒரு புலி அங்கு வந்தது. அம்பிகையின் தவத்தின் அருளால் அப்புலிக்கு ஞானம் பிறந்தது. அதனால் தானும் தவம் புரிந்ததுடன் அன்னைக்குக் காவல் செய்யும் பணியையும் மேற்கொண்டது.

அது அம்பிகை ஒற்றைக்காலில் நின்று தவம் புரிவதைக் கண்டு வருந்தியது. அவள் நோன்பால் மெலிந்து கீழே விழுந்துவிடுவாளோ என்று பதைத்தது. அப்படி விழுந்து விட்டால் அவளைத் தாங்கும் பொருட்டு அவளது பின்னணியில் ஊன் உறக்கம் இன்றி தானும் தவம்மேற்கொண்டு நின்றது.

இவ்வாறு பல காலம் சென்றன. சிவபெருமான் உமாதேவியாருக்குக் காட்சியளித்து அவளைத் திருமணம் புரிந்து கொண்டார். அப்போது தேவியார் அப்புலியின் மீது கருணை கொண்டு அதற்கும் அருள் செய்யுமாறு சிவபெருமானிடம் வேண்டினாள். சிவபெருமானும் மகிழ்ந்து அப்புலிக்கு அருள் வழங்கி நந்தி கணத்தில் சேர்த்தார். அப்புலி தன் வடிவம் நீங்கிக்காளை வடிவம் கொண்டது. தேவியின் சந்நிதியில் அது காவல் தொழில் பூண்டது. உமையுடன் கூடியதால் (ஸக-உமாநாதன்) சோமநாதன் என்று பெயர் பெற்ற சிவபெருமானின் அருள் பெற்றால் அதற்குச் சோமநந்தி என்பது பெயராயிற்று.

இந்த வரலாற்றைச் சற்றுவிரிவாக சிவமகா புராணமும், பல தலபுராணங்களும் சுட்டுகின்றன. தென்னாட்டுப் புராணங்களில் ஒன்றாகிய 'திருப்புனல் வாயில்' தலபுராணத்தில் உள்ள சோமநந்திச் சருக்கம் இவ்வரலாற்றை விரிவாகப் பேசுகின்றது.



சிற்ப ஓவியங்களில் வியாக்ரபாதர்

வியாக்ரபாத முனிவரின் சிற்பங்களையும் ஓவியங்களையும் நடராசப்பெருமானுடன் பரவலாகக் காணமுடிகிறது. இவர் புலிக்காலையும், கையில் புலிநகங்களையும் வலிய வாலையும் கொண்டவராகக் கைகளைக் கூப்பித் தொழும் பாவனையில் அமைந்துள்ளார். தோளில் பூப்பறிக்க உதவும் துரட்டுக் கோலும், பூக்கூடையும் உள்ளன. தலையில் எடுத்துக்கட்டிய சடைமுடியும் நீண்டதாடியும் பிரகாசமான கண்களும் கொண்டவராக விளங்குகின்றார். சிதம்பரத்தில் இவருக்கு அழகான கருங்கல் திருமேனி அமைக்கப்பட்டுள்ளது. பாண்டிய நாட்டில் அமைந்த பல திருக்கோயில்களில் நடராசப்பெருமானை தரிசித்தவாறு பதஞ்சலி முனிவருடன் இவர் எழுந்தருளியுள்ளதைக் காண்கிறோம். தஞ்சாவூர் அமைப்பிலான நடராசர் ஓவியங்களில் பதஞ்சலியும் வியாக்ரபாதரும் இடம் பெறுகின்றனர்.

திருவாசக காட்சிகள்

"புலிமுலை புல்வாய்க்கருளியது"

"புலிப் பாலைக் கேட்டாலும்" என் மகன் கொண்டு வந்து தருவான் என்று நாட்டுப் புறத்தாய்மார்கள் கூறுவார்கள் இதற்கு என்மகன் மிகுந்த ஆற்றல் உள்ளவன் என்பது பொருள். புலியின் பாலைக் கரந்து கொண்டு வருவது என்பது மிகுந்த வீரத்தின் அடையாளமாகும். ஐயப்பன் கதையிலும் அவருடைய சிற்றன்னை அவரை புலிப்பால் கொண்டுவர அனுப்புவது இங்கு எண்ணத்தக்கதாகும்.

இப்படி புலிப்பால் கிடைப்பது அரிய செயலாக இருக்கையில் சிவபெருமான் ஒரு புலியிடம் அதன் பரமஎதிரியான மான்குட்டிக்கு பால் கொடுக்கும் படி செய்து ஒரு திருவிளையாடலை நிகழ்த்தியிருக்கின்றான் என்பதை அறியும் போது வியப்பாக இருக்கின்றது.

ஒரு சமயம் மதுரையை அடுத்த கடம்பவனத்தில் ஒரு மான் வசித்து வந்தது. அது மிகுந்த சிவபக்தி கொண்டது. ஒரு சமயம் அது தன் குட்டியை ஒரு புதரிடையே விட்டுவிட்டு நீர்பருகச் சென்றது. அப்போது ஒரு வேடன் அதன் மீது அம்பெய்தான். அதன் விதி முடிந்ததால் அது அம்புபட்டு இறந்து போயிற்று.

அதன் குட்டி தாயைக்காணாது வருந்தி பசியால் அழுதது சிவபெருமான் அந்த மான்குட்டிக்கு இரங்கி அருகில் இருந்த ஒரு புலியை நோக்கி அதற்குப் பால் கொடுக்கும்படி கூறினார். அப்புலியும் தன்மனம் இரங்கி அதற்குப் பால் கொடுத்தது. புலியிடம் பால் குடித்த மான் மிகவும் மகிழ்ந்தது. பின்னர் இரண்டும் சிவனருள் பெற்று மேனிலை எய்தின.

இப்படி புலியை மானுக்குப் பால் கொடுக்கும்படிச் செய்த திருவிளையாடலை மாணிக்கவாசகர் போற்றித் திருஅகவலில் "புலிமுலையை புல்வாய்க்கு அருளின போற்றி" என்று பாடுகின்றார். (புல்வாய் = மான்)



பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் இத்திருவிளையாடல் 53வது திருவிளையாடலாகக் குறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

பின்னால் வந்த அடியார்கள் இத்தகைய திருவிளையாடலை நினைவு கூரும் சிற்பத்தை மதுரைப் புதுமண்டபத்தில் கீழைக்கோடியிலுள்ள தூணிலும், திருப்பரங்குன்றத்து கொடிமர மண்டபத்து பெரிய கருங்கல் தூணில் ஆறாவதாக அமைந்த தூணிலும் செதுக்கியுள்ளனர்.

பஞ்ச வியாக்ரபுரங்கள்

எண்ணிலாத இடங்களில் வியாக்ரபாத முனிவர் வழிபட்டிருந்தாலும் திருமுறைத்தலங்கள் ஐந்து அவர்பெயரால் சிறப்புபெறுகின்றன. இவைமுறையே பெரும்பற்றப்புலியூர் - ஓமமாம்புலியூர் - எருக்கத்தம்புலியூர் - திருப்பாதிரிப்புலியூர் பெரும்புலீயூர் என்பனவாகும். ஓமமாம்புலியூர் கருவரைச்சுவரில் இந்த ஐந்து புலியூர்களையும் குறிக்கும் வகையில் ஐந்து சிவலிங்கங்களும் அவற்றை வணங்கும் வகையில் வியாக்ரபாதர் திருவுருவமும் செதுக்கப்பட்டுள்ளன. இனி இவற்றைப் பற்றிய சுருக்கமான வரலாற்றை இனிக் காணலாம்.

1. பெரும்பற்றப்புலியூர் - இந்நாளில் சிதம்பரம் என வழங்கும் தலமே பெரும்பற்றப் புலியூராகும். இங்கு வியாக்ரபாதர் தனியாகச் சிவன் கோயில் அமைத்து வழிபட்டார். அக்கோயில் இந்நாளில் இளமையாக்கினார் கோயில் என வழங்குகிறது. இக்கோயில் இறைவர் வியாக்ர புரீசுவரர் என்று வழங்கப்படுகிறார். பின்நாளில் வியாக்ரபாதர் சிதம்பரத்தில் சிற்றம்பலத்தில் பதஞ்சலி, ஜைமினி, தில்லைவாழ் அந்தணர்கள் ஆகியோருடன் கூடி சிவபெருமானின் ஆனந்த நடனத்தை கண்டுகளித்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. இறைவர் நடராஜமூர்த்தி அம்பிகை சிவகாமசுந்தரி.

2. ஓமமாம்புலியூர் - இது சிதம்பரத் திலிருந்து பத்தொன்பது மைல்தொலைவில் உள்ளது. குத்தாலம் எனும் ரயில் நிலையத்திற்கு வடக்கே 11 மைல் தொலைவில் கொள்ளிடத்தின் கரையில் உள்ளது. இதனை பிரணவ வியாக்ரபுரம் எனவும் அழைப்பர். ஆதியில் இங்கு சிவபெருமான் உமாதேவியாருக்கும் பின்னாளில் வியாக்ரபாத முனிவருக்கும் பிரணவத்தை வியாக்யானம் செய்தருளினார் என்பர். இங்கு தட்சிணாமூர்த்தி இருக்க வேண்டிய இடத்தில் நடராஜமூர்த்தியும் நடராசர் இருக்கவேண்டிய இடத்தில் தட்சிணா மூர்த்தியும் இருக்கின்றனர். சுவாமி பிரணவவியாக்ர புரீசுவரர் துயர்தீர்த்தநாதர் அம்பிகை பூங்கொடி நாயகி.

3. எருக்கத்தம் புலியூர் - இது விருத்தாசலத்திலிருந்து 7 மைல் தொலைவில் உள்ள தலம். இங்கு எருக்கமர நிழலில் சிவலிங்கம் அமைத்து வியாக்ரபாதர் வழிபட்டார் என்பர். இந்நாளில் இது ராஜேந்திர பட்டணம் என்று வழங்குகிறது. இறைவர் நீலகண்டேசுவரர் அம்பிகை நீலோற்பலாம்பிகை.

4. திருப்பாதிரிப்புலியூர் - இதனை ஒரு கல்வெட்டு தழைத்த திருப்பாதிரிப்புலியூர் என்று குறிக்கின்றது. இது இந்நாளைய தென்னாற்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூர் நகரின் ஒரு பகுதியாக விளங்குகிறது. இங்கு வியாக்ரபாதர் தனியே அமைத்து வழிபட்ட சிவலிங்கம் வியாக்ரபுரீசுவரர் எனும் பெயரில் பிராகாரத்தில் உள்ளது. இது சிதம்பரத்திற்கு வடக்கில் உள்ளதால் வடபுலியூர் என அழைப்பர். இறைவர் பாடலீசுவரர் அம்பிகை பெரியநாயகி.

5. பெரும்புலியூர் - இது திருவையாற்றுக்கு வடமேற்கில் 4 கி.மீ. தொலைவில் உள்ளது. புண்டரீகம் என்பது புலிக்கும் தாமரைக்கும் உள்ள பொதுப்பெயர். அதனைக் குறித்து புலிவணங்கிய பெருமானுக்கு சுவாமியின் கருவறைக்கற்கள் தாமரைபோல அமைக்கப்பட்டுள்ளன. இது சிதம்பரத்திற்கு தெற்கில் அமைந்திருப்பதால் இதனை தென்புலியூர் எனவும் அழைப்பர். இறைவர் வியாக்ரபுரீசுவரர் அம்பிகை சௌந்தரநாயகி.

இவை வியாக்ரபாதரால் வழிபடப்பெற்று தனிச்சிறப்பு பெற்றவைகளாகும். இவை தவிர சிறப்புமிக்க வியாக்ரபாத திருத்தலங்களும் உள்ளன.

தொண்டைநாட்டு புலீசுவரர் கோயில்கள்

புலிபுரக் கோயில் வியாக்ரபுரீசுவரர்

சென்னை - திண்டிவனம் சாலையில் (மதுராந்தகத்திற்கு வடக்கில்) உள்ள படாளம் கூட்டுப் பாதையில் இருந்து கிழக்கில் ஒரு துணைச்சாலை பிரிந்து செல்கின்றது. இதில் 5 கீ.மீ சென்றால் புலிபுரக் கோயிலை அடையலாம்

இது வியாக்ரபாதர் பூஜித்த லிங்கமாகும். இந்த லிங்கம் சிறு அளவில் வெண்ணிறத்தடன் உள்ளது. தூண்களில் வியாக்ரபாதர் சிவலிங்கத்தைப் பூசிக்கும் காட்சி புடைப்புச் சிற்பமாக உள்ளது. தூங்கானை மாடம் அமைப்பிலான கருவறையைக் கொண்ட இக்கோயில் மிகுந்த இடிபாடுகளுடன் காணப்படுகின்றது. இங்குள்ள நடராசர் திருமேனி கலையழகு மிக்கதாக விளங்குகின்றது. சோழர்காலக் கல்வெட்டுகள் பல இக்கோயில்களில் உள்ளன. இதற்கு வடசிதம்பரம் என்றும் வடபொன்னம்பலம் என்றும் பெயர் வழங்குகின்றது திருவாதிரை சிறப்புத்தினமாகக் கொண்டாடப்படுகிறது.

வாயிலூர் வியாக்ரபுரீசுவரர்

செங்கை மாவட்டத்தில் மாமல்லபுரத்திற்குத் தெற்கில் பாலாறு கடலோடு கலக்குமிடத்தில் வாயிலூர் அமைந்துள்ளது. சோழர்கள் காலத்தில் சிறப்புடன் விளங்கிய இவ்வூரில் அமைந்துள்ள கோயில் வியாக்ரபுரீசுவரர் கோயில் என அழைக்கப் பெற்றது. இக்கோயில் தொல் பொருள் துறையினரால் பாதுகாக்கப் பட்டு வருகின்றது.

வடபழனி வியாக்ரபுரீசுவரர் (வேங்கீசுவரர்)

சென்னை நகரின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள வடபழனி சோழர்களின் ஆட்சிக்காலத்தில் புலியூர் என்று அழைக்கப்பெற்று ஒரு நாட்டுப்பிரிவுக்குத் தலைநகராக விளங்கியது. இங்கு பெரிய அளவில் அமைக்கப்பட்ட வேங்கீசுவரர் என்னும் வியாக்கிரபுரீசுவரர் ஆலயம் அமைந்துள்ளது. இந்நாளில் நூறடிச் சாலையும் ஆற்காடு சாலையும் சந்திக்கும் இட த்தில் அமைந்துள்ள இக்கோயிலில் பெரிய கோபுரமும் மதில்களும் அழகுடன் அமைந்துள்ளன. கஜப்பிரஷ்ட விமானத்துடன் கூடிய கருவறையில் வேங்கீசுவரர் எழுந்தருளியுள்ளார். அம்பிகை சாந்த நாயகி என்று அழைக்கப்படுகின்றாள். பல கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன. சிறப்பான பூஜைகளும் வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

இவை தவிர இம்மாவட்டத்தில் புலிவாய் அரும்புலியூர், இரும்புலியூர், காடாம்புலியூர், புலிகுத்தி முதலிய பெயர்களில் ஊர்கள் பரவலாக அமைந்துள்ளன. இவற்றில் முன்னாளில் சிவாலயங்களில் சிறப்புடன் இருந்து காலவெள்ளத்தால் அழிந்து போயிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இவற்றை ஆர்ாய வேண்டியது நமது கடமையாகும்.

வியாளவரிசை

ஆலய கட்டிட அமைப்புகளில் அமையும் சித்திர அலங்கார வரிசைகளில் ஒன்று வியாளவரிசை என்பதாகும். இதில் புலியுருவம் வரிசையாக அமைகிறது. கருவறை முதலான சுவறின் புறப்பகுதியில் கூடு, கோட்டம், தூண்கள், பஞ்ஜரம், முதலிய அமைப்புகள் அவற்றின் மேலே கபோதவரி எனப்படும் பூத வரிசைகளும் அதன் மீது கொடுங்கை என்ற வலைவான அமைப்பும் அதன் மீது வியாளவரிசைகளும் அமைகின்றன. இதில் அமையும் புலிகள் இயல்பான புலிகளைப் போல இல்லாமல் கலைஞனின் கற்பனைக்கேற்ப அமைக்கப்படுகின்றன. இதில் புலியின் முகம் முதுகுப் பக்கம் திரும்பி இருப்பது போல அமைக்கப்படுகிறது.



திருவாரூர்ப் புராணத்தில் உள்ள புலி வணங்கிப் பேறுபெற்ற வானேசர்

கேகய நாட்டினை ஒரு சமயம் குலிசன் என்பவன் ஆண்டு வந்தான். ஒரு நாள் அவனுடைய அரண்மனைக்கு மகரிஷி தூருவாசர் தமது சீடர்களுடன் எழுந்தருளினார். அவரை அவன் பணிந்து வரவேற்று உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தி அவருக்கு என்ன வேண்டுமென்று கேட்டான்.

அவர் அவனை நோக்கி, "மன்னனே", நான் நீண்டநாளாக ஒரு விரதத்தில் நிலைபெற்று இப்போது இங்கு வந்துள்ளேன். பாரணை செய்யவேண்டும். அதற்காகப் புதியதாக உணவு சமைக்க வேண்டியதில்லை. உன்னுடைய அரண்மனையில் உள்ள உணவு அனைத்தையும் இப்பொழுதே எனக்களிப்பாய்," என்றார்.

மன்னன் மகிழ்ந்து, தனது அரண்மனையில் இருந்த அனைத்து இன்சுவை உணவுகளையும் அவருக்குப் பரிமாறினான். அவர் அவை அனைத்தையும் உண்டு மகிழ்ந்தார். பின்னர் அந்த உணவுகளின் வகைகளைக் கேட்டார். அவனுடைய உதவியாளர்கள் அந்த உணவுகளின் பெயர்களையும் அது செய்ய உதவிய பொருள்களையும் வகைகளையும் கூறினார். அதைக் கேட்டுவந்த முனிவன் அவற்றில் சில ஊன் உணவாக இருப்பதை அறிந்தான். உடனே கோபம் கொண்டு, "மன்னனே, என்னை யாரென்று தெரிந்திருந்தும், பாரணை செய்ய வந்த எனக்குப் நான் நோற்ற நோன்பிற்கு பங்கம் உண்டாகிப் அது பயன்றுப் போகும் வகையில் புலால் உணவை அளித்தாய். எனவே நீ புலியாகிப் போவாய்," என்று சாபமிட்டார்.

அந்த மன்னன் நடுநடுங்கி, அவர் காலில் வீழ்ந்து வணங்கி, "ஐயனே, பிழைபொருத்தருள வேண்டும். நீங்கள் எனது இல்லத்திலுள்ள உணவனைத்தையும் வஞ்சமில்லாமல் தரவேண்டும் என்று கூறியதால் உமக்கு தூய உணவையும் புலால் உணவையும் சேர்த்தே அளிக்க வேண்டியதாயிற்று. ஆதலால் என்மீது கருணை வைத்து இந்தச் சாபத்தைப் போக்கியருள வேண்டும் என்றான்.

முனிவனும் தன் சினம் அடங்கி, "யான் அளித்த சாபம் நிகழ்ந்தே தீரும். நீ புலியாகிச் சிலநாளானதும் நந்தினி எனும் பசுவைக் காண்பாய். அது உமக்கு வானேச லிங்கத்தைக் காட்டும். அதைக்கண்டு வணங்கிய அளவில் உனது சாபம் நீங்கும் என்றார்.

அதன்படியே அந்த மன்னன் புலியாகி திருவாரூரை அடுத்த காட்டுக்குள் வசித்து வந்தான். ஒரு நாள் அந்தப்புலி ஒரு பசுவைப் பார்த்து அதைக் கொல்ல முயன்றது. அப்போது பசு மிகவும் வருத்த முற்றது. பசுவை நோக்கிய புலி, 'ஏன் வீணாக அழுகின்றாய் எனக்கு உணவாகப் போவதற்கு மகிழ்ச்சியடை", என்று சொல்லிப் பாய முயன்றது.

அதைக்கேட்ட பசு, 'ஓ' புலியே உயிர்களுக்கு மரணம் புதியதல்ல அது என்றேனும் ஒருநாள் வந்தே தீரும். அதற்காக யான் வருத்தவில்லை. என் கன்றிற்குப் பாலூட்டாமலும், இன்று சிவபூசை செய்யாமலும் மரிக்கின்றோமே என்றுதான் வருந்துகின்றேன் என்றது. மேலும் பணிந்து "புலியே! நீ. எனக்கு அனுமதி அளித்தால் இந்த இரண்டு கடமைகளையும் நிறைவேற்றிவிட்டு மகிழ்ச்சியும் வந்து உனக்கு உணவாவேன்" என்றது.

அதைக்கேட்ட புலி, 'பசுவே மோட்சத்தை விரும்புபவர்கள் கூட உயிரைவிடத் துணியார்களே, அதுவுமின்றி கையிற் கிடைத்த இரையை விட்டுவிட்டு வருந்துதல் மூடத்தன்மையல்லவா? என்றேனும் பசுக்கள் புலியின் முன் வந்து தாமாக உணவாகுதல் கூடுமா? என்றது.

அதைக்கேட்ட பசு, 'ஓ புலியே, நான் சொல்லிய சொல்லைத் தவறுவேயானாகில் குரு, தந்தை, தாய், மூத்தோர், சிவாகமம், புராணம், வேதம், கடவுள், பக்தர், விபூதி, ருத்திராட்சம் ஆகியவற்றை இகழ்ந்த பாவிகள் அடையும் நரகம் அடைவேன் என்று தொடங்கி பல வகையாக நியாயங்களை

உரைத்தது. அதனால் மனம் இரங்கிய புலி விரைவில் வருக என்று கூறி அதனைப் போக விடுத்தது. பசுவும் விரைந்து சென்று தன் கன்றிற்குப் பாலருத்தி, அதனைப் பிற பசுக்களிடம் ஒப்படைத்து விட்டு சிவலிங்கத்தைப் பூசித்து விட்டு புலியின் முன் வந்து நின்று தன்னை உணவாக்கிக் கொள்ளுமாறு வேண்டியது.

பசுவின் இச்செய்கையால் புலிக்கு நல்லுணர்வு பிறந்தது. அது பசுவை நோக்கி, 'அன்பனே, நீ பூசித்த சிவலிங்கத்தை எனக்குக் காட்டுவாய் என்றது'. பசு முன்னே செல்ல புலி அதன் பின்னே சென்று வாணேசலிங்கத்தை அடைந்தன. அந்த லிங்கத்தைப் புலி கண்டு வணங்கிய உடனே அதற்கு முன்னைய வடிவம் கிடைத்தது. புலி மன்னனாக எழுந்தான். பெருமானைப் பலகாலும் போற்றி வணங்கிப் அங்கு ஆலயம் அமைத்தான்.

இக்கதை பதினெண்புராணத்தில் இடம் பெற்றுள்ளதாகும். திருவாரூர்ப் புராணத்திலி குலிசேச வரலாறு எனும் பகுதியில் இந்த வரலாறு இடம்பெற்றுள்ளது. இந்த லிங்கத்திற்கு வாணலிங்கம் என்பதும் பெயர். இது திருவாரூர் தியாகேசர் ஆலயத்துப் பிரகாரத்தில் உள்ளதாகும்.

சிவனருள் பெற்ற புலிமுகன்

புலிமுகம் கொண்ட அசுரர்களைப் பற்றியும் அவர்களை சிவபெருமான் அழித்து மறுமையில் அவர்களுக்கு இன்பம் அளித்ததையும் பல புராணங்கள் பலவாறு கூறுகின்றன அவற்றில் இரண்டை இங்கு காணலாம்.

1. ஒரு சமயம் பிரம்மாவும், விஷ்ணுவும் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டனர். திருமால் புலிமுகம் கொண்ட அசுரனையும், பிரம்மா எருமைத் தலையுடைய அசுரனையும் படைத்து தங்கள் சார்பில் அவர்களைப் போரிடவைத்தனர். அவர்கள் நடத்திய போரால் உலகம் நிலைதவறியது. எனவே அவர்களைத் தடுத்து போரை நிறுத்தும்படி தேவர்கள் கூறினர். ஆனால் அவர்களைப் படைத்த பிரம்ம விஷ்ணுக்களாலேயே அவர்களை அடக்க முடியவில்லை. எனவே தேவர்கள் சிவபெருமானைச் சரணடைந்தனர். அவர் பார்வதிக்கு அவர்களை அடக்கும்படி ஆணையிட அவள் தனது தோழியான காளியை அனுப்பி அவர்களின் சிரங்களை அறிந்தாள். எருமைத்தலை தேவியைத் துதித்தால் அதனைக் கணாதிபதியாக்கினாள். புலிமுகன் சிவனைச் சரணடைந்து சிவகணமாயினன்.

2. புலிமுகன், எருதுமுகன், குதிரை முகன் ஆகிய மூன்று அசுரர்கள் மூன்று புவனங்களைச் சமைத்து அந்தத் திரிபுவனத்தில் வாழ்ந்தார்கள் என்றும், அவர்களைச் சிவபெருமான் அழித்தொழித்தார் என்றும் அவர்கள் ஆன்மா சிவபதம் பெற்றன என்றும் திரிபுவனத் தலவரலாறு கூறுகின்றது.


புலியும் மானும்

பக்கம் 156-ல் சிவன் அருள் பெற்ற மான்குட்டிக்கு புலி பால்கொடுத்ததைக் கண்டோம். பவானி என்று வழக்கிலும் திருநணா என்று திருமுறைகளிலும் அழைக்கப்படும் கொங்குநாட்டுத் தலத்தில் புலிகளும் மான்களும் தமது இனப்பகையை மறந்து ஒன்றாக வாழ்ந்ததை தேவாரம் குறிப்பிடுகின்றது. இனி அப்பாடலைக் காணலாம்.

வில்லார் வரையாக மாநாக நாணாக வேடங்கொண்டு
புல்லார் புரமூன்றும் எரித்தார்க் கிடம்போலும் **புலியும் மானும்**
அல்லாத சாதிகளும் அங்கழன்மேற் கைகூப்ப அடியார் கூடி
செல்லா அருள்நெறிக்கே செல்ல அருள்புரியுந் திருநணாவே. —திருஞானசம்பந்தர்

மேருமலையை வில்லாகவும் வாசுகியை நாணாகவும் கொண்டு முப்புரங்களை எரித்த சிவபெருமானின் இடம் திருநணாவாகும். இங்கு புலியும் மானும் ஒன்றாக வாழ்கின்றன. இவை அல்லாத விலங்குகளும் பறவைகளும் கைகுவித்து வணங்குகின்றன. அவை அடியார்கள் செல்லும் வழியில் தாம் சென்றால் அவர்கள் அஞ்சுவார்களே என்று வேறு வழியில் செல்கின்றன. அப்படி கனிந்த மனத்துடன் எல்லோரையும் நல்வழியில் செலுத்தும் திருநணா திகழ்கிறது.

அண்ணாமலை எம் அண்ணா போற்றி!
அச்சிறுப்பாக்கத்து அடிகளே போற்றி! போற்றி!!



சிவ மஞ்சரி

இது சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்